# The Tilak Trial

OR

## The "KESARI" Prosecution of 1908

*Being an Abridged Tamil Translation of the Report of the Proceedings in Court in the last Trial for Sedition of*

**Srijut BAL GANGADAR TILAK,**

*Editor of the Poona "Kesari"*

1A8
1909 Lin
2208

[With a Portrait and Life-Sketch of Mr. Tilak.]

1909.

Printed at the Madras Ripon Press.

MADRAS.

139

[Copyright] Price As. 12. [Registered.



ஸ்ரீ பால கங்காதர திலகர்

ஸ்ரீ

# திலகர் விசாரணை

அல்லது

## 1908-ம் வருஷத்துக் "கேசரி" இராஜநிந்தனைக் கேஸ்.

REGISTRAR OF B…
ENTERED
30 JUL 1909
MADRAS.

[பம்பாய் கவர்ன்மெண்டாரால் ஸ்ரீ பாலகங்காதர திலகர் மீது கொண்டுவரப்பட்ட இராஜநிந்தனைக் கேஸ் விசாரணையில் கோர்ட்டில் நடந்த நடவடிக்கைகளின் ஸங்கிரஹம்.]

இது
சென்னை "சுதேசமித்திரன்"
துணையாசிரியர்
தி. சி. வில்வபதி செட்டியாரால்
தமிழில் தொகுக்கப்பட்டு,

சென்னை:
மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1909

விலை அணா 12.

Copyright] [Registered.

REGISTRAR OF ... 30 JUL 1908 MADRAS.

# INTRODUCTION.

I have read with attention some portions of Mr. Vilvapathi Chettiar's Tamil Book, "The Tilak Trial." The book is, in the main, a translation of an English publication by Mr. Kelkar of Poona. Mr. Vilvapathi Chettiar is a Sub-Editor of the "Swadesamitran" and that is a sufficient recommendation to the Tamil public. It appears to me that Mr. Chettiar has bestowed much labour upon this work, and a careful reader may find that the author has endeavoured his very best to be both intelligible and accurate in his translation. Those of the Tamil public who desire to know the full details of the trial of Mr. Tilak may profitably read this book.

A. Sankara Lingam Pillai, B. A.,
Late Editor of "*Swadeshi*".

# சமீப சமாச்சாரம்.

## பிரிவி கவுன்ஸில் அப்பீல்.

ஸ்ரீ திலகரின் ஆப்தநேயராகிய ஸ்ரீ கபார்த்தே லண்டன் நகர் சென்று தக்க லாயர்களைக்கொண்டு பிரிவி கவுன்ஸிலில் அப்பீலை விசாரிக்க உத்தரவு கேட்க, பிரிவி கவுன்ஸிலார் அப்பீலை எடுத்து விசாரிக்க ஆதாரங்களில்லையென்று அபிப்பிராயப்பட்டு அப்பீலைத் தள்ளிவிட்டார்கள்.

## திலகரின் தற்காலநிலைமை.

ஸ்ரீ திலகர் இப்போது மாண்டலே ஜெயிலில் சுகமா யிருந்துகொண்டு பகவத்கீதா வியாக்கியானம் எழுதிக்கொண்டிருப்பதாய்த் தெரிகிறபடி ஈசன்செயல் இவ்வாறெனல் விளங்கலாம்.

# விஷய சூசிகை.


| | பக்கம். |
|---|---|
| முகவுரை ... ... ... ... | ௧ |
| பாரிஸ்டர் மிஸ்டர் A. C. பானர்ஜி அலிப்பூர் ராஜதூஷணைக் கேசில் மிஸ்டர் நார்ட்டனுக்குக் கொடுத்த வாக்குமூலம் ... | ௨ |
| ஜப்பான் கிரானிகில் கூறுவது ... ... | ௬ |
| சிறப்புரை ... ... ... ... | ௯ |
| பூனா பஞ்சவர் ... ... ... | ௰ |
| ஸ்ரீ திலகரின் ஆராய்ச்சி ... ... ... | ௧௫ |
| சிவாஜி மஹோற்சவம் ... ... ... | ௧௭ |
| முதலாவது ராஜதூஷணை விசாரணைக் குறிப்பு ... | ௧௮ |
| தாய் மஹாராஜ் கேஸ் ... ... | ௨0 |
| இந்தியத் திருந்தவல்லாளர் பதின்மர் வாழ்த்து ... | ௨௫ |
| ஸ்ரீ திலகருக்கு வாரண்டு ... ... | 1 |
| திலக கிருகசோதனை ... ... ... | " |
| போலீஸ் விசாரணை ... ... ... | 2 |
| ஊரெங்கும் கலக்கம் ... ... ... | 3 |
| ஸெஷனுக்குக் கமிட்டு ... ... ... | 4 |
| ஸ்பெஷல் ஜூரி விவாதம் ... ... | 7 |
| ஜட்ஜி ரூலிங் ... ... ... | 13 |
| ஜாமீன் மனு மறுக்கப்பட்டது ... ... | 15 |
| முதல்நாள் விசாரணை ... ... ... | 19 |
| கேஸ் ஆரம்பம் ... ... ... | 25 |
| மிஸ்டர் ஜோஷியின் சாக்ஷிய விசாரணை ... | 27 |
| இரண்டாம் நாள் விசாரணை ... ... | 49 |
| மூன்றாம் நாள் விசாரணை ... ... | 54 |

திலகர் ஸ்டேட்மெண்டு ... ... ...
திலகரின் ஜூரி அட்ரெஸ் ... ...
நாலாம் நாள் விசாரணை ... ... ...
ஐந்தாம் நாள் விசாரணை ... ...
ஆறாம் நாள் விசாரணை ... ... ...
ஏழாம் நாள் விசாரணை ... ... ...
எட்டாம் நாள் விசாரணை ... ...
அட்வோகேட் ஜெனரலின் ஜூரி அட்ரெஸ் ...
ஜட்ஜியின் தொகுப்புரை ... ...
ஜூரியின் முடிவுரை ... ... ...
ஜட்ஜியின் தீர்மானம் ... ... ...
இரண்டாவது ராஜதூஷண விசாரணைக்குறிப்பு
பம்பாய் ஹைகோர்ட்டு புல்பெஞ்சுக்குப் பிட்டிஷன் ... ... ...
டிவிஷன் பெஞ்சு விசாரணை ... ...
பாரிஸ்டர் மிஸ்டர் பாப்டிஸ்டாவின் எதிர்வாதம்
ஜட்ஜ்மெண்டின் சாரம் ... ... ...
பம்பாய் கவர்ன்மெண்டின் பரிகாரம் ...
திலகரின் எதிர்வாத ஆதாரங்கள் ... ...
புதிய சட்டங்களைப்பற்றி ஆனரெபில் ஸையத் மகமதுவின் அபிப்பிராயம்
மராட்டா ஜெஞ்சர் கேஸ் ... ...
கர்ஸன்-மார்லி வினவிடை ... ...
மார்னிங் லீடருக்குக் கல்கட்டா நிருபர் எழுதியது ... ... ...
பார்லிமெண்டு ரிபோர்ட்டில் கிளாட்ஸ்டன் பேச்சு ... ... ...
லாஹோர் பிஷப்பின் மிஷன்போர்டு பேச்சு
முஜாபர்பூர் கொலைக் கொடுமையைப்பற்றி

பாம்பெற்றியைப்பற்றி ... ... ... 217
வங்காளத்தின் நிலைமை... ... ... 219
திலக் கேஸைப்பற்றிய அபிப்பிராயங்கள் ... 221
நியூ ஏஜ் பேப்பரில் காட்டன் எஸ்கொயர் ... 221
லண்டன் டைம்ஸில் ஹைண்ட்மான்
எஸ்கொயர் ... ... ... 221
லேபர் லீடரில் கீரார்டி எஸ்கொயர் ... 222
டெயிலி நியூஸில் ஓராங்கிலோ இந்திய நிருபர் 223
மான்செஸ்டர் கார்டியன் ... ... 223
மார்னிங்லீடர், இந்து பிரகாசம் ... ... 224
பம்பாய் குஜராத்தி, கராச்சி பீனிக்ஸ் ... 225
லாஹோர் பஞ்சாபி, ரங்கூன் யுனைட்டெட்
பர்மா ... ... ... 226
கல்கட்டா வந்தேமாதரம் ... ... ... 226
பார்லிமெண்டில் ஸ்ரீ திலகர் பிரஸ்தாபம் ... 228
வெடிகுண்டின் விளைவு ... ... 233
கீழதிகார விருத்திக் கமிஷன் முன்பாக
ஸ்ரீ திலகரின் ஸ்டேட்மெண்டு ... 238

ஓம்.

தத்ஸத்.

# முகவுரை.

ஸ்ரீ சச்சிதாநந்த பரம்பொருளின் கிருபாகடாக்ஷத்தால் விரிந்துறும் வியனுலகில் சேவகரும் வர்த்தகரும் அரசரும் அந்தணருமென நால்வகையினருக்கும் தர்மார்த்த காமமோக்ஷமெனும் சாதன சதுஷ்டயார்த்தமாய் இதிகாச புராண ஸ்மிருதி சுருதிகளென்னும் பிரமாணங்களைக்கொண்டு கற்றல் கேட்டல் சிந்தித்தல் தெளிதலால் வழிபடும் சரியைகிரியை யோகஞான மார்க்கங்கள் நான்கும் நம் ஆரியப் பெரியோர் சித்தாந்தப் படுத்தியிருந்தும், எல்லாம் வைதிகத்துக்கே யிசைந்ததாய்த் தற்கால லௌகிக மேம்பாட்டுக்கு வழி காணாமல் திகைத்திருந்த நம்மவருக்கு தீபக்கூடு தோன்றியதுபோல் பரமஹம்ஸ பரிவிராஜகராய் விளங்கிய ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகள் மேற்கூறிய நால்வகைத் திறனையும் நமக்கெல்லாம்நன்குணர்த்தியதற்கு முன்பே, கிளாட்ஸ்டன் காலத்தில் நம்மிந்தியாவின் மீட்சிக்காகக் கருணைகூர்ந்து பேசிவந்த ஜான்பிரைட்டென்னும் இங்கிலாண்டு மஹானோடு கலந்திருந்த ஸ்ரீ லால் மோஹன் கோஷின் புதிய உணர்ச்சியெனும் ஒளிதிலே காட்டிய திவ்ய கைங்கர்யத்தின் பயனாய்க் "காங்கிரஸ்" எனும் பெருந் திருப்பணி இந்தியாவில் தொடங்கி சென்ற 23 வருஷமாக நமதப்பனும் ரிப்பன் பிரபுவின் மூலாதாரக் கோட்பாட்டினைகரவினால் மேற்கொண்டுவந்தும், கடைசியாக சூரத்தில் நடந்தேறியதினிடையே ஸ்ரீ திலகரின் எதிர்மறையால் தாக்குண்டு தகர்ந்து போயிற்றென்னவாகிய அஃதாயினுமிப்போது திரும்பிச் சென்னையிற் கிளம்பி, கவனிப்பதாய்க் காட்டிக்கொள்ளப் பின்னிடைந்திருந்த கவர்ன்மெண்டாரும் முற்பட்டுக்கையிலேந்திக் கொள்ளலாயிற் றென்றுங் கூறலாகியது. இதுவரையில் இக்காங்கிரசால் என்ன பிரயோசனமென்று சொல்லிவந்த வாயெல்லாம் இனி யிளித்துக்கொள்ள

வேண்டியது தானென்றும் ஏற்பட்டுவிட்டது; ஏனெனில், இக்காங்கிரஸின் வாயால் எப்போதுமில்லாமல் இப்போதைய பிரிட்டிஷ் இந்தியாமந்திரி லார்ட் மார்லியும் ராஜப்பிரதிநிதி லார்ட் மிண்டோவும் ஒரு பாடாய் இந்தியாவின் ஏக்கத்தைப் போக்கிவிடும் புண்ணிய விளம்பரமாக விடுத்த "இந்தியா சீர்திருத்த ஏற்பாடு" என்னும் பெருவாசகத்துக்குத் திருவாசகம் பாடக் கேட்டதாக வில்லையா?

நிற்க, இத்தகைய காங்கிரசுக்கு இருந்துணையாயிருந்துவந்த ஸ்ரீதிலகர் எதிர்மறையாய் விட்டதற்குக் காரணமாவது சுதேசியம், சுஜாதீயம், சுபாஷீயம், சுமதீயம் என்னும் நவீன விவேக சாதன சதுஷ்டயத்துக்குரியதாக பாய்காட்டென்னும் பிறவிலக்கைப்பற்றியும், ஸ்வராஜென்னும் தன்னாட்சியைப்பற்றியும் முன்னடுத்த கல்கட்டா காங்கிரஸில் ஸ்ரீ தாதாபாய் நவ்ரோஜி அக்கிராசனத்தின்முன்பாகத் தீர்மானித்தபடி நடந்துகொள்ள, மேலிரண்டையும் வெறுத்து அச்சுறுத்தும் அதிகாரத்துக்கஞ்சித் தவறியதைப் பற்றிக் குறைகூறியதே யென்னப்பட்டது. இப்போது நடந்தேறிவரும் அலிப்பூர் ராஜதுவேஷ விசாரணைக்கேஸில் சாக்ஷியாகநின்று சுதேசியம், அந்நியவிலக்கு, ஜாதீயக்கல்வி, ஸ்வராஜ் என்னும் நான்கு விஷயங்களைப்பற்றிக் கூறிய—

மிஸ்டர் பாரிஸ்டர் A. C. பானர்ஜி—சுதேசியப் பிரமாணமாவது இங்கிலாண்டு சரக்குகளை வாங்காமல் இந்திய சரக்குகளையே உபயோகப்படுத்தி வரவேண்டுமென்பதாகும். பாய்க்காட்டாவது வங்காளப் பிரிவினையை மாற்றிவைக்குங் கருவியாக சாதாரணமாய் அந்நிய சரக்கை, முக்கியமாய் பிரிட்டிஷ் சரக்கை விலக்கிவிடவேண்டுமென்பதாகும்; ஆனால் இந்த வற்புறுத்துவதற்கு வழியாவது இனவிலக்கேயன்றி பலப்பிரயோகமாயில்லை; ஆயினும் ஒருவன் இனவிலக்குக்கும் இசையாவிட்டால், அவனிடமுள்ள அந்நியசரக்கை வாங்கி அழித்துவிடுவது மட்டுமே.

மிஸ்டர் நார்ட்டன்—இந்தியா கவர்ன்மெண்டின் சீர் திருத்தத்தைப்பற்றி எந்த மீட்டிங்கிலாவது பேசிய போது நீரிருந்ததுண்டா?

மிஸ்டர் பானர்ஜீ—நீர் வந்திருந்த காங்கிரஸ் மீட்டிங்கிலேயே பேசியதுண்டு; அந்த சீர்திருத்தமாவது இந்நாட்டுக் குடிகளுக்கு நல்லாட்சிக்கிடமாகும்படி ஸிவிலியன் அதிகாரத்தைக் குறைக்க வேண்டுமென்பதே.

கோர்ட்டார்—ராஜாவாதிகாரம் தேவையோ?

மிஸ்டர் பானர்ஜீ—அல்ல; அதாவது இந்தியன் ஸிவிலியன்களைக் கோர்ட்டுகளில் உட்காரவைக்கக்கூடாதென்பதே. (சிரிப்பு.)

மிஸ்டர் நார்ட்டன்—நீர் அமிதவாதியா?

மிஸ்டர் பானர்ஜீ—நான் ஜாதீயவாதி.

மிஸ்டர் நார்ட்டன்—எப்படி?

மிஸ்டர் பானர்ஜீ—ஜாதீயவாதி சர்க்கார் சகாயம் வேண்டுவோன்; அமிதவாதியோ தன்னுதவியையும், தன்னம்பிக்கையுமே கொண்டவன்.

மிஸ்டர் நார்ட்டன்—காங்கிரஸில் கவர்ன்மென்டின் சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசியதுண்டா?

மிஸ்டர் பானர்ஜீ—நீரிருந்த காங்கிரஸிலேயே ஸிவிலியன் அதிகாரம் குறைய வேண்டியதாகப் பேசப்பட்டது.

ஜட்ஜி—"ஸிவிலியன்" என்றால்?

பானர்ஜீ—எக்சிகூட்டிவ் ஸர்விஸ் மெம்பர்கள். (சிரிப்பு.)

மிஸ்டர் நார்ட்டன்—சத்ரபத்தர்மீட்டிங்கில்பேசப்பட்டதென்ன?

# முகவுரை.

மிஸ்டர் பானர்ஜீ—நல்லாட்சி முறையை போதிப்பதால் கவர்ன்மெண்டை சீர்திருத்தத்துக்குக் கொண்டு வரலாமேயன்றி பலப்பிரயோகத்தால் (பாயபெறியால்) ஆகாது என்றே பேசப்பட்டது.

மிஸ்டர் நார்ட்டன்—முன்பாய்ங்காட்டுக்கு சொன்னதுபோல, இனி ஸ்வராஜ் என்பதற்கு என்ன சொல்வீர்?

மிஸ்டர் பானர்ஜீ—"தன்னாட்சியென்பது அந்நிய ஆட்சிக்கிடமில்லாமலிருப்பதே" யென்று சென்னையில் விபினசந்திரபாலர் பிரசங்கித்திருப்பதில் அந்நிய ஆட்சியென்றது பிரிட்டிஷ் ஆட்சியாகுமென்றபடிக் குடியேற்றத் தன்னாட்சியாகும். மிக்க நேர்த்தியான ஆங்கிலேய நடையும் நற்பொருட்கோடையுமுடைய "வந்தேமாதரம்" பேப்பர் பூர்த்தியான தன்னாதரவாதியாக, யுகாந்திர பேப்பரோ பூரண ஸ்வாதீனவாதியாகியது.

மிஸ்டர் நார்ட்டன்—அரவிந்தரை அறிவீரா?

மிஸ்டர் பானர்ஜீ—இவரைக் காங்கிரஸ் மீட்டிங்குகளில் கண்டிருக்கிறேன்.

ஜட்ஜீ—மிஸ்டர் நார்ட்டனோடேயா? (சிரிப்பு).

மிஸ்டர் நார்ட்டன்—1894-ஆம் முதல் நான் காங்கிரசுக்குப் போனதில்லை; அரவிந்தருடைய அபிப்பிராயங்களை அறிவீரா?

மிஸ்டர் பானர்ஜீ—அவர் நான் கார்ப்பரேஷனுக்குப் போகக்கூடாதென்றார். (சிரிப்பு)

மிஸ்டர் நார்ட்டன்—அதைப்பற்றி அவசியமில்லை; அவருடைய ராஜரீக அபிப்பிராயமென்ன?

மிஸ்டர் பானர்ஜீ—அரவிந்தர் அபிப்பிராயமெல்லாங் கூடி கவர்ன்மெண்டைக் கலந்து கட்டிக்கொண்டுபோ

வதில் பிரயோசனமில்லை யாகவே, நமக்கு நாமே உதவிக்கொள்ளும் பயிற்சியில்லை யென்பதே.

மிஸ்டர் நார்ட்டன்—ஆகவே கவர்ன்மெண்டைத் தொலைத்துவிடவேண்டிய தென்றாகுமோ?

மிஸ்டர் பானர்ஜீ—வந்தேமாதரத்துக்கும் இவ்வபிப்பிராயமுள்ளதென்னலாகாது. என்மட்டில் பாய்க்காட்டென்பது அந்நியசரக்கு விலக்காகக்கொண்டு சுதேசீயத்துக்கு இன்றியமையாததாகப் பிரசங்கித்தேன். தேவவிரதரென்பவர் கக்ஷித்தலைவர்கள் அநேகமாய் ஹிந்து ஆசாரத்தைக் கைவிட்டிருந்தால் தள்ளிவிடப்பட்ட தேசதூதர்களாய்(கிறிப்பு)அந்நியக்கொள்கைகளுக்கு இடந்தந்து வருவதினாலே முதலாளிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் சண்டையுண்டாய் யூரோப்புபோல சமரசவாதம் ஜனித்துவிடுமென்றார். காங்கிரசுக்கு எதிர்க்கக்ஷியுமுள்ளது. மிதவாதிகளிலேயும் பல்வேறு வகையாப் பிரிவுகளுள்ளன. ஜாதீய வாதிகளாவார் தங்கள் தேசதுரோகிகளல்லர். தக்காரைப் ஸாலி முல்லாவும் ஜாதீயவாதியாகலாம். நான் வந்தேமாதரத்தை மட்டும் கிரமமாய் வாசித்து வந்தேன். அதில் சில விஷயங்களின் நடையைக்கொண்டு அரவிந்தருடையதாயிருக்கலாமென்று சந்தேகித்தேன்; அரவிந்தர் ராஜரீக விஷயமாய் பலப்பிரயோகத்தை(பாம்பெறிதை) யெப்போதும் எடுத்துரைத்ததில்லை கவர்ன்மெண்டார் போலீசார் மூலமாய் மகமதியர்களைக்கொண்டு கலகங்களைக் கிளப்பியதாக வெகு ஜனாபிப்பிராய முண்டாயிருந்தது. பிரிவினைக் கலக்கத்துக்காக அரவிந்தராலாவது மற்றெவராலாவது பாம்புசங்கதி பிரஸ்தாபிக்கப்பட்டதில்லை. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை பலவந்தமாய் அப்புறப்படுத்திவிடவேண்டியதா யோசித்ததாகவும் கேள்விப்பட்டதில்லை. ஸந்தியாபேப்பரோ மாஜிஸ்ட்ரேட்டுகள் அல்லது ஜட்ஜிகளின் அக்கிரமமான நடவடிக்கைகளையறிந்ததும் தூஷிப்பதே தொழிலாகக்கொண்டிருந்தது. பிரிவினைக் கலக்க முதலாக வெகு ஜனங்கள் அநேகமாய் ராஜரீக சம்பந்த

யில்லாமலே சீர்திருத்திக்கொள்ளத் தொடங்கிக்கொண்டார்கள். இதற்கு முக்கிய குருவாயிருந்தவர் பாபுரவீந்திரநாத் தாகூர் என்னும் மஹாவித்வான்.

ஜட்ஜி—புதிய கலக்கமாவது ?

பானர்ஜி—ராஜரிகத் திருத்தமே அநாவசியமாக, ஜாதியத்திருத்தமே அவசியமானதென்ற ரவீந்திரர் கோட்பாட்டின்படி ராய் நரேந்திரநாத ஸேன்பஹதூர் தலைமையின் கீழ் கல்கட்டா கீதாசங்கம் நடந்தேறி வருவதில் கார்ப்பரேஷன் ஸெக்ரிட்டெரி மிஸ்டர். P. R. முக்கர்ஜீ காரியதரிசியாயிருக்கிறார்.

ஜட்ஜி—அரவிந்தர் ஸ்வார்ப்பண வாதியா

பானர்ஜி—அவர் வாழ்க்கையே தன்னை ...புக் கொடுத்துவிட்டது தான். அவர் அமிதவாதியல்லர், மிதவாதியல்லர், தன்னயவாதியுமல்லர் !

இத்தகைய அரவிந்தரின் முகாரவிந்தமும் வியக்கத்தக்கவராகிய ஸ்ரீதிலகரின் சிறப்பை முடிவாகக் கூறுவது கூடாமையாலும், இப்போதைய இவரது குற்ற விசாரணை முடிவில் இவர் திடச்சித்தத்தின் சிறப்பை உலகறியும்படி ஜட்ஜி தேவார் அணியாமனமாய் சிக்ஷை விதிக்குமுன்னே "ஏதாவது சொல்லிக்கொள்ளலாம்" என்று கேட்டபோது பரதுக்கம் சகியாத பரமபுருஷனாகிய ஸ்ரீதிலக சிங்கம் "எல்லாம் கடவுள் செயல்; என்னுட்டார் படும் அவதிகளைக்கண்டு புண்ணுகவெந்து கதறிக்கொண்டிருப்பதைப்பார்க்கிலும்கண்மறைவாய்க் கஷ்டப்பட்டுக்கொண்டாயினுங் கிடப்பதேமேலாகும்" என்ற கருத்தொன்றே யெவரும் எக்காலும் எவ்விடத்தும் சிந்தித்துக்கொண்டு வரத்தக்க திருவண்ணுமலை தீபம் !

ஏஷியருக்கெல்லாம் ஏற்றமளித்திருக்கும் "ஜப்பான் கிரானிக்கில்" என்னும் பேப்பர் இவ்விந்திய சீர்

திருத்தப் போராட்டத்தைப்பற்றிக் கூறுவதாவது—இந்தியர் தன்னாட்சிக்குத் தகுதியில்லாதவர்களாகையால் இவ்வுலகில் மிக்க திறமை படைத்துள்ள பிரிட்டிஷ் ஆட்சியே மேலானதென்றாலும், செருப்பைத் தைத்துத் தைத்தே ஒரு செக்கிலி கெட்டிக்காரனாக வேண்டியதுபோல சுதந்திரம் செலுத்திப் பழக்கப்படுவதால் மட்டுமே ஒரு ஜாதி மேம்பாடடையும். இந்தியருக்குள் ஒற்றுமையில்லையாகவே தன்னாட்சியைத் தருவதற்கில்லை யென்று சொல்லிக்கொண்டிருந்தால் அராஜரிகக்கேட்டுக் கிடமுண்டாய் வருமே. சஞ்சார வசதிக்கேற்ற சாதகங்கள் ஏராளமாயுள்ள இக்காலத்தில் பல்வேறுவகையான ஜாதியார் கூடியிருக்கவேண்டிய அவசியம் ஊரப்பெறும்போது உடனே ஒற்றுமையுண்டாய் விடுவது மின்றியமையாததாகும்; உதாரணமாக, ஜப்பானிய சரித்திரப்படி எதிர் மாறான எத்தனையோ ஜாதிப் பிரிவினையிருந்துகொண்டுதான், இப்போது ஒற்றுமையாலே உலகத்தை பிரமிக்கச்செய்தது. இந்தியாவுக்கும் இப்படி தானே—இவ்வாறு தான் ஸ்ரீதிலகரும் உள்ளதை உரைத்து சிறை சேர்ந்தார். இவரப்பில் பிரிவிக் கவுன்ஸிலுக்கு இன்னும் எட்டவில்லையாகத்தெரிகிறது.

காங்கிரஸ்கஷ்டங்களையெல்லாங்கடந்துவர, அந்நிய ஆட்சியின் கீழானாலும் பெருஞ்சுதந்திரங்களை யளிப்பதாக முற்பட்ட இத்தருணத்தில் காங்கிரசிற் கலவோம், கல்விவிருத்தியே போதுமானது என்று சொல்லிக்கொண்டிருந்த மகமதிய ரிப்போது சுதந்திர அதிகாரத்தில் ஹிந்துக்கள் கூட்டுறவைக் கழித்துப் பிரித்துவைக்க வேண்டுமென்றார்கள். ஹிந்து மகமதியர்கள் நீரும் நெருப்புமானாலும் இரண்டுமொன்றுகூடி யெப்படி உலகத்தையும் ஒன்றுபடுத்திவருகிறதோ, அவ்வாறே யிவ்விருவகையாரும் ஒன்று கூடியே தான் இந்தியா உயர வேண்டுமென்பதை யின்னுமறியாதிருப்பது மிக்க விசனகரமானதே. 19-ஆவது நூற்றாண்டின்தொடக்கத்தில்

பிரிட்டிஷார் இந்தியாவைக் கைப்பற்றி வந்த காலத்தில் மராட்டியர் சீக்கியரிலும் மகமதியர் சண்டைக்குத் தாழ்ந்தவராயிருந்ததினாலே மராட்டியரிலும் மகமதியருக்கு சிறப்பேதுங்கிடையாதன்றி, 1857-ம் வருஷத்துப் பெருஞ் சிப்பாய் கலகத்திலே சீக்கியரே சிறந்தவரென சிந்திக்கத் தக்கதென்று வெஸ்ட் மினிஸ்டர் கெஜட்டில் ஒரு நிருபர் குறிப்பிட்டிருக்கிறார். இதை கவனியாது [illegible] அமீர் ஆலியெனும் மகமதிய பாரிஸ்டர் இந்த சந்தர்ப்பத்தில் தம்மினத்தவருக்குத் தனி யெலெக்ஷன் வேண்டுமென்பதுபோல, ஸ்ரீ திலகர் தம்மினத்தவராகிய மராட்டியருக்கென்று தனிப்படுத்தி ஏதுங் கேட்கவில்லையே! ஆகவே, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சமரசக்கோட்பாட்டைக் கைவிடாமல் எடுத்துக்கொண்ட இந்தியர் கவர்ன்மெண்டு சீர்திருத்த ஏற்பாட்டை இனிது முடித்துவிட்டாலே ஸ்ரீ திலகரின் மனம் குளிர்ந்துபோமென்பதில் சந்தேகமில்லையென்பதற்கு இவரது அதிகாரவிருத்திக் கமிஷன் விசாரணையில் சுதந்திரங்களைக் கொஞ்சங்கொஞ்சமாய்க் கொடுத்துப் பழக்கி இந்தியர்களை மேலேற்றிவிட்டு வருவதே போதுமானதென்று அபிப்பிராயத்தைக் காட்டுவோம்.

# சிறப்புரை.

## பூனா பஞ்சவர்.

சரித்திரப் பிரசித்திபெற்ற ம[illegible]த்திய ஜாதியைச் சேர்ந்த சித்பாவன பிராமண குலக்குடி விளங்கப்பிய ரத்னகிரியிலே 1856-ஆம் ஜூலைமீ 2உ ஸ்ரீபாலகங்காதர திலகர் பிறந்தார். இவர் தகப்பனாராகிய ஸ்ரீகங்காதரபந்தென்னும் ராமச்சந்திர திலகர் ரத்னகிரியில் அஸிஸ்டண்டு டீச்சராயிருந்து, பிறகு தாணாவிலும் பூனாவிலும் டெப்டியின்ஸ்பெக்டராயிருந்து திரிகோண கணித நூலாசிரியராகப் பேரெடுத்தும், பாலகங்காதரரைப் படிப்பிக்கவுமில்லாமல் 1872ஆம் இறந்துபோனபோது பாலகங்காதரருக்கு வயது 16 தான். ஆயினும் பக்தாவு இறந்தபின் 4-மாதத்திலே பாலகங்காதரர் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறி, தக்ஷிணக் கலாசாலையில் சேர்ந்து 1879ஆம் ஆனர் B. A. பட்டத்தையும், 1879ஆம் பம்பாய் யூனிவெர்ஸிட்டியில் LL. B. பட்டத்தையும் வகித்துக் கொண்டார். லா படிப்பின்போது பெர்க்குஸன் காலேஜ் பிரின்ஸிபாலாகிய ஸ்ரீ அகர்காரின் நேசத்தையும் பெற்றிருந்ததால், இருவரும் தங்கள் சுதேசப் பிரஜைகளுக்கு எவ்வகையில் நன்மைசெய்து வைக்கலாமென்பதைப்பற்றி பிரவெல்லாம் கண்விழித்தும் யோசித்துக்கொண்டிருந்தார்களாம். ஆகவே, இவ்விருவரும் சர்க்கார் உத்தியோகத்துக்குப் போவதே கூடாதென்ற தீர்மானம் கொண்டு, இளைஞர்களுக்கு மெய்யும் திடமுமான கல்விப்பயிற்சியாக சொந்தக்கலாசாலை யொன்றமைக்க முடிவுசெய்து கொண்டார்கள். யாவரும் என்னசெய்தாலும், இவர்கள் எவ்வளவிலும் இளைக்காமலே யிருந்து வந்த சமயத்தில் சிப்லங்காரெனும் விஷ்ணுசாஸ்திரி யென்பாரொருவரும் தமது அதிகாரிகளிடம் சரிப்படாமல்

சர்க்கார் உத்தியோகத்தைக் கைவிட்டுப் பூனாவில் ஹைஸ்கூலொன்றை ஸ்தாபிக்கும் நிச்சயார்த்தமாய் வந்து சேர்ந்தார். அவர் தகப்பனாரும் பேர்பெற்ற மராத்தி வசன கிரந்தகர்த்தாவாம். அகர்கார், திலகர், சிப்லங்கார் ஆக இம் மூவரும் ஏக மனதாயிருக்கையில், மற்றொரு விவேகப் பிரகாசியாகிய நாம் ஜோஷி யென்பாரும் கூடிப் பூனாவில் புதிய இங்கிலீஷ் ஸ்கூலொன்றை 1880௵ வைத்துவிட்டார்கள். பிறகு ஆறு மாசத்தில் இன்னுமொரு பி. ஏ. பட்டதாரியாகிய ஆப்தியென்பாரொருவரும் கூடிக்கொண்டார். அடுத்த வருஷத்தில் அகர்காரும் M. A. ஆய்விட்டார். பஞ்சபாண்டவர்போன்ற இவ்வைவரும் ஸ்கூலோடு விடாமல் மராட்டா, கேசரி யென்னும் இரண்டுபேப்பர்களையும் நடத்தத் தொடங்கிப் பிரபல மடைந்து வந்தார்கள். ஸ்ரீசிப்லங்காரோ இவ்விரண்டு பேப்பர்களுக்கும் ஆதரவாக ஆரிய பூஷண அச்சுக்கூடத்தை அமைத்துவிட்டதுமன்றி, சித்திரக்கல்விவிர்த்திக்காகச் சித்திரசாலையொன்றையும் ஏற்படுத்திவைத்தார். இவ் வேலைகளையெல்லாம் பார்த்து வந்ததில் ஐவருக்கும் பூர்த்தியான அனுவலாயிருந்து வந்ததிலும் புதிய இங்கிலீஷ் ஸ்கூலும் பேப்பர்களிரண்டும் தக்ஷிணத்திலே பிரசித்தியாய்விட்டன.

## பஞ்சவருக்கு நேர்ந்த கஷ்டங்கள்.

இந்த தேசாபிமான சிகாமணிகளுக்கு இடையூறாகக் கேசரியிலும், மராட்டாவிலும் கோலாப்பூர் மஹாராஜாவாயிருந்த சிவாஜிராவைப்பற்றிப் பெருங்குறை கூறியிருந்தவகையில் பத்திரிகாசிரியர்களாகிய திலகரும், அகர்காரும் அவதூறு செய்ததாகக் கோலாப்பூர் கார்பாரியாயிருந்த மிஸ்டர் பார்வ் பிரியாது செய்துவிட்டார். இக்கேஸ் விசாரணையாய் வந்தபோது ஸ்ரீசிப்லங்கார் இறந்தவுடனே குற்றவாளிகளான இருவருக்கும் ச-மாச வெறுங்காவல் விதிக்கப்பட்டது. இக்கோலாப்பூர் கேசினால் ஸ்கூலும் பேப்பர்களும் இன்னும் பிர

சித்திபெற்று வந்தன. யாவரும் உதவிபுரிய முன்னின்றார்கள். ஸ்ரீசிப்லங்காருக்குப் பிறகு ஸ்ரீதிலகரே வெகுகாலம் சிரேஷ்டமாயிருந்துவந்தார். 1884ல் இவர்கள் தக்ஷிணக்கல்வி சங்கமொன்றை ஸ்தாபித்ததில் ஜீவபரியந்தம் ஸ்திரமான பிரதம சபிகர்களானார்கள்.

## புரோபசர்களின் சேர்மானம்.

இப்பிரதமசபிகர்களோடுகேல்கார், த்ராப், கோலே, ரோக்கலே, பானு, பதங்கார் என்னும் ஆறு புரொபசர்கள் வந்து சேர்ந்தார்கள். ஆகவே 1885ல் அச் சங்க விசாரணையின் கீழ் பெர்க்குஸன் காலேஜ் ஸ்தாபிக்கப்பட்டதில் ஸ்திர மெம்பர்களனைவரும் 20-வருஷகாலம் புரொபசர்களாயிருந்துழைக்க ஒப்புக்கொண்டபடி விருத்தியும் மேலிட்டுவந்தது. இதற்காக கதிரிவாடையை வாங்கிக்கொண்டபிறகு; ஸர் ஜேம்ஸ் பெர்க்குஸன் கவான்மெண்டு சிபாரிசின்படி லார்ட் ரே நாநா வாடையைக்கொடுத்து விடவே காலேஜுக்காக சாதூர் ஷிங்கி பண்டை ஒரு விநோதக் கட்டிடம் அமைக்கப்பட்டது. இக்காலேஜின் சம்பந்தம் ஸ்ரீ திலகருக்கு 1890-ல் ஒழிந்துபோயிற்று. விஷ்ணு சாஸ்திரி காலத்திலேயே சித்திரசாலை சுவாதீனம் பெற்றது. 1888ல் ஸ்ரீ திலகருக்கும், ஸ்ரீ அகர்காருக்கும் அபிப்பிராய பேதமுண்டாய், ஸ்ரீ அகர்கார் கேசரியைவிட்டு சுதாரக் பத்திரிகை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்.

## ஸ்ரீ திலகரின் வேற்றுமை.

இனிக் கலாசாலைக்கும் பேப்பர்களுக்கும் சம்பந்தம் வேண்டியதில்லையென் றேற்பட்டதின்மேல் ஆரிய பூஷண அச்சுக்கூடமும், இரண்டுபேப்பர்களும் ஸ்ரீதிலகர், புரொபசர் கேல்கார், மிஸ்டர் கோக்கலே இவர்களவசமாய்விட்டன. புரொபசர் கேல்கார் இரண்டு பேப்பர்களுக்கும் எடிட்டராயிருந்து வந்தார். இவ்வாறு 1890ல் மட்டும் நடந்தேறி வந்தது. அப்போது புரொபசர் கோக்கலே பூனா ஸர்வ ஜனிகஸபைக்கு

ஸெக்ரிட்டெரியாக நியமிக்கப்பெற்ற வகையில் ஒரு பெருவிவாதங்கிளம்பியதினால் ஸ்ரீதிலகர்ஷை சங்கத்தில் ஸ்திரமெம்பர்களாயுள்ளவர்கள் கல்விச்சாலை உபாத்திமைத்தனத்திலேயே தங்கள் காலத்தைக் கழிக்கவேண்டுமென்று வற்புறுத்தியதன்மேல் மெஜாரிட்டியார் இவரோடு கலவாமையால், இவர் ஷை சங்கத்துக்கு ராஜிநாமா கொடுத்துவிட்டார். இவர் கணிதசாஸ்திர புரொபசரா யிருந்ததில் அடைந்த பிரபலமோ ஒப்பற்றதா யிருந்ததுமன்றி, ஸம்ஸ்கிருதத்திலும் நவீன சாஸ்திரத்திலும் புரொபசராயிருந்துவந்தார். ஆராய்ச்சியும் தேர்ச்சியுமே இவரது பிரமாணங்களாயிருந்தன. இவர் எக்கலையை போதிப்பதானாலும், மாணவருக்கு மனக்குறையே கிடையாதாம். கணிதசாஸ்திர போதனையில் இவர் தம்மாணவரிடம் தமது சற்குருவாகிய தக்ஷிணக் கலாசாலை புரொபசர் சத்ரேயைப்பற்றிப் புகழ்ந்துவருவாராம். இவர் ராஜிநாமாவினால் காலேஜுக்குப் பலவகையிலும் பெருநஷ்டமானது சொல்லவேண்டியதில்லை.

## ஸ்ரீ திலகரின் புதுவழி.

போதனைத்தொழிலை ஒழித்துவிட்டபிறகு ஸ்ரீதிலகர் பொது நன்மைக் குழைப்பதாக முற்பட்டபோது சம்மதிவயசு சட்டமசோதா வைஸ்ராய் கவுன்ஸிலிலிருந்ததால், அதைப்பற்றிய விவாதத்தில் பிரவேசிக்கப்போதிய சாவகாசமும் வாய்த்தது. இவர் விவாதமாவது ஜாதிய சீர்திருத்தத்தை மறுக்கவில்லையானாலும் கவர்ன்மெண்டார் நிபந்திக்கக் கூடாதென்பதாகும். இவ்வகையில் ஜாதிய சீர்திருத்தக்காரர்கள்கூட அநேகமாய் விவாதித்தார்கள். இதன்மேல் பூனாவில் இரண்டு கக்ஷிகளேற்பட்டு விட்டன. இவர் காலேஜைக் கைவிட்டாலும் ஹைகோர்ட்டு டிஸ்ட்ரிக்டுக் கோர்ட்டு பிளீடர்களுக்காகப் புதிய கிளாஸ் ஒன்றை வைத்துக்கொண்டார். இவர் கேசரி பத்திராசிரியராய், புரொபசர் கேல்கார் மராட்டா எடிட்டராயும் மறுவருஷம் கைவி

ட்டபடியால் அதையும் ஏற்றுக்கொண்டார். ஒரு வருஷம் பொறுத்து பாகித்துக் கொண்டதில் ஸ்ரீ திலகர் இரண்டு பேப்பர்களுக்கும் புரொப்ரைட்டராய்விட புரொபசர் கேல்கரும், மிஸ்டர் கோக்கலேயும் ஆரிய பூஷண அச்சுக்கூடத்தை யேற்றுக்கொண்டார்கள். ஸ்ரீ திலகர் சொந்தமான பிறகு கேசரிபத்திரிகை விசேஷ விருத்தி யடைந்துவிட்டது. இப்போது இதன் சந்தா தொகை வேறெந்த இந்திய பேப்பருக்குங்கிடையாது.

### ஸ்ரீ திலகரின் ஆராய்ச்சி.

இனி இவர் பகவத்கீதையுடன் ரிக்வேதத்தை ஆராய்ச்சி செய்து எழுதின பேப்ப ரொன்றை 1872௵ லண்டனில் நடந்தேறிய இண்டர் நேஷனல் ஓரியண்டல் காங்கிரசுக்கு அனுப்பியதன்மேல் புஸ்தகமாய் வெளியிட்டார். இப்பெரு நூல்தான் "ஓரியன்" என்னப்படுவது. இப்பெயர் கிரீக்கரால் வழங்கப்பட்டதாகும். இதற்கு ஸம்ஸ்கிருதத்தில் அக்கிராயனம் எனலாகும்; இதன்பொருளாவது வருஷோதயமாகிய மார்க்க சீரிஷமென்பது. இதில் கி-மு. 4000-வருஷத்துக்கு முன்னேயும், கிரீக்கர் ஹிந்துக்களைவிட்டுப் பிரிந்து போகா முன்னேயும் ரிக்வேதம் எழுதப் பட்டதாக சித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இது யூரோப்பிய அமெரிகா விற்பன்னர்களாலே மிகப் புகழப்பட்டுள்ளதாக சர்வாங்கீகாரமாய் விட்டதாகும். இந்நூலாசிரியராகிய ஸ்ரீ திலகரின் விவேக விளக்கமானது மாக்ஸ்முல்லர், வீபர், ஜேக்கபி, விட்னிமுதலிய எஷிய கலாவிற்பன்னர்களாலும் மெச்சப்பட்டிருக்கிறது. அமேரிக புரொபசர் விட்னி இறக்குமுன் 1894௵ அமேரிக்கன் ஓரியண்டல் சங்கப்பத்திரிகையிலே ஸ்ரீ திலகரின் அபிப்பிராயங்களை வெகுவாய்ப் புகழ்ந்திருக்கிறார். ஸ்ரீ திலகரைப்பற்றிக் கேட்டுமிராத டாக்டர் புளூம்பீல்ட் ஒரு வருஷாந்தக் கூட்டப் பிரசங்கத்தில் ஓரியனைப்பார்வையிட, முன்னிருந்த தப்பெண்ணமெல்லாம் பார்வையிட்ட பிறகு மாறி மதிக்கலாயிற்றென்றார்.

# சிறப்புரை.

## விவகார வெற்றிக்கொடி.

1894ல் இவர் தமது சிநேகிதராகிய ராவ்ஸாஹிப் பாபத் என்பவர் பரோதா ஸெட்டில்மெண்டிலாகாதாராயிருந்தவகையில் பிரிட்டிஷ் பொலிட்டிகல் டிபார்ட்டுமெண்டாரால் லஞ்சக்கேசுகள் கொண்டுவரப்பட்டதின்பேரில் கவனம் வைக்கலாகியது. அப்போது மஹாராஜா யூரோப்புக்குப் போயிருந்தார். இக்கேஸ் விசாரணையில் மஹாராஜாவின் அனுகைக்கே பழுது செய்ய அவர்விரோதிகள் முயன்றதா யேற்பட்டது. மிஸ்டர் பாபத்துக்கு தண்டனை கிடைக்கும் போலாய்விட்டது. இதில் அநேக பெரிய மனுஷ்யான் கூடிக்கொண்டு மிஸ்டர் பாபத்துக்குவேண்டியவர்கள் பேரிலிருந்த தாவாவைத் தீர்த்துக்கொள்ளக் கங்கணங்கட்டிக்கொண்டிருந்தார்கள். பிராசிகூஷனுக்காக ஆனரெபில் மேட்டாவும் பாரிஸ்டர் மிஸ்டர் பிரான்ஸனும் ஹாஜராக, டிபன்ஸில் மிஸ்டர் ஆப்தியும் மிஸ்டர்கரேயும் நின்றார்கள் என்றாலும் ஸ்ரீ திலகர் சாமர்த்தியத்தினால் பிராசிகூஷன் சாக்ஷிகளைக் கிராஸ்செய்ததிலும், விவகார தோரணை காட்டியதிலும் கேஸ் அடியோடு விழுந்துவிட்டது.

## ராஜரீக விவகாரம்.

இந்தியக் காங்கிரஸின் தக்ஷிணத்துக் கமிட்டி ஸெக்ரிட்டெரி அலுவலையும் இவர் கைவிட்டாரென்றாலும், பம்பாய் மாகாணக் கான்பரன்ஸின் ஸெக்ரிட்டெரியாயிருந்து முதல் ஐந்து ஸெஷன்களை நடத்தியதில் கடைசியாய்க் கூடிய 1892-ஆம்வருஷத்தின் கூட்டமானது ஆனரெபில் மேட்டா அக்கிராசனத்தின் முன்பாக வெகு விமரிசையாய் நடந்தேறியது. அடுத்த வருஷம் ஹிந்து மகமதியக் கலகங்கள் மிகுந்து அநேக புதிய விஷயங்கள் ராஜரீகவகையில் பெரியமாறுதலுக் கிடமாகியதில் ஸ்ரீதிலகர் மறுபடியும் முற்பட்டவராய், இக்கலகங்களுக்கு முகாந்திரமாயுள்ளவர் சில ஆங்கிலோ இந்தியரே யென்று வெளியிடத் துணிந்தார்; லார்ட்-

டப்ரீனின் மித்திரபேத தந்திர போதனையே இதற்காதாரமென்றும் கூறினார்; ஹிந்து மகமதியருக்குப் பொதுவாய் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நின்று கண்டித்தால்தான் கலகம் கலையுமென்றுங் காட்டினார். இதனால் கவர்னராகிய லார்ட் ஹாரிசும், அவரது ஸெக்ரிடெரி மிஸ்டர் லீவார்னரும் கோபங்கொண்டாலும், இவர் அஞ்சி யொதுங்கும் ஆசாமியல்லவே. இனியிவர் கேசரியில் இவ்விஷயத்தை விஸ்தாரமாய் வெளியிட்டு வந்ததினால், ஜனசமூகத்தினிடையே புதிய உணர்ச்சி பெருகியது. கல்விமான்களெல்லாம் சபாஷென்றார்கள். இதன்மேலிவர் சட்டசபிகராகவும், சர்வகலாசபிகராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். 1895-ல் பூனா யுனிவர்ஸிட்டி ஜெனரல் எலெக்ஷனில் முதன்மையாய் விளங்கிப் பிரதாபமடைந்தார்.

## மதாபிவிர்த்திமார்க்கம்.

இப்புதிய உணர்ச்சிக்கேற்க இவர் கணபதி சிவாஜி உற்சவங்களைப் புதுமாதிரிக்குக் கொண்டுவந்தார். இதனாலே இவருடைய பிரதாபம் எங்கும் பிரசித்தியாய்விட்டது. ஜாதியதேசிய உண்மை உணர்ச்சியைத் தூண்டுவதற்குப் பழமைநெறிகளையும் வீராவேசங்காட்டிய முன்னோர்களையும் செவ்வையாய்த் தொழுவதே உத்தமமாகுமென்பதும், நம் சிறுவர்கள் அந்நிய மதாசாரங்களைத் தழுவப் பார்ப்பதினாலே மதவிரோதிகளாய் சன்மார்க்கத் தாழ்வடைந்து வருவதுபற்றி, இப்படியே விட்டு வருவோமானால் நல்வழியெல்லாம் நாசமாய் மறுபடியும் தலையெடுப்பதற்கு மார்க்கங் காணாமையாய் விடுமென்பதும் இவரது நம்பிக்கை. இந்திய பாடசாலைகளில் சர்க்காரநுமதியில் போதிக்கப்பட்டுவரும் சன்மார்க்கமென்பவைகளை மாட்டாமேப் பரில் ஜாடி வந்தார். இந்திய சிறுவர்கள் தன்பற்றும் மைக்காமிருதியுமுடையவராக வேண்டிய தன்மதிப்புடையவராய் வருவதற்குத் தங்கள் மதாசாரங்களையும் முற்பட்ட பெரியோர்களையும் கனம்பண்ணுவதே காரியமாகு

மென்றார்; அமிதமான தன்னடக்கம் ஒரு சமயம் தத்துவஞானமுள்ள ஸந்நியாசிக்குப் பொருந்துமானாலும், உலகவாழ்க்கைக்கு உதவாதென்றார்; தேசாபிமான மிகுதியானது சிலசமயம் அதிக்கிரமத்துக்குக் கொண்டுபோனாலும் சில நன்மையுள்ளதாக, தன்னை மறுக்கும் அவநம்பிக்கையோ மரணமூர்ச்சைக்குக் கொண்டுபோகுமென்றார்—இவையே ஸ்ரீதிலகரின் ஜாதீய ராஜீய தத்துவ விற்பன்னமாகும். இதைப்பற்றி யார்யார் ஏதேதோ எண்ணினாலும், இவரது பிடிவாதமிதுவே. இவர் ஜாதியத் திருத்த விரோதி யென்னப்பட்டதுண்டு. சீர்திருத்தத்துக் குதாரணமாக, இவர் தமது பெண்மக்களுக்குக் கல்வி பயிற்றினார்; அவர்களின் விவாக காலத்தைச் சாஸ்திரோக்தமான உயர்ந்த வயதாகுமட்டில் தள்ளிவைத்தார்; ஜாதிபந்தனைகளைத் தளர்த்திவிட வாதித்தார் என்றாலும், சீர்திருத்தக் கக்ஷியாரை வாதிக்காமல் விட்டவரல்லவே. மேற்பார்வைக்காரர்கள் இவ்விரண்டுபட்ட நடவடிக்கையைக் கண்டு பிரமித்துக்கொண்டிருக்க, இவருக்கு விரோதிகளாயுள்ளவர்களோ ஜனங்களிடம் செல்வாக்கடையும் விருப்பத்தா லிதுவாகுமென்றார்கள். இவருக்கு சீர்திருத்தம் விருப்பமானதானாலும், இதற்கு முற்பட்டுள்ளவர்களின் மாதிரி யிவருக்குப் பிடிபடவேயில்லை. எவ்வகையிலும் இவர் சத்தியவந்தராகலின் வேஷதாரிகளை வெறுத்து, உள்ளும் புறம்பும் ஒரே மாதிரியான உலை நெருப்பாயிருந்து வந்தார். ஒரு கவர்ன்மெண்டேற்பாட்டை யிவர் அங்கீகரித்தாலும், அதன் அமுலை நிறைவேற்றும் அதிகாரிகளின் நடவடிக்கையை ஜாடாமல் விடார்.

## சிவாஜிமஹோற்சவம்.

1895ஆ இவர் சிவாஜி மஹோற்சவத்தில் பிரவேசித்தார். இதைப்பற்றி யிவர் கேசரியிலே யெழுதிவிடுத்த மாத்திரத்திலே ரேய்காட் கோட்டையிலுள்ள சிவாஜி சமாதி ரிப்பேருக்கு 20 ஆயிரம்ரூபா வசூலாய்விட்டது. அதன்மேல் சிவாஜி ஜயந்தி யெங்கும்கொண்

டாடப் பெற்றது. இவ் வருஷமுடிவில் 11-வது நேஷனல் காங்கிரஸ் பூனாவில்கூடுவதாய்த் தொடங்கியபோது இவர் ஸெக்ரிட்டெரியாயிருந்து ஜாதீயத்திருத்தக் கான்பரன்ஸுக்கு இடந்தருவதா வென்கிற விவாதம் முளைத்ததில் இவர் விலகும்படி நேர்ந்தும் முடிவாகுமட்டில் தக்க சகாயம் புரிந்தேவந்தார்.

## பஞ்சசகாயம்.

1896ஞு பெரும் பஞ்சம் நேர்ந்ததில் ஸ்ரீதிலகர் பஞ்சக்கோடு பிரகாரம் ஜனங்களுக்கு சகாயம் செய்யும்படி கவர்ன்மெண்டைவற்புறுத்தியும்பலனில்லையாகவே, பூனாவிலே யிவர் பஞ்சக் கொள்ளைகளைத் தடுக்கும்படி சரசமான தானிய மண்டிகளை யேற்படுத்தி வைத்தார். சோலாப்பூர் நெசவுக் காரருக்கு இதமான ஏற்பாடொன்றை யிவர் செய்ததற்கும் கவர்ன்மெண்டார் இணங்கிவரவில்லை. பஞ்சக் கோடின்படி ஜனங்களுக்கு சகாயம் செய்யவேண்டிய ஒழுங்குகளை யிவரெடுத்துக் காட்டியதை த்ரோஹமாய்க்கொண்ட கவர்ன்மெண்டார் பூனா ஸார்வஜனிக சபையார் தமக்கெழுதி யனுப்பிய விண்ணாப்பங்களுக்கும் ஸ்ரீதிலகரே காரண புருஷரென்றதாய்க் குரோதங்கொண்டு பஞ்சக்கோடில் சாதகமான விஷயங்களை சரிப்படுத்திக்கொண்டு விட்டார்களேயன்றி சகாயத்துக்கு முற்பட்டதில்லை.

## பிளேகுகலபை.

பூனாவில் பிளேகு உண்டானதும் இவர் பண்டு சேர்த்து ஓர் ஹிந்து ஆஸ்பிட்டலை யேற்படுத்தி வைத்திருக்க, தலைவர்களெல்லாம் தடுமாறி ஓடிப் போய்விட்டார்கள். இவரோ இருந்தபடியே ஜனங்களிடம் போக்குவருத்தாய் ஸெர்ச்சு பார்ட்டியோடு வாலண்டியராய்த் திரிந்து ஆஸ்பிட்டலைப் பார்வையிட்டுக்கொண்டு, விலக்கக் கியாம்பில் தரும சாப்பாட்டு சாலை வைத்து ஜனங்களுக்குள்ள சங்கடங்களைப்பற்றி கவர்னரவர்களிடத்திலும், மிஸ்டர் ராண்டினிடத்திலும் பேசிக்கொண்டு

இருந்தார். பேப்பரிலே கவர்ன்மெண்டு பிளேக் ஏற்பாடுகளைப்பற்றி ஆதரித்துக் கூறியிருந்தாலும், அமுல்களை ஜீவகாருண்ய சம்மதமாய் நடத்திவரவேண்டுமென்றும் எச்சரித்துவந்ததுமன்றி; ஜனங்களும் அநாவசியமான ஆக்ஷேபங்களை செய்யத் தகாதென்றும் புகட்டிவந்தார்; அல்லாமலும் பூனா முதலாளிகள் தருணத்தில் பறந்ததைப்பற்றியும் கண்டித்திருந்தார்.

## ராஜதூஷணைக் கேஸ்.

இப்படியிருக்க, 1897-௵ ஜூன்மீ 13உ சிவாஜி மஹோத்சவம் கொண்டாடப்பட்ட விவரம் கேசரியில் வெளியாகியது. அடுத்த 22உ மிஸ்டர் ராண்டும், லெப்டினண்டு ஆயர்ஸ்டும் படுகொலை செய்யப்பட்டதினால் ஆங்கிலோ இந்தியருக்குண்டாகிய ஆக்கிரகத்துக்கு அளவிராதென்று சொல்லவேண்டியதில்லை. அடுத்த ஜூலைமீ 26உ பம்பாய் கவர்ன்மெண்டார் ஸ்ரீ திலகர் மேல் பிராசிக்யூஷனுக்கு ஸாங்க்ஷன் செய்தபடி ஓரியண்டல் திரான்ஸ்லேட்டர் மிஸ்டர் பேக்சிவ் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஸ்லேட்டரிடம் தாவா செய்ததின்பேரில் மறுநாளிரவே யிவரைப் பிடித்தடைத்து விடலாகியது. ஜாமீனுங்கொடுக்காமல் இவரை ஹைகோர்ட்டு செஷனுக்குக் கமிட்டு செய்தனுப்பிவிட்டபோது ஜஸ்டிஸ் தயாப்ஜீ முன்பாக பாரிஸ்டர் தேவார் ஹாஜராய் அட்வோகேட் ஜெனரல் ஆக்ஷேபங்களுக்கெல்லாம் சமாதானம் சொல்லி ஜாமீனுக்கு உத்திரவு வாங்கிக்கொண்டார். இவ்விசாரணை அடுத்த செப்டம்பர் மாதத்தில் ஒருவாரம் நடந்ததில் கல்கட்டா பாரிஸ்டர் மிஸ்டர் பியூ டிபன்சில் நிற்க, அட்வோக்கேட் ஜெனரல் மிஸ்டர் லாங் பிராசிக்யூஷனை நடத்தினார். ஜஸ்டிஸ் ஸ்ட்ரேச்சி ஜட்ஜிமெண்டுக்கு உட்கார்ந்தார். ஜூரியில் 5 யூரோப்பியர்களும், ஓர் யூதரும், 2 ஹிந்துக்களும், ஒரு பார்சியும் இருந்தார்கள். அப்போதும் 6 யூரோப்பியரும் குற்றமுள்ளதென்ன, மற்ற 3 இந்தியரும் குற்றமில்லையென்றார்கள். ஜட்ஜி மெஜாரிட்டி அபிப்பிராயத்தைக் கொண்டு இவருக்கு 18 மாசக்கடின சிக்ஷை விதித்து

விட்டார். இதிலும் பம்பாய் ஹைகோர்ட் புல்பெஞ்சில் பிரிவிக் கவுன்ஸில் அப்பீலுக்கு அநுமதி தரவில்லை. ஆயினும் இப்போது பிரைம்மினிஸ்டராயிருக்கும் ரைட் ஆனரெபில் மிஸ்டர் அஸ்குவித்தைக்கொண்டு அடுத்த நவம்பரில் பிரிவிக் கவுன்ஸில் அப்பீல் தாக்கல் செய்வித்தும், மந்திராலோசனை சபிகாரரான லார்ட்சான்ஸலர் ஹால்ஸ்பரியே உட்கார்ந்து அப்பீலாவதற்கில்லையென்று அடித்துப்போட்டார்.

## சிறைவாசம்.

ஆகவே, திலகருக்கு சிறைவாசமே தீர்மானமாகியதைப்பற்றிப்பரிதபித்த பிரிட்டிஷ்பிரஜைகளுக்குசிரோமணிகளாகிய புரோபசர் மாக்ஸ் முல்லரும், ஸர்வில்லியம் ஹண்டரும் கூடி மஹாராணியாருக்கு ஒருபிட்டிஷனைத் தயார் செய்து அனுப்பியதன்மேல் கவர்ன்மெண்டு உத்திரவின்படி இவரிடம் ஏதோ எழுதி வாங்கிக்கொண்டு சிறையினின்று விடுவிக்கலாயிற்று. சிறைவாசத்தால் இவருக்குண்டாயிருந்த பலஹீனம் சரிப்பட்டுவர ஆறுமாதம் சென்றது. பிறகு, மதிராஸ் காங்கிரசுக்கு வந்திருந்து ஸிலோனுக்குப் போய்த்திரும்பினார். இவர் சிறைவாசத்தால் நின்றுபோயிருந்த சிவாஜி மஹோத்சவம் 1900-ல் மிக்க சிறப்பாக நடந்தேறியது. இவர் சிறைவாசத்தில் கிடைத்த ரிக்வேத புஸ்தகத்தை சிந்தித்துக்கொண்டிருந்ததைக் கொண்டு முன்னெழுதிய ஓரியன் என்றதிலும் சிறந்ததாய் வைதிக ரிஷிகள் வடகடடுத்த த்ருவமண்டலத்திலேயிருந்தவர்களென்ற சித்தாந்தப் பிரகாசிகையாக "வைதிக உத்திர சிந்து நிவாசம்" என்னும் ஒரு பெருங்கிரந்தத்தை முடித்து 1903 ல் வெளியிட்டார். இதைப்பற்றி "பாரடைஸ்பௌண்ட்" என்னும் பெருங்கிரந்த கர்த்தாவும், பாஸ்டன் யூனிவெர்ஸிட்டி பிரெஸிடெண்டுமாகிய டாக்டர் வாரன் சிகாகோ ஒப்பன்கோட் மாகஜீன் என்னும் பேப்பரில் புகழ்ந்துரை கூறியிருக்கிறார்.

## தாய் மஹாராஜ் கேஸ்.

இப்பொழுங் கேஸினாலே யிவரடைந்த கஷ்ட நஷ்டங்கள் மிகவும் பரிதபிக்கக் கூடியவையாகும். இதைக் கிளப்பிக்கொண்டுவந்தவரும் பம்பாய் கவர்ன்மெண்டாரே. பூனாவில் பெரும் ஸர்தாராயிருந்து காலஞ் சென்ற ஸ்ரீ பாபா மஹாராஜ் ஜமீனுக்கு ஏற்பட்டிருந்த எக்ஸிகூட்டிங் டிரஸ்டிகள் நால்வரில் இவரொருவர். ஸ்ரீ பாபா மஹாராஜாவுக்கு ஸ்ரீ திலகர் மிகவும் பிரியமான சிநேகிதர். 1897௵ முதல் ஸெடிஷன் கேசில் இவர் அகப்பட்டு வந்ததும் ஸ்ரீ பாபா மரணப் படுக்கையிலிருந்து வரவழைத்து டிரஸ்டியாக மாட்டிவிட்டுப் போய்விட்டார். திலகரோ இப்பெருங் கம்பீர குடும்பத்தை சீர்திருத்தி வைக்கவேண்டியதும் ஒரு பெருங்கடமையென்றே எண்ணி ஒப்புக்கொண்டிருந்தாலும், சிலகாலம் ஒருவராக இருந்துவிட்டார். தாய் மஹாராஜருக்கு சந்ததியில்லாமையினாலே ஸ்வீகாரத்துக்கு ஒருபையனையெடுத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. ஸ்ரீ திலகரிடம் முதலில் வாஞ்சனையாயிருந்த தாய்மஹாராஜ் செலவை சுருக்கிக் கட்டளையடைத்துவிட ஒப்புக்கொண்டிருந்து; நாகர்கார் என்னும் கார்பாரி தூர்ப்போதனையால் இணக்கந் தவிர்ந்து எதிரிடையான அபிப்பிராயத்தைக் காட்டி வரலாயிற்று. கார்பார் யோசனையாவது கோலாப்பூர் பண்டித மஹாராஜ் சகோதரராகிய பாலா மஹாராஜ் என்பவரை ஸ்வீகரித்துக் கொள்வதாகும். இணக்கமாயிருந்த காலமுடிவான 1901௵ ஆரங்கபாதில் ஒரு பையனை ஸ்வீகரித்துக் கொண்டுவந்து விட்டார்கள். அங்கிருந்து வந்ததும் தாய்மஹாராஜ் டிரஸ்டிகளைத் தொலைத்துவிட்டு சர்வ சுதந்திரமாக்கிவிடுவதாய் சொன்ன கலகப் பேச்சுகளைக் கேட்டுக்கொண்டு பூனா டிஸ்ட்ரிக்டு ஜட்ஜி மிஸ்டர் ஆஸ்டனிடம் ஒரு மனுவு போட்டுவிட லாயிற்று. இதன்மேலில் 34 ஈரங்கிகள் நடந்தேறியதில் 14 நாள் திலகரின் கிராசுகளுக்கு சரிப்பட்டுப் போயினவாம! ஆயினும் ஜட்ஜி ஆரங்கபாத்

ஸ்விகாரம் ஸ்ரீ பாபா எழுதிவைத்த உயில்படி செல்லாதென்றும், மெஸஸ்-திலகர், கபர்த்தே யிருவரும் செலவைக் கட்டிக்கொடுக்க வேண்டியதென்றும் பலமான ஜட்ஜிமெண் டெழுதிவைத்ததுமன்றி, தப்புதாவா முதலிய அக்கிரமங்களுக்காக ஏழு சார்ஜெழுதி இவரை ஸிட்டி மாஜிஸ்ட்ரேட்டிடம் விசாரணைக் கனுப்பிவைத்தாலும், மிஸ்டர் பீமன் திலகர்மேல் ஸாங்ஷன் கொடுக்கப்படமாட்டாதென்று கைவிட்டார். ஹைகோர்ட்டாரும் மிஸ்டர் ஆஸ்டன் உயிலைத் தப்பென்றதை ரத்துசெய்துவிட்டார்கள். இதன்மேல் மிஸ்டர் ஆஸ்டன் அவதிப்பட்டு கவர்ன்மெண்டாரிடம் முறையிட்டுக் கொண்டபடி [illegible] மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் கிளிமெண்ட்ஸைக்கொண்டு பொய் சாக்ஷிய குற்றங்கூறி 18 மாதக் கடின சிக்ஷை விதித்ததிலும் திலகருக்குத் தன்னயப் போக்கில்லையானாலும் அடாவடியும் விடாப்பிடியுமே யுள்ளதென்றார். இதை அப்பீலில் விசாரித்த ஸெஷன்ஸ் ஜட்ஜி மிஸ்டர் லியூக்காஸ் ஸ்ரீ திலகரின் நோக்குகளையும் கருத்துகளையும் விவகரித்து தண்டனையை 6 மாதமாகக் குறைத்தார். இதுவும் ஹைகோர்ட்டப்பீலில் வெட்ட வெளிச்சமாய்த் தீகுளித்தெழுந்தது போல ஸ்ரீ திலகர் திவ்விய மங்களகரமாய்ப் பிரகாசிக்க, சர்க்கார் அதிகாரிகள் தலைகுனிந்து நின்றார்கள். ஸர்லாரன்ஸ் ஜெங்கின்ஸ் ஜட்ஜிமெண்டால் கவர்ன்மெண்டார் விவகாரமெல்லாம் தலைகீழாய் மாறி அடிமாண்டழிந்தன. இக்கேசுகளின் ஈரங்கி தினங்களின் மொத்தம் 160 ஆம்! இத்தனை நாளிலும், இதனிடையிலும் ஸ்ரீ திலகர் என்ன அவதிப்பட்டிருந்தாலும் வீர தீர சூரராய் அஞ்சா நெஞ்சுபடைத்திருந்த மாதிரியைப்பற்றி இன்னும் எவரும் பேசுவார்களாம். [illegible] இதன் முடிவாய் இவர் பூனாவில் அசல் சிவில் கேஸெடுத்து வெற்றிபெற்றார்.

## முக்கிய கவனக் குறிப்பு.

இதுவரையில் கூறியுள்ள ஸ்ரீ திலகரின் சரித்தி ரோத்திர விஷயம் 165 - ஆவது பக்கம் தொடங்கியுள்ள இரண்டாவது ராஜதூஷண "விசாரணைக் குறிப்பு" என்னும் தலைப்பின்கீழ் வருவது.

---

# இந்தியத் திருத்த வல்லாளர் பதின்மர் வாழ்த்து.

(ரிவியூ ஆவ் ரிவியூஸில்
அமேரிக முனிவர் நிஹால் சிங்கால்.)

பதினான்குசீர்க் கழிநெடிலடி
ஆசிரிய விருத்தப்பா.

அமிதவாத சிரேஷ்டரான ஸ்ரீ திலகரும்,
அவனிவங்க குருநாதனும்
அரவிந்த கோசரும், அந்யவர்ஜனவாதம்
ஆர் விபினசந்திரபாலும்,
ஐமிதவன்றெட்டு நாயுணி கிருஷ்ண வர்மரும்,
துப்புமிகு பிரிட்டன்பிசாசாம்
தூய லஜபதிராயும், சொற்பத்ரிகா சரம்
தொண்டிரமாநந்த ஜீயும்,
அமுத மளவிந்தரும் ஆப்சரத்திலமான
அருந்தாதை நவ்ரோஜியும்,
அண்ணலாம் பார்த்த சாரதியொன்ற தூதனும்
ஆசார கோகலேயும்,
குமுதட காங்கிரவின் புதையுருளை யேற்றிடும்
குணமணி விஹாரிகோசும்,
கொள்கைபோல் செய்கையுடை கைக்குவர் ஸாயாஜி
கோமகனும் வாழ்கமாதோ!

## ஏகாதச ருத்ராம்ச வெண்பா.

வாழும் பதின்மர்தம் மாட்சிமை யெலாம் விளங்கி
ஆளும் வகையை அறைசுருதி—தோயும்
சுரகுரு போன்றானை சூள் விவேகாநந்தர்
விரைமலர்த் தாளைத் தொழுமின்.

# ஸ்ரீ பாலகங்காதர திலகர் விசாரணை.

## ஸ்ரீ திலகருக்கு வாரண்டு.

1908ஞு ஜூன்மீ 24உ புதன்கிழமை யன்று ஸ்ரீபாலகங்காதர திலகர் பூனாவிலிருந்து பம்பாய்க்கு ஒரு காரியார்த்தமாகவந்து ஆங்கு கிராபோர்ட் மார்க்கெட்டுக்குச் சமீபத்திலுள்ள ஸர்தார் கிருஹத்தில் தமது சிநேகிதர்களோடு சம்பாஷணை செய்துகொண்டிருக்கும்போது சில போலீஸ் உத்தியோகஸ்தர்கள் அவரிடம் சென்று, "ஐயா, உம்மைப் பிடிப்பதற்கு பம்பாய் சீப்பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஆஸ்டன் துரையவர்கள் ஒரு வாரண்டு அனுப்பியிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். வாரண்டு வந்திருக்கிறதென்று சொன்னபோலீஸ் ஆபீசர்களைப்பார்த்துத் திலகர் தமக்கு முன்னமேயே யிந்த சந்தேக மிருந்ததாகவும், அவர்களுடன்கூடப் போவதற்குத் தாம் தயாராயிருப்பதாகவும் சொல்லி, உடனே உடுப்பு போட்டுக்கொண்டு பம்பாய்க்கு வந்திருந்த தமது அலுவலைப் பற்றிய சங்கதிகளை நேயரிடம் தெரிவித்துத் தன் படுக்கை முதலியவற்றைப் பிறகு அனுப்பும் படிக்கும் சொல்லிவிட்டு சந்தோஷமாய்ப் புறப்பட்டுப் போலீசார் தயாராய்க் கொண்டுவந்து வைத்திருந்த வண்டியிலேறிப் போய்க் கமிஷனரிடம்சேர, அவர் திலகரை எஸ்பிளனேட் போலீஸ் கோர்ட்டு சிறையறையில் சேர்த்துவிட்டார்.

## திலககிருஹ சோதனை.

இதற்குள்ளாக பம்பாய்ப் போலீசார் ஸெர்ச் வாரண்டுகளோடு பூனாவுக்குப் புறப்பட்டுப்போய், இரவு 10-மணிக்கு வலுத்த பூனாபோலீஸ் படையோடு திலகர் கிருகம், கேசரிசாலை, மராட்டா ஆபீஸ், கேஸரி பிரஸ் இவையெல்லாமுடைய நாராயணப்பேட்டை

கேக்வாட் வாடையில் தோன்றினார்கள். ஆயினும் சோதனை போடுவதற்குத் தகுதியற்ற நேரமாய் விட்டபடியால், போலீசார் ஒவ்வோர் அறையையும் கட்டையும் பூட்டி சீல்போட்டுக்கொண்டு போய்விட்டார்கள். வாடையிலிருந்த ஸ்ரீதிலகரின் குடும்பத்தார் அன்றிரவு தங்கள் வாசஸ்தானத்தை விட்டுக் கீழறையொன்றில் துணையாளொருவனோடு விடப்பட்டிருந்தார்கள். அவ்வாடையிலிருந்த மற்றவர்களெல்லாம் துரத்தப்பட்டு, அங்கே ஒரு வலுத்த போலீஸ்காவல் வைக்கப்பட்டிருந்தது. காலையில் பூனா டிஸ்ட்ரிக்ட் சூபரின்டெண்டு மற்ற ஆபீசர்களுடன் வந்து வீட்டுள்ளெல்லாம் திறந்து, ஆபீசுகளிலும் நுழைந்து 5-மணி நேரத்துக்கு மேற்படக் கடுஞ்சோதனை போட்டுக் கட்டு கட்டாய்ப் பேப்பர்களையும், கணக்கு புக்குகளையும், புஸ்தகங்களையும், லெட்டர்களையும் தூக்கிக்கொண்டு போனதேயன்றி, அவற்றில் விசேஷமானதாய் ஒன்றும் கிடைத்துவிட்டதில்லை. அன்றுமாலையே போலீசார் பேர்பெற்ற மலைக்கோட்டையான சிங்காகாடென்னும் சுகவசதிஸ்தானம் சேர்ந்து, அங்குள்ள திலகமாளிகைப் பூட்டுகளைத்திறந்து சோதனைபோட்டும் அங்கும் ஏதும் கிடைத்ததில்லை.

## போலீஸ் விசாரணை.

மறுநாள் வியாழக்கிழமை ஸ்ரீதிலகர் மிஸ்டர் ஆஸ்டன் முன்பாகக் கொண்டுபோகப் பட்டபோதுதான் முதல்முதல் குற்றம் சென்றமேமீ 12உ கேசரிபேப்பரில் பட்டதென்று தெரிவிக்கப்பட்டது. கவர்ன்மெண்டு சார்பில் மிஸ்டர் பவனும், ஸ்ரீ திலகருக்காக மெஸஸ் கேதவார், திக்ஷித், போடாஸ் வகையாரும் ஹாஜரானார்கள். ஸ்ரீ திலகர் அடையாளங் காட்டப்பட்ட பிறகு, கேசை நிறுத்திவைப்பதைப்பற்றி விவாதம் நடந்தேறியதில் ஸ்ரீ திலகர் தாவாபிரசுரத்தை ஒப்புக் கொண்டதினால் கேசை நிறுத்திவைக்க வேண்டியதில்லையென்றும், அதனால் சாக்ஷியவிசாரணைக்காகப் பிராசிகூஷனுக்குத்

[illegible]தா[illegible]திரவுவேண்டிய தில்லையென்றும் பேசப்பட்டது. அவ்வகையில் இரண்டுதினத்தில் தொடங்க விருந்த ஹைகோர்ட் ஸெஷனுக்குக் கமிட்டு செய்துவிடக் கேஸைத் தயார் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. இன்னும் மற்ற சாக்ஷியம் தேவையானால் செஷன் விசாரணையில் சாவகாசமாய் எடுத்துக் கொள்ளலாமென்[illegible]ப்பட்டது. ஆனால் மாஜிஸ்ட்ரேட் அப்போதே கேஸைக் கமிட்டு செய்துவிட மறுத்துவிட்டதுமன்றி ஜாமீன் மனுவையும் மறுத்துவிட்டார்; ஆகவே கேஸ் மறுநாளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

## ஊரேங்கும் கலக்கம்.

ஸ்ரீ திலகர் பிடித்துவைக்கப்பட்ட சமாச்சாரங்கள் தக்ஷணமே தீசுழல்போல நாடெங்கும் பரவிவிட்டது. புதன்கிழமை இரவு 8-மணி முதலாகப் பூனா வாடையில் கவலையான ஜனங்களின் கும்பல்கள் வரத் தொடங்கி, மறுநாள் காலையில் பெருகிவிட்டன. ஸ்ரீ திலகரின் சிநேகிதக் கூட்டமொன்று இவரை விசாரிக்கவும், இவருடைய டிபன்சுக்கான ஏற்பாடுகளை செய்யவும் தக்ஷணமே பம்பாய்க்குப் புறப்பட்டுப் போயிற்று. அன்று பகலெல்லாம் அப் பூனாக்காரத்தார் முகங்கறுத்து சாவுமுக்காடிட்ட வண்ணமா யிருந்தனர். அவ்விடத்து ஆங்கிலோ இந்தியப் பேப்பரொன்றின்படி அப்பூனா நகர் பிணக்கோலமாய் ஸ்ரீ திலகருக்காக ஒவ்வொரு கடையும் மூடப்பட்டிருக்கவும், தெருக்களெல்லாம் குடிபோய்விட்டது போலாய் விடவும், பிளேக்கு பெருகியிருந்த காலம்போலக் காட்டு வெளியாகவும், மார்க்கட்டு திறந்திருந்த தாயினும் சூனியமாகவும் ஆய்விட்டது. பெர்க்குசன் காலேஜும், மற்றஸ்கூல்களும் மூடிவிடப்பட்டன. பின்னும் ஸிட்டி மாஜிஸ்ட்ரேட்டால் இரண்டு பிராமணகனவான்கள் பேருக்கு 25 ரூபாயாக அபராதம் விதிக்கப்பெற்றதாலும் தீவிரமாயிருந்தது.

## ஸெஷனுக்குக் கமிட்டு.

சென்ற ஜூன் ௴ 29௳ திங்கட்கிழமை சீப்மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஆஸ்டன் முன்பாக ஸ்ரீ பாலகங்காதர திலகர் இந்தியன் பினல்கோடு 124 A, 153 A ஸெக்ஷன்படி பிரிட்டிஷ் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு விரோதத்தையும் அவமானத்தையும் கொண்டு வந்ததற்கு அல்லது வெறுப்பை யுண்டாக்கியதற்கும், பிரிட்டிஷ் பிரஜைகளின் வகுப்பாருக்குள் பகை மூட்டியதற்காகவும் சார்ஜ்செய்யப்பட்டார். சர்க்கார் தரப்பில் ஆக்டிங் பப்ளிக் பிராசிகூட்டர் மிஸ்டர் பவேனுடு பாரிஸ்டர் மிஸ்டர் பின்னிங்கும், குற்றவாளிக்காக பாரிஸ்டர்களாகிய மெஸஸ் தேவார், காலாபாய், கட்ஜில் மூவரும், பிளீடர்களாகிய மெஸஸ் போடாஸ், திக்லேபித் இருவரும் ஆக ஐவரும் ஹாஜரானார்கள்.

மிஸ்டர் தேவார்—இந்தியா அட்வோகேட், இந்தியாடைம்ஸ், பம்பாய் கெஜட் இப்பேப்பர்கள் இக்கேஸ் ஆரம்பத்திலேயே சாக்ஷியத்தைப்பற்றியும், வக்கீல்களைப் பற்றியும் எழுதத்தொடங்கிவிட்டதா யேற்படுகிறபடியால் ரிப்போர்ட்டர்களுக்கு எச்சரிக்கை செய்யலாமே?

மாஜிஸ்ட்ரேட்—அப்படியவர்கள் செய்யக் கூடாதென்பதற்குப் பிரமாணங்கள் உள்ளனவா?

மிஸ்டர் பின்னிங்—தெரிவித்து விட்டமட்டில் மிஸ்டர் தேவாருக்குத் திருப்திகரமாயின் கேஸ் நடக்கட்டும். குற்றவாளி மேல் இப்போது குறித்திருக்கும் இரண்டு சார்ஜுகளையும் தனித்தனியா யெடுத்துக் கொள்ளலாமே?

மிஸ்டர் தேவார்—இரண்டையும் வெவ்வேறா யெடுத்துக்கொள்வதைவிட ஒருமிக்க எடுத்துக்கொள்வதினால் வீண்காலக் கழிவுக் கிடமிராது.

மிஸ்டர் பின்னிங்—இரண்டு சார்ஜுகளும் முற்றி லும் வேறுபட்டனவே.

மாஜிஸ்ட்ரேட்—இரண்டு கேசுகளாகத் தான் விசாரிக்கப்படவேண்டும்.

கவர்ன்மெண்டு ஓரியண்டல் டிரான்ஸ்லேட்டர் முதல் அஸிஸ்டண்டு மிஸ்டர் ஜோஷி—சென்ற மேமீ 12வ கேசரி பத்திரிகையிலுள்ள தாவா விஷய மொழி பெயர்ப்பு சரியே.

மிஸ்டர் பின்னிங்—இக்கேசைக் கமிட்டு செய்து விடும்படிக் கேட்டுக்கொள்ள எனக்கு சங்கதி வந்திருக்கிறபடி மிஸ்டர் தேவாரும் ஆக்ஷேபிக்காத விதமாய்ப் பேசியிருக்கிறார். இக்கேஸில் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டால் மிக்க மேலான அந்தஸ்துள்ள குற்றவாளிக்குப் பெருங் கெடுதி விளையக்கூடும்; ஆகவே, ஹைகோர்ட்டு செஷனுக்குக் கமிட்டுசெய்து விடுவதே மேலாகும்.

மாஜிஸ்ட்ரேட்—அதுவே யென் கருத்தும்.

கஸ்டம்ஸ் ரிப்போர்ட்டர் ஜெனரலாபீஸ் கிளார்க்கு தத்தர் (கேசரி, மராத்தி பத்திரிகைகளின் ஏஜெண்டாயிருக்கும் வகையில்)—கேசரிக்கு பம்பாயில் உள்ள 1215 சந்தாதாரர்களுக்கும் என்னுபீஸிலிருந்து காப்பி சப்ளை செய்கிறேன்.

கிரிமினல் இன்வெஸ்டிகேஷன் இன்ஸ்பெக்டர் ஸலிவன்— பூனாவுக்கு ஸெர்ச் வாரண்டு கொண்டு போய்ப்பூனாபோலீஸ் சூபரிண்டெண்டு மிஸ்டர்டேவிஸ் முன்பாகக் குற்றவாளியின் அச்சாலை, ஆபீஸ், விடுகளை சோதித்துப் பஞ்ச்நாமா எழுதிவைத்திருக்கிறேன்.

மிஸ்டர் தேவார்—இன்ஸ்பெக்டருக்கு மராத்தி தெரியாமையாய்த் தெரிவதால், பஞ்ச்நாமா காகிதங்களை ஆக்ஷேபிக்கிறேன்.

இன்ஸ்பெக்டர் ஸலிவன் — குற்றவாளி யெழுதும் மேஜை டிராவிலிருந்து ஒரு போஸ்ட் கார்டும் கண்டெடுக்கப்பட்டது.

மிஸ்டர் பின்னிங் — இக்கார்டில் மேல்விலாசங் காலி.

மிஸ்டர் தேவார் — இக்கார்டு தாக்கலையும் ஆக்ஷேபிக்கிறேன்.

மிஸ்டர் பின்னிங் — இக்கார்ட்டில் இக்கேசுக்கு சம்பந்தப்பட்ட சிலவார்த்தைகளிருக்கின்றன. சமயோசிதமாக இக்கார்டை தாக்கல்செய்து கொள்ளலாம்.

மிஸ்டர்தேவார் — குற்றவாளியின் வசமிருந்ததினாலேயே இதை தாக்கல் செய்தல் தகுதியாகாது. இக்கார்டு குற்றவாளிக்கு இன்னாரா லனுப்பப்பட்டதென்று பிராசிகூஷனில் ருஜுவு செய்யவேண்டும்.

மிஸ்டர் பின்னிங் — இக்கார்டு இக்கேசுக்குப் பராக்காயிருக்கிறதே யன்றி, உண்மையில் இது மிக்க அற்பமானதே.

மாஜிஸ்ட்ரேட் — இக்கார்டு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மிஸ்டர் பின்னிங் — ஸெஷனுக்குக் கமிட்டுசெய்துவிடப்போதுமான கேஸ் ஏற்பாடாய்விட்டது.

மாஜிஸ்ட்ரேட் — இஷ்டமானால் குற்றவாளி யேதாவது சொல்லிக்கொள்ளலாம்.

ஸ்ரீதிலகர் — நான சொல்வதை ஸெஷனுக்கு நிறுத்திக்கொண்டேன்.

இதன்மேல் கேஸ் செஷனுக்குக் கமிட்டு செய்யப்பட்டது. மற்ற சார்ஜுக்காக சென்ற ஜூன்மீ 9உ கேசரி பத்திரிகை விஷயம் கொண்டுவரப்பட்டது.

மிஸ்டர் ஜோஷி (மறுபடியும்) — "இப் பரிகாரங்கள் நிலைபில்லை" என்னும் இவ்விஷய மொழிபெயர்ப்பும் சரியே.

மிஸ்டர் தத்தர்—வாராந்திரம் கேசரி காப்பி வரவு 3000; இவை சந்தாதாரருக்கு அனுப்பிவிடுவதுபோக மற்றவை மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும்.

இந்தச் சார்ஜிலும் சொல்லவேண்டியதை ஸெஷனுக்கு நிறுத்திக்கொண்டதாய் ஸ்ரீ திலகர் சொல்லிவிடவே, மாஜிஸ்ட்ரேட் இதையும் ஸெஷனுக்குக் கமிட்டு செய்துவிட்டார். இத்தருணத்தில் மெஸர்ஸ் கபர்த்தே, கரண்டிகார், போடாஸ் இவர்கள் ஸ்ரீ திலகரைக் கண்டு பேசவிடும்படி மிஸ்டர் தேவார் கேட்க, மாஜிஸ்ட்ரேட் உத்திரவு கொடுத்தார்.

## ஹைகோர்ட் செஷனில் ஸ்பெஷல் ஜூரி விவாதம்.

3-7-08.

ஆனரேபில் மிஸ்டர் ஜஸ்டிஸ்
தின்ஷா தேவார் முன்பாக.

சர்க்கார் தரப்பில் ஆக்டிங் ஆனரேபில் அட்வோகேட் ஜெனரல் மிஸ்டர் பிரான்ஸன் (பப்ளிக் பிராஸிகூட்டர் மிஸ்டர் பவேஜேடும் ஹாஜராய்)—இக்கேஸ் வெகு முக்கியமானதாகையால் விசாரணைக்கு ஸ்பெஷல் ஜூரியை வரவழைக்கவேண்டும். குற்றவாளி தரப்பில் மிஸ்டர் பாப்டிஸ்டா-பிரபூ, ராஜரீகக் குற்றமாக கவர்ன்மெண்டு ஸ்பெஷல் ஸாங்ஷன்பேரில் சர்க்கார் தரப்பிலேயே இக்கேஸ் கொண்டுவரப்பட்டது. ஆகையால் இக்கேஸின் வலுவும் பொரிசும் எதிரியின் இடுப்பையொடித்துத் தள்ளிவிடுவது எளிதே யென்றேற்பட்டிருக்கிறது. இவ்வகையில் எங்களைக் கோர்ட்டார் வெகுவாய் கவனிக்கவேண்டியிருக்கிறதுமன்றி, பிராஸிகூஷன் தரப்பிலும் மிக நிதானிக்க வேண்டியுமிருக்கிறது; ஆகவே பிராஸிகூஷன் தரப்பார் இம்மனுவை வற்புறுத்தாதபடிக் கேட்டுக்கொள்வதோடு, கோர்ட்டாரும் இதை ஒப்புக்கொள்ளாதபடியும் கேட்டுக்கொள்ளுகிறோம். சாதாரணமாய்த் தெரிந்தெடுக்கப் படுவதிலே எந்த ஸ்பெஷல் ஜூரியும் டிபன்சுக்கு முற்றிலும் விரோ

தமாய் நிற்குமென்பதில் எள்ளளவும் சந்தேகிக்க இடமில்லையென்பதை முற்றிலும் தெரிந்திருக்கிறோம். ஆகவே ஸ்பெஷல் ஜூரிமனுவை ஆக்ஷேபிக்க வருந்துகிறேன். லாவைப்பற்றிய தருமபாவத்தில் ஜூரியானது குற்றவாளியின் அநுகூலத்துக்கும், ரக்ஷணைக்குமே முக்கியமா யேற்பட்டிருக்கிறது. ஆகவே இம்மனுவை நாங்கள் கொடுத்திருந்தால், கோர்ட்டார் தாராளமாய் அங்கீகரித்துக்கொள்ளலாம்; ஆனால் நாங்களிதைக் கோரவில்லை. உண்மையிலே இவ் வரப்பிரசாதத்துக்கு பயப்படுகிறோம். எங்களிஷ்ட விரோதமாய் இதை யெங்கள் தலைமேல் ஏற்றுவானேன்? ஆனால் பிராஸிகூஷன் தரப்பில் வற்புறுத்தப்படுமாகில், அந்த ஸ்பெஷல் ஜூரியில் தாவாவிஷய பாஷையாகிய மராத்தி தெரிந்த இந்தியர் மெஜாரிட்டியாய் சேர்ந்திருக்க அவர்கள் சம்மதிப்பார்களானால் எங்களுக்கு இஷ்டந்தான். அப்போர்ப்பட்ட ஜூரியைப்பற்றிப் பிராஸிகூஷனுக்கும் யூரோப்பியர்களை மறுக்கும் உரிமையை யெனது கற்றறிந்த நேசர்செலுத்துவாரானால் இதை அடையலாம்; நானும் இவ்வகையில் அவருக்கு உதவியாயிருப்பேன். மறுக்கும் உரிமைமுற்றிலும் ஒழிந்தபோதும், ஜூரியார் மராத்தி தெரியாதவராகும் வகையில் விசேஷ ஆக்ஷேபம் கூறுவதற்கு சம்மதியில் இடந்தரலாம். இதனால் பிராஸிகூஷன் கோரிய ஸ்பெஷல் ஜூரி ஜனசுதந்திரத் தொன்றாக ஆங்கிலேய விற்பனத்தால் அமைக்கப்பட்ட ஜூரிவிசாரணையின் மூலாதாரப்பிரதான்யமாக எதிரிக்குத் தக்கபடித் தன்னாட்டாரும் கலந்த ஜூரியாகவும் இருக்கலாகும். என் கற்றறிந்த நேயர் இந்நியாயப் பிரேரணையைக் கண்டிப்பாய் மறுத்துவிடுவாரானால், பின் வருமாறு இம்மனுவை மறுக்கவேண்டும்:—

முதலாவது—பிரபூ, ஸ்ரீ திலகர் வாசம் பூனாவிலென்பதும், கேசரி பிரசுரம் பூனாவிலென்பதும், கேசரி பாஷை மராத்தி யென்பதும் கவனிக்கப்படவேண்டும்.

சாதாரணமாய் ஸ்ரீ திலகர் பூனாவில் விசாரிக்கப்பட்டிருந்
தால், பூனாசெஷனுக்குக் கமிட்டாயிருக்கும். பிரபு,
யாதொரு ஜூரியு மில்லாமலே ராஜ நிந்தனைக்குற்ற
விசாரணையைத் தாழ்ந்த மாஜிஸ்ட்ரேட்டும் நடத்தும்
படிக் கிரிமினல் புரோசிஜர் கோடில் சமீபமாய்த் திரு
த்தியிருப்பதை நானறிவேன். ஸ்ரீ திலகரின் அந்தஸ்
தையும் பெருமையையும் கவனிக்குமிடத்து, இந்தக்
கோர்ட்டுக்குக் கமிட்டு செய்யப்பட்டதுபோலவே பூனா
செஷனுக்குக் கமிட்டு செய்யப்பட்டிருக்கவேண்டு
மென்பதிலும் சந்தேகமே கிடையாது. பூனா செஷ
னுக்குக் கமிட்டு செய்யப்பட்டிருந்தால் அவர் பாஷை
தெரிந்த ஜட்ஜாலும், சந்தேகமின்றி மராத்திய அஸெ
ஸ்ஸர்களாலும் விசாரிக்கப்படும் நன்மை நேர்ந்திருக்
கும். ஜூரியால் விசாரிக்கப்படுவதானாலும் பேஜார்ட்
டியில் யூரோப்பியர் அல்லது அமெரிக்கராயில்லாத
ஜூரியாய் இருக்கவேண்டிய உரிமையொன்று எதிரிக்
கிருக்கிறது. அதனால் "குற்றம் நடந்தவிடத்தே எதிரி
யையும் எதிரி பாஷையையும் தெரிந்துள்ளவர்களை
தகுந்த ஜட்ஜிகளாயிருப்பார்கள்" என்றபடி ஏற்படும்
ஜூரியை யெதிரி அடைந்திருப்பார். இவ்வுரிமையை
விசேஷித்துப்புகழத்தேவையில்லை. பொதுத்தீர்மானங்
கூறும் சுதந்தரமும் அதிகாரமும் பெற்ற ஜூரியாரே
உண்மையில் விஷயம் நியாய மிரண்டுக்கும் ஸ்வயம்
ஜட்ஜிகளாகிறார்கள் என்பது காக்ஸ் கிரிமினல் கேஸ்
ரிப்போர்ட்டில் லார்ட்ஸ் மான்ஸ் பீல்ட், பிட்ஜிரால்ட்
தீர்மானப்படிக் கோர்ட்டாருக்கும் தெரியும். ஆகவே
குற்றவாளிக்கு இவ்வுரிமை மற்றெவற்றிலும் முக்கிய
மானதாயும், அநியாயமாய்ப் பிராசிகூஷனால் அவ்வுரி
மையை இழந்துபோனதாகிறது. பம்பாயிலிருந்தே
ஸ்ரீ திலகரைப்பிடித்துக்கொள்ள அவர்கள் வாரண்ட்
அனுப்பியது ஒரு விசேஷ நியாயம் பற்றியதாகும். இவ்
வாறு அவர்கள் இக்கோர்ட்டுக்கு அதிகாரத்தை உண்டு
பண்ணிவைத்தார்கள். ஆயினும், இங்கும் ஸ்ரீ திலகர்
சாதாரண ஜூரியால் விசாரிக்கப்படலாம்; அப்படியா

னல் மெஜாரிட்டி யூரோப்பிய ரல்லாதவராயிருக்கலாம். ஜூரிலிஸ்டில் 539 யூரோப்பியர்களும், 1673 பேர் மற்றவர்களுமாயிருக்கிறார்கள். ஆகவே விகிதாசாரப்படி ஓர் யூரோப்பியனுக்கு இந்தியர் மூவராயிருக்கிறார்கள். இதனைம் பூனா ஜூரியவ்வளவு நல்லதாகாவிட்டாலும், ஸ்பெஷல் ஜூரிக்கு இது மிக்க நல்லதே. ஆனால் அந்த சொற்ப நன்மையும் கூட நாங்களிழந்து போகும்படி இம்மனுவு வழிதேடுகின்றது. ஜூரியானது எங்கள் நன்மைக்காயிருக்கவா காட்டுவதும், உள்ளபடி நாங்கள் விரும்புவதுமாகிய ஜூரியை நாங்களேன் இழக்கவேண்டும்? நான் கேட்பதை மறுப்பதற்கு முற்றிலும் நியாயமில்லையே.

இதற்கெதிரிடையாய் ஸ்பெஷல் ஜூரியானது சரியான விசாரணைக்கு விரோதமாவதற்குள்ள காரணங்களாவன:—

(a) ஸ்பெஷல் ஜூரியாவது ஜூரிலிஸ்டிலிருந்து தெரிந்தெடுக்கும் யூரோப்பிய மெஜாரிட்டி யுள்ளதாகும். இந்த லிஸ்டில் 242 யூரோப்பியர்களும், 156 இந்தியர்களு மிருக்கிறார்கள். ஆகவே, வெகுவாய் மெஜாரிட்டி ஜூரியார் யூரோப்பியரா யிருப்பார்கள். முன் திலகர் விசாரணையிலும் அதுவே; இக்கோர்ட்டில் மற்றெல்லா ராஜநிந்தனைக் கேசுகளிலும் அதுவே.

(b) தாவாகுற்ற விஷயமுள்ள பாஷையை அறிந்துகொள்ளக் கூடாமல் ஏமாந்து போவார்களாகையால், யூரோப்பியர்கள் இத்தருணத்தில் தக்க ஜூரியார்களாகமாட்டார்கள்; ஆகவே சர்க்கார் மொழிபெயர்ப்பைக் கொண்டு தாவாவிஷயங்களின் நோக்கமானது அவர்ன்மெண்டுபேரில் வெறுப்பைத் தூண்டுவதாகவே அவர்கள் தீர்மானிக்கத் திரும்பிவிடுவார்கள். கற்றுத் தேறியவர்கள் செய்யும் மொழிபெயர்ப்புகளும் மிக்க திருப்திகரமாயில்லை யென்பது இப்போது தேர்போயிருக்கிறது. தக்கவர்கள் கூடும் ஜூரியுள்ள

போதும், ஒழித்துவிடக்கூடிய அதிருப்திகரமான மத்யஸ்தத்தை யேன் அவர்கள் வற்புறுத்தவேண்டும்? இது குற்றவாளிக்கு விரோதமானது.

(c) சரியில்லையென்று எடுத்துக் காட்டினாலும், சர்க்கார் மொழிபெயர்ப்புகளை சரியென்று ஒப்புக்கொள்ள யூரோப்பியர்கள் கட்டாயப் படுத்தப்பெறுவார்கள். இந்தியர்கள் தாவா விஷய பாஷையிலுள்ள தங்க ளறிவைக்கொண்டு மொழிபெயர்ப்புகளை சரிப்படுத்துவார்கள். உண்மையிலே மொழிபெயர்ப்புகளே அநாவசியமாய்விடும். இது நியாயத்துக்கு வழிகாட்டுவதாக, இதைத் துணிவாக மறுத்துவிடலாமா? இம்மொழி பெயர்ப்புகள் ஆங்கிலோ இந்திய பேப்பர்களில் பிரசுரமாய் விட்டிருக்கிறபடித் தவறான மொழிபெயர்ப்புகள் ஒழிக்கக்கூடாத ஒரு பாவத்தை உண்டுபண்ணிவிடுமே. (தாவா விஷயு) பாஷையறிந்த ஜூரியாருக்குத் தப்பர்த்தமாகுமென்ற மோசமிராதாகவே, தவறான தீர்மானமு மிராது.

(d) இக்கேசில் கவர்ன்மெண்டின் பேரில் வெறுப்பை விளைப்பதில் கேசரி வாசகர்களை தாவா விஷயங்கள் எவ்வாறு செய்து விட்டனவென்பதை ஜூரியார்கள் தீர்மானிக்கவேண்டும். இவ்விஷயங்களை சொல்லும்பெற்ற மராத்தி ஜூரியாரே இக்கேசுக்கு மற்றவரிலும் மேலான ஜட்ஜிகளென்று விளங்குகிறது; ஆனால் ஸ்பெஷல் ஜூரி யூரோப்பியர் ஆயிரம் வகையில் தம்மில் வேறுபட்டவர்களான மராத்தியரை இவ்விஷயங்கள் என்ன செய்தனவென்று தீர்மானிப்பார்கள்? கிழக்கு கிழக்கு; மேற்கு மேற்கே—என்னும் பழமொழியில் இது அடங்கியிருக்கிறது. அது மெத்தப்பிரயாசையாயும், நுட்பமான விஷயமாயுமிருக்கிறது. உதாரணமாக, பசுவதையின் விஷயமானதொன்று இந்தியரிலே கலகத்தைத் தூண்டிவிடும்; யூரோப்பியர்களிலே அது விழுந்துவிடும். இப்படி நாம் அனுபவித்துவருகிற அதிகார சுயேச்சைக்காக [illegible]கமாய் வாதிப்பதாயாவது, ஜூரி

விசாரணையை ஒழித்துவிட முயல்வதாயாவது இங்கிலாண்டிலே விஷயங்கள் காணப்படுமானால் கலக்கத்துக்கமாய்விடும்; ஆனால் அதுவே இந்தியாவில் விழுந்துவிடும். ஆகவே இவ்விஷயங்களின் பலனைப் பற்றிய யூரோப்பியர் தீர்மானம் கெட்டதாய்விடும் என்றாலும், நிவர்த்திக்கப்படவேண்டியபோது குற்றவாளியின் மறுப்பு அவர்கள் கையில் உள்ளது.

(ஏ) கடைசியாக, பிரபு—உண்மையில் இவ்ராஜரீகக்குற்றங்களும், பிரசுரப் பிராசிகூஷன்களும் ராஜரீக தந்திரங்களுக்காகவும், ஸ்வப்பிரயோசனங்களுக்காகவும் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடையே சச்சரவுள்ளதைக் காணாமலிருக்கக் கூடாமையானாலும், அவற்றை ஆள்வோரிடமிருந்தே பெறக்கூடும். ஆகவே ஆங்கிலேயரே ஆள்வோரா யிருக்கின்றனர். இந்தியர் ஆவல்களுக் கெதிரிடையா யாதொரு ராஜீய தேசிய வேற்றுமை யிருக்கவேண்டும். மேலும் தற்காலம் முஜபர்பூர் கொலைகளைப்பற்றி ஆங்கிலேயர் அதிக கொதிப்பு கொண்டிருக்கின்றனர்; ஆகவே, குற்றவாளிக்குப் பெருங்கெடுதியாக ஆங்கிலேயர் தம்மையுமறியாமல் வேற்றுமை பட்டிருப்பதாகும் அபாயமும் உண்மையிலுள்ளது. 124 A ஸெக்ஷன் சார்ஜில் ஸ்பெஷல் ஜூரிக்கு ஆக்ஷேபங்களில்லையாம். ஆனால் 153 A ஸெக்ஷன்படிக்கு இரண்டாவது சார்ஜிருக்கிறது. அந்தச் சார்ஜின்படி ஸ்ரீ திலகர் யூரோப்பியருக்கு விரோதமாய் இந்தியர்களின் உணர்ச்சியைக் கிளப்புவதாய் சாட்டப்பட்டிருக்கிறார். ஆகவே உண்மையில் யூரோப்பியரே சாட்டுவோரா யிருப்பதுமன்றி, குற்றவாளியின் பேரில் தீர்மானங்கொடுக்க உட்காருவார்கள். பயனாவது—124-A ஸெக்ஷன் சார்ஜில் ஆள்வோரே குடியொருவனின் (பிரஸ்தாபக்) கலக்கக் கொள்கையின் பேரில் தீர்மானங்கொடுக்க உட்காருவார்கள்; 153-A-ஸெக்ஷன் சார்ஜில் சாட்டுவோரே தங்களுக்கு விரோதமாய்ப் பகைமையைத் தூண்டுவதற்காகக் குற்ற

வாளிபேரில் தீர்மானங்கொடுக்க உட்காருவார்கள். நீதிக்கும் நீதிநெறிக்குமுள்ள மூலாதாரக் கோட்பாடுகளெல்லாவற்றுக்கும் இது எதிரிடையா யிருக்கிறது. ஆகவே, பிரபூ—மராத்தி பாஷை தெரிந்துள்ளதினாலே இம்மாதிரிக்கேசில் யாவரிலும் தக்க ஜட்ஜிகளாயுள்ள மெஜாரிட்டியாரடங்கிய ஸ்பெஷல் ஜூரியை வரவழைக்கும் யோசனையின் முக்கியத்துக்காக அம்மனுவைத் தள்ளிவிட நான் கேட்கவேண்டியதாகியது.

## ஜட்ஜி ரூலிங்.

கிரிமினல் புரொஸீஜர் கோடின்படி மரண தண்டனை விதிக்கக்கூடிய எல்லாக்கேசுகளிலும் கட்டாயமாய் ஸ்பெஷல் ஜூரியை வரவழைக்க எந்த ஸெக்ஷனுண்டோ—அதே ஸெக்ஷனிலேயே ஹைகோர்ட் ஜட்ஜி உத்திரவுபடி வேறெந்தக் கேசிலும் ஸ்பெஷல் ஜூரி வரவழைக்கப்படுகிறது. கோர்ட்டுக்கேசுகளில் மேலான அந்தஸ்துடையவர்களிலிருந்து உயர்ந்த அறிவாளிகளாகத் தெரிந்தெடுக்கப் பெறுவோர் அடங்கியுள்ள ஜூரி அவசியமாக வரவழைக்கப் படவேண்டியது சம்பந்தக் கக்ஷிக்காரருடையநன்மைக்கென்றேஎல்லாமுக்கியகேசுகளிலும் ஜட்ஜிக்கு மனுகொடுக்கிறதும், ஜட்ஜிக்கு சரிப்பட்டுப்போனால் மனுவை அங்கீகரித்துக் கொள்கிறதும் இக்கோர்ட்டுகளின் இப்போதைய நிலையான வழக்கமாயிருக்கிறது. ஸ்ரீ திலகர் கேசுகள் அவர்போக்குப்படிக்கே முக்கியமானவை யென்பதில் சந்தேகமேயில்லை. அவருடைய நன்மைக்காய் பம்பாய் நகரத்தில் மேல் வகுப்பினராகத் தெரிந்தெடுக்கப்பெற்ற ஜூரியால் விசாரிக்கப்படும் லாபத்தை அவர்பெற்றிருக்க வேண்டுமென்று நான் அறிகிறேன். நேற்று என் முன்னே ஒரு கொலைக்கேசு விசாரிக்கப்பட்டது. அதிலுட்கார்ந்த ஸ்பெஷல் ஜூரியில் 3 பார்சிகளும், 2 ஹிந்துக்களும், 4 யூரோப்பியர்களும் இருந்தார்கள். அதற்கு முன்னாட்களில் குறைந்ததாய் இருமுறை யூரோப்பிய மெஜாரிட்டியுள்ள காமன் ஜூரியிருந்தது.

ஸ்பெஷல் ஜூரியில் யூரோப்பியர் மெஜாரிட்டியில் கொஞ்சம் அதிகமானாலும், இந்தியரும் சுமாராயிருக்கிறார்கள். இந்த ஸெஷன் பானல் (ஜூரிக்குறிப்பு) ராஜநிந்தனைக்கேசுகள் இக்கோர்ட்டை யெட்டுவதற்குமுன்னமே யெடுக்கப்பட்டது. அதிலுள்ள 27 பேரில் 4 பார்ஸிகள், 5 ஹிந்துக்கள், ஒரு மகமதியன், ஒருயூதன் ஆக 11 பேர் வெள்ளையல்லாத மற்றவர். ஸ்பெஷல் ஜூரி ரூல்படி ஷெரிப் எப்படியும் யூரோப்பியர் பாதிக்குக்குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ராஜநிந்தனைக் கேசுகளின் அவசரத்தைப்பற்றியும், அதிகமாய் மறுக்கலாகுமென்ற எண்ணங்கொண்டும் பானல் நபர்கள் 27-ல் 2, 3 பேர் முன்னமே யெடுக்கப்பட்டுவிட்டபடியால், மறுபடியும்பானலெடுத்தாக வேண்டுமென்று எனக்குப்படுகிறது. ஆகவே ராஜநிந்தனைக் கேசுகளுக்காக எடுக்கப்படும் பானலும் ரூல்படியாகவே பார்ப்பேன்; ஆனால் இப்போதுள்ளதிலும்சுதேசிகளின் விகிதம் அதிகப்படக்கூடும். இப்போது 16-8 ஆயிருப்பதற்கு இன்னும் 8பேரைக்கூட்டினால் 4-4 விகிதமாகும். யூரோப்பியர் இந்தியரென்றதை கவனியாமல் பேர்கள் பொறுக்கப்படுகின்றன; ஆகவே இந்திய மெஜாரிட்டியேற்படாதானாலும், வெகுவாய் இந்தியர் சுமாராயிருக்கும்படியாகும்; ஆனால் ஜூரியெடுக்கப்படுவதெவ்விதமென்ற விஷயம் ஏகதேசமாகும். ஜூரிலிஸ்டு ஸ்திரமாயிருக்கிறது. வெகு வருஷமாய்க்கோர்ட்டில் நடந்துவரும் ரூல்களின் பிரகாரம் அவர்கள் எடுக்கப்படுவார்கள். பாஷாஞானத்தை யெடுத்து விவரித்ததில் மிக்க சாரமுள்ளதென்று நான் நினைக்கவில்லை. அது விவாதத்துக்கு வருமானால், தடையின்றிக் கோர்ட்டார் தங்கள் மதிப்புள்ள திரான்ஸ்லேட்டர்களின் மொழிபெயர்ப்புகளை ஒப்புக்கொண்டு தானாகவேண்டும். அல்லாமலும் பெரும்பிழை அல்லது தப்பர்த்தம் ஏதாவது இருந்து குற்றவாளியின் லாயர் எடுத்துக்காட்டுவாரானால், ஜூரியார் முன்பாக மொழிபெயர்ப்பு சரியாய் வைக்கப்பட்டதாவென்று பார்த்துக்கொள்வது ஸெஷ

ன்ஸ் ஜட்ஜின் கட்டுக்கடமையாயுள்ளது. பிசகாவது தப்புப்பெயர்ப்பாவது உள்ளதானால், அது திருத்தப்படவேண்டும். விசாரணையிலே யெதாவது காண்பிக்கப்பட்டாலும் வெகு ஜாக்கிரதையாய் கவனிப்பதாக வாக்களிக்கிறேன். நான் சொல்லியிருக்கிறது போல, ஸ்பெஷல் ஜூரி உருவாவதைத் தடுப்பது பிசகென்று நினைக்கிறேன். இத்தியாதிகளினாலே கேசுகள் முக்கியமானவைகளே; ஆகவே முக்கியமான கேசுகளில் மிக்க விசேஷ நியாயமின்றி ஸ்பெஷல் ஜூரி கோருவதை மறுப்பதற்கு மேற்கோளில்லாமலிருக்கிறது. மிஸ்டர் [illegible]ஸ்டான் எனக்கு சொல்லிவந்த விவகாரங்களை மிக்க சாவதானமாய் கவனித்திருக்கிறேன். மொத்தத்தில் இக்கேசுகள் ஸ்பெஷல் ஜூரியால் விசாரிக்கப்பட்டால் நீதிசாபூகள் மேற் கொள்ளுமென்று நினைக்கிறேன், ஸ்பெஷல் ஜூரிமெம்பர் எவரும்வந்து நீதியைப் பரிபாலிப்பதாய்ப் பிரமாணம்பண்ணி, ஏதாவது முற்போக்காய் உள்ளதானால் அவற்றையெல்லாம், தம்மன்ணத்திலேறிய வேற்று விஷயங்களையெல்லாம் தொலைத்துவிடுவாரென்று நான் முற்றிலும் நம்புகிறேன்.

அப்பால் ஜட்ஜி இரண்டாவது கேஸ் சார்ஜில் மிஸ்டர் பின்னிங் மனுவின்படிக்கு ஸ்பெஷல் ஜூரிக்கே உத்திரவுசெய்துவிட்டு அடுத்த 13உ விசாரணை யென்றார்.

## ஜாமீன் மனுவு மறுக்கப்பட்டது.

ஹைகோர்ட்டு ஸெஷன்ஸ் ஜட்ஜாயமர்ந்த ஆனரெபில் மிஸ்டர் தேவார் முன்பாகக் கேசரிபத்திரிகாசிரியராகிய ஸ்ரீ திலகருக்காக மிஸ்டர் ஜின்னா ஹாஜராய் ஜாமீன் மனுவைக் கொடுத்தபோது சர்க்கார் தரப்பில் அட்வோகேட் ஜெனரல் மிஸ்டர் பிரான்ஸன், மிஸ்டர் இன்வெராரிட்டி, மிஸ்டர் பின்னிங், பப்ளிக்பிராசிகூட்டர் மிஸ்டர் பவன் இவர்கள் ஹாஜரானார்கள்.

ஸ்ரீ திலகரின் லாயர் மிஸ்டர் ஜின்னா—சீவ்மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஆஸ்டன் 124 A, 153 A ஸெக்

ஷன்களின்படி வெவ்வேறாய் இரண்டு சார்ஜுகுறித்து ஸ்ரீ திலகரைக்கமிட்டு செய்திருக்கிறார். பிளீடர் மிஸ்டர் போடாஸ் அபிடெவிட்டின்படித் திலகர் சென்ற ஜூன் மீ 24வ ஸர்தார் கிருஹத்தில் பிடிக்கப்பட்டதாகவும், மறுநாள் மிஸ்டர் ஆஸ்டன் முன்பாகக் கொண்டுபோகப்பட்டதாவும், திலகருக்காக ஜாமீன் மனுவு கொடுத்தும் மறுக்கப்பட்டதாகவும், அடுத்த 29வ செஷனுக்குக் கமிட்டு செய்யப்பட்டதாகவும், அவரிப்போது விசாரணைக் குற்றவாளியாகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறதாகவும் ஏற்படுகிறபடி அவர் டிபன்ஸைசரியாய் நடத்திக்கொள்வதற்காக அவரை விட்டுவைக்கவேண்டியது முற்றிலும் அவசியமாகிறது. குற்றவாளிக்கு நல்ல டிபன்சிருக்கிறது; ஆனால் அவரை ஜாமீன்பேரில் விட்டுவைக்காவிட்டால், தன் டிபன்சுக்குத் தேவையானவர்களுக்கு சங்கதிகளை சொல்லக்கூடாமையாய்விடும். அவருக்கு நீரிழிவு நோயுமுள்ளதால், அதற்காக சிகிச்சை செய்யப்பெற்றும் வந்தார். தாவா விஷயங்களின் மொழிபெயர்ப்புகள் சரியில்லாமலும், தப்பர்த்தமாகவும் இருக்கின்றன; ஆகவே, அவ்விஷயங்கள் இன்னபாவத்தில் எழுதப்பட்டன வென்று தெரிவிக்கும்பொருட்டு லாயர்களிடம் அவர் சங்கதிகளை சொல்லவேண்டியிருக்கிறது. இவர் B A, LL.B. இவர் நூலாசிரியர். கொஞ்சகாலம் காலேஜ் புரோபசராயிருந்தவர். கொஞ்சகாலம் சட்டசபை மெம்பராயுமிருந்தார். தக்ஷிணப்பிரதேசத்திலே யாருமறிந்த மனுஷ்யன். இதற்கு ரிப்ளை அபிடெவிட்டுமுள்ளது.

ஜஸ்டிஸ் தவார்:—கோர்ட்டுக்கு வருமுன்னமே அபிடெவிட்டிலுள்ள ஒவ்வொன்றையும் வாசித்துக் கொண்டேன். மிஸ்டர் பவன் அபிடெவிட்டிலுள்ள சில விஷயங்களை மிஸ்டர் போடாஸ் ஆக்ஷேபித்திருக்கிறார். அவற்றில் விசாரணையிலுள்ள குற்றவாளியின் கேசுக்கே விரோதமான விஷயங்களு மிருக்கலாம். அவற்றில் சில ஒருவேளை நியாயமாயெடுபடாத விஷ

யங்களாயிருக்கலாம். இக்கோர்ட்டின் நடவடிகளுக்காக வெளியிடப்பட்டிருப்பதை யநுசரித்து இவ்விஷயங்களில் நுழையவும், முன்னாடி இவ்விஷயங்களை வெளியிடவும் இஷ்டமில்லை; ஆகவே, சர்க்கார் தரப்பை யெதிர்பாராமலே ஒருதலையாய் இம்மனுவைப் பைசல் செய்துகொள்வதானால் நலம்.

மிஸ்டர் ஜின்னா—இம்மனுவ ஸ்ரீ திலகரை ஜாமீனில் விட்டுவைக்கவே. இதைப்பற்றிய இரண்டு ஸெக்ஷன்களை சமீபத்தில் "கால்" பேப்பர் எடிட்டர் பரஞ்ஜ்பேயை விடுவிக்க மனுவு கொடுக்கப்பட்டபோதே விவகாரித்திருப்பதால் கோர்ட்டாரறிந்திருக்கிறார்கள். ஜாமீனம்சம் முற்றிலும் கோர்ட்டாருக் கெடுத்துக் காட்டி செவ்வையாய் விவரித்தாய்விட்டது. ஸ்ரீ திலகருக்கு ஜாமீன் மறுப்பதற்குக் கொஞ்சமும் இடமில்லை. ஸ்ரீ திலகர் விசாரணைக்கு வந்திருந்து ஏதாவது தீர்மானிக்கப்பட்டால், அதை யேற்றுக்கொள்ளலாகுமோ வென்பதுதான் கேள்வி. அது மேன்மேலும் சொல்லியாய்விட்டது. லேட் ஜஸ்டிஸ் டையப்ஜீயின் பேரான தீர்மானமும் கோர்ட்டார் அறிந்ததுதான். அக்கேசில் எதிரி விவகாரத்துக்கு நெடுநாள் சென்றது. அதில் எதிரிகளை ஜாமீனில் விட்டுவைக்கச் சட்டநிரூபணமெல்லாம் கவனிக்கப்பட்டதில் அதன் ஆவலாதியாவது குற்றவாளிகள் விசாரணைக்கு வந்திருக்க வேண்டுவதேயாமென் றேற்பட்டது. நீதிநெறியின் தலைக்கொள்கையாக, ஒருவன் சரியாய் விசாரிக்கப்பட்டுக் குற்றவாளியென் றேற்படுமட்டில் அவனைக் குற்றவாளியாக பாவிக்கலாகாது என்று பம்பாய் லாரிப்போர்ட்டில் இருக்கிறது; ஆகவே முழு விஷயமும் பூட்டகமாயிருக்கிறது. ஸ்ரீ திலகர் விசாரணைக்கு வராமலிருந்துவிடுவாரென்று தோன்றுவதற்கான எந்த யோசனையாவது, எவ்விதக் குறிப்பாவது உள்ளதா? இம்மாதிரியான யோசனையேதும் அந்த அபிடெவிட்டுகளில் இல்லை; ஆகவே, திலகரை ஜாமீன்பேரில் விட்டுவைக்கும்படிக்

கேட்கிறேன். எவ்வளவு தொகையானாலும் சரியான ஜாமீனாகத் தருவதற்கும் முற்றிலும் தயாராயிருக்கிறார்கள்.

மிஸ்டர் பிரான்ஸன்—நான்—

ஜஸ்டிஸ் தேவார்—அட்வோகேட் ஜெனரலவர்களுக்கு அவ்வளவு தொந்திரவு வேண்டியதில்லை.

மிஸ்டர் பிரான்ஸன்—நல்லது பிரபோ!

ஜஸ்டிஸ் தேவார்—ஸ்ரீ திலகர்மீது 124 A, 153 A ஸெக்ஷன்களின்படி இரண்டு கேசுகளேற்பட்டு ஹைகோர்ட்டுக்கு ஜாமீன் மனுவு கொடுக்கப்படுவதாய்த் தெரிந்தது முதலாக மெத்தக் கவலையாய் யோசித்து வந்தேன். தனியுணர்ச்சியான விஷயமாய் மட்டும் இருந்தால், விசாரணையிலிருக்கிற குற்றவாளியை விசாரணைக்கு முன்னமே காவலில் வைத்திருக்க விடவேமாட்டேன். கிரிமினல்கோடின்படி ஹைகோர்ட்டாருக்குக் கொடுத்திருக்கும் தாராள தயா விஷயம் குற்றவாளிக்கு அநுகூலமாயேன் பிரயோசனப்படுத்தக் கூடாதென்பதற்கு நியாயங்க ளில்லையானால் என்ன செய்வது? அந்த 498-ஆவது ஸெக்ஷன்படி ஹைகோர்ட் ஜட்ஜிக்கு எவ்வேற்பாட்டுத் தடையுமற்ற ஏராள தயா விஷயமாய் விசாரணையிலுள்ள குற்றவாளியை விட்டு வைக்க அதிகாரம் உள்ளதென்பதில் சந்தேகமே கிடையாது. அதுவோ நியாயமாயும், ஜாக்கிரதையாயும் செலுத்தவேண்டிய தயா விஷயம். லேட் ஜஸ்டிஸ் ஜையப் ஜீயின் ஜட்ஜ்மெண்டை மிஸ்டர் ஜின்னா எடுத்துக்கொண்டார். அந்த ஜட்ஜ்மெண்டிலும், அதற்கு முற்பட்டு எல்லாவற்றிலும் அப்போதைய அட்வோகேட் ஜெனரல் மிஸ்டர் லாங், ஸ்ரீ திலகரின் லாயர் ஆ இருவரும் நடத்திய விவகாரங்களிலும் எனக்கு மிக்க பழக்கம். ஜாமீன் கொடுக்கலாமா கொடுக்கக் கூடாதா என்று தீர்மானிப்பதில் கோர்ட்டாரை ஆக்கிரமிக்கும் யோசனை பொன்றுவது குற்றவாளி விசாரணைக்கு

ஹாஜராகிவிடுவது மட்டுமே யென்றதை ஒப்பமாட்டேன். எவ்வகையிலும் முக்கியமான கவனிப்புக்கு அதுவே யென்றாகாது. அது கவனிக்க வேண்டியவைகளில் ஒன்றாகும் அல்லது முக்கியமானதொன்றாகும்; ஆனால், விபரீதக் கேசுகளில் மனுவுகளை யோசிப்பதில் தீர்மானத்துக்கு வருமுன்னே கவனிக்கவேண்டிய விஷயங்கள் அநேகமா யிருக்கின்றன. முன் சொன்னது போல நான் பேராவல்கொண்டு இவ்விஷயமாய் கவனித்து செய்யப்போகும் உத்திரவிடுவதற்கான நியாயங்களையும் சந்தர்ப்பங்களையும் யோசித்திருக்கிறேன். குற்றவாளி முற்றிலும் சரியாயும், விஷமமற்றும் விசாரிக்கப்படும்படிக்கும் நான் மிக்க ஆவலா யிருக்கிறேன். குற்றவாளி ஜூரியோடு விசாரிக்கப்படுவார். இக்கோர்ட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட ஒவ்வொரு சங்கதியும் வெளியேறும் விஷயமாய், விசாரணைக்கு முன்னமே யெவ்வகையிலும் பிராசிகூஷனுக்காவது, டிபன்சுக்காவது விரோதமாக எதும் சொல்லாதிருக்கவேண்டியது முக்கிய விருப்பமென்கிறேன்; ஆகவே, இப்போதைய சந்தர்ப்பத்தில் மனுவை மறுப்பதற்கு எந்த நியாயங்களையும் காட்டவாவது, எனக்குள் ஏற்பட்டிருக்கும் யோசனைகளை விவாதத்தில் விடவாவது கூடாமையென்பதே அறிவுடைமையாகுமென்று நினைக்கிறேன். இத்தீர்மானத்துக்கு நான் வந்துவிட்டதைப்பற்றி மிகவும் விசனப்படுவதோடு, விசாரணை யாகுமட்டிலும் ஜாமீனை மறுத்துவிடவும் விசாரப்படுகிறேன்.

## முதல்நாள் (13-7-08) விசாரணை.

"கேசரி" பத்திரிகா சிரியராகிய ஸ்ரீ பாலகங்காதர திலகர் B A, LLB யின் விசாரணை பகல் 11-மணிக்கு பம்பாய் ஹைக்கோர்ட்டு செஷன்ஸ் ஜட்ஜி மிஸ்டர் …தவார்முன்பாகத் தொடங்கப்பட்டது. சென்ற ஜூன் மீ 24உ மாலை பிடித்துக்கொண்டு வரப்பட்ட ஸ்ரீ திலகர் ஜாமீனில் விடப்படாமலே டோங்கிரி ஜெயிலில் வைக்கப் பட்டிருந்தார். ஜெயிலதிகாரிகள் தங்களால்

கூடியமட்டில் சகாயமாயிருந்தும், திலகர்டிபன்சுக்குத் தயார் செய்துகொள்ளுவதற் கில்லாமற் போயிற்று. இவருக்கு சொந்தசாப்பாடு தினம் இருமுறைகொண்டு வரவிடப்பட்டது மன்றி சிநேகிதர்களும், லாயர்களும் குறித்தநேரத்தில் வந்து இவரிடம் பேசவிடப்பட்டார் கள் ஆயினும், விசாரணைக்கு முன்னே இவர் தாராள மாய் விட்டுவைக்கப்பட்டிருந்தால் இன்னும் திறமாப் டிபன்சு செய்துகொண்டிருப்பார் என்றுசொல்லவேண் டியதில்லை. முன் தினம் மாலையே ஹைகோர்ட்டு கட் டிடத்துக்குக் கொண்டுபோய் விடப்பட்டார். அங்கு இவர் 3 ஆவது மாடியில் ஜட்ஜிகள் அல்லது ஜூரியா ருக்கு விசேஷ காலத்தில் உபயோகப்படும் இடத்தில் வைக்கப் பட்டிருந்தார். அவ்விடத்தில் யூரோப்பியக் கான்ஸ்டேபில்களின் வலுத்தகாவலிலிருந்து, இவர் தம் சிநேகிதர்களோடு யோசிப்பதும், டிபன்சுக்கான புஸ்த கங்களையும் பேப்பர்களையும் படிப்பதுமா யிருந்தார். ஹைகோர்ட்டின் எல்லா வழிகளிலும் யூரோப்பிய இந் திய கான்ஸ்டேபில்கள் ஆபீசர்களோடு சூழ்ந்துகொ ண்டிருந்ததில் போலீஸ் பாரக்ஸாய்விட்டது.

திங்கட்கிழமைதினம் ஒவ்வொன்றுக்கும் விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஹைகோர்ட்டுக்குப்போ கும் ரோட்டுகளும், நடைவழிகளும் தடுக்கப்பட்டுக் குறுக்குக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு முகப்பிலும், திருப்பத்திலும், கேட்டிலும் போலீஸ் அணிகள் வகுக்கப்பட் டிருந்ததினாலே கோர்ட்டு விசிட்டர்களும், கோர்ட்டுக்கு வரவேண்டியவர்களுங் கூடத் தனியுத்திர வின்றிப் பிரவேசிக்கக் கஷ்டப் பட்டுப்போனார்கள். இதனாலே கோர்ட்டில் நானூ இடம்பெரு விட்டாலும், முற்றிலும் ஜனத்திரள்கள் சூழ்ந்துகொண்டு நின்றுபார்த்துக்கொண்டோ, என்ன நேரிடுமோவென்று சஞ்சலப் பட்டுக்கொண்டோஇருக் கத் தீர்மானித்துக் கொண்டார்கள். விசாலமானதும் வெளிச்சம் குறைந்த ஹாலில் ஸெஷன் விசாரணைநடந்த

கொண்டிருந்தது. ஹைகோர்ட்டு அட்வொகேட்டுகள், பாரிஸ்டர்கள், பிளீடர்களுக்குமட்டும்டிக்கட்டுச்சேர்கள் காட்டப்பட்டன. விசாரணைக்கு வந்திருக்கவேண்டிய ஜனத்தொகையில் ஆயிரத்தொரு பகுதிக்குங் காணாத பெஞ்சுகள் மற்றவருக்குக் காட்டப்பட்டன. காலரியைக் கண்ணில் காட்டவேயில்லை. தன் டிபன்ஸில் உதவிசெய்ய வேண்டிய கனவான்களுக்காகத் திலகர் அனேக டஜன் சேர்களைப் பெறுவதற்குத் தனியேற்பாடு செய்து கொள்ளவேண்டியதாகவும் நேர்ந்தது. சரியாய் 11½-மணிக்குத் திலகர் மேல் மாடியிலிருந்து கொண்டுவந்து டாக்கில் உட்காரவைக்கப்பட்டார். பிராசிகூஷன் தரப்பில் அட்வோக்கேட் ஜெனரல் மிஸ்டர் பிரான்ஸன், பாரிஸ்டர்களான மெஸஸ் இன்வெராரிட்டி, பின்னிங், பப்ளிக் பிராசிகூட்டர் மிஸ்டர் பவன் இவர்களும், திலகரோலாயராய்த் தனக்கு உதவியாக பாரிஸ்டர் மிஸ்டர் பாப்டிஸ்டா, பிளீடர்களான மெஸஸ்-திக்ஷித், போடாஸ், ஸொலிஸிட்டர்களான மெஸஸ் ராகவய்யாபிம்ஜீ, நாகின்தாஸ், சிநேகிதர்களான மெஸஸ் - கபர்த்தே, கரண்டிகார், கேல்கார், கந்தி, கேட்கார் முதலியோரை வைத்துக்கொண்டிருந்தார். முதல் வரிசைக்குப் பிறகேயிருந்த பாரிஸ்டர்கள், அட்வோக்கேட்டுகளுக்குள்ளே அநேகர் கூடுமானால் இன்னும் உதவியாயிருக்க ஆவலாயிருந்தார்கள்.

அட்வொகேட் ஜெனரல்—இக்கேஸில் சென்ற மேமீ 12உ, ஜூன்மீ 9உ விஷயங்களிரண்டுக்கும் சார்ஜுகளிரண்டின்மேல் ஒரேநாளில் கமிட்டல்கள் இரண்டுமாயின. இப்போது இவ்விரண்டு சார்ஜும் ஒருமிக்க எடுத்துக்கொள்ளக் கேட்கிறேன். இதைப் பற்றி விவகரிக்கவேண்டியதில்லை.

ஸ்ரீ திலகர்—இம்மனுவுக்கு நான் ஆக்ஷேபிக்கின்றேன். அட்வோக்கேட் ஜெனரல் கேட்பதுபோல் சார்ஜுகளை வெவ்வேறா யெடுத்துக்கொண்டால் எனக்கு அசௌகரியமாயிருக்கும். அட்வோக்கேட் ஜெனரலு

க்கு அப்படிக்கில்லாவிட்டாலும், என்மட்டில் அது தடுமாற்றத்துக் கிடமாய்விடும்.

கோர்ட்டார்—ஒரு நியூஸ்பேப்பரினால் இம்மனுவு செய்யப்படுமென்று தெரிந்தே நான் இவ்விஷயமாய் தீர்க்காலோசனை செய்திருக்கிறேன். இக்கேசுகளில் சங்கதிகள் மாஜிஸ்ட்ரேட்டிடம் தெரிவிக்கப்பட்டபடி இரண்டு விசாரணைகளாய், இரண்டு கமிட்டல்கள் செய்யப்பட்டன. இப்போது யோசிப்பதாவது இவ்விரண்டு கேசுகளும் ஒருமிக்க எடுத்துக்கொள்ளப் படலாமா வென்பதாகும். ஒவ்வோராம்சத்திலும் ஒரே விசாரணையாய், முழுக் கேசும் ஒரு ஜூரி முன்னாலாகவேண்டு மென்பதே மிக்க விருப்பமானதென்று நினைக்கிறேன். 234 வகை ஸெக்ஷன்கள் எடுத்துக்கொள்ளப்படாவிட்டால், 273 ஆவது ஸெக்ஷன்படிக் குற்றவாளி வெவ்வேறாய் விசாரிக்கப்படவேண்டும். 235 ஆவது ஸெக்ஷன் சந்தேகத்தில் விடப்படாமலும் 3 சார்ஜுகளுக்கு மேற்படாதபோது 234 ஆவது ஸெக்ஷன்படி யாதொரு கஷ்டமுங் கிடையாது. இக்கேசில் நாலாயுள்ளது. அந்த ஸெக்ஷனை யெடுத்துக்கொண்டால் நாலு சார்ஜில் 233 ஆவது ஸெக்ஷனைக்கொண்டு ஒன்றை ஒழித்துவிடுவதாய் அட்வோக்கேட் ஜெனரல் சொல்லியிருக்கிறார். எந்தச் சார்ஜையாவது வாப்பஸ் வாங்கிக் கொள்வதிலாவது, நடத்தாமல் விடுவதிலாவது விடுதலுக்கிடமாகு மென்பதினால் அட்வோக்கேட் ஜெனரலைத் தட்டியெழுப்ப எனக்கு இஷ்டமில்லை; குற்றவாளியின்பேரில் அந்தச் சாச்ர்ஜைத்தொங்கவிட்டிருப்பதும் சரியல்ல.

அட்வோக்கேட் ஜெனரல்—முதல் சார்ஜில் 15 A ஸெக்ஷன்படி நடத்த நான் கோரவில்லை.

கோர்ட்டார்—அப்படியானால் அந்தச் சார்ஜில் விடுதலுக் கிடமாகுமென்பதை யோசிக்கவேண்டும்.

அட்வோக்கேட் ஜெனரல்—இந்த ரூலிங்கை ஆக்ஷேபிக்கிறேன். கோர்ட்டார் முதலாகக் கேசை விசாரிக்கவேண்டும்.

கோர்ட்டார்—ஒருமிக்க 3 சார்ஜுகளை விசாரித்தால், கேசின் முடிவில் நாலாவது சார்ஜுக்காக நிறுத்திவைக்க அட்வோக்கேட் ஜெனரல் கேட்பாரோ?

அட்வோக்கேட் ஜெனரல்—[illegible]ம்மனுவுமில்லை. இவ்விஷயத்தைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்வதாயிருக்கட்டும்.

கோர்ட்டார்—அட்வோக்கேட் ஜெனரல் இதென்னவென்றுதபடித் தெரிவித்தேன்; ஆகவே, 3 சார்ஜுகளும் ஒருமிக்க விசாரிக்கும்படி உத்திரவு செய்துவிட்டேன்.

இதுவரையில் ஸொலிஸிட்டர்களோடிருந்த குற்றவாளி டாக்குக்குக் கொண்டுபோகப்பட்டுச் சார்ஜுகள் வாசித்துக் காட்டப்பட்டதற்குக் குற்றவாளிதான் அல்லது குற்றவாளியல்லவென்று ஸ்ரீ திலகர் பதில் சொல்லவில்லை.

திலகர்—சார்ஜ் குறிப்பற்றது; தாவாவிஷயம் இன்னதென் றேற்படவில்லை.

மிஸ்டர் இன்வெராரிட்டி—அப்படியானால் அதைச் சார்ஜில் சேர்த்துப் படிக்கட்டும்.

கோர்ட்டார்—அவ்விஷய முழுமையும் குற்றவாளிக்கும் ஜூரிக்கும் படித்துக் காட்டவேண்டியதோ?

மிஸ்டர் இன்வெராரிட்டி—அவற்றை சேர்த்துவிடக் கேட்கிறேன்.

ஸ்ரீ திலகர்—நான் செவ்வையாய் பதில் சொல்லுவதற்காகக் குறித்த வார்த்தைகளும் வாக்கியங்களும் தேவையே.

கோர்ட்டார் — இவ்வகையில் ஒவ்வொரு வார்த்தையும் ராஜநிந்தனைக் குற்ற முடையதென்பதாய்ப் பிராசிகூஷனர் சார்ஜில் இரண்டுவிஷயங்களையும் சேர்த்துவிடுவார்களே.

ஸ்ரீ திலகர்—அதுவே திருப்திகரமானது.

கோர்ட்டார் (வெறுப்பாய்)—நல்லது; அதற்கு அரைநாளாய்விடுமே.

ஸ்ரீ திலகர்—சில சமயம் விஷயங்களின் சில பகுதிகளைப் பிராஸிகூஷன் பக்ஷமிருந்து, பிறகு மற்ற பகுதிகளும் குற்றவாளிக்கெதிரிடையாய்க் கண்டெடுக்கப் படுவதாயும் நேரிடுகிறது.

கோர்ட்டார் — ஆக்ஷேபத்தின்பேரில் உத்திரவு கொடுக்கிறேன். இப்போது சென்ற மேமீ 12௳, ஜுன் மீ 9௳ விஷயங்களி லடங்கிய ராஜநிந்தனை ஸெக்ஷன் படிச் சார்ஜ் செய்யப்பட் டிருக்கிறது. ராஜநிந்தனைப் பிரசுரத்துக்காகச் சார்ஜ் செய்யப்பட்டபடி தாவா விஷயங்களிரண்டின் முழுமைக்கும் விசாரிக்கப்படலாகும். 124 A ஸெக்ஷனில் 2 சார்ஜும், 153 A ஸெக்ஷனில் 2 சார்ஜும் ஆக (4 சார்ஜில் ஒன்றுபோக) 3 சார்ஜில் விசாரிக்க உத்திரவு செய்கிறேன்.

கிரௌன் கிளர்க்கு சார்ஜ் விஷயமாகிய 2 ஆவது விஷயத்தை வாசிக்கத் தொடங்கியபோது, ஸ்ரீ திலகர் மற்ற விஷயங்களும் படித்ததாகவே கொள்ளலாம் என்றும், மொழிபெயர்ப்புகளை ஆக்ஷேபிக்கிறதாய் சொல்லிவிட்டுத் தான் குற்றவாளியல்லவென்றும் கூறினர். அப்போது ஸ்பெஷல் ஜூரியொன்று வரவழைக்கப் பட்டது. ஸ்ரீ திலகர் தனக்கியன்றமட்டில் 8 யூரோப்பியரை மறுத்தார். கிரௌனார் ஓர் ஹிந்துவையும், ஒரு பார்ஸியையும் மறுத்தனர். இதன்மேல் 7 யூரோப்பியரும், 2 பார்ஸியருமான மிஸ்டர் ஆண்டர்ஸன் (போர்மன்), மெஸஸ் கிரீக், ஹிஸியர்ட், பாலன்ஜீ, சௌஜு,

ஹட்ஸன், ஸோராப்ஜீ, ஹட்ஸன், வுட், மார்ட்டின் ஆக 9-பேர் ஜூரியாகஎடுத்துக்கொள்ளப்பட்டார்கள்.

## கேஸ் ஆரம்பம்.

மிஸ்டர் இன்வெராரிட்டி—அட்வோகேட் ஜெனரல் மற்றொரு கோர்ட்டில் முக்கியமான கேஸ் விஷயமாய்ப் போயிருப்பதால் நான் கேஸை யெடுத்துக் கூறுவேன். சென்ற மேமீ 12உ, ஜூன்மீ 9உ பிரசுர விஷயங்களிரண்டுக்காகக் குற்றவாளியின் பேரில் சார்ஜு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வா விஷயங்கள் பூனா மராத்தி வாராந்திரப் பத்திரிகையாகிய "கேசரி"யில் பிரசுரிக்கப்பட்டன. அப்பத்திரிகை பம்பாயில் விஸ்தாரமாய்க் கொடுக்கப்படுகிறது. இச்சார்ஜுகளைப்பற்றிய இந்தியன் பினல்கோடு ஸெக்ஷன்களை வாசித்தபடி அந்த ஸெக்ஷன்களின் பிரகாரம் பத்திரிகாசிரியர்கள் கவர்ன்மெண்டின் நடவடிக்கையைப்பற்றியும், ஏற்பாடுகளைப் பற்றியும் அபிப்பிராயங்கூற இடமுள்ளதானாலும் யாராவது கவர்ன்மெண்டை அக்கிரமமும், கொடுங்கோன்மையுமாயிருப்பதாக தூஷித்துப் பகை மூட்டப்பார்க்கும்படிக் கூறவில்லை. சென்ற மேமீ 12உ விஷயாரம்பத்தில் முஜாபர்பூர் கொடுமையைக் கூறியெழுதிவந்ததின் மொத்த தாத்பரியமாவது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு முற்றிலும் சகிக்கமுடியாத அக்கிரமமும் கொடுங்கோன்மையுமாய்விட்டதென்றும், சுயப்பிரயோஜனத்துக்கே யேற்பட்டிருக்கிறதென்றும், கலகம் மூளாதபடிக்கு மாத்திரமே ஜனங்களை கவனித்து வருகிறதென்றுமாகிறது. இத்தேச கவர்ன்மெண்டின் பேரில் முழு தூஷணையாயுள்ளது. "ஸ்வராஜ்" என்பதற்கு மொழிபெயர்ப்பின்படித் "தன்னாட்சி" யென்றர்த்தமாகிறது. சென்ற ஜூன்மீ 12உ விஷயத்தில் இதற்குக் கூறியுள்ளபடிக் குற்றவாளியின் கருத்தாவது கவர்ன்மெண்டைக் கவிழ்க்க ஜனங்கள் துணிந்தபோது சாத்தியமேயாகுமென்கிறது. இந்த கவர்ன்மெண்டார் ஜனங்களின் கோரிக்கைகளை கவனியாவிட்டால்,

ருஷியா முறைகளைப் பார்த்துக் கொள்ளலாமென்றும் அதில் குற்றவாளி காட்டியிருக்கிறார். ருஷியா முறைகள் இன்னவென்று யாவருக்கும் தெரியுமே! ருஷியா முறைகளைப் பார்த்துக்கொள்ளலாமென்றதினால் வாசிப்போர் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள பாம்பைப் பிரயோகிப்பதாகும் எண்ணங்கொள்ளக் குற்றவாளி தூண்டுவதாகிறது; இன்னும் அதில் கவர்ன்மெண்டின் அக்கிரம முறையைப்பற்றி 30 கோடி இந்தியரும் வயிறெரிந்துபோயிருப்பதாகவும் கூறியிருக்கிறது. மேலும், அதில் கவர்ன்மெண்டார் சுயேச்சைக்காரராய்த் தம் நாட்டவருக்கே லாபகரமான விருப்பங் கொண்டுள்ளதாக நிந்தித்திருக்கிறார். இவ்விஷயத்தை மொத்தமாய்க் கவனிக்குமிடத்து, லாவை மீறியதா இல்லையா வென்று சொல்லலாம். சென்ற ஜூன் மீ" 9உ விஷயத்தைப் படித்துப் பார்த்தபடி முன் விஷயத்தில் கவர்ன்மெண்டைக் கவிழ்க்க பாம்பைப் பிரயோகிப்பதைக் கண்டித்திருந்தாலும், ஜனங்களுக்கு எந்த சுதந்திரங்கள் வேண்டும்போது மற்ற நாடுகளில் பாம்பைப் பிரயோகிப்பதின் பயனை யெடுத்துக் காட்டியதுமன்றி பாம்பு தயார் செய்யத் தொழிற்சாலை தேவையில்லையென்றும், சில ரசாயனக் கருவிகளைக்கொண்டே சுலபமாய்த் தயார் செய்துவிடலாமென்றும் குற்றவாளி கூறியிருக்கின்றார். பின் விஷயத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்நாட்டுக்கு சாபமானதென்றும், இப்போது நடந்துவருமாதிரியே யின்னும் நடந்து ஜனங்களுக்கு சுதந்தரங்களைத் தராதிருந்து விடுமானால் ருஷியா, போர்ச்சுகலில் நடந்ததுபோல ஜனங்கள் பாம்பைக் கையாடுவார்களென்றும் வாசிப்போர் மதியக் குற்றவாளி கூறியிருக்கிறார். இதிலேயே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு நடந்துவந்ததுபோல் இனி நடக்க விடப்படமாட்டாதென்றும், ஜனங்களுக்கு சுதந்திரங்களைக் கொடாத தவறினால், இந்நாட்டிலும்கூட பாம்பைக் கையாடுவதை எந்த கவர்ன்மெண்டேற்பாடும் தடுக்க முடியாதென்றும் குற்றவாளி அச்சுறுத்தியிருக்கிறார்.

மிஸ்டர் பின்னிங் குற்றவாளியைப் பிடித்து விசாரிக்க கவர்ன்மெண்டு ஸாங்க்ஷன் இதுவென்று காட்டினார்.

## சாக்ஷிய விசாரணை.

பாரிஸ்டர் மிஸ்டர் பின்னிங்—இதுமுதல் பிராசிகூஷனுக்கு ஸாங்க்ஷனு?

முதல்ஸாக்ஷி மிஸ்டர் பாஸ்கரவிஷ்ணுஜோஷி, B.A;—ஆம் பிரபோ; இதை தாக்கல் செய்கிறேன்.

கோர்ட்டார்—இதை யெடுத்துக் கொள்வதில் ஆக்ஷேபமேதாவதுண்டா?

திலகர்—இல்லை பிரபூ: அதை யெடுத்துக்கொள்வதில் எனக்கு ஆக்ஷேபங் கிடையாது.

பின்னிங்—சென்ற மேமீ 12உ கேசரிப் பத்திரிகையோ இது?

ஜோஷி—ஆம்.

கோர்ட்டார்—உம்முடைய அலுவல் வகையில் இப்பேப்பர் கிடைத்ததோ?

ஜோர்ஷி—ஆம்பிரபோ.

பின்னிங் — இப் பேப்பரையும் மொழிபெயர்ப்பையும் தாக்கல் செய்கிறேன்.

கோர்ட்டார்—நீர்மொழிபெயர்த்த விஷயத்தலைப்புப் பெயரென்ன?

ஜோஷி—“தேசவிபத்துகள்” என்பது.

பின்னிங்—மற்றொரு விஷயம் சென்ற ஜுன்மீ 9உ கேசரிப் பத்திரிகையிலுள்ளதோ?

ஜோஷி—ஆம்.

பின்னிங்—இக்கேசின் சாக்ஷிகளாயிருப்பவர்கள் வெளியேறும்படிக் கோர்ட்டார் உத்திரவாகலாமே?

மிஸ்டர் இன்வெராரிட்டி—கோர்ட்டில் டிபன்சுக்குதவியா யெந்த சாக்ஷியாவதிருந்தால் எனக்கு ஆக்ஷேபங் கிடையாது.

பிராசிகூஷனர்—சாக்ஷியாயுள்ள மிஸ்டர் கேல்கார் டிபன்சுக்கு உதவியாயிருக்கிறாரே.

இன்வெராரிட்டி—அவரிருந்தால் எனக்கு ஆக்ஷேபங்கிடையாது.

பின்னிங்—சென்ற ஜுன்மீ 9உ கேசரிப் பத்திரிகையில் "இப்பரிகாரங்கள் நிலைக்கமாட்டா" என்ற தலைப்பைக் கொண்ட விஷயமிதுவா?

ஜோஷி—ஆம்.

பின்னிங்—இதையும் தாக்கல் செய்கிறேன் பிரபோ.

திலகர்—எண்ணத்தை யெடுத்துக்காட்ட இது கொண்டுவரப்பட்டால் மெயின் லாப்பிரகாரம் ஆக்ஷேபிக்கிறேன். இவ்விஷயமெழுதிய சந்தர்ப்ப நிலைமைகளைக் காட்டக்கூடிய தாகுமென்கிறேன்; ஆனால் அவற்றைக்கொண்டு எண்ணத்தை யெடுத்துக் காட்டக்கூடாமை.

கோர்ட்டார்—மூன் கேசுகளில் இவ்விஷயம் விவகரிக்கப் பட்டிருக்கிறது; ஆகவே அப்போது எடுத்துக் கொண்டது போலவே இப்போதும் எடுத்துக்கொள்கிறேன்.

பின்னிங்—சென்ற மேமீ 19உ கேசரிப் பத்திரிகையில் ஒருதலைப்பத்தி (லீடர்)யின் தலைப்பாவது?

ஜோஷி—இரட்டைக் குறிப்பு (Double Hint) என்பது.

பின்னிங்—(இதை மொழிபெயர்ப்புடன் தாக்கல் செய்துவிட்டு) "பாம்ப் என்பதின் நிச்சயார்த்தம்" என்னும் தலைப்பைக்கொண்ட தலைப்பத்தியுள்ள சென்ற மேமீ 26வ கேசரிப்பத்திரிகையைக் கொண்டுவந்தீரா?

ஜோஷி—ஆம்.

பின்னிங்—பிரபூ, இவ் வொவ்வொரு பேப்பரிலும் குற்றவாளியால் பிரசுரிக்கப்பட்டதாக அடிக்குறிப்பிட்டிருக்கிறது.

(இப்போது இடையுண்டிநேரமாய்க்கோர்ட்டு கலைந்து கூடியது).

பின்னிங்—"பாம்பின் மர்மம்" என்ற தலைப்பிட்ட ஒருதலைப்பத்தியுள்ள சென்ற ஜூன்மீ 2வ கேசரிப் பத்திரிகையைக் கொண்டுவந்தீரா?

ஜோஷி—ஆம்.

பின்னிங் — (இதையும் மொழிபெயர்ப்போடு தாக்கல் செய்துவிட்டு) இன்னும் ஒன்றிருக்கிறதே; அதென்ன விஷயம்?

ஜோஷி—சென்ற ஜூன்மீ 9வ கேசரிப்பத்திரிகையிலே "ஆங்கிலேயம் பரிஷ்காரமாய் அங்கிய ஆளுகை" யென்று தொடங்கும் விஷயமே.

பின்னிங்—இதையும் மொழிபெயர்ப்புடன் தாக்கல் செய்கிறேன்.

கோர்ட்டார்—குற்றவாளி யினி கிராஸ் கேட்கலாம்.

திலகர்—நீர் வைத்த மொழிபெயர்ப்புகள் உம்மாலே செய்யப்பட்டனவா?

ஜோஷி—அவை ஹைகோர்ட் மொழிபெயர்ப்புகள்.

திலகர்—அவை சரியானவை யென்பதற்கு நீர் உத்திரவாதியா?

ஜோஷி—அசல்களிங்கில்லையானாலும் நானுத்தரவாதியே.

திலகர்—அசலோடு ஒத்திட்டுப் பார்த்துக்கொண்டீரா?

ஜோஷி—ஆம்.

கோர்ட்டார்—எல்லாவற்றையுமா?

ஜோஷி—இல்லை பிரபோ, ஒன்று எட்டவில்லை.

கோர்ட்டார்—எதுவது?

ஜோஷி—மேமீ 26வ பேப்பரொன்றே ஒத்துப் பார்க்கப்படவில்லை.

திலகர்—அவற்றை யெல்லாம் முன்னமே மொழிபெயர்த்தீரா?

ஜோஷி—ஆம்.

திலகர்—இரண்டு மொழிபெயர்ப்புகளுக்கும் வித்தியாச மேற்பட்டதா?

ஜோஷி—சொற்பவகையில் வித்தியாச மேற்பட்டது.

திலகர்—உம்முடைய மொழிபெயர்ப்பிலும் ஹைகோர்ட் மொழிபெயர்ப்பு மேற்பட்டதா?

ஜோஷி—அநேகமாய் அப்படியே.

திலகர்—உம்முடைய மொழிபெயர்ப்பு இருக்கிறதல்லவா?

ஜோஷி—இல்லை.

மிஸ்டர் பிரான்ஸன்—அவற்றிற்காக அனுப்பியிருக்கிறது.

கோர்ட்டார்—எம்மொழிபெயர்ப்புவேண்டும்?

திலகர்—மேமீ 12உ விஷய அசல் மொழிபெயர்ப்பு. சென்ற ஜூன்மீ 2உ விஷய மொழிபெயர்ப்பு சர்க்காருடையதுதானே?

ஜோஷி—ஆம்.

திலகர்—மொழிபெயர்ப்பின் தேதியோ?

ஜோஷி—ஞாபகமிராது.

திலகர்—நீர் மொழிபெயர்த்ததாய் சொன்னீரே; தேதி சொல்லக்கூடாதா?

ஜோஷி—ஞாபகமில்லையே.

திலகர்—பிராசிக்யூஷனுக்கு ஸாங்க்ஷன் கொடுத்தபோது கவர்ன்மெண்டில் வைக்கப்பட்டது அம்மொழிபெயர்ப்புதானா?

ஜோஷி—அதை சொல்லக்கூடாமை.

திலகர்—மாஜிஸ்ட்ரேட்டிடம் கேஸ் வருவதற்கு முன்னே வெகுவாய்த் தயாராச்சுதோ?

ஜோஷி — இயற்றியவன் நானல்லவாகையால், அதைப்பற்றி ஒன்றும் சொல்லக்கூடாமை.

திலகர்—மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஒரு மொழிபெயர்ப்பு வைக்கப்பட்டதால், சென்ற ஜூன்மீ 25உக்கு முற்பட்டிருக்கலாமோ?

(இப்போது ஜோஷியின் அசல் மொழிபெயர்ப்பு திலகரிடம் கொடுக்கப்பட்டது).

திலகர்— "தேசாச்சி துர்த்தெய்வா" என்றுலென்ன?

ஜோஷி—தேசவிபத்துகள்.

திலகர்—"கோரியா ஸ்திரீயா" என்றாலென்ன?

ஜோஷி—யூரோப்பிய சீமாட்டிகள்.

திலகர் — சர்க்கார் மொழிபெயர்ப்பில் ஒன்றும் அறியாத வெள்ளை ஸ்திரீகளுக்கு என்ன?

ஜோஷி—கோரியா.

திலகர்—மராத்தியில் கோரியா வென்றால் வேறென்ன?

ஜோஷி—எனக்குத் தெரியாது.

திலகர் — அது குறிப்பது மேனியையா, நிறத்தையா?

ஜோஷி—வித்தியாசம் தெரியவில்லை.

திலகர்—வெள்ளை யென்பதா, யூரோப்பிய என்பதா நல்லது?

ஜோஷி—இரண்டும் நல்லதே.

திலகர்—நல்லதெது?

ஜோஷி—இரண்டும் சரி; ஆனால் வெள்ளையென்பது இன்னும் விரிவுக் கிடந்தரும்.

திலகர்—வெள்ளை யென்பது எவ்வாறு விரியக் கூடும்?

ஜோஷி—இதற்கு பதில் சொல்லக்கூடாமை.

திலகர்— ஆனால் நீரே யூரோப்பிய என்று மொழி பெயர்த்திருக்கிறீரோ?

ஜோஷி—ஆம்; கிரமமான பொருள் வெள்ளை யென்றும் பக்கக் குறிப்பிட்டிருக்கிறேன்.

திலகர்—கோரியா என்றதற்குப் பக்கக் குறிப் பிட்டு மொழிபெயர்த்திரா?

ஜோஷி—ஆம்.

திலகர்—உமது ஆபீசு அலுவலில் சுதேச பத்திரிகைகளைப் படிக்கவேண்டியதில்லையா?

ஜோஷி—ஆம்.

திலகர்—தற்கால ராஜரீகக் கருத்துகளை வெளியிடுவதில் மராத்தியிலும் அநேக புதிய வார்த்தைகளை உண்டாக்கவேண்டியதில்லையா?

கோர்ட்டார்—என்ன வெளியிட?

திலகர்—தற்கால ராஜரீகக்கருத்துகளை; சிலவேளை பொருள் தெளிவாக நியூஸ் பேப்பர் எழுதுவோர் மராத்தி மொழிபெயர்ப்பின் பின்னால் இங்கிலீஷ் வார்த்தைகளைக் குறிக்கிறார்களே?

ஜோஷி—ஆம்.

திலகர்—அதன் கீழ் காண்கிறபடி "அதிகாரவர்க்கம்" என்ற வார்த்தை யடுத்து பியூரோக்ரஸியென்று வைப்பது வழக்கமா?

ஜோஷி—ஆம்.

திலகர்—நீர் சொல்லுகிறபடி அவ்விங்கிலீஷ் வார்த்தை எதுக்கு?

ஜோஷி—அதிகாரவர்க்க மென்பதற்கு.

திலகர்—வெள்ளை யதிகாரிகளுக் கல்லவே?

ஜோஷி—அல்ல.

திலகர்—அதிகாரி வர்க்கமென்பதற்கு இங்கிலீஷி லென்ன?

ஜோஷி—அபிஷியல் கிளாஸ்.

திலகர்—ஆள்வோர் வகுப்பை அது கூட்டிக் குறிக்கவேண்டி "ராஜ்யகர்த்த அதிகாரி வர்க்கம்" என்றால் போதுமானதா?

ஜோஷி—ஆம்; அது ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களென்று பொருள்படவாம்.

திலகர்—அதிகார வர்க்க மென்பதற்கு சமபதம் தேவையானல், இங்கிலீஷில் அதைத் தெரிவித்தால் போதுமா?

ஜோஷி—அது குறிப்புரைபோலாகும்; ஆனல் அதற்கு சமபதமாகாது.

திலகர்—வேறன பொருளைக் குறிக்குமோ?

ஜோஷி—ஆம்.

திலகர்—சரக்காரி வர்க்கா, இங்கிரீஜவர்க்கா, ராஜசர்த்தவர்க்கா, ராஜ்யகர்த்தவர்க்கா என்பதில் பியூரோக்ரஸியென்ற பொருள்படுமோ?

ஜோஷி—பியூரோக்ரஸி யாகமாட்டாது.

கோர்ட்டார்—இந் நான்கு மொழிகளுக்கும் ஒரே பொருளோ, வெவ்வேறு பொருளோ?

திலகர்—ஒரே பொருள் கொண்டவையானலும், பியூரோக்ரஸி யென்றகாது.

கோர்ட்டார்—பின்னை அவற்றிற்குப் பொருளென்ன?

திலகர்—அவற்றின் பொருள்கள் ஆளும் உத்தியோகஸ்தர்கள், வெள்ளை உத்தியோகஸ்தர்கள், ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள், அதிகார உத்தியோகஸ்தர்களென்றாகும். சரக்காரிவர்க்க மென்பதற்கு பியூரோக்ரஸியென்று கொண்டதாய் சொல்லி யிருக்கிறீரல்லவா?

ஜோஷி—இல்லை; உரிசசொல் அநாவசியம்.

திலகர்—பியூரோக்ரஸி யென்றலென்ன?

ஜோஷி—உத்தியோக வகுப்பினர்.

திலகர்—உத்தியோக வகுப்பினரென்றமட்டில் தானே?

ஜோஷி—(பிரிட்டிஷ்) உத்தியோக வகுப்பினர்.

திலகர்—ராஜ்ய கர்த்த வர்க்கம் என்பதில் கடையசையின் அர்த்தமென்ன?

ஜோஷி—எனக்கு நல்ல விருதிப்பயிற்சியில்லை.

திலகர்—அது ஆளும் உத்தியோக வகுப்பினரென்று பொருள்படுமோ?

ஜோஷி—இல்லை.

திலகர்—பியூரோக்ரஸி யென்பதற்கு ஆளும் வகுப்பினரென்ற பொருள்படாதா?

ஜோஷி—நானப்படி நினைக்கவில்லை.

திலகர்—உமக்குத் தெரியாதே?

ஜோஷி—தெரியாது.

திலகர்—அரிஸ்டாக்ரஸி (பிரபுக்கள் துரைத்தனம்) என்பது ஆளும் வகுப்பைக் குறிக்கிறதா?

ஜோஷி—அதன் அர்த்தத்தை சொல்லக்கூடும்.

திலகர்—நான் கேட்பது அது ஆளும் வகுப்பைக் குறிக்கிறதா வென்பதே.

ஜோஷி—இல்லை.

திலகர்—புளுடோக்ரஸி (பணக்காராட்சி) யென்பது ஆளும் வகுப்பைக் குறிக்கிறதா?

ஜோஷி—எனக்குத் தெரியாது.

திலகர்—அதிகாரிவர்க்கமென்பது யூரோப்பியரையும் சுதேசிகளையும் குறிக்கிறதா? (அதிகாரியென்பது

அபிஷியல்களெனவும், வர்க்கமென்பது கிளாஸ் எனவும் ஆகிறதே.)

ஜோஷி—ஆம்.

திலகர் — யூரோப்பியர்களுக்கானால் உரிச்சொல் சேர்க்கவேண்டியதில்லையா?

ஜோஷி—ஆம்.

திலகர் — டெஸ்பாட்டிஸம் (கொடுங்கோன்மை) என்பதை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—புலாமி ராஜ்ய பத்ததியென்று.

திலகர் — டிரனிகல் (அக்கிரமக் கொடுமையான) என்பதை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—புலாமி (Fulamy) யென்று.

திலகர்— அப்ரெஸிவ் (தாங்கா சுமையான) என்பதை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—புலாமியென்று.

திலகர்—கோயெர்ஸிவ் (எதிர்த்தடையான) என்பதை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—இங்கிலீஷ் வார்த்தைகளில் என்னைப் பரீக்ஷிக்கவேண்டியதில்லை.

கோர்ட்டார்—கோயெர்ஸிவ் என்பதற்கு மராத்தியிலென்ன?

திலகர்—புலாமியென்பதுதான்.

திலகர்—ரிப்ரெஸிவ் (மிதித்துத் துவைக்கின்ற) என்பதற்கென்ன மொழிபெயர்ப்பு?

ஜோஷி—எல்லாவித வார்த்தைகளுக்கும் அப்படி சொல்லிவரக் கூடாமை. அகராதியிருந்தால் நன்றாய்

சொல்லிக்கொண்டுவருவேன். அர்த்தபதங்களில் விதம் விதமாய் வித்தியாசங்க ளிருக்கின்றன.

கோர்ட்டார்—உமக்குத் தெரிந்தமட்டில் சொல்லி வரும்; பிறகு அகராதியைப் பார்த்துக்கொள்வீர். ரிப்ரெவில் என்பதற்கு மராத்தி மொழியென்ன?

ஜோஷி—பல பதங்க ளுள்ளன; அவற்றிலொன்றை சொல்லலாம்.

கோர்ட்டார் — அப்ரெவில் என்பதற்கு சாதாரண மராத்தி பதங்களென்ன?

ஜோஷி—தாதாபாஷாஹீ.

திலகர்—இது புதிதாய்க் கூட்டிய மொழியா?

ஜோஷி—ஆம்.

கோர்ட்டார்—புதுமொழியென்று சொல்லுகிறீர்?

திலகர்—ஆம்பிரமோ; புல்மியென்பது டிரனிக்கல், டெஸ்பாட்டிக் அல்லது அப்ரெவில் என்றும் ஆகுமோ?

ஜோஷி—ஆம்; ஒவ்வொரு முன்பின் வாக்கிய சம்பந்தத்தை யொட்டியெடுத்துக் கொள்ளவேண்டும்.

திலகர்—சம்பந்தப்படி விலக்கின்றி உபயோகித்துக்கொள்ளலாமோ?

ஜோஷி—உமக்கிஷ்டமானால் அப்படிசெய்யலாம்.

திலகர்—ஒரு நாட்டின் நிலைமையை விவரிக்குமிடத்து, டெஸ்பாட்டிக் (கொடுங்கோலான) என்பது எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது?

ஜோஷி—ஒரு கொடுங் கோலனால் ஆளப்படுமிடத்தே.

கோர்ட்டார்—எப்படி?

ஜோஷி—அல்லது கொடுங்கோ லதிகாரிகளால் ஆளப்படுமிடத்தே.

திலகர்—கொடுங்கோ லதிகாரிகளுக்கும் கொடிய அக்கிரம அதிகாரிகளுக்கும் இடையேயாவது, கொடுங்கோலரசனுக்கும் கொடிய அக்கிரம அரசனுக்கும் இடையேயாவது வித்யாசமேதும் உள்ளதா?

ஜோஷி—இருக்கலாம்; ஆனால் இந்த சொற்ப வித்யாசங்கள் எனக்குத் தெரியவில்லை.

திலகர்—கொடுங்கோலரசனே கொடிய அக்கிரம அரசனுமென்பது உமதபிப்பிராயமா?

ஜோஷி—நான் சொல்லக் கூடியமட்டில் சரிதான் ஆனாலும், என்னிடத்தில் அகராதியில்லையே.

திலகர்—கொடுங்கோலாளுகை (Despotic Rule) கொடிய அக்கிரம ஆளுகை (Tyrannical Rule) யாயிருக்கவேண்டியதில்லை யென்பதை யெப்போதாவது கண்டதில்லையா?

ஜோஷி—கண்டதில்லை.

கோர்ட்டார்—என்ன?

ஜோஷி—இப்படிப்பட்ட வசனத்தைப் பார்த்திருப்பதாக எனக்கு ஞாபகமில்லை.

திலகர்—ஆப்ஸொல்யூட் (ஸர்வாதிகார) என்பதை மொழிபெயரும்.

ஜோஷி—அநியாந்திரீயா.

திலகர்—ஆர்பிட்ரரி (சுயேச்சா) க்கோ?

ஜோஷி—இதற்கொருமொழி சொல்லக்கூடாமை.

திலகர்—பரவாயில்லை; உம்முடைய தாற்பரியந் தானென்ன?

ஜோஷி—அகராதியைப் பார்க்கக்கூடாதா? மற்றபடி நான் சரியில்லாத அர்த்தங்களை சொல்லிவரலாம். இதை மராத்தியிலும் இங்கிலீஷில் நன்ருய் விவரிப்பேன்.

கோர்ட்டார்—உமக்குத்தெரிந்ததைசொல்லுமே?

ஜோஷி—ஒரு வார்த்தையில் சொல்லக்கூடாமை.

கோர்ட்டார்—அதை மராத்தியில் விவரியும்.

ஜோஷி—இங்கிலீஷில் நன்ருய் விவரிக்கக்கூடுமே; ஒன்றுக்கு மேற்பட சொல்லவேண்டியிருக்கலாம்?

கோர்ட்டார்—சொல்லிவிடும்.

ஜோஷி—கியாஸா நிர்ப்பர்த்தா நஹீன் ஆவியா அல்லது ஸ்வைரா (ஸம்ஸ்கிருத பதம்.)

கோர்ட்டார்—இனி ஆட்டோகிரெட்டிக் (தனியாட்சியான)குக்கென்ன?

ஜோஷி—அநியாந்த்ரீய மென்பதே.

திலகர்—அன்கன்ட்ரோல்ட் (அடக்கமுடியாத) என்றுலென்ன?

ஜோஷி—அயோலா அர்ப்பக்தா நஹீன் அஸலா.

திலகர்—இர்ரெஸ்பான்ஸிபில் (உத்திரவாதமற்ற) என்றுலென்ன?

ஜோஷி—மைஜபாபதாரா.

திலகர்—இம்பீரியாலிஸ்டிக் (ஏகாதிபத்திய தரமான) என்பதற்கு மொழிபெயர்ப்பு?

ஜோஷி—மாட்ஷோபான்போர்ச்சா.

திலகர்—இதைப்போன்ற வாக்கியத்தை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

கோர்ட்டார்—உமது கிராஸ் கேள்வியைத் தடுக்க நான் விரும்பவில்லை; ஆனால் தாவா விஷயங்களில் கொடுங்கோலாளுகை விவரத்தின்பேரில் இக்கேள்வியா வென்றறியவேண்டும். இம் மொழிபெயர்ப்பை மறுக்கிறீரா?

திலகர்—ஆம் பிரபோ; இவ்வார்த்தைகள் தப்பாய் மொழிபெயர்க்கப்பட்டன. சர்க்கார் மொழிபெயர்பபும் தவறே. டரன்ஹெடெட் (மாருட்டமான) என்பதற்கு மொழிபெயர்ப்பென்ன? பாரட்டிங் (பித்து கொண்ட) என்பதை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—ஒரு வார்த்தையா யில்லையே.

திலகர்—புதிதாய்ஒருவார்த்தையை உண்டுபண்ணவேண்டுமானால்?

ஜோஷி—அதேகருத்துள்ள வார்த்தைகள் நூறும் சொல்லக்கூடும்; வார்த்தையோ காஜி (Ghazi.)

திலகர்—சரியான அர்த்தத்திலிருந்து வேறுபட்டிருந்தாலுமா?

ஜோஷி—காஜியென்றே மொழி பெயர்த்திருக்கிறேன்.

திலகா—மதக்கருத்தைத்தவிர்த்து எப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—எனக்குத் தெரியாது.

கோர்ட்டார்—ஒருவன் பித்தனென்னப் படுவானால் என்ன சொல்வீர்?

ஜோஷி— மதேபிரு அல்லது வைதா என்பது போதும்.

திலகர்—அதுகாயி என்பதை மொழிபெயர்ப்பீரா?

ஜோஷி—மூர்க்கன் (Violent headed man) என்பேன்.

திலகர்—அதாதாயீ என்றால் பாவி (Felon) அல்லவா?

ஜோஷி—அவ்வாறு கண்டதில்லை.

திலகர்—ஸமஸ்க்ருதத்திலே அதாதாயீ என்பதற்கு என்ன சொல்லப்படுகிறது?

ஜோஷி—எனக்குத் தெரியாது.

திலகர்—அதோ ஸமஸ்கிருத அகராதி.

ஜோஷி—உமக்கென்ன தெரியவேண்டும்?

திலகர்—அதில் குறிக்கப்பட்டவர்களில் பாதகனும்கூடவா? அதாதாயா வென்றாலென்ன?

ஜோஷி — அகராதிகளின்படி நஞ்சிடுவோர்கள், மூர்க்காயுதபணிகள், பணக்காரப் பேதைகள், மண்பறிக்காரர், பரதாரகமனர் இவ்வவ வகையரும் அதாதாயராகலாம்.

கோர்ட்டார்—அது என்ன அகராதி?

ஜோஷி—வாமனசிவராம ஆப்தியின் ஸமஸ்கிருத இங்கிலீஷ் அகராதி.

திலகர்—அதாதாயா என்பது 'பிரு' என்பதிலும் கடினபதமா?

ஜோஷி—ஆம்.

திலகர்—மராத்தியில் இரவலாகக் கொண்டுவந்திருக்கலாமா?

ஜோஷி—ஆம்; ஆனால் வெகு ஜனங்கள் உபயோகப்படுத்துகிறபடி அநாவசியமாகிறது மோல்ஸ் வொ.

ர்த்தில் அதர்த் என்பதற்குப் பொல்லா மாறுட்டுக்கா ரன் என்னப்படுகிறது.

திலகர் — ஓரிடத்தில் மோல்ஸ்வொர்த் பழைய அகராதி யென்றீரே?

ஜோஷி—மராத்தி மாதிரியிலும் வலுத்த வார்த்தை நமக்குத் தேவையானால், ஸம்ஸ்கிருதத்தைத் தேடுகிறோம்.

திலகர்—ஒன்று மற்றொன்றிலும் வலுத்ததா?

ஜோஷி—(பதிலில்லை.)

கோர்ட்டார்—ஒரு மாதிரியிலும் மற்றொருமாதிரி வலுத்ததா?

ஜோஷி—கோர்ட்டாரே தீர்மானித்துக் கொள்ளும்படி அதிவிநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திலகர்—சாதாரணத்தில் அதாதாயி அதிகவலுத்ததாயில்லையா?

ஜோஷி—ஆம்.

திலகர்—அதாதாஜினம் என்றால் அறிவோர் மிகு சிலரே யாவர்?

ஜோஷி—அது மராத்தியல்லவே.

திலகர்—அதாதாஜினம் என்பது மனுவிலே மிக வழங்கும் மேற்கோளல்லவா?

ஜோஷி—இது அடிக்கடி யெடுத்துக்காட்டப் படுவதாய் நானறியேன்.

திலகர்—இந்நாட்டில் இவ்வார்த்தைபாதகனென்று வழங்குகிறதா?

ஜோஷி—வேறு சில வார்த்தைகளோடு வழங்குகிறது.

திலகர்—பெலன் (பாதகன்) என்பது பானட்டிக் (பித்தன்) என்பதிலும் வலுத்ததா?

ஜோஷி—இவ்வரிய வேறுபாடுகளைக் கண்டறியக் கூடாமையின் தீர்மானிப்பது மிக்க அபாயகரமாகும்.

திலகர்—மராத்தியில் தக்க பதங்களில்லாமையால் பொருத்தமான வார்த்தைகளை ஸம்ஸ்கிருதத்திலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டியதாயில்லையா?

ஜோஷி—அதற்காகத் தான் தொழில், சாஸ்திர வகையில் மிக்க அநேக வார்த்தைகள் உண்டுபண்ணப் படுகின்றன.

திலகர்—"ஸர்க்காரா சாசன பத்ததி" என்பதை மராத்தியில் எப்படிக் கூறுவீர்?

ஜோஷி—ராஜ்ப பத்ததிக்கென் றர்த்தமாயிருந்தால், இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றுக்கும் பிரதிபதம் சொல்லக்கூடும்.

திலகர்—ஆளுகை (Administration) யென்பதினால் ஸர்க்காரைக் குறிக்கக் கூடுமா?

ஜோஷி—இல்லை.

திலகர்—ரூல் (கோல்) என்பதற்கு?

ஜோஷி—ராஜ்யம்.

திலகர்—ஸ்வே (ஓச்சல்) யென்பதற்கு?

ஜோஷி—அல்லது அமலா.

திலகர்—இப்போதுஇருந்துவருகிற அல்லதுஆளுகிற ஜாதியின் தன்மைகளாக ஆண்மை (Manliness), வல்லமை (Vigour), கௌரவம் (Sense of honor) இம்மூன்று வார்த்தைகளை யெடுத்துக்கொள்வதில் மான்லினெஸ் என்பதை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—மர்த்தனேபண அல்லது பௌருஷம்.

திலகர்—விகருக்கோ?

ஜோஷி—ஸாமர்த்தியம்.

திலகர்—ஆனர் ஸென்ஸுக்கோ?

ஜோஷி—அபிமானம்.

திலகர்—ஆனர் ஸென்ஸுக்குரிய சிறு மொழியாவது தேஜா என்பதல்லவா?

ஜோஷி—ஆம்.

திலகர்—தேஜா என்பதற்கு முற்றிலும் வேறுபட்டபொருளுண்டே?

ஜோஷி—ஆம்.

திலகர்—அது ஆனர் ஸென்ஸுக்கு எப்போதும் வழங்கப்பட்டதில்லையே?

ஜோஷி—அப்படி வழங்கியதாய்க் கேள்விப்படவில்லை.

திலகர்—ஸமஸ்கிருதத்திலாவது மராத்தியிலாவது கிடையாதே?

ஜோஷி—எனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியாது.

திலகர்—(ஆனால்) ஜகந்நாத சங்கரஸேட் ஸம்ஸ்கிருதமாணவப்பரிசு மாத்திரம் வாங்கியிருக்கிறீர்! தேஜாஸ்வி ஸாஹே யென்பதற்கெப்படி சொல்வீர்?

ஜோஷி—அதற்கு ஆனர் ஸென்ஸெனும் பொருள் உள்ளதென்று தெரியாது. அதை முயற்சி (Energy), ஊக்கம் (Spirit) என மொழிபெயர்ப்பேன். கடுமை தாளாத மனுஷ்யனே தேஜாஸ்வி அல்லது ஸ்பிரிட்டெட்மேன்.

திலகர்—"நா தேஜாஸ்வி ப்ரசரிதா மாப்பிபாரிஷம் ஸதாதே" என்பதை யெப்படி செய்வீர்?

ஜோஷி—இதை மொழிபெயர்க்கமுடியாது.

கோர்ட்டார்—என்னதெரிந்து கொண்டீர்?

ஜோஷி—எனக்கு அர்த்தம் தெரிகிறது, அந்வயமும் ஏற்படுகிறது; ஆனால் அதை மொழிபெயர்க்கமுடியாது.

திலகர்—ஆனால் உமக்கது தெரியுமே?

ஜோஷி—அது வேறு விஷயம் பிரபோ; அது ஸம்ஸ்கிருத வாக்கியமாகலின், வாயிதா கொடுத்தால் அதை நானே மொழிபெயர்த்துவிடலாம்.

திலகர்—மராத்தி வாக்கியங்களை மொழிபெயர்க்க உம்மாலாகுமே யானால், "நா தேஜஹா தேஜாஸ்வி டாகடா பரதேஜோ பல்மதா" என்பதை யெப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—அது முற்றிலும் ஸம்ஸ்கிருதமே.

திலகர்—நான்குறிக்கிறது மராத்தி வார்த்தைகளே.

ஜோஷி—இது ஸம்ஸ்கிருதத்தையே மராத்தியில் மாற்றியதென்று தெரியும்.

திலகர்—நாலாவது ஸ்டாண்டர்டு வாசக புஸ்தகத்தி லுள்ளதென்றுவது தெரியுமா?

ஜோஷி—நான் சொல்லக்கூடாமை.

கோர்ட்டார்—அவசியமான கேள்விகளன்றி அநாவசியமாய்க் கேட்கவேண்டியதில்லை.

திலகர்—ஸந்தாபம் என்பதை யெப்படிசெய்வீர்?

ஜோஷி—இண்டிக்னேஷன் (மானநஷ்டம்) என்று.

திலகர்—துக்காரு ஸந்தாபா என்பதை யெப்படி செய்வீர்?

ஜோஷி—துக்க வசப்பட்ட என்று.

திலகர்—துக்காவேசமான என்றாகாதா?

ஜோஷி—இல்லை.

திலகர்—ஆவேஷம் என்பதை யெப்படிசெய்வீர்?

ஜோஷி—என் னகராதியின்படி வலிந்த கோபம் என்று.

திலகர் — சம்பந்தப் பகுதிக்குப் பொருத்தமாயிருந்தாலும் இல்லாவிடினும், அகராதியைத் தான் பிடித்துக்கொண்டிருப்பீரோ?

ஜோஷி—அகராதியின்படிதான் நடந்து கொள்வதென்றில்லை.

திலகர்—ஆவேசமென்பதை யெப்படி செய்வீர்?

ஜோஷி—பலாட்டியம் என்று; அன்றியும் கோபாவேசம், மூர்க்காவேச மென்றும் பொருள்படும்.

திலகர்—அகராதியைப் படித்துக் காட்டவேண்டாமே.

ஜோஷி—அகராதியைப் பார்த்து தான் மொழி பெயர்த்திருக்கிறேன்.

திலகர்—சாக்ஷியத்தில் அது வரட்டும்; எந்த அகராதியைக் குறிக்கிறீர்?

ஜோஷி—நானா விஷய மொழிபெயர்ப்புக்கு 3 அகராதிகளைக் கையாண்டிருக்கிறேன். அவையாவன—மோல்ஸ்வொர்த், காண்டி, ஆப்டி. யென்பன; அன்றியும் ஒவ்வொரு சமயம் மானியர்விலியம்ஸ்கூட.

திலகர்—அகராதிகளிலிருந்து மொழி பெயர்ப்பு செய்கதில் மேலானதெதுவோ அதைத்தானெடுத்துக் கொண்டிருக்கிறீர்?

ஜோஷி—ஆம்.

திலகர்—வார்த்தைகளுக்குப் புதிய அர்த்தங்கள் கொள்ளப்படுவதை கவனிப்பதில்லையோ?

கோர்ட்டார்—யார் உண்டுபண்ணுவது?

ஜோஷி—ஆசிரியர் மிஸ்டர் திலக்.

கோர்ட்டார்—ஆசிரியர் வார்த்தைகளுக்கு நூதனார்த்தங்களைத் தருவாராயின், அதைப்பற்றி உமக்கு அவசியமில்லையோ?

ஜோஷி—கவனிப்பதில்லை.

திலகர்—ஆனாலும், புதிய கருத்துகளை வெளியிட மராத்தியில் வார்த்தைகளை உண்டுபண்ண வேண்டுமென்று நீரறிவீர்?

ஜோஷி—ஆம், அறிவேன்.

திலகர்—ஜூன் மீ 9௳ பேப்பர் விஷயத்தில் ஈவில் ஜீனியஸ் என்பதை துஷ்டபுத்தியென்றால், பூதமென்பதற்கென்ன?

ஜோஷி—ஈவில் ஜீனியஸ் என்பதே பூதமுமாகும்.

கோர்ட்டார்—முன் சொன்னதென்ன?

ஜோஷி—துஷ்டபுத்தி.

திலகர்—பிடித்துக் கொள்வதற்கு [illegible]தியி லென்ன?

ஜோஷி—தராத்தி.

திலகர்—பச்சாடாத்தி [illegible]லவோ?

ஜோஷி—உண்டுபண்ணிக் கொண்டதாகும்.

திலகர்—மாந்திரீகா என்றாலென்ன?

ஜோஷி—உண்மைப் பொருளாவது மந்திர சாஸ்திரி அல்லது உருவேற்றுகிறவன்.

திலகர்—மந்திரமென்பது வேதப் பகுதியென்று பக்கக் குறிப்பிட்டிருக்கிறதே.

ஜோஷி—ஆம், மந்திரசாஸ்திரியென்றால் மந்திரம் அல்லது தந்திரம் அறிந்தவன்.

திலகர்—மந்திரமா, தந்திரமா?

ஜோஷி—இரண்டிலொன்றாகும்.

திலகர்—இங்கே அவ்வர்த்தமில்லையோ? வரதா பிரஷ்டா என்றாலென்ன?

ஜோஷி—விரதக்கிரமந் தவறியவன்.

திலகர்—மந்திரம் கைகூடும்படி விதைக்காப்பாற்ற வேண்டியதாகுமோ?

ஜோஷி—ஆம்.

திலகர்—புத்தி பிரம்ஸா என்றாலென்ன?

ஜோஷி—மதிமயக்கம்.

திலகர்—ஜட்ஜ்மெண்ட் எரர் (Error) என்றால் என்ன?

ஜோஷி—இதற்கொருவார்த்தையைஉண்டுபண்ண வேண்டியதால் கொஞ்சம் யோசிக்கலாகும்.

கோர்ட்டார்—மராத்தியில் எப்படி மொழிபெயர்ப்பீர்?

ஜோஷி—கொஞ்சம் யோசித்துத் தான் சொல்ல வேண்டும். இதன் கருத்து மிகவும் தொகுப்பானது. இதற்கு மராத்தியில் வார்த்தை கிடையாது. இதை கவனமும், யோசனையும், பகுத்தறிவுமின்றி மொழி பெயர்க்கக் கூடாமை.

திலகர்—உண்மையான வார்த்தை காணுதவிடத்து ஒரு [illegible]) மொழியை உண்டுபண்ணவேண்டிவருமே?

வர்த்தமானம் வரைவோர் யோசித்துக்கொண்டிருக்கக் கூடாதம். ஒரு விஷயத்தை அவசரமாயெழுதி முடிக்க வேண்டுமானால், ஒரு வார்த்தையைக் கண்டுபிடிப்பதில் உமக்கு சாவகாசங்காணுமா?

ஜோஷி—நான் விஷயமெழுதுகிறவனல்லவே.

திலகர்—நாளைக்காவது கொடுக்கக்கூடுமா?

ஜோஷி—பார்க்கலாம்.

திலகர்—டிஸென்ட் ராலிஸேஷன் ஆவ்பவர் என்றுலென்ன?

ஜோஷி—அதிகாரவிபாகனி.

திலகர்—இது உண்டுபண்ணப்பட்ட வார்த்தையா?

ஜோஷி—ஆம்.

திலகர்—விபாகனி யென்பது வதானி யென்றாகாதே?

ஜோஷி—ஆகுமென்று நினைக்கவில்லை.

## இரண்டாம் நாள் (14-7-08) விசாரணை.

திலகர்—பிராஸிகூஷன் சாக்ஷியாக வரவழைக்கப்பெற்ற என்பிரெஸ் கம்பாஸிட்டர்களை விட்டுவிடலாமே? நான் தாவாவிஷயப் பிரசுரத்தை ஒப்புக்கொண்டு விட்டதினாலே அவர்கள் தேவையில்லையே?

அட்வோகேட் ஜெனரல்—போலீஸ் கோர்ட்டிலாவது வேறிடத்திலாவது ஜோஷியையும் திலகர் ஒப்புக்கொள்ளவில்லையே.

கோர்ட்டார்—இதற்கிப்போது ஜவாப்பு சொல்வதற்கில்லை யானாலும், அட்வோகேட் ஜெனரல் இந்த சாக்ஷிகளைக் கூடிய சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

பிறகு திலகர் மிஸ்டர் ஜோஷியைக் கிராஸ்கேட்கத் தொடங்கிக் கேசரிப் பத்திரிகைகளிலிருந்து வாக்கியங்களைக் கூறி யிங்கிலீஷ் மொழிபெயர்க்கக் கேட்டதை அட்வோகேட் ஜெனரல் ஆக்ஷேபித்தார்.

கோர்ட்டார்—திலகர் சாக்ஷியமாக ரிக்கார்டுகளை தாக்கல் செய்வாரானல், அட்வோகேட் ஜெனரலோடு ஜூரியாருக்கு அட்ரெஸ் கொடுக்கக்கூடாமையாகும்.

திலகர்—கேசரி பயலைப் படித்துக்காட்டி மாத்திரம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

இதன்மேல் திலகர் வாக்கியம் வாக்கியமாய்ப்படித்துக்காட்டுவதும், ஜோஷி தன் நோட்ஸ் அல்லது அகராதியைப்பார்த்து பதில் சொல்வதும், திலகர் திரும்ப அகராதியைப்பார்த்து விவாதிப்பதும், இடையே கோர்ட்டார் சாக்ஷியைக் கேட்பதுமாயிருந்து வந்தது.

ஜோஷி—மேமீ 12௳ பேப்பரில் "கிங்" என்ற வார்த்தையில் "கே" என்னும் முதலெழுத்து பெரிதாயிருக்கிறது. அது பிரிண்டரின் பிசகு, அது சின்ன எழுத்தாயிருக்கவேண்டும்; ஆகவே பொதுவாய் எந்த அரசனையும் குறிக்கும். பச்ரா வச்சா மார்க்கமென்பதற்குத் தப்புவித்துக்கொள்ளும் வழியென்பது முதலர்த்தமானலும், காப்பாற்றிக்கொள்ளும் வகையென்னவுங் கூடும். "மிஷனெரிகளால் நடத்தப்பெற்ற" என்பதற்கு மிஷனெரிப் போக்கானவென்று அர்த்தப்படுவதாயெனக்குப்படவில்லை. தந்திரமென்னும் பதப்பிரயோகமாயிருப்பதில் ஒருபோக்சென்ருகாமல் துணைக்கருவியென்ருகிறது; அது ஒருவனைக நடக்கைபு மாகலாம்.

திலகர்—"நேஷனல் அஸாஸிநேஷன்" என்பதற்கு மேமீ 12௳ பேப்பரில் மராதியிலென்னவென்று சொல்லியிருக்கிறது?

ஜோஷி—ராஷ்ட்ராவாட்; முன்மொழிக்கு நேஷன் (ஜாதி) என்றும், பின்மொழிக்குக் கிலிங் (வதை) என்றுமாகும்.

திலகர்—கிலிங என்பதற்கு பதிலாக அஸாஸிநேஷன் (கொலைபாதகம்) என்று மொழிபெயர்த்திருப்பதேன்?

ஜோஷி—அது என் மொழி பெயர்ப்பல்ல.

திலகர்—ஜூன் மீ 2௳ பேப்பரில் ஒருவாக்கியத்துக்கு "வெகுகாலம் உலகமானது ஒரு குறையுமின்றி சென்றுகொண்டிருக்கையில் ஒருவன் தன் கடமையை மறந்துவிடத் தொடங்குகிறான்" என்றதைக் கவனித்தீரா?

ஜோஷி — இது தப்பு மொழிபெயர்ப்புதான்; "வெகுகாலம் ஒருவன் ஒரு குறைவுமின்றி வாழ்ந்து வருவானானால், அவன் தன் கடமையை மறக்கத் தொடங்குகிறான்" என்றிருக்க வேண்டும்.

திலகர்—"சண்டாள மகமதியர்" என்றதற்கெப்படி?

ஜோஷி—பொல்லாத மகமதியரென்னக்கூடும்.

திலகர்—மராத்தி பேப்பர்களைப் பார்த்துவரும் பழக்கத்தின்படி அவற்றின் பொதுக்கருத்து தெரியுமே?

ஜோஷி—என் அலுவலின் அந்தரங்கத்தை ஆழ்ந்து பார்க்க ஆரம்பித்தாரே.

ஜட்ஜி—அப்படிக்கில்லை.

ஜோஷி—எனக்குப் பழக்கந்தான்.

திலகர்—மராத்தி பேப்பர்களிலே கக்ஷிபேதமாவதுண்டா?

ஜோஷி — காணும்; இதற்கு பதில் சொல்லக்கூடாமை.

ஜட்ஜி— இரண்டுபட்டிருக்கிறதாவென்றுதானே?

ஜோஷி—உத்தியோக வகையிலா, சொந்த வகையிலா இதற்கு பதில் சொல்ல வேண்டியது?

ஜட்ஜி—இருவகையாய்ப் படித்திருக்கிறீரோ?

ஜோஷி—ஒருவகை யாகத்தான் என்றாலும், சொந்தவகைக் கருத்தையா கேட்பது?

ஜட்ஜி—பேப்பர் வாசிப்போர் எவராவது சொல்வதுபோல; இப்பேப்பர்கள் ராஜரீகங்களிலாவது, ஜாதி சம்பந்த விஷயங்களிலாவது, வேறெவ் வகையிலாவது இருவகுப்பாய்ப் பிரிந்திருக்கின்றனவா?

ஜோஷி—கேள்வி மிக விரிவானது.

ஜட்ஜி—பொதுவாய் இதை சொல்லக்கூடாதா?

ஜோஷி—ஆம்; கக்ஷிகளிருக்கின்றன.

ஜட்ஜி—உத்யோக வகையில் வேறு கருத்துள்ளதோ?

ஜோஷி—இல்லை.

திலகர்—கக்ஷிகளுண்டானால் எத்தனை?

ஜோஷி—சரியாய் இத்தனை யென்று சொல்லக்கூடாமை யானாலும், மூன்று நான்கு கக்ஷிகளா யிருக்கலாம்.

திலகர்—ஒவ்வொரு கக்ஷிக்கும் தலைப்பத்திரிகைகளின்னவை யென்று சொல்லக்கூடுமா?

ஜோஷி—கேசரி ஒருகக்ஷி வாதிதான்.

ஜட்ஜி—ஒருகக்ஷி வாதத்தில் தலைமை பெற்றதா?

ஜோஷி—ஆம்; மற்றொரு கக்ஷிக்கு "இந்துப்பிரகாசம்" தலைமையானது. சுதாரகம் என்பது மூன்றாவது கக்ஷிக்கும், சுபோதமென்பது நாலாவதுக்கும் தலைமையானவை.

மிஸ்டர் பிரான்ஸன்—ஹைகோர்ட் திரான்ஸ்லேட்டர் மொழிபெயர்ப்புகளெல்லாம் சரிதானே?

ஜோஷி (கவர்ன்மெண்டு திரான்ஸ்லேட்டர்)—நான் கூறியபடி டினுஷன் என்பதற்கு உலகம் என்ற மொழிபெயர்ப்பொன்று தவிர மற்றவை யாவும் சரியே. அஸாஸினேஷன் (கொலைபாதகம்) என்ற மொழிபெயர்ப்பும் சரியே.

பிரான்ஸன்—பூனா சுதேசிப்பத்திரிகை வகுப்புகளில் கேசரி ஒன்றென்றீரே; அது தலை பேப்பரா?

ஜோஷி—ஆம்.

பிரான்ஸன்—அது யாருடையது?

ஜோஷி—அமிதவாதி (எக்ஸ்ட்ரீமிஸ்ட்) அல்லது ஜாதியவாதி (நாஷனலிஸ்ட்) யென்ற கக்ஷிக்கு.

பிரான்ஸன்—அப்பத்திரிகாசிரியர் யார்?

ஜோஷி—குற்றவாளியே.

பிரான்ஸன்—அதற்குடையவர் யார்?

ஜோஷி—குற்றவாளியே.

திலகர்—கேசரி பேப்பருக்கு எடிட்டரும், புரொப்ரைட்டரும், பப்ளிஷரும் நானே யென்பதோடு, இதில் வெளியாயிருக்கும் விஷயங்கள் யாவற்றுக்கும் நானே உத்திரவாதி யென்றும் ஒத்துக்கொள்வதில் தடைகிடையாது.

இன்ஸ்பெக்டர் ஸலிவன்—பூனாவுக்கு ஸொர்ச் வாரண்டு கொண்டுபோய்க் குற்றவாளியின் ஆபிசையும், அச்சுக்கூடத்தையும் இருப்பிடத்தையும் சோதித்துப் பார்க்கலாயிற்று. அச்சோதனையில் ஆஜராயிருந்த மற்றவர்களோடு டிஸ்ட்ரிக்டு சூபரிண்டெண்டு, டெப்டி சூபரிண்டெண்டு, அஸிஸ்டண்டு சூபரிண்டெண்டு மிருந்

தார்கள். மிஸ்டர் கேல்கா ருமிருந்தார். மிஸ்டர் திலக் காரின் மேஜையில் இக் கார்டும் கண்டெடுக்கப்பட்ட போது, அதில் மிஸ்டர் கேல்காரின் இனிஷியலும் வாங்கப்பட்டது.

மிஸ்டர் பிரான்ஸன்—இக்கார்டைத் தாக்கல் செய்கிறேன். இவ்விசாரணைக்கு சம்பந்தவிஷயமாயுள்ளதால், இதை சாக்ஷியமா யெடுத்துக்கொள்ளலாம். கோர்ட்டார் எடுத்துக்கொள்வதாய்த் தீர்மானிக்குமட்டும் கார்டின் சங்கதியை வெளியிட மாட்டேன்.

ஜட்ஜி—இக்கேஸுக்கு சம்பந்தப்பட்டதல்லவோ? இதற்கென்ன சொல்லுவீர்?

திலகர்—என்மனையில் எடுத்ததானாலும், கேஸுக்கு சம்பந்தப் பட்டதென்றால் எடுத்துக்கொள்ளலாம்.

ஜட்ஜி—மிஸ்டர் வாரண்டு லகப்பட்டதால், கார்டை யெடுத்துக்கொள்ள வேண்டியதாய் விட்டதே.

மிஸ்டர் பிரான்ஸன் கார்டை வாசித்ததில் சில வெடிமருந்துப் புத்தகங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டிருந்ததாய்த் தெரியப்பட்டது.

ஸலிவன்—மற்ற பேப்பர்களோடு கார்டிருந்த பெட்டி திறந்தே கிடந்தது.

ஜட்ஜி—திலகரின் ஸொலிஸிட்டர் டிபன்ஸுக்குத் தேவையான புஸ்தகங்களைத் தெரிவித்தால் அனுப்பி விடலாகும்.

## மூன்றாம் நாள் (15—7—08) விசாரணை.

திலகர் கோர்ட்டில் வந்திருக்கும் பேப்பர்களைப் பார்க்கக்கேட்டதற்குக் கோர்ட்டார் ஒப்புக்கொண்டார்கள். அப்படியே பேப்பர்கள் பார்க்கப் பட்டதின்பேரில், எல்லாப் பேப்பர்களும் இல்லையென்று சொல்லிக்கொண்டார். பேப்பர் தன்னுள்ளடங்கிய கவிரா

ன்று மாத்திரம் சீப் மாஜிஸ்ட்ரேட்டிடம் தங்கிவிட்டதாக சொல்லப்பட்டதின் பேரில் ஒரு கிளார்க்கைப் போலீஸ் கோர்ட்டுக் கனுப்பிவைக்க லாயிற்று.

ஸலிவன்—பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் வாரண்டில் பூனா டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் எண்டார்ஸ் செய்தபோது சிங்காரமாளிகையைக் குறித்தார்

திலகர்—வாரண்டிங்கே யிருக்கிறதா?

ஸலிவன்—பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டிடம் போய்விட்டது.

திலகர்—பிரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் இக்கோர்ட்டுக்கனுப்பிய மிஸலேனியஸ் பேப்பர்களி லிருக்குமா?

அட்வோகேட் ஜெனரல்—பிரபூ, பேப்பர்களை வாங்கிக்கொண்டு சீப்போன மாஜிஸ்ட்ரேட் கிளார்க்கிடமே யிருக்கிறது.

கோர்ட்டார்—இங்கு வாரண்டில்லையே.

திலகர்—அதைக் கொண்டுவரும்படிச் சொல்லிக் கொள்கிறேன்.

கோர்ட்டார்—நல்லது, எதற்காகத் தேவையோ?

திலகர்—சோதனை யெவ்வாறு நடந்ததென்று தெரிந்துகொள்ளத்தான். இருக்கட்டும்; சிங்கார மாளிகைக்கு எங்கள் மனுஷரை எவரையும் அழைத்துக்கொண்டு போகவில்லையே?

ஸலிவன்—இல்லை; அங்கே வாச்மேனிருந்தான்.

திலகர்—கதவை நீங்கள் திறந்தீர்களா, வாச்மேன் திறந்து உங்களை விட்டானா?

ஸலிவன்—வாச்மேன் தான்.

திலகர்—சாவியில்லாத வேலைக்காரனின் அநுமதியில்லாமலே நீங்கள் பூட்டிய அலமாரிகளை உடைத்தீர்களோ?

ஸலிவன்—அவன் தடைசெய்ததில்லை; இரண்டலமாரிகளை யுடைத்தோம்.

திலகர்—சிங்காரமாளிகைக்குப்போவதாய் எனது பூனாமனுஷாளிடம் தெரிவித்தீர்களா?

ஸலிவன்—எனக்கவசியமில்லை.

திலகர்—சிங்காரமாளிகையில் என்னகிடைத்தது?

ஸலிவன்—ஒன்றுமில்லை.

திலகர்—பூட்டுகளை அப்படியே விட்டுவந்தீர்களா, அல்லது புதிதாய் வாங்கிப் போட்டீர்களா?

ஸலிவன்—நான் போடவில்லை. அப்படிச்செண்ணமிருந்தாலும், அங்கே வாங்கக் கடையுங் கிடையாதே. பூட்டுகளை யுடைக்காமலே கீல்கள் தளர்த்தப்பட்டன.

திலகர்—அதை மறுபடியும் சரிப்படுத்திவைக்கவில்லை?

ஸலிவன்—இல்லை.

இப்போது சிவ் மாஜிஸ்ட்ரேட்டிடம் குற்றவாளி கொடுத்த ஸ்டேட்மெண்டை அட்வோகேட் ஜெனரல் எடுத்துவைத்தார்.

ஜட்ஜி—இப்போது குற்றவாளியை விசாரிக்கலாமாயினும் ஒன்றுங்கேட்கவில்லை. எதிருக்தமாயேற்பட்டுள்ள சாக்ஷிய சம்பந்தமாய்க் குற்றவாளி ஸ்டேட்மெண்டேதாவது கொடுத்துக்கொள்ளலாம். சாக்ஷியமேதாவது குற்றவாளி கோரிக்கொண்டால், அட்வோகேட் ஜெனராலுக்கு ரிப்ளை ரைட் (பதில் கூறும் சுதந்திரம்) கொடுக்கப்படும். சாக்ஷியமேதும் கோராவிட்டால் இப்போதே ஜூரிக்கு ஸ்டேட்மெண்டு கொடுக்கலாம்.

திலகர்—எனக்கின்னு மெட்டாத பேப்பர்கள் வேண்டுமே.

கோர்ட்டார்—போஸ்ட்கார்டு தவிர வேறெந்த பேப்பரையும் பிராசிகூஷனர் எடுத்துக்கொள்ளவில் லையே.

திலகர்—போஸ்ட்கார்டு வைக்கப்பட் டிருக்கிறதி னல், இன்னும் சில பேப்பர்களைப்பார்க்காமல் அதைப் பற்றி ஒன்றும் சொல்லக் கூடாமையா யிருக்கிறது.

அட்வோக்கேட் ஜெனரல்—சில பேப்பர்கள் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கைவிட்டுப் போய்விட்ட தாகக் கோர்ட்டார் அறியும்படிக் குற்றவாளி கூறுகி ருர்.

கோர்ட்டார்—லிஸ்டி லடங்கிய பேப்பர்கள் இங் கில்லையோ?

அட்வோக்கேட் ஜெனரல்—அப்படிதான்.

கோர்ட்டார்—அப்படி சேர்ந்திருக்கக் கூடாமை.

அட்வோக்கேட் ஜெனரல்—மாஜிஸ்ட்ரேட் வசம் இருந்தனவையே. எங்களுக்கு அதைப் பற்றி யேதும் இல்லை. எதிரிகளுக்குத் தேவையான பேப்பர்களின்னவை யென்று நோட்டீஸ் கொடுக்கவுமில்லை.

கோர்ட்டார்—போலீசார் தவினையக்கொண்டுள்ள பிராசிகூஷனர் பேப்பர்கள் இங்கிருக்கும்படிப் பார்த் திருக்கவேண்டும். ஸேர்ச் பேப்பர்கள்யாவும் அவசிய மானவை யென்று மார்ஜிஸ்ட்ரேட்டுக்கு சொல்லியிருந் தால் தவறியிருக்கமாட்டாது.

அட்வோக்கேட் ஜெனரல்—அப்படி யிருக்கலாம் பிரபோ; நானேதும் விவாதிக்கவில்லை. ஆனல் திலகர் வக்கீயார் இன்ன பேப்பர்கள்தேவையென்று நமக்குத் தெரிவிக்கலாமே.

திலகர்—இங்கு கொண்டுவந்த பேப்பர்கள் ஆபீசிலிருந்து எடுக்கப்பட்டவை; பூனா மாளிகையிலிருந்து எடுக்கப்பட்ட ஒன்றாவது இங்கில்லை.

கோர்ட்டார்—திலகர் ஸ்டேட்மெண்டு கொடுக்கலாமே.

திலகர்—நான் வைக்கவேண்டிய சில பேப்பர்கள் உள்ளன. மற்ற கக்ஷிக்காரர் பின்னை ஸைட் கொடுக்கிறதாயிருந்தாலும், அவ்வாறே செய்யத் தீர்மானித்திருக்கிறோம்.

கோர்ட்டார்—முற்றிலும் தீர்மானித்து விட்டீர்களோ?

திலகர்—ஆம்; தீர்மானித்துக் கொண்டோம்.

கோர்ட்டார்—நல்லது; ஸ்டேட்மெண்டைக் கூறியாருமட்டும் ஒன்றும் நடவாது.

பிறகு கொஞ்சநேரத்தில் எஸ்பிளனேட் கோர்ட்டிலிருந்து பேப்பர்கள் வந்துவிட்டன. திலகர், கிரௌனுபீசர், மிஸ்டர் ஸலிவன் இம்மூவரும் பஞ்சநாமா பிரகாரம் அவற்றை ஒத்துப்பார்த்துக் கொண்டானதும் திலகர் திரும்பிவந்து ஆபீசு பேப்பர்கள் மாத்திரம் இருக்கிறதே யொழிய வீட்டிலிருந்தெடுத்த லெட்டர்கள், பேப்பர்கள், தந்திகளிவை யில்லையே யென்று ஜட்ஜிடம் சொல்லிக்கொண்டதற்கு, தவறிய பேப்பர்கள் பஞ்சநாமாவில் அடங்கி யிருக்கின்றன வென்று பதில் சொல்லிக் கோர்ட்டாரிடம் லிஸ்டைக் கொடுத்தார்கள்.

கோர்ட்டார் — மாஜிஸ்ட்ரேட் கிளார்க்கு வசம் பேப்பர்க ளிருக்கவேயன்றிக் கிரௌன் சார்ஜுக்கு வரவில்லை. கிரௌனுபீசர் போகக் கூடாதென்று சொல்லியிருந்தும், மாஜிஸ்ட்ரேட் கிளார்க்கு போய்விட்டார்.

அட்வோக்கேட் ஜெனரல்—என்ன அவசியமாய்ப் பேப்பர்கள் தேவை யென்பதை எதிர்கள் உறுதிப்பா டாய்த் தெரிவிக்க வேண்டும்.

கோர்ட்டார்—குற்றவாளி இங்கில்லாத பேப்பர் களை ஸ்டேட்மெண்டுக்கு அவசியமென்று சொல்லி யிருக்கிறாரே.

அட்வோக்கேட் ஜெனரல்—இப்பிரஸ்தாபம் ஆத ரிக்கப்படுவதை யினிக்காண்பது வேடிக்கையாகும்.

திலகர்—பிரஸ்தாபமேதும் செய்ததில்லையே.

கோர்ட்டார்—அந்த பேப்பர்கள் கிடைக்குமட் டும் நீர் ஸ்டேட்மெண்டு கொடுக்கமாட்டேனென்கிறீர்?

திலகர்—இது சாட்டுப்பேச்சாகாது; இன்னும் பேப்பர்களைக் காணோமே.

அட்வோக்கேட் ஜெனரல்—அவை குற்றவாளியின் சொந்த பேப்பர்களே.

இன்ஸ்பெக்டர் ஸலிவன் பஞ்சநாமாவையும் வா ரண்டுகளையும் தாக்கல் செய்துவிட்டார்.

கோர்ட்டார்—காணாமற்போன பேப்பர்கள் கிடை த்துவிட்டனவோ?

பிரான்ஸன்—எல்லாப் பேப்பர்களும் சேர்ந்து சேர்ந்துவிட்டதாகக் குறித்துக்கொள்ளவேண்டும் பிர போ.

திலகர் — எல்லாப் பேப்பர்களையும் பார்வையிட் டேன்.

ஸலிவன்—டிராயர்களில் வெகு அஸ்தலிகிதங்க ளும் பேப்பர் துண்டுகளும் கிடைத்தன. பூனாவுக்குப் போகும்போது டிஸ்ட்ரிக்டு மாஜிஸ்ட்ரேட் வீட்டிலில் லாமையால் ஸிட்டி மாஜிஸ்ட்ரேட்டு ஜூன் மீ 24உ

பாலை ஸெர்ச் வாரண்டில் எண்டாரிசு செய்தார்; மறு நாள் காலை சோதிக்கப்போனேனும்.

திலகர்—இரவு 2 மணிக்கோ?

ஸலிவன்—விடிந்த பிறகே சோதனை பகல் 10-மணிக்குள் முடிந்தது. பிற்பகலில் டிஸ்ட்ரிக்டு ஸூப்ரின்டோடு மற்றொரு ஸெர்ச்சுக்குப் போனேனும்.

இடையுண்டி நேரமாய்க் கோர்ட்டு கலைந்து வந்து கூடியதும் ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்யப்பட்டது.

அட்வோக்கேட் ஜெனரல்—இதை ஆக்ஷேபிக்கிறேன். ஸ்டேட்மெண்டோடு 72 பேப்பர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் எங்கெங்கோ யாராரோ கூறிய விஷயங்களையெல்லாம் இழுத்து டிபன்ஸை நீட்டிக்கொண்டிருக்கவிடக்கூடாது.

கோர்ட்டார்—மிஸ்டர் திலகர் நடத்திவருவதில் அளவுக்கு மிஞ்சினால் நிறுத்திவிடலாம்.

திலகர்—அட்வோக்கேட் ஜெனரலுக்கு ரிப்ளை ரைட்டுள்ளதா?

கோர்ட்டார்—சாக்ஷிய பேப்பர்கள் தாக்கல் செய்ததில் நேற்றும் இன்றும் எச்சரித்திருக்கிறேன். மிஸ்டர் ஜஸ்டிஸ்பாட்டி (Batty)யின் தீர்மானப்படிக் குற்றவாளிக்கு ரிப்ளைரைட் போய்விட்டது.

திலகர்—கல்கட்டா ரூலிங் ஒன்றைக் குறித்துக் காட்டினார்.

கோர்ட்டார்—குற்றவாளிக்காகப்பேப்பர்கள் தாக்கல் செய்திருப்பதினாலேயே அட்வோக்கேட் ஜெனரல் பேச்சே முடிவானதாகும்.

## திலகர் ஸ்டேட்மெண்டு.

(15—7—08)

கேசரி யெடிட்டராயிருக்கும் வகையில் பியூரோக்ரஸி (ராஜ்ய நிர்வாக அதிகாரம்) என்பதற்கு கோரா அதிகாரி வர்க்கமென்றும், இங்கிராஜி வர்க்கமென்றும், ராஜகர்த்த வர்க்கமென்றும், டெஸ்பாட்டிக் (கொடுங்கோலான) என்பதற்கு புலாமியெனவும், பானட்டிக் (பித்தேறிய) என்பதற்கு மதேபிரு எனவும், ஸ்பிரிட் என்பதற்குத் தேஜாஎனவும், என்தூஸியஸிம் (அவா மேலீடு) என்பதற்கு ஆவேசமெனவும், இண்டிபென்டென்ஸ் பீலிங் (மிக்குணர்ச்சி) என்பதற்கு தவேஷ மெனவும், வுண்டெட் ஸெல்ப் ரெஸ்பெக்ட் அல்லது ஸென்ஸ் ஆவ் ஆனர் (கௌரவக்குறைவு) என்பதற்கு சைடா எனவும், ஆப் ஸொல்யூட் (சுயேச்சையான) என்பதற்கு அகாமுகியெனவும், அன்கன்ட்ரோல்ட் (அடக்கமுடியாத) அநியாத்திரீயா எனவும், பாஸிவ்ரெஸிஸ்டென்ஸ் (எதிர்ப்படாதெதிர்த்தல்) என்பதற்கு அத்வாறு இச்சமார்க்கமெனவும், ஈவில் ஜீனியஸ் (கெட்ட அசரீரி) என்பதற்கு பூதமெனவும், பாலன் பிரம் அப்ஸெர்வன்ஸஸ் (Fallen from observances - விரதந்தலறிய) என்பதற்கு வரதாப்ரஷ்டா எனவும், ஜட்ஜ்மெண்ட் எரர் (நிர்மானத்தவறு) என்பதற்கு புத்திபிரம்மமெனவும், பெலோனியஸ் (பாதகமான) என்பதற்கு அதாதாயீ எனவும், ஸ்டெரன் (கடுமையான) என்பதற்குக்கோடாவியெனவும், மான்லிநெஸ் (ஆண்மை) என்பதற்குப் பௌருஷமெனவும், டிஸெண்ட்ராலிஸேஷன் (கீழதிகாரவலிமை) என்பதற்கு பிரதகாவதானி யெனவும் மராத்தியில் பிரயோகித்திருக்கிறேன்.

தற்காலம் இந்தியாவில் தேவையான ராஜரீகத்திருத்தங்களைப்பற்றிய என் கருத்தாவது டிஸென்டிராலிஸேஷன் கமிஷன் முன்பாக சென்ற மார்ச்சுமாசத்தில் வெளியிட்டுள்ளபடி வருமாறு—"அதிகார வல்லமை

இருப்பதை ஓர் உத்யோகஸ்தரிடமிருந்து மற்றோர் உத்யோகஸ்தரிடத்துக்கு மாற்றிவிடுவதினாலேயே முன்னிருந்த மாதிரி உத்தியோகஸ்தர்களுக்கும் ஜனங்களுக்கும் இடையே ஒற்றுணர்ச்சியைக்கொண்டு வந்துவிடலாமென்று நானபிப்பிராயப்படவில்லை. ஆங்கிலக்கல்வியானது ஜனங்களுக்குள்ளே புதிய எண்ணங்களை உண்டுபண்ணியிருக்கிறது. இந்த ஜாதீய உணர்ச்சிகள் அதிருப்திகரமாய் உள்ள மட்டிலும், உத்தியோகஸ்தர்களுக்கும் ஜனங்களுக்கும் இடையே உள்ள உடைப்பானது மற்ற பலன்கள் எதுவாயிருந்தாலும் கிழதிகார முறையில் எந்த ஏற்பாட்டினாலும் ஒழிந்துபோகக்கூடியதாய் எதிர்பார்ப்பதில் பிரயோசனமில்லை. முறையிடும் கெடுதியை மெதுவுபடுத்தும் பரிகாரமுமாகாது; ஜனங்களாவது ஜனத்தலைவர்களாவது அப்பரிகாரத்தைக் கோரியதுமில்லை. கிழதிகார வலியலையானது ராஜ்ய நிர்வாக அதிகார நபர்வாரியாய் அதிகமாகவோ கொஞ்சமாகவோ உயிர்ப்பூட்டலாம்; ஆனால் ஆளும் நாடாகும் அளவுக்கு இந்தியாவை உயர்த்துவதில் கண்ணாய் எக்காலும் விரிந்துவரும் அறிவான தாராள சிந்தை (Liberal Spirit) யிலும், அகன்ற அன்பிலும் தங்கள் சொந்த காரியங்களை நடத்திக்கொண்டு போவதில் ஜனங்கள் இன்னுமின்னும் செல்வாக்கடைந்து வரவிடப்படாவிட்டால் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடையே வளர்ந்துவரும் இடைஞ்சலை அது போக்கடிக்க முடியாது.”

சார்ஜ் விஷயங்கள் மேற்கூறிய நோக்கங்களை ஆதரிக்கவும், காப்பாற்றிக்கொள்ளவும் நான் முயற்சிசெய்த விவாதாம்சங்களாயிருக்கின்றன. கார்டு விஷயமாய் நான் சொல்லிக்கொள்வதாவது வெடிகுண்டுச்சட்டம் செய்த பிறகு அதையும், முக்கியமாய் அதிலுள்ள வெடிகுண்டின் விளக்கத்தையும் கண்டிக்கவேண்டியதற்காக விஷய சேகரஞ்செய்தலவசியமாய்ப் பூனா, பம்பாய் புஸ்தகசாலைகளிலும் அக்கார்டில் குறித்திருந்த இரண்டு

புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் அவைகளுக்கெழுதி வரவழைக்கும் நோக்கமாய், என் புஸ்தகசாலையிலுள்ள ஒரு கேட்லாகிலிருந்து எடுத்தெழுதி வைத்தேன்.

ஆன்மீ 9வ விஷயம் பாம்பு (Bombs)களின் சம்பவங்களை நிறுத்துவதில் கொடிய ஏற்பாடுகளின் பிரயோசனமின்மையை எடுத்துக் காட்டியதாகும். இதோடு சேர்த்துக்கொடுத்திருக்கும் பேப்பர்களின்படிச்சார்ஜ் விஷயங்கள் என்று யோக்கியமான எண்ணங்களையும் கருத்துகளையும் கொண்டிருக்கின்றன; ஆகவே என்பேரில் எக்குற்றமும் ஏற்படவில்லையாகையால், என்னை விடுக்கும்படிப் பிரார்த்திக்கிறேன்.

---

# திலகரின் ஜூரி அட்ரெஸ்.

பிரபோ, ஜூரி கனவான்களே—அட்வோகேட் ஜெனரலினால் வலுவாயும், திறமாயும் உங்கள் முன்பாகக் கிரௌன் கேஸானது காண்பிக்கப்பட்டது. அவ்வளவு வலுவையும் திறமையையும் காட்ட எனக்குக் கூடாமையாலும், உங்களுக்கு என்னாலானமட்டில் நேராய் விவரிப்பதில் திருப்தியா யேற்படலாமென்ற கோரிக்கையோடு என் கேஸைக்காட்டிக் கொள்ளப் போகிறேன். பிராஸிகூஷன் கேஸோ மிக்க திறமாயும் பூர்த்தியாயும் உங்களுக் கெடுத்துக்காட்டப் பட்டதாயினும் சார்ஜோ குறிப்பற்றதா யிருக்கிறது; ஆர்ட்டிக்கில் (விஷயம்) முழுமையாயெடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதினால், அதன் ஒவ்வொரு பகுதியையும் குறிக்கும் பொறுப்பு என்மேல் விழுந்திருக்கிறது. பிராஸிகூஷன் எடுத்துக்கொண்ட பகுதிகள் இன்னவையென்று எனக்குக் குறிப்பாய்த் தெரியவில்லை. கற்றறிந்த கிரௌன் லாயரின் ஆரம்பப்பேச்சு சில குறிப்புகளை மட்டும் கொண்டிருந்தது; ஆகவே, அட்வோகேட் ஜெனரல் இன்ன விஷயப்பகுதிகளைக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறாரென்று எனக்குத் தெரியவில்லை. இதன் மொத்த பயனாவது நான் அதிகவிஸ்தாரமாக விவகரிக்கவேண்டியதாய் உத்தேசத்தைப்பற்றி வெகுநேரம் உங்களை நிறுத்திவைக்கலாம். நான் இக் கோர்ட்டில் பழகிவரும் பாரிஸ்டரல்ல; ஆகவே என்பேச்சு அவ்வளவு விவகாரமாயிராமையோடு, லாகோர்ட்டில் வெகுகாலம் பழகிக்கொண்டிருக்கும் லாயரிடம் நீங்கள் எதிர்பார்க்கக்கூடியபடி முடிவுபடையாது; ஆகையினாலே முக்கியமாய்க் கிரிமினல் விஷயங்களில் தங்கள் கேஸைவாதிக்கும்படிக் கக்ஷிகாரருக்கு வழக்கமாய்க் காண்பிக்கலாகும் தயவை நீங்களெனக்குக் காட்டுவீர்களென்று கேட்டுக்கொள்கி

றேன். பிராசிகூஷன் கேஸாவது—சிலவிஷயங்கள் எடுத்துவைக்கப்பட்டு உங்களுக்குப் படிக்கப்பட்டது; அவ்விஷயங்களின் வார்த்தைகளினின்று வருவது போலவும், ஒருவன் தன் நடக்கைகளின் இயற்கையான பயன்களைக் கருதுவதாகும் பிரமாணப்படி நடப்பது போலும் என்பேரில் தீர்ப்புசொல்ல சில முடிவுகளைக் கொள்ளும்படிக் கேட்கப்பட்டிருக்கிறீர்கள். டிபென் (ராஜ தூஷணை) கேஸானது மூன்றம்சங்களாய்ப் பிரிகின்றது. முதலாவது விஷயப் பிரசுரமாகும்; இரண்டாவது சில தூஷணைப்போக்குகளும், கட்டுக்கூற்றுகளுமாகும்; மூன்றாவது எண்ணவகையாகும். பிரசுரத்தை நான் முன்னமே ஒப்புக்கொண்டிருக்கிறேன். இவ்விஷயங்களின் பிரசுரப் பொறுப்பைப் பூர்த்தியாய் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். அதில் நாம் பிரவேசிக்க வேண்டியதேயில்லை. தூஷணைப்போக்குகளும் கட்டுக் கூற்றுகளும் மராத்திய விஷயங்களின் மொழிபெயர்ப்புகளிலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை யென்பது அம்சங்களி லொன்றென்றும் பிரஸ்தாபிக்கலாம். அவை மொழி பெயர்க்கப்பட்டதில் உண்மையில்லாத மாதிரியிலும் அசலாயுமில்லை. இம்மொழி பெயர்ப்புகளில் விளைந்த தூஷணைப் போக்குகள் அபாயகரமானவையாகும். விஷயங்களன்றிப் பிராசிகூஷனார் காட்டிய எண்ணசாக்ஷியம் நாலு மாத்திரமே. எண்ணத்தை மெய்ப்பிக்க உங்கள் முன்பாக வைக்கப்பட்டிருக்கும் மற்ற நாலுவிஷயங்களின் மொழிபெயர்ப்புகளை விட்டு தாவாவிஷயங்க ளிரண்டின் மொழி பெயர்ப்புகளையே நீங்கள் அதிகமாய் நம்பவேண்டியிருக்கிறது; ஆகவே தூஷணையானவையா அல்லவாவென்று அசல்களையேகொண்டு நீங்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. விஷயமோ தோன்றி யிருப்பதுபோல அவ்வளவு எளிதாயில்லை யென்று நினைக்கிறேன். இக்கேஸில் எண்ணவிஷயம் முதன்மையானதாயிருக்கிறது. தாவா விஷயங்களை அசலாயுள்ளபடிப் படிப்பதினால் நான் குற்றவாளியென்றாவது இல்லை யென்றாவது நீங்

கள் தீர்மானிக்கக்கூடுமென்று காண்பிக்க விரும்புகிறேன். தப்புமொழி பெயர்ப்புகளைக் கொண்டு நீங்கள் கருதும் வார்த்தைகளின் போக்கானது உங்களபிப்பிராயத்தில் வெறுவாய் நீங்களறியாத ஒரு ஜாதியாரின் பகைமை அசட்டை புணர்ச்சிகளை உண்டாக்கிவிட்டதாய்க் கொள்ளாவதினால் அப்படித் தீர்மானிப்பது அசௌகரியமும் அபாயகரமுமாகின்றது. அது கொஞ்சம் இதைப் போலாகும்—இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்ட ஒரு பிரெஞ்ச் விஷயத்தைப்பற்றித் தீர்மானிக்க உட்காரவும், உங்கள் முன்பாக வைக்கப்பட்டிருக்கும் பிரெஞ்ச் விஷயங்களின் பலன்களைப் பற்றித் தீர்மானிக்கவும் கேட்டுக்கொள்ளப் பட்டவர்களானால், இங்கிலண்டிலேயுள்ள பிரான்சிய ஜனங்களுக்கு என்னவாயிருக்கும்? இது அவ்விதக் கேசாகும். இந்தவழியால் உண்டாகிய அசௌகரியத்தைப்பற்றிப் பின்னுமேல சொல்ல வேண்டியிருக்கிறது; ஆனால் (தாவா) விஷயம் மராத்தியிலெழுதப்பட்டு, மராத்திபேசுவோருக்கு சொல்லப் பட்டிருக்கிறதாயெடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. இவ்விஷயம் என்ன பலனை யளிக்குமென்றும், வார்த்தைகளின் போக்கென்னவென்றும், மராத்திபேசும் ஜனங்களின் மனதில் இவை என்ன பலன்களை யளிக்குமென்றும் நீங்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. கேசரி மராத்திபேசுவோரால் மட்டுமே வாசிக்கப்படுகிறது; அது இந்தியாவெங்கும் படிக்கப்பட்டதல்ல. வங்காளத்தில் இதன் விளைவுகளின்னவென்று நீங்கள் சொல்லவேண்டியிருக்கிறது. தாவா வார்த்தைகள் ஒரு விசேஷ அர்த்தத்தை உடையதாயும், வாக்கியங்கள் விசேஷ ஆக்ஷேபப் போக்குகளைக் கொண்டிருப்பதாயும் உள்ளது பற்றியே இவ்வார்த்தைகள் கேசரிவாசகர்களின் மனசுகளில் என்னவிளைவுகளைக் கொண்டிருக்கிறதென்று நீங்கள் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. (தாவா) விஷயங்கள் மட்டிலன்றி இதர சங்கதியாவது, சாக்ஷியப்பகுதியாவது உங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கவில்லை. ஸ்பாரிஸ்டின்பேரில் நானுங்களுக்கு

சொல்லும் பொது அம்சமாவது இது மிகவும் அசௌகரியமான விதமாயுள்ளதென்றாகும். உண்மையில் இவ்வொரு விஷயத்திலேயே ஒருவன் தன்நடவடிகளின் இயற்கையான விளைவுகளைக் கருதுவதாய்க் கொள்வதினால் முடிவுக்குவருவது சரியானதல்லவே. இங்கிலீஷ் ஜூரிகளுக்குமுன்பாக வந்த கேள்வியிது—100 வருஷங்களுக்கு முன் 1792-ல் பாக்ஸ் அவதூறு சட்டம் பாஸானதற்கு முன்னிட்டுமூன்றாவது ஜியார்ஜ்காலத்திலே ஒரு விவாதம் கிளம்பியது. அப்பிரமாணம் இப்போது மிகவும் பிரயோசன மற்றுப்போயிருக்கிறது. அது ஒழிந்துபோன கொள்கையாயுள்ளது. இப்போதைய இங்கிலீஷ் ஜூரிகள் (தாவா) விஷயத் தன்மையிலிருந்து மட்டுமல்ல, சுற்றியுள்ள சந்தர்ப்பங்க ளெல்லாவற்றிலுமிருந்தும் தங்கள் தீர்மானங்களைக் கொண்டுவருகிறார்கள். அந்த சுற்று சந்தர்ப்பங்களின்னவை யென்று நான் வைத்திருக்கும் பேப்பர்களிருந்து காட்டுவேன். அந்நாட்டில் ஜூரிகள் சார்ஜ்செய்யப்படுகிற வழியை அறிவீர்கள். சுற்று சந்தர்ப்பங்களை யெடுத்துக்கொள்ளுங்கள்; ஒரு முக்கிய மொழித்தொடரை யெடுத்துக்கொள்ளாதேயுங்கள்; ஒற்றைவாக்கியத்திலிருந்து தாற்பரியப்படாதேயுங்கள்; (முன் பின்) வாக்கிய சம்பந்தங்களை கவனியுங்கள். எப்போதும் ஒரு விஷயத்தைத வாசிப்பதினாலே ஒரு முடிவுக்கு வருவது அசௌகரியமாகும். இப்போதும் இங்கிலாண்டில் இப்பிரமாணமே அமுலிலுள்ளதுமன்றி, அங்கே பிரஸ் சுதந்திரப் பெருங்காப்பு முறையுமாகின்றது. இக்குள்ளலாவே அங்குமுள்ளது. தூஷணைக்காப்புள்ள மட்டில் இருநாடுகளிலும் ஒருவகையே. இங்கிலீஷ் லாவுக்கு இணக்கமாகலும் 10 வருஷத்துக்குமுன் 1898-ல் இங்கே லா கொஞ்சம் மாற்றப்பட்டது. இப்போதே (விருப்பமற்ற) வெறுப்பு (Disaffection) என்பதென்ன வென்ற கேள்வியில்லை; ஆனால் இந்த வித்தியாசமுள்ளது. இங்கிலாண்டிலும் லா இதே யாகவும், இங்கிலீஷ் ஜூரிகள் அதிக பவர்களைக் கொண்ட ஜட்ஜிகளின் இழப்புக்

செதிரிடையாகநின்று அவர்களோடு சண்டை போட்டு விஷய விவாதம் செய்து தங்கள் சுதந்திரத்தை வற்புறுத்திய பொது அறிவுக்கேற்ற தீர்மானத்தைத் தெரிவிக்கிறார்கள். இங்கிலாண்டு ஜூரியைப்போல இந்தியாவில் ஜூரிக்கு அதிகாரங்கள் இருக்கின்றனவா? இருந்தால் அவ்வதிகாரத்தை செலுத்தும்படிக்கும், இங்கிலீஷ் ஜூரி செய்வதுபோலவே உங்கள் முடிவைக்காட்டவும் உங்களைக்கேட்கிறேன். இதற்காக உங்களுக்கு முன்னமே வாசித்துக்காட்டப்பட்ட ஸெக்ஷன்களை முதலில் உங்களுக்குப் படித்துக்காட்டுவேன். அவையாவன— 124-A, 153-A ஸெக்ஷன்கள். இவை கற்றறிந்த அட்வோக்கேட் ஜெனரலால் உங்களுக்குப் படித்துக்காட்டப்பட்டனவாயினும், உங்களுக்கு நானே படித்துக்காட்டி என் வழியாய் அவற்றை யெடுத்துக்கூறுவேன். லா இன்னபடி யென்று முடிவாய் ஜட்ஜி சொல்லவேண்டியவர்; ஆனால் சங்கதியும் நியாயமும் கலந்துள்ள விஷயமிதாகவே, உங்களிடம் நான் பேசுவதில் நியாயத்தையும் சங்கதியையும் கலப்பதை விலக்கக் கூடாமையே.

124-A ஸெக்ஷனாவது—யாராவது பேச்சில் அல்லது எழுத்தில் கூறும் வார்த்தைகளினாலாவது, காணக்கூடிய குறிப்பினாலாவது மற்றபடியாவது பிரிட்டிஷ் இந்தியாவில சக்கிரவர்த்தி அல்லது லாப்படி நிலைபெற்ற துரைத்தனத்துக்குப் பகைமை அல்லது அசட்டையைக் கொண்டுவந்தால் அல்லது கொண்டுவாமுயன்றாலும், (விருப்பற்ற) வெறுப்பைத் தூண்டினால் அல்லது தூண்டமுயன்றாலும், ஜீவபரியந்தமாவது இன்னுங் குறைந்த காலத்துக்காவது அபராதத்தைக்கூட்டியும் தீபாந்திர சிக்ஷையாலாவது சிறைக்காவலாலாவது, அபராதத்தால்மட்டுமாவது தண்டிக்கப் படவேண்டும்— என்பதாகும். என் பேரில் கொண்டுவரப்பட்ட சார்ஜுகள் 124-A, 153-A ஸெக்ஷன்களின்படி யாகின்றன. 124-A ஸெக்ஷன்படிக்கே யிரண்டு சார்ஜுள்ள

தால் அதை முதலெடுத்துக் கொள்கிறேன். அதற்கு 3 விவரணங்களிருக்கின்றன; ஆனால் அதைப்பற்றிப் பிறகே பேசுவோம். 124-A ஸெக்ஷனை நீங்கள் பரீக்ஷிப்பீர்களானால், அது இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். முதலாவது — யாராவது பேச்சில் அல்லது எழுத்தில் கூறும் வார்த்தைகளால் சக்கரவர்த்தியின் துரைத்தனத்தைப் பகைமை அல்லது அசட்டைக்குக் கொண்டுவருவதினால் ஸெக்ஷன்படிக் கண்டிக்கப்பட வேண்டியவனாகிறான். விளைந்த பலன்களின்றி எண்ணத்தைப் பற்றி யேதுங்கிடையாது. எழுத்தினால் பகைமை அல்லது அசட்டைவிளைந்திருக்குமானால் எண்ண சாக்ஷியம் அநாவசியமே. இது முதற்பகுதியாகும். ஆனால் அப்பகுதியைப்பற்றிப் பிராசிகூஷன் நடவடி யேதும் இல்லாமையாக எனக்குத் தோற்றுகிறது. விளைந்த பலன்களின் சாக்ஷியமேதும் உங்கள் முன்பாயில்லை. தாவா விஷயங்களால் ஆவேசமேதும் விளைந்ததாயில்லை; ஆகவே என் கேஸ் அம்முதற் பகுதிக்கெட்டவில்லை. (தாவா)விஷயங்களினாலே ஆவேசங்கிளம்பியதாகக் காட்ட அதமசாக்ஷியமுள்ளதானாலும் சங்கதி வேறாய் விடும். இக்காரணங்கொண்டு தான் சார்ஜ் ஸ்பஷ்டமாயிருக்கவேண்டுமென்று கேட்டேன். முழுஸெக்ஷனும் வைக்கப்பட்டிருக்கிறபடி வெறுப்பு அல்லது அசட்டைக்கு முயன்றதாகவா, அல்லது அதை உண்டு பண்ணினதாகவா என்பேரில் சார்ஜ் என்று அவர்கள் (பிராசிகூஷனார்) சொல்வில்லையே. இன்ன முக்கிய சார்ஜ் சுமத்தப்பட்டதென்றால் மிக நன்றாயிருக்குமே. ஒரு மாற்றுச் சார்ஜ் இருக்கிறது; ஆகவே இந்த ஸெக்ஷன முதற் பகுதியைக் குறிக்கவேண்டியிருக்கிறது. அம்முதற் பகுதியேற்றதாயில்லாமை தெளிவாய் இக்கேசுக்கே உதவாததாகக் கொள்ளப்பட்டிருந்தாலும், சார்ஜ் இருபகுதிகளுக்குமா யேற்பட்டிருக்கிறது. நல்லது, மாஜிஸ்ட்ரேட் அப்படி சார்ஜ் ஏற்படுத்தியிருக்கிறார். இரண்டாம் பகுதியாவது வெறுப்பைத் தூண்ட முயல்வதாகும். ஜஸ்டிஸ் மிஸ்டர் பட்டி

(Batty) "பாலர்" கேவில் வெறுப்பு (Disaffection) என்பதைப்பற்றி விவரித்திருப்பதைக் காண்கிறோம். அதன்படி விருப்பின்மை யாகாமல், கட்டுப்பாட்டி (Allegiance) லிருந்து மாறுகோள் (Defection) வித்தியாசப் பட்டுள்ளதுபோல உறுதிப்பாடான உணர்ச்சியேயன்றி யெதிர்மறை யுணர்ச்சியாகமாட்டாது. விவரணத்தை உங்களுக்கு இப்போது வாசித்துக்காட்டுகிறேன். முதலாவது—வெறுப்பென்பதில் அராஜ விசுவாச (Disloyalty) மும், விரோதவுணர்ச்சிகள் யாவும் அடங்கியுள்ளன என்பதாகவே, யாராவது அராஜ விசுவாசத்தைத் தூண்டப்பார்த்தால் அல்லது கவர்ன்மெண்டைப் பகைமை அல்லது அசட்டைக்குக்கொண்டுவரப்பார்த்தால் செக்ஷனின் பிற்பாகுதியின்படி தண்டிக்கப்படவேண்டியவனாகிறான். "கொண்டுவரப் பார்க்கிறது" என்றபிரயோகத்தில் பார்க்கிறது (Attempt) என்னும் லாமொழியின் அர்த்தம் இன்னதென்றறியவேண்டும். அது வெறுப்பை அல்லது அராஜ விசுவாசத்தைத் தூண்டுவது மட்டிலுமல்ல; தூண்டப்பார்ப்பதும் என்பதினால் முன்யோசனைக்கும் இடமாகிறது. பாலர்கேவில் ஜஸ்டிஸ் பட்டி சார்ஜ் பம்பாய் ரிப்போர்ட்டிலாயிருக்கிறபடி வாசிக்கிறேன்.

முயற்சி (பார்த்தல்) என்பதற்கு அர்த்தம் அதுவாகும். முயற்சியோ நிறைவேறினால் மட்டுமே குற்றமேயாய்விடும்; அது தவறிவிட்டபோது, எத்தனம் என்றமட்டில் நிற்கும். விசேஷ சந்தர்ப்பங்களில் தவறுதலாவ தொழிய, மற்றப்படி அதைக் குற்றமாக்குவதற்குத் தேவையான ஒவ்வொரு விஷயமும் இருக்கவேண்டுமே. இவ்வெத்தனத்தில் நான் தவறிப்போனது என் சக்திக்கு மிஞ்சிய சந்தர்ப்பங்களினாலென்று காட்டப்படவேண்டும். இப்போது இப்பேர்ப்பட்ட சாக்ஷியமேனும் உங்கள் முன்பாக வைக்கப்படவில்லை. ஒருவிஷயப் பிரகாரமட்டுமே, முயற்சியென்பது

அப்படி விவரிக்கப்பட்டிருக்கிறபோது, எத்தனமாகமாட்டாது. எத்தனமென்பது ஒருவன் எதையோ செய்யக் கருதுவதென்றே பொருள்படுகிறது. அவன் மனதில் செய்கை யேற்பட்டிருக்கவேண்டும். ஜஸ்டிஸ் ஸ்டீபன்ஸ் இங்கிலீஷ் கிரிமினல் லாவில் இதுசொல்லப்பட்டிருக்கிறது. இதே சங்கதி மெயின் கிரிமினல் லாவிலும் விவகரிக்கப்பட்டிருக்கிறது. எண்ணமட்டிலும் அல்லது தயார்மட்டிலும் இந்த ஸெக்ஷன்படி தண்டனைக்குரியதாகாது. இந்த ஸெக்ஷனில் ஒருவன் சில தயார்களை செய்கிறான்; அவன் சக்திக்கு மிஞ்சிய காரணங்களினால் அத்தயார்கள் தவறிவிடுமானால், மற்றபடிக்கின்றி அது எத்தனமாகிறது. இங்கே எடுத்துக்காட்டும் உதாரணங்கள் மிக விநோதமாயிருக்கின்றன; (மெயின் லாவிலிருந்து) சிலவற்றை உங்களுக்குப் படித்துக் காட்டுவேன். உன் சக்திக்கு மிஞ்சி அல்லது உன் இஷ்டத்துக்கு விரோதமாய் எதுவாலேயோ நிறைவேறாமல் தடைபடுமட்டில் உன் தயார் அல்லது போக்கை நடத்திக்கொண்டிருக்கவேண்டும். லா விவரமோ இன்னும் கொஞ்சம் அதிகதூரம் போகிறது. கத்தியோடு மற்றொருவனைத் தொடர்ந்தோடும் ஒருவன் கேசும் எடுத்துககாட்டப் பட்டிருக்கிறது. மற்றவனை சமீபித்திருந்தாலும், அவனுக்குக் கொலை யோசனையிருந்ததாகசொல்லக்கூடாமை. மற்றோர் உதாரணமாக வங்காள ரிப்போர்ட்டில் பின்னும் விநோதமான ஒரு கிரிமினல் அப்பீல் கேசும் உள்ளதில், எத்தனம் என்னும் பதத்துக்கு விவரம் கூறியுள்ளதைக் காணலாம். அக்கேசில் எத்தனம் என்னும் பதம் சாதாரணமாகவே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. ஜஸ்டிஸ் மித்தர் அது எத்தனமாகவில்லையென்றுசரியாய்சொல்லியிருக்கிறார். அவனைப் பினல்கோடின் மற்றெந்த ஸெக்ஷன் படிக்கும் தண்டிக்கலாம். வெறுப்பைத் தாண்டும் எந்த முயற்சியாவது அது செய்யப்பட்டிருக்கவேண்டுமென்று நீங்கள் மதிக்கவேண்டிய மட்டில் கொண்டுபோகப்பட்டிருக்கவேண்டும். இங்கே நடவடியோ பிர

சுரமட்டிலு மாகையால் நீங்கள் நடத்தக் கேட்கப்பட்டிருக்கிற நடவடி தப்பானது. எண்ணத்தைகாட்டவே பிரசுரம் செய்யப்பட்டதென்பதும் தப்புக்கூற்றென்று கூறுகிறேன். இக்கேசில் பிரசுரசங்கதியால் மட்டுமல்ல; கக்ஷிக்காரன் வெறுப்பைத்தூண்ட உண்மையிற் கருதியதாய்க் காட்டும்படியான எதோ ஒன்றைக்கொண்டு எண்ணத்தை மெய்ப்பிக்கவேண்டும். விஷயம் உங்கள் முன்பாக இருக்கிறது. கிரௌன்கிளர்க்கு உங்களுக்குப் படித்துக் காட்டினார். இப்போது அவ்வார்த்தைகள் எண்ணத்தைக் குறித்த தென்பது பிரமாணமானால் கிரௌன் கிளர்க் அப் பேப்பரை வாசித்ததினாலும் ராஜதூஷணைக் குற்றவாளியாக வேண்டும். இந்தியாவில் ஒவ்வொரு நியூஸ்பேப்பரிலும் இவ்விஷயம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதினால், இந்தியாவில் ஒவ்வொரு நியூஸ் பேப்பரும் இவ்விஷயத்தைப் பிரசுரித்திருப்பதற்காக ராஜதூஷணைக் குற்றமுள்ளதாகுமா? ஏனெனில், பிரசுரமே எண்ணத்தைக் காட்டிவிடுகிறதே! இல்லை என்னனில், ஜனங்களுக்கு சங்கதி தெரிவிக்கும்படிப் பிரசுரம் செய்யப்பட்டது. செய்கையோடு எண்ணத்தையும் எடுத்துக்கொள்வதிலும், குறித்த எண்ணங்கொண்ட செய்கை ஏதாவது உங்களுக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். லார்ட் காக்பர்ன் ராஜதூஷணை லாவானது முன்பின் வாக்கியசம்பந்தம் எதுவாயிருந்தாலும், சுற்று சந்தர்ப்பங்கள் எதுவாயிருந்தாலும் ஒரு விஷயம் பிரசுரமானது குற்றமாகமாட்டாது என்று கூறியிருக்கிறது.

ஜூரி தாவா பேப்பர் விஷயத்தை மட்டில் வாசித்து முடிவுக்குவந்துவிடவேண்டியதில்லை. அது சாக்ஷியமல்லவென்று நான் கருதவில்லை; அது ஒருவாறு சாக்ஷியமே. ஆனால் அதற்கு மதிப்பிடவேண்டுமானால் ரூபாயில் ஒரணாவே பெறுமானதாகும்; மற்ற 15 அணா சாக்ஷியத்தை மற்றபடி நீங்கள் கண்டறிய வேண்டும். இது முடிந்தபோதும் மற்ற சந்தர்ப்பங்களையும் பார்

த்துக் கொள்ளவேண்டும். மற்ற சந்தர்ப்பங்களை டிபன்ஸில் வற்புறுத்தாவிட்டாலும், ஒருகால் தாவாவிஷயத்தைப் படித்துவிட்டே குற்றவாளியென்று தீர்மானித்துவிடலும் நியாயமாயிருக்கலாம்.

ஆனால் எடுத்துக்காட்டியிருக்கிறபடி பிதர சந்தர்ப்பங்களுள்ளபோது, ஜூரியார் அவற்றையெல்லாம் ஆலோசித்துக் கொண்ட பிறகே குற்றவாளியின் மனதில் இன்ன எண்ணம் இருந்ததென்று தீர்மானிப்பது கட்டுக் கடமையாகும். ஆரம்பத்தில் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டியது இதுதான். "வெறுப்பை உண்டு பண்ணுவதாய் யாராவது எதையாவது பிரசுரித்தால்" என்று ஸெக்ஷன்சொல்லவில்லை. ஸெக்ஷனே "யாராவது தூண்டப்பார்த்தால்" என்கிறது. அதுருஜுவானால் உண்மையில் நீங்களொருவனைக் குற்றவாளியென்னக்கூடும். ஓரவுன்ஸ் அபினிருக்கக் கண்டால், தற்கொலைசெய்துகொள்ளக்கருதியதாய்ச்சொல்லலாமா?- அவ்வபினைத் தின்ன வைத்திருக்கலாமாகையினால், அபினைவைத்திருக்கவே எண்ணக் குறிப்பாகாது. எண்ணத்துக்கு சாக்ஷியமெது? நான் தூஷணைக்குற்றம் செய்திருப்பதாயும் எந்த சாக்ஷியமுள்ளது? ஒருவன் குளத்திலிருக்கக் கண்டோமானால் தற்கொலைக்கு எத்தனமென்னலாமா? அவன் நல்லநீந்தற் காரனாயிருந்து விளையாட விரும்பியிருக்கலாம். ஒன்றை வைத்திருந்ததினாலேயே எத்தனமாய் விடாது. டிபன்ஸ் சாக்ஷியத்தைக் கொண்டுவந்து காட்டுவது டிபன்ஸின் காரியமென்றும் சொல்லப்படும். அப்பொறுப்பு குற்றவாளியின்மீதேயுள்ளது! ஆனால் அது தப்பு லாவும் தப்புப் பிரமாணமுமாம். அது சாக்ஷிய சட்டத்தால் அனுமதிக்கப்படவில்லை. குற்றமுள்ளதா யில்லாதபோது இவ்வாறு டிபன்ஸ நியாயமேதும் காட்டவேண்டியதில்லை. எண்ண முள்பட எதையும் காட்டுவது பிராஸிகூஷனின் கடமையாயுள்ளது. சாக்ஷியசட்டப்படி முதலில் குற்றவாளி குற்றமற்ற பேதையாகக் கொள்ளவேண்டும்.

திலகர் பக்கத்துள்ளார் இந்த குற்றத்தின் ஒவ்வொரு பகுதியும் உண்மையானதென்று நம்பத்தக்க சாக்ஷியத்தால் மெய்ப்பிக்கப் பட்டதாகச் செய்வது பிராசிக்யூஷனுக்குரியதாகும். இக்கேஸில் அவர்கள் ருஜுப்படுத்தியதெதுவென்று உங்களைக் கேட்கிறேன். அவர்கள் சில பேப்பர் விஷயங்களை உங்களுக்குக்காட்டி அவை ராஜத்துரோகமானவையென் றேற்படவில்லையா, குற்றத் தீர்மானங்கொடுங்கள் என்று தானே சொல்லியிருக்கிறார்கள்? "இதோ விஷயம்; அதன் அசலிலிருந்து இதை மொழிபெயர்த்தோம். உங்கள் முன்பாக இதை வைத்திருக்கிறோம். சில வார்த்தைகள் மிக்க வலுவானவையும் வெறுப்பை உண்டாக்குவதாயும் இருப்பதைக் காணக்கூடும்; ஆகையால் நியாயதாத்பரிய வகையில் குற்றவாளிமேரில் குற்றத் தீர்மானம் கொடுத்துவிட்டுப் போகலாமே" யென்றதுதான் முழுக்கேசும். இக்கேஸில் கொண்டுவரப்பட்டிருக்கும் சாக்ஷியத்தை நீங்கள் வகுத்துப் பார்ப்பீர்களானால் ஒன்றுமேயிராது. தாவா விஷயம் எழுதப்பட்டபோது சந்தர்ப்பங்களென்ன வென்ற விவரமே யேற்படவில்லை. அப் பொறுப்பெல்லாம் டிபென்ஸின் மீது விழுத்தப் பட்டதேயன்றி, அவர்களதை மெய்ப்பிக்கவில்லை. தாவா விஷயமோ, விவாதமுட்டின்மேல் எழுதப்பட்டது. இது ஒரு புத்தி புகட்டாகக் கருதப்பட்டது; இது முன்னமே வெளியான சில குற்றக்கூற்றுகளுக்கு பதிலாக வரையப்பட்டது. இவை தான் தாவாவிஷயம் எழுதியிருக்கவேண்டியதற்கு முக்கிய சந்தர்ப்பங்களாகும். ஆனால், "இந்த சந்தர்ப்பங்களை யெல்லாம் விசாரித்துக்கொண்டிருக்க உங்களுக் கவசியமாயில்லை. தாவாவிஷயத்தை மட்டில் உங்கள் முன்பாக வைத்திருக்கிறோம். குற்றவாளி பதில் கூறவிட்டால் உங்களுக்கு உத்தமநியாய வழியாவது குற்றவாளியென்று கூறிவிடுவதே யாகும்" என்று பிராசிக்யூஷன் சொல்லுகிறது. ஆகவே 124 A ஸெக்ஷனுக்கு விலக்குகளின்றிய விவரணங்களிருக்கின்றன. ஸெக்ஷனின் முக்கியாம்ச பதங்களை விவரிப்

பனவே அவ்விவரணங்களாகும். அவை அராஜவிசுவாசத்தை விரிப்பதாய் நினைக்கிறேன். இவ்விவரணம் இக்கேசுக்குரியதா யில்லையென்று முதல் பிராசிகியூஷன் அது ருஜுவாகவேண்டும். இக்கேசுக்கு அது சம்பந்தப்பட்டதல்ல; அது 124A செக்ஷனுக்கு விலக்குமல்ல. விஷயம் குறித்த விவரணத்தின் கீழ்வரவில்லையா வென்பதை நீங்கள் பார்க்கவேண்டியிருக்கிறது. அதைப் பிராசிகியூஷனர் ருஜுப்படுத்தவேண்டியதேயன்றி டிபன்சுக்கில்லை. இக்கடமையை அவர்கள் செய்யாமல் அக்கிரமமாய் டிபன்சுக்கு விட்டிருக்கிறார்கள். எழுதினவன் ஒழுங்கான அபிப்பிராய வெளிப்படையிலும், ஒழுங்கான சாட்டுரையிலும், ஒழுங்கான அக்கிரமகண்டனத்திலும் அளவுகடந்து விட்டிருக்கிறதாக சரியானருஜுவால் அவர்க ளெடுத்துக் காட்டியிருக்கவேண்டும். எழுத்துரிமைக்கு நாங்கள் ஆக்ஷேபிக்கிறதில்லையென்று உங்களுக்கு சொல்லப்படுமென்பதும் எனக்குத் தெரியும்; ஆனால் சுதந்தரத்தைக் கட்டளையாக்கிக்கொள்ள எங்களுக் கவசியமில்லை. பின்னும் உங்களுக்கு அது எப்படி அர்த்தமாகிறதென்று நீங்கள் விவரிக்கவேண்டியிருக்கிறது.

சுதந்திரமெங்கே நிற்கிறது; கட்டளை (லைசென்ஸ்) எங்கே தொடங்குகிறது? இவ்விஷயம் ஜூரியின் பொது அறிவால் விவரிக்கப்பட வேண்டியிருக்கிறது. அது உங்கள் கடமை. லாவோ மிக்ககண்டிப்பாயிருக்கிறது; ஆனால் இங்கிலாண்டில் லாவின் கண்டிப்புக்கும், எழுத்துரிமைக்கும் இடையே நின்று கொண்டிருப்பவர் ஜூரியாராகவே, இக்கேசில் அக்கடமையை நீங்கள் செய்யவேண்டியிருக்கிறது. விஷயம் எழுதியுள்ள சந்தர்ப்பங்களை யெல்லாம் உங்களுக் கெடுத்துக்காட்டக் கருதுகிறேன்; ஆகவே இவ்விஷயத்தை எழுதிய என்னம் வெறுப்பைத் தூண்டவோ, அப்படி செய்யப்பார்க்கவோ கொண்டதாகவாவது, அப்படி நான் எண்ணவில்லை யென்றாவது காண்பிப்பது அவசியமாகிறது.

எண்ணமென்பது ஸ்தூலவிஷயமன்று; ஆகவே மற்றொருவனுடைய உள்ளத்தை ஒருவன் உணரக்கூடாமை. உங்களெண்ணத்தைக் கண்டறிய வேண்டுமானால் நான் உங்களுடைய வெளிப்படையான நடவடிக்கையைக் கொண்டு தீர்மானிக்கவேண்டும். உங்களுள்ளத்தில் நான் முழுகி அங்கு நடந்தேறுவதைக் கண்டு கொள்ளக்கூடாமை. எப்போதும் எண்ணமானது கொள்கையால் கூடுவதாயுள்ளது; ஆனால் இங்கே கேள்வியாவது ஒன்றல்ல, பலவிஷயங்களாகும். பிரசுரமட்டிலுமே—, வார்த்தைகளின் மாதிரி மட்டிலுமே போதுமானதாகாது. சுற்று சந்தர்ப்பங்களினால் நீங்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது; ஆனால் ஒரு ராஜதூஷணைக்கேசில் எண்ணமானது விஷயத்தை வாசிப்பதிலிருந்து கொள்ளப்படவேண்டுமென்னப் படுகிறதேயன்றி வேறில்லை! இங்கிலாண்டில் கற்றுணர்ந்தோர் அநேகர் கொண்டிருக்கிறபடி நீங்கள் சுற்று சந்தர்ப்பங்களை கவனித்து அவற்றின் சரியான ஸா சாக்ஷியமதிப்பையும் தந்து, உங்களுக்கு முன்பாயுள்ள ஒவ்வொரு சங்கதியையும் யோசித்து முடிவுக்கு வரவேண்டுமென்று நானும் வற்புறுத்துகிறேன். வார்த்தைகளிலிருந்தே யெழுதின மாதிரியில் ஏற்பட்டதாகக் கொண்டு எதையோ சொல்வது அறிவற்றதாகும்; ஆனால் குறித்த வார்த்தைகளை யெழுதுகிற ஒவ்வொருவனையும் நீங்கள் சிறைச்சாலைக்கு அனுப்பிக்கொண்டேயிருப்பீர்களானால், அகராதி யெழுதினோனையும் நீங்கள் சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டியிருக்கும். வெப்ஸ்டர் அகராதியில் அநேக தூஷணைவார்த்தைகளிருக்கின்றன.

பின்னும் மற்றொரு கேசைப்பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். ஸெண்ட் ஆஸாப்டீனாகிய ஏர்ஸ்கின் டிபன்ஸ் பேச்சில் தூஷணைப்போக்காவது அரசன் சேவகனுக்கு ஒப்பிடப்பட்டிருப்பதாகும்; பைபிளைப் பற்றிய மற்றொரு வாக்கியமாவது கடவுளில்லையென்று சொல்வது தெய்வநிந்தனையன்று என்பதாகும்.

ஒருவன் தன்செயலின்பயன்களை நன்றாய் உணர்ந்திருக்க வேண்டுமென்னும் பிரமாணம் உண்மையுள்ளதாயின், இந்தியன்பினல்கோடிலிருந்து நம்மில் எத்தனைபேர் தப்பிக்கொண்டிருக்கலாம்? நீங்கள் சந்தர்ப்பங்களை கவனியுங்கள். (இன) ஜனங்களிலிருந்து ஜூரியார் எடுக்கப்படுகிறார்கள்; ஆகவே ஜூரியார் சந்தர்ப்பங்களை அறிந்திருக்கலாம். இங்கே உங்களுக்கு அந்த நன்மையில்லை. இங்கிலாண்டிலோ ஜூரியார் (இன) ஜனங்களிலிருந்து எடுக்கப்படுகிறார்கள்; ஆகவே, அவர்கள் ஜனங்களை அறிந்திருப்பதுமன்றிக் குற்றவாளிகளையும் அறிந்திருக்கிறார்கள். இங்கிலீஷ் ஜூரிக்கும், இந்திய ஜூரிக்கும் ஒருமைப்பாடே கிடையாது. அங்கே (இன) ஜனங்களிலிருந்து எடுக்கப்பட்ட 12பேரால் தீர்மானமாகும்; அவர்களாலே சன்ணுமும் ஏற்படவேண்டும்; அவர்கள் யாவரும் ஒரே முடிவுக்கு வரவேண்டும். இங்கே அப்படி கிடையாதென்றறியுங்கள். இங்கிலாண்டிலே 12 பேரில் ஒருவன் ஒத்துவராவிட்டாலும் அந்த ஜூரி கலைக்கப்பட்டு, மற்றொரு ஜூரி வரவழைக்கப்படும். இப்படி 2, 3 தரமாய்விட்டால் குற்றவாளி உடனே விடுவிக்கப்படுவான். ஜூரி சார்ஜில் நீங்கள் விஷயத்தை கவனிப்பதோடு சுற்று சந்தர்ப்பங்களையும் கவனிக்கவேண்டியதென்று சொல்வது வழக்கமாயிருக்கிறது. சாட்டிலிருந்து தப்பும் சந்தர்ப்ப மேதாவது உண்டாவென்பதை எடுத்துக்காட்டுவதும் கடமையென்று நம்புகிறேன். ஜட்ஜியவர்கள் அப்படியே உத்திரவு செய்வார்களென்பதில் எனக்கு சந்தேகங்கிடையாது. விஷயத்தை உங்கள் கையில் வைத்திருக்கிறோம். அதுவே போதுமானதென்று நீங்கள் நினைக்கவில்லையா? ஆம்; அது முடிந்ததுதான். அதுவல்ல உங்கள் கடமை; நியாய பரிபாலனத்துக்கு ஜூரி அவசியமானதென்பதற்கு அது காரணமாகாது.

பின்னும் செக்ஷனின் இதரப்பகுதிகளில் எக்ஸைட் (தூண்டு) என்னும் வார்த்தையைப்பற்றியும

உங்கள் கவனத்தை செலுத்த விரும்புகிறேன். பிறகு இந்த காரணையும் இங்கிலீஷ்காரணையும் ஒத்துப்பார்க்கப் போகிறேன். இது ஆரம்ப கவனிப்பாகும். எக்ஸைட் என்றாலென்ன? அது எக்ஸைட்டர் (தூண்டுவோன்) என்ற வார்த்தையிலிருந்து வந்தது! அதாவது மூட்டுவது, இல்லாதபோதும் உண்டாக்கி வைப்பது, உண்டாயிருக்கிறபோது பின்னும் அதிகப்படுத்துவது என்றாகிறது. விரோதம் அல்லது அவமதிப்பு இல்லாதபோது அதை உண்டு பண்ணுவதும், உண்டாயிருக்கிறபோது அதை அதிகப்படுத்துவதுமாகும். இப்போது நானே ஓர் த்ருஷ்டாட்சியால் தெளிவுபடுத்துகிறேன். கலக்கம் (Unrest) உள்ள காகிதத்தைக் கொண்டு கவர்ன்மெண்டார் காரண விசாரணை செய்ய ஒருக்கிபோதல் தவை அனுப்ப, அவ்வுத்தியோகஸ்தர் கவர்ன்மெண்டுக்கு ரிப்போர்ட்டொன்றனுப்புகிறார். அதில் இன்ன இக்காரணங்களினால் கலக்கமுண்டாயிருக்கிறதாகவும், கவர்ன்மெண்டார் இன்னின்னபடி செய்வார்களானால் அது எளிதில் பரிகரிக்கப்படும் என்றெழுதப்பட்டது. அவ்வுத்தியோகஸ்தர் மீது வெறுப்புக்குற்றம் சாட்டலாமா? எக்ஸ்பிரஸ் (தெரிவிப்பு) என்பதற்கும், எக்ஸைட் (தூண்டு) என்பதற்கும் வித்தியாசம் அதுவே. இவனே (எழுதுகிறவனே) ஜனங்களுடைய உணர்ச்சிகளை விவரித்து அவற்றை யெடுத்துக்காட்டுகிறான். இவனும் அவற்றைத் தெரிவிக்கிறான். அதற்குமேல் இவன் போகவில்லையாகவே, உண்மையில் தூஷணை நடக்கையில் இல்லை. வெறுப்புணர்ச்சியைத் தூண்டுதலாவது உன் நடக்கையால் உள்ள வெறுப்புணர்ச்சியைத் தூண்டுவது அல்லது ஒன்றுமில்லாதபோது ஒன்றை உண்டு பண்ணுவது என்றாகும். உணர்ச்சியைத் தூண்டுவதற்காக நீயதும் செய்யாவிட்டால், நீ வெளியிடு மட்டிலானால், நீ அறிவிக்குமட்டிலானால், நீ காலப்போக்குகளைத் தெரிவிப்பதானால் நிச்சயமாய் அந்நடக்கை 124-A செக்ஷனுக்குட்படமாட்டாது. எழுதுவோன் தெரிவிக்குமட்டுலும் வெளியிடுமட்டுமல்ல, இதிலும் கொஞ்சம்

அதிகமாகவும் செய்யக்கூடும். எதுவோ கெட்டதென்று நான் சொல்லக்கூடும்; அது பரிகரிக்கப்படவேண்டும். நாமெனாபூதவேண்டியிருக்கிறது; நானதை செய்யவேண்டிய கிரமமிருக்கிறது. நான் குறை கூறுகிறபோது ஏதோ கெட்ட உணர்ச்சி உண்டாவதும் இயற்கைதான். நாமெல்லாம் முனிவர்களல்ல; ஆகவே வெறுப்பின் பேரில் கெட்ட வுணர்ச்சி அவசியமா யேற்படுகிறது. ஆகவே, அதுவே விவரணைக்குமாகிறது. இரண்டாவது, விவரணைமோ கவர்ன்மெண்டு எதிரிகளின் பேரில் வெறுப்பை வெளியிடுவதைப்பற்றி விவரிக்கிறது. எக்ஸைட் என்பதற்கு மிக கண்டிதமான பொருள் கூறுமிடத்து, கவர்ன்மெண்டார் தவறுதலாய் நடக்கிறதாக நான் சொல்கிறபோது அதிகாரிகள் விரும்பாததை நான் சொல்வதாகத் தெரிகிறது. அது தூஷணையாகமாட்டாது; அப்படியானாலோ விருத்திகரமேதும் இல்லாமையாகும். நாமிப்போது உள்ளதுபோலவே இந்த 20 அல்லது நூற்றாண்டின் முடிவிலும் கீழ்ப்படிதலுடையவர்களாகவேயிருந்துவிடவேண்டிவரும். உண்மையான மேன்மையை அடைவதற்குக் கிளர்ச்சி (Agitation) வேண்டியது ஆகவேண்டியிருக்கிறது. என்ன குறைகள் காட்டிக் கேட்கப்பட்டிருக்கின்றனவென்றும், என்ன சீர்திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் யோசிக்கவும், எழுதினேன் என்னுமுண்மையைக் கண்டறியவும் நீங்கள் கடமைப்பட்டிருக்கிறீர்கள். உண்மையென்னவாவது ஒவ்வொருவனும் தன் நடக்கைகளின் பலன்களைக் கருதுகிறதான நியாயப் பிரமாணத்திலிருந்து கொள்ளப்படும் போலி யெண்ணமாகாது. இது தீர்மானலக்ஷணமும். எண்ணமானது உண்மையில் கவர்ன்மென்டை சீர்திருத்துவதானால் தூஷணமாக மாட்டாது; தூஷணமாகவேண்டுமானால், முன்னே யெழுதியோன் கவர்ன்மெண்டை அவமதிப்புக்குக் கொண்டுவரும் நோக்கமாய்த் தாண்டபார்த்திருக்கவேண்டும். ராஜ தூஷணையின்மேல் வார்த்தை யெப்படி யிருக்கிறது? ராஜதூஷணைமென்பது உண்மையில் சரியாய் வரையறுக்கப்

பட்டதேயில்லை. காட்டு யார் பேரில் கூறப்பட்டதோ அந்த நபர் அல்லது கேட்போர் மனதில் ஏதோ கெட்ட வுணர்ச்சியைத் தூண்டுதலின்றி யிகழ்ச்சி யென்பது விளங்கமாட்டாது; ஆகவே அப்படி செய்யக்கூடாமை. பிரசுரத்துக்கு இன்னின்ன சுதந்திரம் உள்ளதென்பதை அவ்விவரணம் காண்பிக்கின்றது; இல்லாவிட்டால் அதற்கு அர்த்தமில்லை. சட்டநிருபணத்துக்குப் பொருளுடைய என்னை என்னையில் குறையில்லையென்றதா யெடுத்துக்கொள்ள உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஜொக்ஷன் அர்த்தமாய்க் கொண்டு வரப்படவில்லை. அதற்கு அர்த்தமுள்ளதானல், அது கொண்டிருக்கும் அர்த்தமொன்றுவது அதிஷ்ட வுணர்ச்சியின் ஒரு தொகுதியால் உண்டாக்கப்பட்டிருக்க விடப்பட்டிருக்கிறதாகும். இகழ்ச்சி முடிவுபெறுவதும், கட்டளை அல்லது தூஷணம் தொடங்குவதுமான எல்லையைக் குறிப்பிடுவது கூடாமையாகும். அது நியாயக்கொள்கை யென்றமட்டில் முடிவுபடாது; ஏர்ஸ்கின் சொல்லுகிறபடி சுருக்கக்கொள்கையாகும்; சாசுவத நியாயப்பிரமாணத்தைக் கொண்ட முடிவாகும். பொது அறிவாளிகளான நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

லார்ட்கென்யான் சொல்லியிருப்பதாவது—ஒரு குறித்த விஷயமோ, எழுத்தோ கண்டிக்கப்படத்தக்கதென்று என்னுட்டார் பன்னிருவர் யாவரும் ஒரே அபிப்பிராயமாய் சொல்வார்களானல் அது தூஷணமே. அதைப்பற்றிய எந்த சரியான கருத்தையாவது விவரணம் உங்களுக்குத்தரமாட்டாது. அது மிக்க கற்றறிந்த கன்னியமான ஜட்ஜால் வரையறுக்கப்பட்ட பிரமாணமாயுள்ளது. விவரிக்கும் எத்தனத்தைக்கைவிட்டு அவர் (இன) ஜனங்களிலிருந்து 12 பேரைக் கொண்டுவந்து தான் அளவு கடந்ததுண்டாமென்று அவர்களைக்கேட்டு, அவர்கள் ஆமென்பார்களானல் தன்னை சிக்ஷிக்கலாமென்று சொல்லுகிறார். தூஷண விவரணம் பல

முறையெடுத்துக்காட்டப்பட்டிருப்பதற்குக் காரணமிதுவே. அது ஸர்வதந்திர விவரணமாகும். "பாட்டர்ஸனின் பிரசு சுதந்திர"த்திலிருந்து லார்ட்கென்யானின் ஜூரி சார்ஜைப்பற்றிய ஒரு விஷயப்பகுதியை இப்போது உங்களுக்குப் படித்துக்காட்டுகிறேன். அதுவே எல்லாவற்றிலும் எளிதாய்த் தரக்கூடிய வரையறையாகும். சுதந்திரம், கட்டளை (ஒப்படைவு), கவர்ன்மெண்டின் கிரம இகழ்ச்சி, ராஜத்துரோகம் இவற்றின் எல்லைகளை இது தருகிறது.

வாமொழித் தொடரிலக்கணத்தின்படி ஆக்ட் என்பது ஆக்ஷன் (Action) என்பதினின்றும் வேறுபட்டது. ஆக்ட் என்பது வெளிப்படையாய்ச் செய்யப்பட்டதொன்றாகும்; ஆக்ஷன் என்பது உள்ளிடையானதாய், கவர்ன்மெண்டின் எம்முறைமையையும் குறிக்கலாம். இன்னுமொரு வார்த்தையைப்பற்றி ஆரம்பத்திலேயே உங்கள் கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன். அதாவது—"இந்தியாவில் பிரிட்டிஷ் லாவால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கவர்ன்மெண்டு" என்பது. இது ஆட்சி நிர்வாகம் (எக்சிகூட்டிவ்), அல்லது நீதி நிர்வாகம் (ஜூடிஷியல்) என்றாகாமல், கவர்ன்மெண்டின் உட்கருத்தைக் குறிக்கிறது. இந்தியன் பினல் கோடில் கவர்ன்மெண்டை விவரித்திருப்பதில் போலீஸ் கான்ஸ்டெபில் உள்பட எந்த உத்தியோகஸ்தரையும் இழுத்துக்கொண்டிருக்கிறது. ஒரு போலீசான் தன் ட்யூட்டியை செய்யவில்லையென்று கூறினால், நான் தூஷணைக்குற்றவாளியாயிருப்பதாக அர்த்தமாகாது. மேலுக்குப்போகலாம்—யாரோ சில உத்தியோகஸ்தர்கள் தங்கள் கடமையை செலுத்தாமலிருப்பார்களானால், அவர்களை மாற்றவேண்டுமென்று சொல்ல எனக்கு எவ்வகையிலும் சுதந்திரமுள்ளது. அவர்களுடைய நடவடிக்கைகளைக் கண்டிப்பாய் விசாரிக்கவேண்டும்; குறித்த இலாகாவை மாற்றவேண்டும், கவர்ன்மெண்டு என்னும் சொல்லுக்கு "லாவால் ஸ்தாபிக்கப்பட்ட" என்ற அடைத்தொடருள்ளமட்டில் கவர்ன்

மெண்டின் வரையறையானது பிராஸிக்கியூடின் அறிக்கை பகுதியில் எப்படியாகும்? அவ்வடைத்தொடரில் அது விக்கிரியாசப்பட்டு நிற்கிறது. அதுவாவது ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டாகிறது. இனி பியூரோக்ரஸி (அதிகார நிர்வாகம்) கவர்ன்மெண்டா அல்லது, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு அதிகார நிர்வாக ஆதார பற்றியே யுள்ளதா, அதில்லாமல் நிற்கக்கூடாமையா என்னும் கேள்விக்கு வரவேண்டும். அந்தப்படி சொல்லலாம். சில உத்தியோகஸ்தர்களின் செய்கைகள் கவர்ன்மெண்டுக்கு அவசியமானவை யென்று சொல்வது மெத்த பரிகாசமாகலாம்; ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் லாவால் ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டு என்பதற்கு அந்த அர்த்தமாகிறதா? அது ஆட்சி மாதிரியா? அது இக்கருத்துகொண்டதா? கொள்கைகள் சம்பந்தப்பட்ட மட்டில், அவை இந்தியன் பினல் கோடுக்குரியதல்ல. ஒரு ஆட்சிமுறையொன்று இந்நாட்டுக்கு மிகப் பொருத்தியதென்று நான் சொல்லி, அவ்வபிப்பிராயத்தைப் பரப்ப எத்தனைப்படலாம். நீங்கள் எனக்கொத்தவராகிருக்கலாம். அது விஷயமல்ல. என்னபிப்பிராயத்தை நான் வெளியிடவேண்டியிருக்கிறது. எதாவது கவலை யென்றால் பத்திரிகையில் என்னபிப்பிராயத்தை வெளியிடலாம். விவேகிகள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடவும், வேறு ஜனாபிப்பிராயத்தைப் பெறவும் நீங்கள் விடாவிட்டால் விருத்திகரமேது? அது அசாத்தியமாய் நிறைவேறக்கூடாமை. ஸெக்ஷன்வார்த்தைப்படி "பிரிட்டிஷ் இந்தியாவில் லாப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டு" என்னப்படுகிறது. முன் கொடுத்துக்காட்டப்பட்ட பாலகேசில் ஜஸ்டிஸ் பட்டிபோக்கென்னவென்பதை நீங்கள் யோசிக்கவேண்டியிருக்கிறதென்று நினைக்கிறேன். இந்த கவர்ன்மெண்டு இருக்கவேண்டியதில்லையென்று ஒருவன் சொல்லக்கூடுமே யென்று இப்பகுதி கூறுகிறது. அதனால் கவர்ன்மெண்டுக்கு எவ்விரோதத்தையும் கொள்வதற்கில்லை; கொள்வோமானால் ஒவ்வொரு ராஜரிகவரை

வாசிப்பும் ஜெயிலுக்கனுப்பிவிடப்படவேண்டுமென்று அர்த்தமாகவில்லையா? இப்போது தத்துவார்த்தமாய் இவ்விஷயத்தை விவாதிப்பதில் 124-A செக்ஷன் கண்டிப்பாய்ப் பிரயோகிக்கப்படுமானால், இவ்விநக்திகரங்களுக்கெல்லாம் காரண புருஷராகிய ஒய்வோர் உலகதத்துவ சாஸ்திரியும் முதலில் ஜெயிலுக்கனுப்பி விடப்படுவார். இங்கிலாண்டில் ஒருவன் இங்கிலாண்டுக்குப் பிரஜாங்க ராஜ்யம் உதவாதென்று எழுதியதாக வைத்துக்கொள்வோம். அக்கருத்தை வெளியிடுவது துவேஷமாக மாட்டாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ராஜியைப்பற்றிய மார்லிபுஸ்தகத்தில் இதோ வாசிக்கிறேன். இது ராஜதந்திரியின் பிரசாரமே ஒழிய ஒரு நியாயாதிகாரியினுடையதல்ல. வார்த்தைகளுக்கு அதனால் அர்த்தமாவது அதல்ல. அப்போதும் அவனுக்கு நீங்கள் பொருளும் பினல் கொடுக்கக் கூடாமை. நான் லக்ஷாதிகாரியாக வேண்டுமென்றால், உடனே நான் கொள்ளையிட எண்ணியதாக நீங்கள் கொள்ளலாமா? நானெண்ணியதெல்லாம் பணம் சம்பாதிப்பதாகும். ஆகவே, அதிகார நிர்வாகம் (பியூரோக்ரஸி) மாறுபடவேண்டும் அல்லது திருத்தப்படவேண்டும் என்றால், ஜனங்கள் கலகத்துக்கு எழுந்திருக்க வேண்டுமென்று தெரிவிக்கநானெண்ணியதாகக் கொள்வது சரியல்லவே. என்னெண்ணமானது உண்மையாகவே கலகத்தைக் கிளப்பவும், பகைப்புணர்ச்சியை உண்டு பண்ணவுமேயென்று நீங்களேன் கொள்ள வேண்டும்? வார்த்தைகளிலிருந்து, முக்கியமாய் நீங்கள் கலவாத இனத்தவரின் உணர்ச்சிகளிலிருந்து நீங்கள் எண்ணத்தைக் கண்டுகொள்ளும்படியானபோது வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

எழுத்தை யெடுத்துக்கொண்டால் நீங்கள் யோசிக்கவேண்டியது அதை வாசிப்பது மட்டுமல்ல; இவ்வெழுத்து ராத்திரி பேசும் ஜனங்களை யென்னவாக்கியிருக்குமென்பதை நீங்கள் தீர்மானிக்கவேண்டியிருக்

கும். இது மிகவும் பிரயாசையான காரியம். எப்போதும் தப்பர்த்தத்துக்கே சந்தர்ப்பமுள்ளது. அநேகமாய் நாமே ஒருவருக்கொருவர் தப்பர்த்தம் பண்ணிக்கொள்ளுகிறோம். உங்க ளெண்ணத்தை நான் அர்த்தம் பண்ணிக்கொள்வதானால், அது சரியாயிராதுதான். அவ்வாறே மராத்தி யெழுத்தானது அந்த ஜாதியாரை என்னவாக்கி யிருக்குமென்று நீங்கள் அறிவதானால்—, உணர்ச்சிக ளின்னவென்று நீங்கள் யோசிக்கவேண்டும்; அந்த ஜாதியாரின் பொது ஸ்திதி யின்னதென்று நீங்கள் யோசிக்கவேண்டும். அப்படிச் செய்யாமல், அவை அசட்டை யுணர்ச்சிகளைத் தூண்டுவதாக நீங்கள் சொல்லக்கூடாமை. என் கற்றறிந்த நேயராகிய மிஸ்டர் பாப்டிஸ்டா காட்டிய அத்தாக்ஷியை யெடுத்துக்கொள்ளுங்கள். பசு விஷயமாய் நீங்கள் எழுதுகிறீர்கள். நீங்கள் ஒருவிதமா யெழுதினால் மகமதிய ஜாதியார் கோபங்கொள்ளாதிருக்கலாம்; ஆனால் ஹிந்து ஜாதியாருக்குக் கோபமுண்டாகலாம். அங்கே பலன் விஷயமானது எழுத்தைப் பொறுத்ததா யில்லையானாலும் அது சொல்லப்பெற்ற ஜனங்களுடைய மனதி[illegible]யையும், அது சொல்லப்பெற்ற ஒருகாலத்தை[illegible] அது சொல்லப்பெற்ற இனநிலையாக்கத்தையும் பொ[illegible]த்ததா யிருக்கிறது. இன்று வெறுப்பை யுண்டாக்குவது 20-வருஷத்துக்கு முன்னே வெறுப்பைத் தூண்டாததாயு மிருக்கலாம். இனநிலையாக்கம் (Improvement in the state of Society) விளைந்திருக்கலாமாகவே, இன்று கோரமாகத் தோன்றுவதே 10-வருஷத்துக்கு முன் முற்றிலும் வேறுபட்டதா யிருக்கலாம். இது பயங்கரமான விஷயமாகும். எழுத்து விஷயம் ஒரு காரணம். குறித்தகாலத்தில குறித்த எழுத்து சொல்லப்பெற்ற இனநிலை மற்றொரு காரணம். அது சொல்லப்பெற்ற காலம் இன்னுமொரு காரணம். அப்படி ஒரு விஷயத்துக்கு அறியப்படாத மூன்று அளவைகள் சம்பந்தப்பட்டிருப்பது திருஷ்டாந்தமா யிருக்கிறது. ஒன்றின் மதிப்பை மட்டும்

அறிவதினுலே மூன்று அளவைகளின் மதிப்பையும்
நீங்கள் கண்டுபிடிக்கக் கூடாமை. பிராசிகூஷனர் ஒரு
காரணத்தின் மதிப்பை மட்டும் உங்களுக்குத் தெரிவித்
திருக்கிறார்கள். மற்றதை உங்கள் உள்ள விளக்கத்தைக்
கொண்டு நீங்கள் விஸ்தரித்துக்கொள்ள வேண்டியிருக்
கிறது. நீங்கள் கொஞ்சமும் அறியாத சுதேச நபர்களி
களைப்பற்றித் தீர்மானிக்கிறீர்கள். நீங்களறிந்த பாஷை
யில் எழுத்துள்ளபோதும், உங்களால் தீர்மானிக்கப்
படும் இனத்தவர் உங்களுக்கு சொந்தமாயுள்ளபோதும்
முற்றிலும் வேறுபட்ட விஷயமாகும்.

153-A ஸெக்ஷன் விஷயமோ மிக்க வேறுபட்ட
தாகும். இதில் நீங்கள் இனங்களுக்கிடைப்பட்ட விஷ
யங்களைத் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. மேல்நாட்டி
னங்களில் விளங்கியிருப்பதுபோல, இந்தியா இன்னும்
ஒன்றுபடவில்லை. ஹிந்து மகம்மதியர்களுக்குள்ளே,
பார்சியூதர்களுக்குள்ளே, அல்லது ஜைனபுத்தர்களுக்
குள்ளே பகையுணர்ச்சிகள் அதிகப்படலாமாவென்றும்
நீங்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. வார்த்தைக
ளின் பேரில் மட்டும் ஏற்பட்ட ஒரு முடிவானது முட
த்தப்பும், அசௌகரியமும், அபாயகரமுமென்பது
தெளிவாகிறது. அது செய்யக்கூடாமை. மராத்தி பே
சும் ஜனங்களின் நிலைமை இன்னதென்று காண்பிக்கப்
பிராசிகூஷனர் உங்களுக்கு முன்பாக சாக்ஷியக்கொண்டு
வந்திருக்கவேண்டும்; ஆகவே, அவர்களுக்கு என்ன நேர்ந்
தன? இன்னது நேர்ந்திருக்கலாமென்று காண்பிக்க,
அவர்கள் சாக்ஷியமேதுங்கொண்டு வராதிருக்கிறார்கள்.
கனவான்களைப்பற்றி நானேதும் சாட்டவில்லை; நீங்க
ளெல்லாம் விவேக வியாபாரிகள். சங்கதிகளின்பேரில்
நீங்கள் அபிப்பிராயங்கொள்ளக்கூடும். பிராசிகூஷனர்
உங்கள் முன்பாக இந்த சங்கதிகளைக்கொண்டுவந்து
வைக்காவிட்டால், யார்பேரில் குறை கூறுவது? அவர்
களோ உங்கள் முன்பாக சங்கதிகளைக்கொண்டு வர
வில்லை—நீங்களென்ன செய்வீர்கள்? எவ்வகையிலும்

குற்றத்தீர்ப்பு கொடுக்க நீங்கள் கடமைப்பட்டிருப்பதாக நினைக்கவேண்டாம். சாக்ஷியமின்மையால் நீங்கள் தீர்ப்பு கொடுக்கக்கூடாமையென்று சொல்லக்கூடும். சாக்ஷியமில்லாமையால் உங்களுக்குள்ள எந்த சாக்ஷியத்தைக்கொண்டாகிலும் குற்றத்தீர்ப்பு கொடுக்கவேண்டியதென்று அர்த்தமாகாது. எங்களுக்கு நிரப்படவில்லையென்று நீங்கள் தாராளமாய் சொல்லலாம். விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டபடி யத்தனமானதென்று நாம் சொல்லக்கூடாமை. எண்ணமிருந்ததென்று காண்பிக்க நமக்கு ஆதாரவுகளில்லை. இதை செய்யத்தான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

153-A செக்ஷன் வருமாறு—பேச்சு அல்லது எழுத்து வகையில் வார்த்தைகளாலாவது ஜாடைகளாலாவது, மற்றபடியாவது சக்கிரவர்த்தியின் *பிரஜைகளுள் வேறுபட்டிருக்கும் வகுப்புகளுக்குள்ளே பகை அல்லது வெறுப்புணர்ச்சிகளை யாராவது அதிகப்படுத்தவாவது, உண்டுபண்ணுவதற்கு எத்தனிக்கவாவது ஆனல் இரண்டு வருஷமட்டும் சிறைக்காவலாவது, அபராதமாவது அல்லது இரண்டுமாவது அவனுக்கு விதிக்கப்படும். பிறகு இவ்விவரணமும் உள்ளது—சக்கரவர்த்தி பிரஜைகளின் வேறுபட்ட வகுப்புகளுக்குள்ளே பகை அல்லது வெறுப்புணர்ச்சிகளை உண்டுபண்ணுகிற அல்லது உண்டு பண்ணும் போக்கிலிருக்கிற விஷயங்களை விரோத எண்ணமில்லாமலும், அவற்றைப் போக்கடிக்கும் யோக்கிய நோக்கங்கொண்டும் எடுத்துக்காட்டுவது இந்த செக்ஷன் அர்த்தத்துக்குட்பட்ட குற்றத்துக் குரியதாகாது.

நீங்கள் தீர்மானிக்க வேண்டியது வெறுத்த எண்ணமேயன்றி, எண்ணத்தை நம்புவதாகாது. எண்ணமாவது லாவிலுள்ளடங்கிய விஷயமல்ல. நல்லது; தூஷணை விஷயமுற்றும் எண்ணத்தில் அடங்கி யிருக்கிறது; அது பிரசுரம் செய்வதில் அடங்கவில்லை. தூஷணமானது எழுதும் வகையிலேயே அடங்கிவிடவில்லை. அது

ஒரு கெட்ட மனதில் அடங்கியிருக்கிறது. அந்தகெட்ட மனது மெய்ப்பிக்கப்படவேண்டும். அக் கெட்ட எண்ணம் நீங்கள் கவனித்துக்கொள்ளுகிற சங்கதிகளால் மெய்ப்பிக்கப்படவேண்டும். இவ்விஷயம் ஜூரிக்கு விடப்பட் டிருப்பதற்குக் காரணமும் இதுவே. மற்றபடி ஜூரிக்குக்காரண மேதுமில்லை. யாராவது ஒரு விஷயத்தை யெடுத்துக்கொண்டு இது தூஷணமென்று சொல்லக்கூடும். இதைத் தீர்மானிக்க மிக்க விவேக வல்லமை தேவையென்று நான் சொல்லவில்லை ஜூரிக்கும், அதன் ஒருமுகமான முடிவுக்கும் ஆவசியகம் எங்கே? பிரமாணமாவது இன ஜனங்களிலிருந் தெடுக்கப்பட்ட 12 பேரும் வெறுத்த எண்ணம் இன்னதென்று சரியான முடிவுக்கு வரவேண்டியதாகும். உங்கள் முன்பாயுள்ள விஷய முழுமையு மிது—அதாவது எண்ணவிஷயம். அவ்வெண்ணவிஷயமே உங்கள் முன்பாக முக்கியமா யுள்ளது. வெறுத்த எண்ணம் ஏதாவது உள்ளதா? குற்றமான எண்ண மேதாவது உள்ளதா? இவ்விஷயங்களைப் பிரசுரிப்பதில் கெட்ட நோக்கம் ஏதாவது உள்ளதா? நான் உண்மையா யெண்ணியதை சொல்ல எந்த சாக்ஷியமாவது உள்ளதா? இதற்காகப் பிரசுரிக்கப்பட்டதா வென்பதே விஷயாம்சம். உங்கள் முன்பாக ஆதார மேதுமில்லையானால், நீங்கள் குற்றமில்லை யென்ற தீர்ப்பைக் கொடுக்க வேண்டும். எழுதியுள்ள மாதிரியே எண்ணத்தின் ஆரம்ப சாக்ஷியமா யிருக்கலாம்; ஏனெனில், எண்ணமானது எப்போதும் வெளிப்படையான செய்கைகளிலிருந்தே கொள்ளப்படவேண்டும்.

ஆனால் உங்களுக்கு வற்புறுத்த வேண்டியதாவது இது—நீ தூஷணமானதென்று நினைக்கிறாயாவென்று ஒருவன் கேட்க, மற்றவன் ஆமென்கிறான். தீர்மானிக்கும் வழி அதுவல்ல. அதனால் இந்தியாவில் பிரசுர சுதந்திரத்தை நீங்கள் மட்டுப்படுத்துகிறீர்கள். திலகரைப் பற்றி அவசியமில்லை. இது ஜாதீய விஷயம். உண்மை

பாக நீங்கள் பிரசுரக்காப்பாளர்களாயுள்ள வகையில் இங்கிலாண்டு ஜனங்கள் அநுபவிப்பது போல இந்தியாவிலும் அவ்வளவு சுதந்திரம் கொடுத்து வைக்கக் கருதுகிறீர்களா? நீங்கள் ஜாக்கிரதையாய் யோசிக்க வேண்டியிருப்பது இவ்வம்சமே. பிராசிகூஷனே இந்நோக்கத்தை உங்களுக்கு வற்புறுத்தலாகுமென்றும் அறிவேன். கனவான்களே—அது டிபன்சுக்கென்று உங்களுக்கவர்கள் சொல்வார்களென்றும் எனக்குத் தெரியும். விஷயம் உங்கள்முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. சில விளக்கங்கள் கடுமையானவை யென்று நீங்கள் நினைப்பீர்களானால், குற்றத்தீர்மானங் கொடுப்பது உங்கள் கடமையாகும். விஷயத்தை முழுமையாகவே யெடுத்துக் கொள்ளுங்களென்றும், இங்காவது அங்காவது ஒரு பகுதியைக்கொண்டு தீர்மானிக்காதேயுங்கள் என்றும் அவர்கள் சொல்வார்கள். அதுவும் போதாது. நீங்கள் விஷயத்தை மட்டில் படிக்கவேண்டாம்; ஆனால் சுற்று சந்தர்ப்பங்களை யெல்லாம் கவனியுங்கள். மற்றொருவனுக்கு பதில் மறுப்பாக (தாவா) விஷயம் எழுதப்பட்டதென்றும் நானுங்களுக்குளெடுத்துக்காட்ட விரும்புகிறேன். அநுபதிலுரையா யிருப்பதோடு, என்னினத்தவரின் நன்மைக்காக எழுதப்பட்டது. நீங்களெனக்கு உடன்பாடா யில்லாமலிருக்கலாம். வெவ்வேறு இனத்தவர்க்கு வெவ்வேறு நோக்கங்கள் உள்ளன. ஒவ்வோரினத்துக்கும் சொந்த நோக்கங்களை வெளியிட சந்தர்ப்பம் வேண்டும்தான். அது சங்கதி விஷயமாகும். கெட்ட எண்ணம் அந்த சங்கதிகளிலிருந்து கொள்ளப்படவேண்டும். எல்லா சந்தர்ப்பங்களையும் கவனிப்பதாலும், எல்லா சங்கதிகளையும் யோசித்துக் கொள்வதினாலும் எத்தனை யிருக்கிறதாக நீங்கள் கிரமமான முடிவுக்கு வந்தால் எல்லா வகையிலும் என் பேரில் குற்றம் சாட்டுங்கள். உங்கள் தயவேதுங் கேட்க நானிங்கு வந்திருக்கவில்லை. என்னடவடிகளின் பலன்களைப் பின்பற்றி நிற்கத்தயாரா யிருக்கிறேன். அதைப்பற்றிக் கேள்வியில்லை. இவ்விஷயங்களைப் பைத்

தியக்காரத்தனமாய் எழுதியதாக நான் சொல்லப்போவதில்லை. நான் வெறியனல்ல. பொது நன்மைக்தாக இவ்வாறு எழுதுவது என் கடமையென்று நம்பியே இதை யெழுதியிருக்கிறேன். இதுதான் இனத்தவரின் நோக்கமென்றும் நம்பியிருக்கிறேன். இனத்தவரின் நன்மைகள் மற்றபடி சௌகரியமாயும் பாதுகாப்பாயும் இருக்கக்கூடாதென்று நம்பி, நானிதை வெளியிடலானேன். ஐயங்கள் துரைத்தனத்தார் இவ்விருதாரத்தவருக்குமுள்ள நன்மைகளுக்காகவே உங்கள் முன்பாக இந்நோக்கம் எடுத்துக் காட்டப்பட்டதாக நான் சொல்லுவதை நம்புங்கள். இதுபோல நீங்கள் கிரமமாய் இவ்விஷயத்தில் நுழைவீர்களானால், உங்களால் கூடியமட்டில் என்னை நீங்கள் வெறுத்தபோதும் இதுவே உங்கள் அபிப்பிராயமுமாகும். நான் கவர்ன்மென்டாருக்கு அன்னியமான மனுஷனையில்லையென்றும் நான் அறிவேன்; ஆனால், எனக்கு நீதியேன் கிடைக்காது என்பதற்கு அதுகாரணமாகாது; அது கேள்வியாகாது. கேள்வியாவது என்னைத்தைப்பற்றியதாகும். நீங்கள் தீர்மானிக்கவேண்டியதாவது ஜட்ஜவர்களால் எடுத்துக் காட்டப்படும் சங்கதியாகும். இங்கிலாண்டில் ஜூரிகள் ஜட்ஜிகளின் போக்குக்கு எதிரிடையாய்த் தீர்ப்பு கொடுத்துவருகிறார்கள். இப் பிராசிக்யூஷனை கவர்ன்மெண்டார் நடத்துகிறதினாலேயே நீங்கள் குற்றஞ் சாட்டித் தீர்த்துவிடவேண்டியதென்று நீங்கள் நினைத்துவிடலாம். இக்கேசில் அந்நோக்கம் வைக்கப்படமாட்டாதென்று எனக்குத் தெரியும். அந்நோக்கத்தை நீங்கள் வைத்துக்கொள்ள மாட்டீர்களென்றும், ஜட்ஜி அவர்களும் உங்களுக்கு சரியாய் சொல்வார்களென்றும் நான் நிச்சயித்திருக்கிறேன். சுயகாரியார்த்தமாய் கவர்ன்மெண்டாருக்கு சில காரியங்கள் செய்யப்படவேண்டியதாய் விருப்பமுள்ளது. சட்ட நீதிகளின் சாராம்சங்களுக் கெதிரிடையாய் துரைத்தன முறைக்கிணங்க சில காரியங்கள் செய்யப்படவேண்டி யிருக்கும்.

இதுவோ சமயோசிதமான விஷயமாயில்லாமல் சுத்தகீதி விஷமாயுள்ளது. இவ்வம்சக்குறிப்பைக் கொண்டு விஷயத்தைகவனித்தால், பிராசிகூஷனால் கிளப்பப் படும் அதிகமான தப்பர்த்தமும் தூளிமூடும் ஒழிக்கப் படும். இவ்வொரே யம்சக்குறிப்பைக்கொண்டு விஷயம் கவனிக்கப்படவேண்டும்; அதாவது நீதியென்பதே. என் நிலைமையில் நீங்கள் வைக்கப்பட்டிருந்தாலும், உங்கள் இனத்தவர் எதிர்வாதத்தையெடுத்துக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களினால் நீங்கள் தூண்டப்பட்டிருந்தாலும்இதுபோல்நீங்கள் எழுதியிருக்கக்கூடாமையாக உங்களுள்ளத்திலுள்ளே நீங்கள் நினைக்கிறீர்களா? நீங்களென்ன செய்திருப்பீர்கள்? உங்களை யென்னிலைமையில் வைத்துக்கொண்டு, என் நோக்கங்களையும் எண்ணத்தையும் தீர்மானிக்கவேண்டும். சம்பவங்கள் முழுமையும் கவனித்து என்னெண்ணம் சுத்தமானதாகக் காண்பீர்களானால், குற்றமில்லையென்று தீர்ப்புகொடுப்பதைத்தவிர வேறு வழி உங்களுக்குக் கிடையாது. வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் பண்ணினாலும், உங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட மொழிபெயர்ப்புகள் தப்பானவை மாத்திரமல்ல வென்பதை நான் உங்களுக் கிப்போது காண்பிப்பேன். வேணுமென்ற தப்பென்று நான் சொல்லமாட்டேன்; ஆனால் எதிர்க்கக்ஷிக்குமுற்றிலும்மாறுபாடானதென்று சொல்வேன். திரும்ப இது எண்ணவிஷயமாகிறது. மொழிபெயர்த்தோர் எக்கெட்ட எண்ணத்தாலாவது தூண்டப்பட்டதாகநான்சொல்லமாட்டாமை; ஆனால்அங்கேயுள்ளமுடிவு எதிர்க்கக்ஷிக்குக்கேடானது. நாம் ஜாக்கிரதையாய்ப்பார்க்கவேண்டியிருக்கிறது. முடிவானது கெடுதலாயில்லாவிட்டால், எண்ணம் நல்லதென்றே உத்தேசிப்பது உங்கள் கட்டுக்கடமையா யுள்ளது. அவைகெடுதலுக்கிடமாயுள்ளபோதும், எண்ணம் கெடுதலானதென்று நீங்கள் சொல்லக்கூடாமை; ஆனால் கெடுதல் உள்ளதாகில் எண்ணவிஷயமும் அப்பால்தேவையில்லை. ஸென்ட் ஆஸாப்டீனின் கிரிமினல்லாசரித்திரத்தில்படிக்கிறேன்

இதிலென்ன காண்கிறீர்கள்? கொலையும் வஞ்சக்கொலையாகாது. கொலையோ தற்காப்பாயுமிருக்கலாம். கோபமூட்டுக்கிடமாயிருந்தால் படுகொலையாகாத தவறு கொலைக்கும் இடமாகாதிருக்கலாம்; அல்லது கொலை படுகொலையாகும் அவசியமில்லையென்றுமாகலாம். காமன் சோமனைக் கொன்றானென்று ருஜுவானதினாலேயே படுகொலைக் குற்றம் கூறப்போதுமானதாகாது. நீங்கள் சந்தர்ப்பங்களை கவனிக்கவேண்டியிருக்கிறது. ஒரு பையை யெடுத்துக்கொண்டு போவதினாலேயே களவாகாது. அவன் அப்பையை யெடுத்துக்கொண்டு போகும் சந்தர்ப்பங்களும் சம்பந்தப்பட்டிருப்பது அவசியமாகும். எண்ணத்தை யறிந்துகொள்வது ஜூரியின் கடமையாக, ஒருவன் ஒரு குதிரையைக் கெட்ட எண்ணத்துடன் கொண்டுபோனானென்று அறிந்திருக்கவேண்டும்.

ஆகவே, இக்கேஸில் அதிருப்திகரமாவது அநிஷ்டமாவது (தாவா) விஷயங்களினால் விளைவிக்கப்பட்டதாக நீங்கள் சொல்லக்கூடாமை. அப்படிப்பட்ட தேதாவது கொண்டுவரப்பட்டிருப்பதாக உங்கள் முன்னிலையில் சாக்ஷியமேதும் இல்லாமலிருக்கிறது. அவ்விஷயங்களிலிருந்து நீங்கள் சாக்ஷியத்தைக் கொள்ளவேண்டியிருக்கிறது. அங்கடவடி நியாயமற்றதும், கிரமமற்றதும், நீதியற்றதுமாயிருப்பதாக நினைக்கிறேன். இதனால் இரண்டு பொருள்கள் ஒருமாதிரியாகாது என்றர்த்தமாகிறது. சாதாரணத்தில் இதையெழுதுவதனால் எழுதியதைக்கொண்டே எண்ணத்தைக் கண்டறியக்கூடாது. நான் சொன்னதுபோலவே தக்கசாக்ஷியமேதுங்கிடையாது. தொகுதியான சங்கதிகளை நீங்கள் கவனித்தால், மொத்தம் 16 அனுவுக்காகாது. இதர சந்தர்ப்பங்களின் பலன்களை நீங்கள் கவனிக்கவேண்டும். இவற்றினிடையேதான் பிரசுரசுதந்தரம் (தாவா) செக்ஷனால் காக்கப்படவில்லை. பிரசுரத்தைக்கொண்டு எண்ணத்தைக் கொள்ளலாகிறபோது சதந்திரம் கிடையாதென்று

லா சொல்லுகிறது. சுதந்திரார்த்தமாவது — நீங்கள் எல்லாசந்தர்ப்பங்களையும் கவனித்துக்கொள்ளும்போது பிரசாரசுதந்திரம் கொடுக்கிறவர்களாயிர்கள் என்பதாக, பிரசுரசுதந்தரம் உங்களைப்பொறுத்ததாயிருக்கிறது.

## நாலாம் நாள் (16—7—08) விசாரணை.

ஸ்ரீ திலகர் கேட்டுக்கொண்டபடி ஸெர்ச்சில் அகப்பட்ட பேப்பர்களைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி ஜட்ஜி உத்திரவு செய்தபின் ஜூரி அட்ரெஸை சொல்லி வந்தார்.

124-A, 153-A ஸெக்ஷன்களைப்பற்றிய என் கருத்தை உங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். எனக்கு நீட்ளை ரைட்டில்லாமையால் பிராஸிக்யூஷனால் எதிர்பார்க்கப்படும் ஆக்ஷேபங்களுக்கும் ஸமாதானங் கூறவேண்டியதா யிருக்கிறது. பிராஸிக்யூஷனார் ஆக்ஷேபங்களைக் குறித்துக்கொள்ளாமையினாலே, நான் முழு விஷயத்தைப்பற்றியும் சொல்லவேண்டும். முதலாவதாகப் பிராஸிக்யூஷனார் என்னை மட்டிலும் போதுமானதென்னலாம்; ஆனால் அது அப்படிக்கில்லை. 1900-ஆம் பம்பாய் சீவ் ஜஸ்டிஸ் எத்தனத்தில் குற்றம் பொருந்தி யிருக்க வே[illegible]த குறித்திருக்கிறார். எத்தனமாவது (1) உள்நோக்கத்தையும், (2) குற்றமான எண்ணத்தையும் நேராய்க்குறிக்கிறது. எதிர்பார்க்கப்படாததும் அடக்க முடியாததும் ஆகிய புறம்பான காரணங்களினால் நிறைவேறாத போதுதான் (நியாய) எத்தனம் முற்றுப்பெறுகிறது. இக்கேஸில் எத்தன மிருந்தும் தவறிப்போய் விட்டதென்று காண்பிக்க சாக்ஷியமில்லை. நிறைவேற்றம் தவிர்ந்த குற்றமே எத்தனமாகும். சார்ஜின் முதற் பகுதி அநாதாரவானதாகலின், அதில் நான் விடுவிக்கப்படவேண்டும். அநிஷ்டத்தைத் தூண்ட நான் எத்தனித்ததுமில்லை; கவர்ன்மெண்டார் அதைத் தடுத்தொழித்ததுமில்லையாக, நான் எத்தனமேதும் செய்ததில்லையென்பதே உண்மையானது. தூண்டிய சார்ஜின்மாற்ற

மாக எத்தனத்தையுங் கூட்டியிருப்பது தப்பானது. சார்ஜின் இரண்டாம் பகுதியாகிய எத்தனமென்பதற்கு முன்கூறியுள்ளபடி எண்ணமும், நோக்கமும் ஆக இரண்டும் இருக்கவேண்டும். ஒரு செய்கைக்கு முற்பட்டதான மனநிலையே யெண்ணமாகிறது; நோக்கத்துக்கோ இனி அடையும் பயன்பொருளாயுள்ளது. ஒருவன் தன் நடவடியின் பயனைக் கருதியதாகக்கொள்ளும் கிரிமினல் லாப்பிரமாணமானது குற்ற விசாரணையில் தவறுதவழி காட்டியாகாது. ரத்னலால் லாவின்படிக் குற்ற எத்தனமானது குற்றம் நிறைவேறும் தருணத்துக்கு முற்பட்டும் செய்யப்படலா மென்பதைக் காண்பிக்கவும் சில கேசுகளிவை—பினல்கோடின்படி எத்தனங்கள் நிறைவான எத்தனம், குறைவானஎத்தனம் என இருவகைப்படும். குற்றத்துக்கும் எத்தனத்துக்கும் சமதண்டனை கோடில் கொடுக்கப்பட்டவிடத்து, எத்தனம் பூர்த்தியாய் செய்யபபட் டிருக்கவேண்டும். எத்தனத்துக்கு தண்டனை குற்றத்துக் குரியதிலும் குறைவாயுள்ள போது, குறைவான எத்தனம் தண்டிக்கப்போதா மானது. 511-ஆவது ஸெக்ஷன் குறைவான எத்தனம் தண்டிக்கப்படுவதற்கு உதாரணமாயிருக்கிறது. 124-A ஸெக்ஷன்படிப் பூரண எத்தனமானது தண்டிக்கப்பட வேண்டியிருக்கிறது; அதாவது எத்தனமானது குற்றமே செய்யப்படும்படியான மட்டில், ஏதோ சில வெளிப்படையான காரணங்கள் அல்லது காரியங்களுக்கா யல்லாமல் எட்டியிருக்கவேண்டும். ஏதோ ஒன்று இடையூறாய் நேர்ந்ததினலே நான் காரியசித்தி பெறவில்லையென்று பிராசிகூஷனர் எடுத்துக்காட்டவில்லை. என் கருத்தும் போக்கும் முற்றிலும் குற்றமற்றவையென்று பின்னால் காட்டுவேன். நான் போக்கையும் எண்ணத்தையும் குழப்பவில்லை. திருடன் தருமத்தில் பணத்தை செலவிடவேண்டினல், அதுவெல்லாம் திருட்டே யென்றறிவேன். நீங்கள் போக்கை மாத்திரம் எடுத்துக்கொள்ளாமல் போக்கையும் எண்ணத்தையும் ஒன்று யெடுத்துக்கொள்ளக் கேட்கிறேன்;

ஆனால் நீங்கள் சாக்ஷியமின்றிப் போக்கை மட்டும் எடுத்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இக்கேசில் போக்கோ எனக்குக் குற்ற எண்ணமில்லையென்றும், ஆகையினாலே வெகுவாய் நான் அவ்வெத்தனம் செய்ததில்லையென்றும் காண்பிக்கும். எண்ணமும் போக்கும் ஆக இரண்டும் ஒத்துப்போனால், நடவடியும் இரண்டுக்குமிடையே சமரசமாய்க் குற்றமற்றதாக சொல்லப்படவேண்டும். இனி லாவே திருத்திவைக்கப்படலாம்; ஆனால் உள்ளபடி 124-A, ஸெக்ஷனின் எத்தன்மானது பூரண எத்தனமென்றேயாகிறது. மூன்று ராஜதூஷணக் கேசுகளில் பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜிகள் வரையறுத்தலா இதுவாகும்.

இவ்விந்தியலா இங்கிலீஷ் லாவோடு ஒத்தேயிருக்கிறது. முன்காலங்களில் ஜூரிகள் சண்டைபோட்டதின்பேரில் முடிவுக்கு வந்த ஒருவகை ஜூரிலாவிது. இங்கிலாண்டிலே ஜூரிகள் சுயேச்சையான லாவுக்கும் ஜனங்களுக்கும் இடையே நிற்கிறார்கள். ஒருபுறம் நியாயவாதிகளும், மற்றொரு புறம் நியாய சாஸ்திரிகளும் ராஜதந்திரிகளுமாயிருந்து பிரசுர சுதந்திரத்தைப் பற்றிப் போராடியது ஒரு சரித்திரமாயிருக்கிறது. 1792-ஆம் வரையில் ஏழு பிஷப்புகளின் கேஸ் ஒன்றிலும், மற்றொரு கேஸிலுமாக இரண்டு கேசுகளில் ஜட்ஜிகளின் சார்ஜுக்கு எதிரிடையாய் இரண்டு தீர்ப்புகள் மட்டும் ஜூரிகள் கொடுத்துவிட்டு, அவர்கள் சங்கடப்பட்டார்கள். உங்கள் முன்னோர்களே சண்டைபோட்டு ஜெயித்தவர்கள்; ஆகவே இந்தியப்பத்திரிகாசிரியர்களுக்காக அப்படி சண்டைபோடும்படி உங்களைக் கேட்கிறேன். ஸெண்ட் ஆஸாப்கேஸ் விஷயங்களை முற்றிலும் சொன்னேன். அப்போது இங்கிலாண்டில கலக்கமிருந்தது. இப்போது இந்தியாவில் ஒருவிதக் கலக்கமுள்ளது. கவர்ன்மெண்டோ வெகுபேர்களை வேட்டையாடிப் பிடித்துக்கூடுமானமட்டில் அவர்களை மேய்த்[illegible]கி செய்கின்றது. காலமோ அதே மாதிரியாய்

நேர்ந்திருப்பதால், இங்கிலாண்டில் ஜூரிகள் அப்போது பாக்ஸ் அவதாறு சட்டம் பாசானதற்கு முன்னே நடந்துகொண்டதுபோலவே நீங்களும் நடவுங்கள். ஸெண்ட் ஆஸாப் கேசில், பார்லிமெண்டு சீர்திருத்த விஷயம் பிரசுரமானதே குற்றமாகக் கொள்ளப்பட்டது. உண்மையில் எண்ண மிருந்ததாவென்று ஜூரி தீர்மானிக்க வேண்டியதென்று எர்ஸ்கின் வற்புறுத்தினர். எர்ஸ்கின், ஜூரி, ஜட்ஜி யிம்மூவருக்கும் நடந்த சம்பாஷணையைப் பார்வையிட்டு அக்கேசைப் பார்லிமெண்டில எடுத்துக்கொண்டதன்மேல் 1792௵ பாக்ஸ் அவதாறு சட்டம் பாஸாயிற்று. குற்ற எண்ணத்தின் சாக்ஷிய ருஜுவு அவசியமே யென்றது ஸர்வத்திரப் பிரார்த்தனையாயிருந்து, அந்தச் சட்டம் அப்படியே நிறைவேறியது. ஜட்ஜிகள் பிரமாணப் போக்கிலிருந்துவிட்டார்கள். நியாய பரிபாலனமோ பொறுக்க முடியாத கடுமையாய்விட்டது. தண்மையுள்ள ஜட்ஜிகள் கூடக் கட்டுறுதி கொண்டார்கள். பிறகு வந்த சில கேசுகளில், அந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட புதிய அதிகாரப் பழக்கமானது நன்மையாகவே முடிந்துவிட்டது. 1898-௵ இந்தியாவில் ராஜதூஷணக் குற்றத்தை ஒரு மாஜிஸ்ட்ரேட் விசாரிக்கலாயிற்று; ஆனால் ஜூரி லாபம் உள்ளதினால் பம்பாய்க்கே இக்கேஸ் கொண்டுவரப்பட்டதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன். எர்ஸ்கின் பேச்சுகளிலுள்ள பெரிக்கேசில் தாவா எழுத்து விஷயம் வெகுவாய் சீர்திருத்தத் தேவைகளைப் பற்றி இந்தியாவில் எழுதுவதைப் போலவே யிருக்கிறது. காலம் கெட்டதா யிருந்தும், அதற்காக ஜட்ஜி தெளிவாய் சொல்லியதுபோலக் குற்ற எண்ணம் எடுத்துக்கொள்ளப்படவேண்டி யிருந்தும் 1792௵ ஆக்டின்படிக்குப் பெரி (Perry) விடுவிக்கப்பட்டார். ரீவ்ஸ் கேஸில் பார்லிமெண்டே பிராசிகூஷனுக்கு ஸாங்ஷன் செய்தும், பிரசுர நடை அக்கிரமமானதா யிருந்தாலும் நோக்கம் நல்லதாகையால் குற்றமில்லையென்று ஜூரியார் தீர்த்துவிட்டார்கள். ஆகவே, இக்கேசிலும் நீங்கள்

என் கருத்துகளை அங்கீகாரம் செய்யலாம். ஆனால் உங்களுடைய சுதந்திரமே யென் சுதந்திரம். நீங்கள் எனக்கு விதிக்கும் நிபந்தமே, உங்களில் சிலர் நாளை கவர்ன்மெண்டுக்குப் பொருந்தாத திருத்தக் கருத்துகளைத் தெரிவிப்பீர்களானால், உங்களையும் வாதிக்குமே. பின்ஸ் கேசில் குற்றவாளி தங்களுக்கெல்லாம் சமாதானமே தேவையென்றும், ரத்தம் சிந்துவது கொடுமையான தென்றும் கூறியிருந்தாலும், ரத்தம் சிந்த வேண்டுமானால் அவசியமான ராஜரிக சீர்திருத்தத்துக்கு செலுத்த வேண்டியதுதா னென்றதாக ராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது; ஆனால் அப்படிப் பேசியது நன்னோக்கமே யென்று ஜூரியார் எண்ணியதின் பேரில் அவரை விட்டொழித்தார்கள். அட்வோகேட் ஜெனரலின் ஆரம்பப் பேச்சிலேயே இக்கேசுகளுக்கு ஒப்பிட்டுக் குறித்த பெரிக் கேசில் குற்றவாளி கவர்ன்மெண்டையே முற்றிலும் மாற்றவேண்டியும் விட்டொழிக்கப்பட்டார். குற்றவாளிகள் சிக்ஷை யடைந்த கேசுகளும் உள்ளதென்பதில் சந்தேகமில்லை; ஆனால் நான் விவரித்திருக்கிறபடியே எத்தனம், எண்ணம் இவற்றிற்கு முடிவாய்ப் பொருள் கொள்ளப்பட்டிருக்கிறதிலும் சந்தேகமில்லை. எனெண்ணம் நல்லதானால், நான் சீர்திருத்தம் வேண்டியிருந்தால் குற்ற எண்ணம் கிடையாது. இங்கிலாந்தியரின் கம்பீர நடவடிக்கைகளை அநுசரித்தே நானும், மற்ற கல்விமான்களும் நடந்துவருகிறோம். இப்பெருஞ் சீர்திருத்த விவகாரத்தைத் தடைபடுத்தாமல், இங்கிலீஷ் ஜூரிகளின் போக்கைப் பிடித்தேறி இதற்கு உதவி செய்யுங்கள். இந்நாடு திருத்த முடக்கிலிருந்து வருவதால் நீங்கள் சுதந்தரத்தில் கண்ணுள்ள ரக்ஷகர்களாகவும், விருத்திகாரநேயர்களாகவும் நடந்துகொள்ளும்படிக் கோருகிறேன். உங்கள் கடமைகளை உணருங்கள். [illegible]னேககங்களிலேறிய ராஜரிகக் கலகக்காரர்களைக் காட்டிற்ற ஜூரிகளைவிட யாரிருக்கின்றனர்? நாங்கள் (இந்தியர்) கஷ்டங்களைப் பற்றி முறையிட நியாயமிருக்கிறது. எங்களை யாளவந்

இருக்கிற ஜாதியாரில் ஒரு பகுதியார் அதிகார நிர்வாகத்தில் அதிக அக்கறையுள்ளவர்களா யிருந்து விட்டாலும், மற்றவர், ஆங்கிலேயர் ராஜரிக சண்டைக்காரப் பாரம்பரையாரா யுள்ளதினால், ராஜரிகத் திருத்தங்களை ஆதரிப்பார்க ளென்பதைக்கான சௌகரியமாயிருக்கிறது. இந்திய ஜூரிகள் திவ்யமான கடமையின் கருத்தை அறிந்து கொள்ளத் தவறினால், எக்ஸிகூட்டிவ் கவர்ன்மெண்டார் தாங்கள் குறித்த எவனையும் விசாரணையில்லாமலே அந்தமானுக்கு அனுப்பிவிடும் அதிகாரத்தைத்தாமே தடையின்றி யெடுத்துக் கொள்வார்கள். ஜூரியார் எனக்கு நன்மைக்க முன்வந்தென்று நினைத்தால், அவர்கள் என்னை விட்டுவிட வேண்டுமேயன்றி அநீதிக்கிடமாகக் குற்றங்கூறிவிட்டு தாவாவிஷயமாய் சிபாரிசுசெய்ய வேண்டியதில்லை. காவலின்பாரன்ஸ் கேஸில் சுற்று சந்தர்ப்பங்களை யெல்லாம் கவனிக்கும்படி ஜூரிக்கு சொல்லப்பட்டதன்மேல், குற்றவாளிகள் "ஒவ்வொருவனும் தன்செய்கைகளின் பலன்களைக் கருதியவனாகக் கொள்ளப்படுவான்" என்னும் பிரமாணப்புறம்பாக விடுவிக்கப்பட்டார்கள்.

இங்கிலாண்டில் நேர்ந்ததுபோலவே, அமெரிக்காவிலும் காலனி (குடியேற்றநாடு)யில் சுவாதீனம் ஸ்தாபிக்கப்பட்டதற்கு முன்பாக நேர்ந்தது. ஜென்ஜெர்கேஸ் ஒரு பெரிய அமெரிக்கக் கேஸாயுள்ளது. அக்கேஸில் சார்ஜ்விஷயம் உள்ளுறைகளாயிருந்ததுமன்றி, உண்மையே மிக்கஅபாயகரமான அவதூறை விளைவித்ததாக சொல்லப்பட்டது. உள்ளுறைகளின்கருத்தை உண்மையில் அவமதிக்கப்பட்டதின்பேரில் ஜென்ஜர் விடுவிக்கப்பட்டார். 124 A செக்ஷனைப்பற்றி சொல்லிவிட்டது. 153 A செக்ஷனைப்பற்றியும் சொல்லவிருந்தாலும், கொஞ்சம்பொறுத்து சொல்ல விரும்புகிறேன். டிபன்ஸ் பாயிண்டுகளின்படி என்ன பிரயோசனத்துக்காக (தாவா) விஷயங்கள் எழுதப்பட்டன? தூஷணத்தைத்தூண்டவா, அல்லது வேறெந்த கிரமமான

காரியத்துக்காக? ஸெண்ட் ஆஸாப் கேசில் குற்றங்கண்ட துண்டுப் புத்தகம் அதன் பிரயோசனத்தைக் குறித்த ஒரு சிறு முகவுரையோடிருந்தது. அம்முகவுரையின் பலத்தின் பேரிலேயே, எர்ஸ்கின் விடுதலடைந்தார். மேமீ 12வ யுள்ள முதல் விஷயம் எழுதப்பட்ட பிரயோசனமும் தெளிவாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏன் அவநம்பிக்கை கொள்ளவேண்டும்? அதில் அவநம்பிக்கை கொள்ளும்படி செய்ய, பிராசிகூஷனில் என்ன சாக்ஷியம் கொண்டுவரப்பட்டது? இவ்விஷயமோ ஆங்கிலோ இந்திய பேப்பர்களுக்கு பதில் சொல்லவும், கவர்ன்மெண்டுக்குக் கிரமமும் தகுதியுமானயோசனை சொல்லவும் எத்தனித்ததாயிருக்கிறது. கவர்ன்மெண்டு ஆபீசர்களிடம் போய், அவர்களுக்கு ரகசியாலோசனையாக சொல்லியிருக்க வேண்டுமென்னும் சொல்லலாம்; ஆனால் விசேஷத்தில் பத்திராசிரியனாயிருக்கிறேன். உத்தியோகஸ்தர்களிடம் காத்துக் கொண்டிருக்கும் வழக்கமெனக்கில்லை; என் விசிட்டு (போய்க்காணல்)கள் என்னவாய் ஏற்கப்படுமென்பதும் தெரியாது. என்னுடைய வேலையோ (பொது) ஜனாபிப்பிராய விளம்பரக்காரனா யெழுதுவதுதான்; அக்கடமையை யெழுத்தால் நிறைவேற்றியதே நான் செய்ததாகும். இந்தியாவில் எவ்வகை பேப்பரிலும் மேலான பெருந்தொகைப் பிரதிகள் செல்லும் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியனாயிருக்கிறேன். அக்கிரமக் கொடுமைகள் செய்யப்பட்டபோது காலங் கெட்டதாயிருந்ததால், நான் நினைத்ததை வெளியிடவேண்டியிருந்தது. வேறெதற்காவது அநுகூலமாய் நான் பேப்பரைத் தொடங்கவில்லை. (பொது) ஜனாபிப்பிராயத்தை வெளியிடவோ, தெரிவிக்கவோ அது ஏற்பட்டது. இக்கேசிலும் என்னபிப்பிராயத்தை வெளியிடவேண்டியிருந்தது. பொதுக்காரிய நிறைவேற்றத்துக்காக யெழுதியதேயன்றி, கெடுதி யுணர்ச்சிகளைத் தூண்டுவதற்கல்ல. மனிதன் தவறுக்குரியவன்; சம்பவத்தின் பிறகு சாய்காலி (easy chair) யில் சாந்தமாயிருந்து குறை கூறு

ஷேவானின் அங்கிகாரம் பெறலாகாதபடி என் விஷயத்திலும் இக்குமக்குமாய் வார்த்தைகளிருக்கலாம். நான் தப்பிதங்கள் செய்திருக்கலாம்; ஆனால்எனக்குஅயோக்கியமான எண்ணமிருந்ததென்று சொல்வது அன்பின்மையும், தாராளமின்மையும்.கடுமையுமாகும் ஜூரியார் தங்களை என்னிலைமையில் வைத்துக்கொண்டு, பிறகு என்னோக்கங்களையும் எண்ணங்களையும் நிர்மாணிப்பது அவசியமாகும். நான் விஷயமெழுதிய சந்தர்ப்பமாதிரியே உங்கள் மனதிலுதிக்கவைக்கும் பேப்பர்களை யிதோ படித்துக் காட்டுகிறேன். முன்னெப்போதும் நீங்கள் என்னனுபவங் காணாதிருக்கலாம்; ஆனால் நீங்கள் என் தன்மையில் நுழைய முயலவேண்டும். இங்கிலாண்டு போன்ற ஒற்றுமை நாட்டிலும் கக்ஷிக ளிருக்கின்றன; இந்தியாவிலும் கக்ஷிகள் இருக்க வேண்டியதுதான். தாராளப் பிரசுர விலாசமாகாது ஒவ்வொரு விஷயமும் பல அபிப்பிராயாம்சங்களிலும் விவாதிக்கப்படுவதாகும். இக்கேசிலுங்கூட (பாம்ப்)கொடுமைகளைப்பற்றிக் கேள்வியுமில்லை; அவற்றைப்பற்றிய துக்கப்பாட்டிலும் வித்தியாச அபிப்பிராயமுமில்லை. ஆனால் அப்பேர்ப்பட்ட கொடுமைகள் திரும்பவும் நேர்வதை நிறுத்தும் வகையைக்குறித்த அம்சவிஷயமாய் அப்படியில்லை. அப்போதைய நிலைமை என்னவாயிருந்ததென்பதைப் பேப்பர்கள் காண்பிக்கும். அவ்வாக்குவாதம் ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகளால் ஆரம்பிக்கப்பட்டது. நானெழுதியதை யோசிக்குமிடத்து, அவ்வகைப் பேப்பர்களின் வாத விஷயத்தையும நீங்கள் யோசிக்கவேண்டும். இனி (பாம்ப்) கொடுமைகளைத் தடுக்கும் தந்திரம் பொதுவிஷயமாக, அதி நியாய விவாதமாகியது. இந்தியாவில் ஒவ்வொரு கக்ஷியாரும இவ்விஷயமாய் விவாதித்தனர். இந்தியாவில் (தற்கால) நிலைமையை விருத்திபடுத்தும் முயற்சிகள் நடந்தேறி வந்தாலும், பல ஜனங்களாய்ப் பிரிந்திருக்கிறார்களேயன்றிக்கொள்கைகளைப்பற்றிய கக்ஷிகளில்லை. பேப்பர்களைவைப்பதினால் ரிப்ளைரைட்டை (விடையுரிமை)யிழக்

கலாதுமென்றுளச்சரிக்கப்பட்டதும் அறிவேன்; ஆனால் பிட்னைரைட் போனாலும் உண்மையையும், அதை நிலை நிறுத்துவதையும் நாடினேன். பயனீர் பேப்பர் பாலி ஸித்தையைப்பற்றி யெழுதியது; நானும் அதன் ரகசியத்தையும், அதைப்பற்றி யினத்தவர் நினைத்ததையும் எழுதினேன். ஒரு கலக்கமான சரியை சப்பனித்ததின் பேரில் எழுதவேண்டிய கடமையாய் "தேசமெனர்ப் பாக்கியம்" என்றவிஷயம் வரையலாயிற்று. இப்போது மாத்திரமல்ல; அப்போதே நான் விசனப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறேன். அப்போதைய அபிப்பிராயமானது எல்லா இந்தியக்கலக்கக்காரர்களும் காங்கிரஸ் முதல் ஒவ்வொருவரையும் இகழத்தொடங்கிய தாகவும், எவ்விதமான கலக்கத்தையும் அடாவடியால் அடக்கிவிடவேண்டுமென்றதாகவுமா யிருந்தது. "என்னிலைமையில் நீங்களிருந்தால் என்ன செய்வீர்கள்—மறுக்கமாட்டீர்களா? வைக்கப்பட்டுள்ள பேப்பர்கள் எங்குமுள்ள இந்திய இனத்தவரின் கருத்து இதுவென்றே காண்பிக்கின்றன. நான் பொது ஜனாபிப்பிராயத்தைத் தெரிவித்ததன்றிக்கெட்ட எண்ணத்தைத்தூண்டவில்லை தலைவனாகவும், பொதுஜனாபிப்பிராயப் பிரசாரகனாகவுமுள்ளபடி இது என்கடமையாயிற்று. ஜூரியார் இவ்வபிப்பிராயமசத்தைக் கொண்டு என்னோக்கங்களைத் தீர்மானிக்கவேண்டும். இத்தொடரில் சில பகுதிகளை மட்டுமே பயனீர் பேப்பர் வெளியிட்டதென்பது கருத்து; ஆனால் இன்னும் இவ்வழியே போங்கள். காங்கிரஸ் என்ன பிரயோசனத்துக்காதமட்டில் முறையிடுகிறது—சீர்திருத்தத்துக்காகவே. இதுகாரணமல்லவென்னும்நிர்வாக அதிகாரம் (பியூரோக்ரஸி) ஒருமேஜையை சுற்றியிருந்த பத்துபேரும் எத்தனை பேரென்று கேட்கப்பட்டபோது ஒன்பது பேரென்ற கதைபோல் தன்னை மறந்துபோயிருக்கிறது. எதிரிடைக் கருத்தாவது பாம்புகளை நிறுத்தப்படவேண்டுமானால், நிர்வாக அதிகாரமானது காங்கிரஸ் கலக்கம்போல அடக்கப்படவேண்டுமென்பதாயுள்ளது. முடிவோ கவர்ன்மெண்டில் நின்

கிறது; ஆனால் ஒவ்வொரு கக்ஷியும் எவ்வளவு வேறுமானதாயிருந்தாலும் தான் முறையிட்டுக்கொள்ளத் தக்கதாயிருக்கிறது. என் முறையை சொல்லிக்கொண்டதில், 153-A ஸெக்ஷன் பிரகாரம் ஒரு வகுப்பார் மேல் மற்றொரு வகுப்பாரை ஏவியதாக சாட்டப்பட்டிருக்கிறேன். அங்கே (வங்காளத்தில்) பாம்பின் காரணங்களைப்பற்றியும், அதைத் தடுக்கும் ஏற்பாடுகளைப்பற்றியும் (பாம்ப்கேஸ்) விசாரணை நடந்துகொண்டிருக்கிறபோதும், இன்னும் விவாதமும் நடந்துகொண்டே வருகிறது. உண்மையில் அவ்விவாதம் வாரத்துக்கு வாரம் அதிகரித்துக்கொண்டே போகிறது. முதலில் ஆங்கிலோ இந்தியாபிப்பிராயமும், பிறகு ஆங்கிலேய அபிப்பிராயமும் கிளம்பியபடி இரண்டு சட்டங்கள் பலவகவே, என் உரிமைக் கிணங்க எழுதுவது கடமையாயிற்று. ஜூரிமாரே எழுதப்பட்டவைகளாயிருந்தால் எழுதியிருக்கமாட்டார்களா? காலம் கலவரைப்பட்டிருப்பதாக, அவர்கள் மகாசாரம் அல்லது பூர்விக சரித்திரம் என்னும் விஷயமாய் எழுதுவார்களா? இவ்வியாசங்களையெல்லாம் பிராசிகியூஷன் ஜூரி முன்பாக வைத்திருக்க வேண்டியிருக்க, அப்படி அது செய்யவில்லை. ஸெடிஷன் ஸெக்ஷன்களோடு முழுவிஷயங்களையும் அவ்வகையார் கோர்த்துவைத்துவிட்டு, எனக்குக் குற்றம் செய்யும் எண்ணமில்லையென்பதைப் பொய்யாக்கி வைக்கும் சுமையை என்பேரிலேயே போட்டுவிட்டார்கள். நான் பேப்பர்களை வைக்கவொட்டாதபடிக்கும் பிராசிகியூஷனார் பார்த்ததன்றி, விஷய நடையைக்கொண்டே சிக்ஷிக்கும்படி ஜூரியாரைக் கேட்டுப் பார்த்துவிட்டார்கள். மிக்க அதிருப்திகரமானவிதமாய் விஷயங்கள் மொழிபெயர்க்கப்பட்டதில், புதுமையும் பரிகாசமுமான உள்ளுறைகள் கண்டறியப்பட்டன. திரான்ஸ்லேட்டருக்கு உதவியாக அச்சுப்பிழையும் கூடிக்கொண்டது. கிங் (King) என்னும் பொதுப்பெயரானது பெரிய K எழுத்தால் சிறப்புப்பெயராய்விட்டது. கொலையென்னும் பிரயோகமே போதுமானவிடத்தும, கொடுங்

கொலை யென்று மொழியிடப்பட்டது. ஜட்ஜியவர்கள் சர்க்கார் மொழிபெயர்ப்பை ஆக்ஷேபிக்கக்கருதியதுண்டாவென்று என்னைக்கேட்டதற்கு, உபகாரார்த்தமாய்க் கேட்கவேண்டியது தானென்கிறேன். திரான்ஸ்லேட்டர் ஆபீசில் தயாரான தப்பு மொழிபெயர்ப்பினால் பரிகாசக்கூட்டத்திலகப்பட்டதுபோல என்கருத்து விகாரமடைந்துவிட்டது. ஆகவே, நானதை ஆக்ஷேபித்துப் புதிய மொழிபெயர்ப்புகளையாவது கொண்டுவரட்டும், அல்லது என்னை விட்டொழிக்கட்டும் என்று கேட்கிறேன். உண்மையில்பிராசிக்யூஷனுக்குஆதரவாகக்கொள்ளப்பட்டது கற்பித மொழிபெயர்ப்புகளேயன்றி அசல் விஷயமாயில்லை. சில தப்புகள் காணப்பட்டால், அதுவே விரோதமாகாதா. மறக்கப்பட்ட முக்கியமொழி கண்டறியப்பட்டன. முழுமொழிபெயர்ப்பையும் இருமாய்த் திருத்தித்தருவது என்வேலையல்ல; மற்றப்பங்களோ மிக்ககெடுதியானவை. அது என் தப்பாகாமல், என் துரதிஷ்டமாயுள்ளது. மராத்தியானது வளர்ந்துகொண்டே வருகிறது. பழைய அகராதிகளோ தற்காலத்து பிரசங்கிகளுக்குமுன் நிற்காத பழைய கோட்டைகளைப்போன்றவை. பிராசிக்யூஷனர் புதிய மொழிபெயர்ப்பை வைக்கப்போவதில்லை; அல்லது மற்றொரு சாக்ஷியை அழைக்கப்போவதில்லை. அப்படியானால் உங்களுக்கு முன்பாக என்னை யிழுத்தவிடத்தும், மயிரில் கட்டிவிட்டிருக்கும் வாள் என் தலைமேல் தொங்கிக்கொண்டுள்ளவிடத்தும் சாட்டுரைகள் என்னைப்போலவே பிறருக்கும் சங்கடமானவையாயிருந்தாலும், நான் மறுக்கக்கடமைப்பட்டவனாயிருக்கிறேன். கொடுமையென்பதற்கு வதை யென்பதும், கொலை யென்பதற்கு வஞ்சக்கொலை யென்பதும், பொல்லாப் பிசாசு என்பதற்குக் கொடும் பகையாளி யென்பதுமாகிய இவை போன்ற விஷயங்கள் நான் கருதிய பயனை விகாரப்படுத்துகின்றன. இப்பேர்ப்பட்ட மொழிபெயர்ப்புகளைக் கொண்டு ஒருவனைக் கண்டிப்பது கூடாமையாயிருக்க வேண்டும். மேலும் முழுமொழிபெயர்ப்பும் ஜூரிகளு

...து முன்பாக ஒரு மூட்டையாக வைக்கப்பட்டிருக்கி
றது.

ஜூரிமாரே, விஷயங்களின் அசலைப்படிக்கப் பாருங்
கள். இதோ அசல் காப்பிகள்; முன்சொன்ன தப்புகளை
யும் கவனியுங்கள். மொழிபெயர்ப்புகளிலே மொழிபெ
யர்த்தோரால் கொடுமைகளைச் செய்தோரைக் காட்டும் இட
த்து சாந்தவார்த்தைகளையும், கவர்ன்மெண்டைக் காட்டு
மிடத்து வலுத்த வார்த்தைகளையும் உபயோகித்திருக்
கிறது. கருத்தை நம்பிக்கையாய்த் தெரிவிப்பதுமல்லா
மல், எதிரிடைக் கொள்கைக் கிடமாகப் பொருளைக்
கொண்டு வராதபடி ஜாக்கிரதையா யிருப்பது மொழி
பெயர்ப்போரின் கடமையாகும். மொழிபெயர்ப்புகள்
ஏன் தப்பாயிருக்குமென்றும் ...லாம். கார
ணமாவது, பத்திரிகாசிரியர்கள் ...வகளின் எல்லா
வகைகளிலும் எழுதவேண்டியவர்களை. பழையமராத்தி
இதோடு எரி வரமாட்டாது. ஏகபோக ராஜ்யம்
(Monarchy) என்பதற்கு மராத்தி வார்த்தை யிருக்
கிறது; ஆனால், ஜனாபிப்பிராய ராஜ்யம் (டிமாக்ரஸி)
என்பதற்கில்லை. அநேக வார்த்தைகள் உண்டுபண்ணப்
படவேண்டி யிருக்கின்றன. இங்கிலீஷோ விஸ்தார
மாய் விருத்தியாக்கப்பட்ட பாஷையா யிருக்கிறது;
ஆனால் மராத்தி அப்படியில்லாததுமன்றி நவீன வியா
பாரம், உயர்தர ராஜரிகம், அரசு செட்டு முதலிய விஷ
யங்களுக்கு உதவமாட்டாது. இங்கிலீஷில் எண்ணங்க
ளுதிக்க, அவற்றை மராத்தியில் எதொருவகையிலே
னாம் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. ஆங்கிலேய (Con-
struction) இணைப்பும் அமைக்கவேண்டி யிருக்கிறது.
மராத்திவரை வோர் அன்றை வரையில் அமைந்தவர்
களா யிருக்கவேண்டி ஒரு கண்ணை இங்கிலீஷின் பேரி
லும், மற்றொருகண்ணை ஸமஸ் கிருதத்தின் பேரிலும்
வைத்திருக்கின்றனர். இவ்வாறே மொழிபெயர்ப்புகள்
தப்பா யிருக்கின்றன. இன்னும் மராத்தி ஜனங்களின்
உணர்ச்சிகளைத் தீர்மானிப்பது பிரயாசை. பாஷை,

இவை நிலைமை, அவர்களின் உணர்ச்சிகள் இவைகளே பார்க்கப்படவேண்டும்; ஏனெனில் தேசீய பக்ஷமாய்ப் பலவற்றைத்துக் கப்புறம் படிக்கப் படுவதில்லை; ஆனதினாலே பிராசிகூஷனர் சில (மராத்தி) வாசகர்களின் மனதுகளில் விளைந்ததைக் காண்பிக்க சாக்ஷிபோட்டிருக்க வேண்டும். இவ்விஷயங்களைப் படிப்போரின் உணர்ச்சிகளும் ஆவல்களும் என்னவோ!

## ஐந்தாம் நாள் (17-7-08) விசாரணை.

மேற்கூறியபடி ஆங்கிலோ இந்திய பேப்பர்களின் விவாதக்கிளர்ச்சியிலெழும் விஷயங்களுக்குப் பதிலாக விவகரித்திருக்கும் வழுவையும், இதன் பேரில் மராத்தி வாசகருக்குண்டாகலாகும் உணர்ச்சிகளையும் கூடிய சந்தர்ப்பங்களாகக்கொண்டு போக்கையும், எண்ணத்தையும் பற்றிய முடிவுக்கு வருவதில் யோசிக்கவேண்டும். அவை மனிதனுடைய நடவடிக்கை மாற்றமடையும் முறையிலும் சம்பந்தப்பட்டவையாகின்றன. ஏன் இவ ஜனங்களுடைய நன்மைக்கு விரோதமாய் கவர்ன்மெண்டுக்கு யோசனை சொல்லப்படுமானால், அதற்கு பதில் சொல்லவேண்டியது என் கடமையாயிருக்கிறது. விவாத விஷயம் இனத்துக்கு இனமாயில்லை. கக்ஷிகளோ ராஜ்ய நிர்வாகக் கக்ஷியும், காங்கிரஸ் கக்ஷியுமாயிருப்பதில் ஜாதி வித்தியாசங்கிடையாது. ஜாதிய விவாதமாகக் காண்பிக்க எத்தனிக்கப்படுமென்று எனக்குத் தெரிந்திருந்தாலும், இங்கிலாண்டிலே புள்ளதுபோல உண்மையில் நன்மை ம..பபுள்ளது. பிராசிகூஷனுல் வைக்கப்பட்ட விஷயத்திலேயே "இரட்டைக்குறிப்பு" என்பது இருகக்ஷிக்காரருக்கும் எச்சரிக்கையாயுள்ளது. தற்கால சித்திரத்தினுல் தடுமாறிப்போகவேண்டியதில்லை யென்று ஜனங்களுக்கொரு யோசனைக் குறிப்பும், அக்கிரமமான பிரசுரத்தைப்பற்றி யிரண்டு சட்டங்கள் , செய்யப்போன கவர்ன்மெண்டாருக்கு ஒரு யோசனைக் குறிப்புமாக இரண்டாமெழுதப்பட்டது. ஜனங்களிலும்கவர்ன்மெண்டுக்கு அதிகமாக சொல்லவேண்டியதை நிறுத்து

தற்கில்லை. பத்திராசிரியனுயுள்ள வகையில் அவசரம் பற்றி வார்த்தைகளை யெடைபோட்டுப்பார்க்க சாவகாசமில்லாமல் ஆவசியகமாக நான் செய்யவேண்டியதாயிற்று. வாராந்தரம் 200 பேப்பர்களைப்பார்க்கும் எனக்குள்ளபடி அவசரந்தான், எல்லா பேப்பர்களையும் படிக்க உங்களுக்குக் காலமுமேற்படாது. நானிருக்கும் ஸ்திதியில் எனக்கும் பொறுக்காது. பாபயின் சுருக்க விரதனைப்பற்றிய அம்சங்களொன்றாக, மற்றது அதைத்தடுக்கும் வழிகளாகும். ஒரு கக்ஷியார் ஒரு விவரமும் பரிகாரமுமாய்க்கூற, மற்ற கக்ஷியார் வேறொன்றைக் கூறலாயிற்று. கோர்ட்டு ராஜரிக சங்கமல்லாமையின், என்பேரால்ஜூரிமாரை ராஜரிகஸ்தர்களாகத் திருப்பிக்கொள்ளுவதல்ல; மேற்கூறிய ஈர்ப்பு (Tug of war) வில் என்கருத்துகளைக் காட்டல் தருகியில்லையாவென்று பார்க்கக் கேட்கிறேன். பிராசிகூஷனர் விவகாரத்தின் ஒரு முனையைக் காட்டினார்கள்; ஆனால் சாந்திரீகப் பிரயாணத்தின்படி யிருமுனையிலும் சமவலுவுகள் ஏற்படாவிட்டால் இழுப்பேற்படமாட்டாது. இங்கிலாண்டிலே ராஜரிக விவாதங்களிலுள்ளபடி தாராளப் பிரசுரத்தால் விளையும் அநுகூலங்கள் மற்ற பிரதிகூலங்களை யெல்லாம் மேற்கொண்டிருக்கின்றனவே.

என் முதல் விஷயம் மேமீ 12உ வெளியிடப்பட்டது. அதற்குமுன் நான் எக்கருத்தையும் தெரிவிக்காமல் 8 நாள் காத்தேன். பதில் மாதிரியானது கோர்ட்டுநிலை உள்ள சாந்தத் தன்மையாலன்றிப் பத்திராசிரிய ஸ்தானத்து வேகத்தன்மையில் தீர்மானிக்கப்படவேண்டும். நானுணர்ந்ததுபோல, அவர்கள் உணரப்பார்க்கவேண்டும். பேப்பர் விஷயங்கள் (1) ஆங்கிலோ இந்திய பேப்பர்களின் அடி, (2) இந்தியபேப்பர்களின் பதில், (3) ஹோம் (பிரிட்டிஷ்) பேப்பர்களின் வியாக்கியானங்கள், (4) மராத்தி பேப்பர்களின் கக்ஷிகள் என நான்கு வகைப்படும். என் குற்றக் கூற்று தடுக்க

முடியாத எதிரொலியாகும். மேமீ 7உ பயனீரில் குற்ற மற்றவர்களென்றும் பாராமல் தலைவாங்கி விடும்படி சிபாரிசு செய்திருப்பதையும் பாருங்கள். ஏஷியன் என்னும் பேப்பர் எதிரிலகப்படும் ஒவ்வொரு வங்காளியையும் சுட்டு விடும்படிக் கிங்ஸ்போர்டுக்கு சொல்லியது. இங்கிலீஷ் மேமேனே சுதேசியக் கலகக்காரர்களை நடுத்தெருவில் நிறுத்தித் தோட்டிகளைக் கொண்டு சவுக் காலடிக்கும்படிக் கூறியது. இப்படிக்கு இன்னும் அநேக பேப்பர்கள் கடுமையா யெழுதுவதால், அதற்குத்தக்க உரப்பாய்த் திருப்பி யெழுதவேண்டியதா யிருக்கிறது. வங்காளி பத்திராசிரியரையே பயனீர் பத்திரிகை யெதிர்த்திருக்கிறது. அதாவது ஒரு விழாக்கூட்டத்தில் அநேக விவாதிகள் கூடிப் பேசியதில் சில ஆங்கிலேயர் இந்தியக் கக்ஷியோடும், சில இந்தியர் ஆங்கிலோ இந்தியக் கக்ஷியோடுங் கலந்தார்கள். ஆங்கிலோ இந்திய பேப்பர்களைவிட நாமெழுதிய விஷயங்கள் சாந்தமா யிருக்கவில்லையா வென்று ஜ[illegible] கேட்கிறேன். அப்பேர்ப்பட்ட எழுச்சியின் மேல் யார்தான் வாய்மூடிக் கொண்டிருப்பார்? இவ்வெழுச்சிக்கு யார் உத்திரவாதி? ஆங்கிலோ இந்திய பேப்பர்கள் மிக்க நிந்தனை நடையில் இந்தியத் தலைவர்களைக் குற்றங்கூறிக் கண்டித்துப் பேசி யிருக்கின்றன. இந்தியப் பத்திராசிரியர் மானவர் பிறவியரல்லரா? அவர்கள் அமைதியை விட்டு ஆத்திரங்கொள்ளலாகாதா? நெடுகக்கொடுமைகளும், விவாதமும், பெரும் பொறுமையான பதிலின் அவசியமும் துரதிஷ்டவசமாய் நேர்ந்தன.

---

தாவாமராத்தி விஷயங்களும், அவற்றின் மொழி பெயர்ப்புகளும் இவை—இந்தியாவில் ராஜரீகக் கக்ஷியார் பரிபாஷையுமுள்ளது; மற்ற கக்ஷியாருக்கும் அப்படியே. கவர்ன்மெண்டார் ஒரு கக்ஷியை அழுத்தி மற்றொன்றுக்கு சுதந்திரத்தைக் கொடுத்திருப்பது நியாயமாகமாட்டாது. மெஸஸ் தாதாபாய் நவ்ரோஜி கம்பெனியார் (காங்கிரஸ் கக்ஷியார்) நாட்டின் நன்மைக்காகக் கட

வளால் நிர்ணயித்துவிடப்பெற்றவர்கள். எங்கள் எடுப்பு சரியானதென்ற நம்பிக்கைப்படி வெற்றி பெறுவோம். ராஜகாரிய நிர்வாகக்கக்ஷியாரும் தாங்களில்லாவிட்டால் இந்தியா பிழைக்கமாட்டாதென்றும், காட்டுக் கட்டிடபோல் கலேந்துவிழுமென்றும் உண்மையாய் நம்புகிறார்கள். உண்மையும், நாகரிகமும், விருத்தியாதரவுகளும்போல சில ஆங்கிலோ இந்தியரும், சில பார்லிமெண்டு மெம்பர்களுங்கூட எங்கள் பக்ஷத்திலிருக்கிறார்கள். இக் கருத்துக்களையே சென்ற 28-வருஷகாலமாய்க் கேசரி போதித்துவந்தது. என் வாதங்கள் முன்னமே மற்றவர்களால் கூறப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், இவ்வழியிலேயே என் போக்கெல்லாம் ஒழிக்கத் தீர்மானித்துக்கொண்டேன். ஒவ்வொரு வாதமும் ஆதாரங்கள் கண்டுபிடிக்கக் கூடுவதில்லை; ஆனால் பத்திரிகாசிரியர் தம்மாலானமட்டில் ஒவ்வொரு தடவையும் வித்யாதந்திர விசேஷத்தினால் முழுவிவகாரப் போக்குகளையும் [illegible] வாசகருக்கும் பேப்பர் ருசிக்கும்படியாகசெய்து வைக்கவேண்டியிருக்கிறது. விஷயங்களிலடங்கிய அம்சம் ஒவ்வொன்றுக்கும் மேற்காட்டியபடி சாஸ்திரப் பிரமாணமும் எடுத்துக் காட்டக்கூடும். மராத்திவாசகர்கள் ஒரு விஷயத்தில் அடங்கியிருப்பதைமுன்னமே அறிந்திருக்கிறார்கள்; ஆனால் ஒருவேளை சரியானபதி விதுவென்றும் சொல்லிவிடலாம். புதிதாய் ஒன்றுமில்லாவிட்டால், ஜனங்களுக்கு உணர்ச்சிகளைக் கிளப்பியதாக நீங்கள் எப்படி சொல்லக்கூடும்?

## ஆறும்நாள் (20-7-08) விசாரணை.

ராஜகாரிய நிர்வாக நேயர்கள் மிக்க கண்டிப்பாயழுத்தும் நடவடிகளால் வளர்ந்தோங்கும் அதிருப்திகாரத்தை (வெறுப்பை) அடக்கிவிடும்படி வற்புறுத்துவதை முன்னமே சொன்னேன். இதற்கு எதிரிடையாய் ஆளுகையில் ஒரு பகுதியை ஜனங்களுக்கு ஈடுபடுத்த இணங்கும் முறையைவிட்டு அதிருப்திகாரத்தை அடக்கிவிட முடியாதென்று பொதுஜனப் பிராயப்

பிரசாரகர் கண்டிப்பா யெச்சரித்து வருகின்றனர். இவ்வாறு ஏற்பட்ட கக்ஷிக்காரர்களைப்பற்றி மேஜர் பெல்லின் "பெருந்துணையாசு" என்னும் புஸ்தகத்தில் 50 வருஷ சரித்திரமிருக்கிறது.

நீங்கள் ஆதரவாகக் கொள்ளும்படியான எவ்விதவாக்கியத்தையாவது பிராசிகூஷனார் குறிப்பிட்டதில்லையாகையால், முழு விஷயத்தையும் வாசித்து விளக்கவேண்டியதாயிற்று. ஆயினும், பிராசிகூஷன் உள்ளத்திறவுகோலாக ஒட்டர் தந்தி பத்திரிகையும் உள்ளது. (காவா விஷயத்தை வாக்கியம் வாக்கியமாகத் திலகர் வாசித்து அங்கங்கே நிறுத்தித் தப்புமொழிபெயர்ப்புகளை யெடுத்துக் காட்டி அதற்கு சரியான பதப்பிரயோகங்களைக் கூறியதுமன்றி, சில விசேஷக் கூற்றுகளுக்குப் பிரமாணங்களையும் அப்போதைக்கப்போது சொல்லிவந்தார்.) ஆபாக்ரஹம் என்பதற்குக் கெட்டுப்போதல் என்னுமல் இணங்காமை யென்று மொழிபெயர்க்கவேண்டும். வங்காள சிறுவர்களின் நடவடிக்கையைப்பற்றி சாதாரண கொலைக்கு வதையென்றும், வஞ்சக் கொலைக்கு சப்தா என்றும் மொழிபெயர்க்கவேண்டும். முதலாவது சாதாரணக்கொலையும், பிறகு எண்ணமும் போக்குங்கொண்ட படுகொலையும், அப்பால் துரோக சிந்தைகொண்ட வஞ்சக்கொலையும் வருகின்றன. "தஞ்சேசா பந்த" யென்பதற்கு சர்க்கார் பகையான கலகங்கள் என்னுமல், கலக்கங்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். ராஷ்டிரவதை யென்பதற்குக் கொலையென்பதே சரியானதன்றி வஞ்சக்கொலையென்னக்கூடாது. ருஷிய கவர்ன்மெண்டின் அக்கிரம முறையைப்பற்றியே 1906ஆம் ருஷியாவில் அராஜரிகம் கிளம்பியதென்று கூறிய பயனீர் பேப்பரே அடாவடிகள் அநியாயத்துக்குரியதாகாதென்று இந்தியாவில் எல்லாப் பொதுக் கலகக்காரர்களையும், மேடைப் பிரசங்கிகளையும் ஒரேயடியாய் வம்புக்கிழுத்ததில் பாய்ப் கொடுமைகளுக்கு சட்டநிரூபண சபிகர்களும் கூட

ஜவாப்தாரேயென்று காட்டியது. வங்காளிகள் சாந்த சமாதானப் பிரியமான ஜாதியாரென்பது செவ்வையாய்த் தெரிந்ததானாலும், மானவப் பொறுமைக்கும் ஓரளவுள்ளது.. உதாரணமாக, லார்ட் மெக்காலே அவர்களை வலுவற்ற பேடி ஜாதியாரென்று இகழ்ந்திருக்கிறார். இதை யென்மனதில் வைத்துக்கொண்டிருந்தே பூனையும் மானும் என்ற கதையைக்காட்டி, பேடி யென்ற வங்காளியும் அளவுக்கு மிஞ்சினால் பொறுக்கமுடியாமல் திருப்பி யடிக்கவேண்டியதாய் விடுமென்று அதிகாரிகளை யெச்சரித்தேன். "அதிகாரமதனிம் தண்டா" என்பதற்கு "அதிகார அலக்ஷியத்தில் மூழ்கிய" என்னாமல், "அதிகாரத்தால் கண்ணவிந்த" என்றே கூறியிருக்கவேண்டும். இவ்வகையில் அதிகார நிர்வாகத்தைப்பற்றி ஸர் வெட்டர் பரன் மேஜர் பெல் புஸ்தகத்திலிருந்து எடுத்த மேற்கோளைக் கூறுகிறேன். டாக்டர் கோஷ், மிஸ்டர் கோக்கலே போன்றவர்கள் எச்சரித்திருக்கிறபடி பயனீருக்கு பதில் கூறுவது என் கடமையாய்விட்டது. இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகாரிகளின் நாகரிகத் தன்னலம்பற்றி மிஸ்டர் தார்பரன் போன்ற ஒரு ஸிவிலியனே பேசியிருப்பதை யெடுத்துக்காட்டினால் என்ன சொல்லுவீர்கள்?

இந்தியா கவர்ன்மெண்டைப்பற்றி ஆங்கிலேயருக்கு மூன்றுகோட்பாடுகள் உள்ளன: முதலாவது—இந்தியருக்காக இந்தியா ஆளப்படவேண்டும்; இரண்டாவது—இங்கிலாண்டின் நன்மைக்காகவே இந்தியா ஆளப்படவேண்டி யிருக்கிறது; மூன்றாவது—நாகரிகத் தன்னல வன்மைகொண்டு இந்தியா ஆளப்படவேண்டும். இம்மூன்றாவது கோட்பாடு மிக்கசமீபமாய் ஒப்புக்கொள்ளப்பட்டதுமன்றி, இந்தியப் பிரஜைகளின் அதிகாரத் தேவைகளுக்கும் இணக்கமாயுள்ளது. நான் அதிகாரம் தேவை யென்றதாகப் பிராஸிகூஷன் பிரஸ்தாபித்ததும் சரியே. அவ்வதிகாரம் ஜனங்களுக்குத் தேவையே யல்லது எனக்குத் தேவையில்லை. இவ்வகையில்

சொல்லவேண்டியிருந்ததை டிஸென்ட்ராலிஸேஷ (கிழதிகாரவிருத்தி)னைப் பற்றிய ராயல்கமிஷன் முன்பாகசொல்லியிருக்கிறேன். இவ்வகை வெளிப்பேச்சைப் பொறுப்பேற்றுப் பேசியிருக்கிறேன்.. கவர்ன்மென்டார் கவனத்துக்கு எட்டாதென்றெண்ணி சுபாஷா பத்திரிகையில் மட்டும் எழுதவில்லை. உண்மையில் சுதேச பிரசுரத்தைப்பற்றி வாரவாரம் கிரமமாய் அறிவிக்கும் சர்க்காரிலாகா உள்ளதென்றும் அறிவேன். ஒரு சுபாஷா பத்திரிகையில் உள்ளதென்றறிந்ததினாலேயே பவர் தேவையென்பது தூஷணையாகுமென்று சொல்வீர்களா? சிலஅடாவடிகள் ஆட்சிமுறைக் குறைவுகளால் நேர்ந்தனவென்று சொல்வது தூஷணமாகாது. ஒரு காலத்தில் அதிகார நிர்வாக வகுப்பார் கவர்ன்மெண்டுக்குப் பிரயோசனமானவர்களாயிருக்கலாம்; ஆனால் என்னபிப்பிராயப்படி அவர்களு வசமான பவர் சுதந்திரம் சகிக்கக்கூடாததாய், அவ்வதிகார நிர்வாகம் ஜனங்களுக்குத் தேவையென்னப்படுகிறது. இப்படி சொல்லத்தொடங்கிக் கால் நூற்றாண்டின் கடந்தது. பழையமுறைப்பாட்டையே புதிய மாதிரியில் ஒழுங்காயெடுத்துக்காட்டிக் கேட்டுவருவதினால் சன்பேப்பர் தூஷணமானதெனில், அத்தருணத்தில் அம்மாதிரி கூறிய எல்லாப்புஸ்தகங்களையும், பிரசங்கங்களையும் வாரிக்கொண்டு போய்க்கொளுத்தி விடத்தகும். உதாரணமாக, ஆனரெபில் மிஸ்டர் கோக்லே சென்ற மார்ச்சுமாசத்து பட்ஜெட்பேச்சில் இதையே பேசினார். ஆனரெபில் டாக்டர் கோஷ்கடந்த கல்கட்டா காங்கிரஸ் ரிஸெப்ஷன் கமிட்டி சேர்மனாயிருந்த வகையிலும் இதே பெச்சரிக்கை செய்தார். தெரிந்திருந்தால் கவர்ன்மெண்டுக்கு சமயத்தில் சொல்லியிருக்கலாமே யென்று "இங்கிலீஷ்மன்" பேப்பர் டாக்டர் கோஷை யிகழ்ந்தது. சங்கதி நிகழ்ந்ததின் பிறகு நான் விவகரித்ததற்காக தூஷணையென்று தூறுசெய்யப்பட்டது. இவ்வாறு வாயை மூடுவதும் திறப்பதும் ஆக இரண்டும் ஆபத்தாகவே யிருக்கிறது. ஸர்பேட்டா கவுன்ஸில் பேச்சொன்றில் ஒரு விசேஷமான (டிக்கென்ஸ்)

பேற்கோளைக்காட்டினர். அதாவது அதிகார நிர்வாக வகுப்பார் ஜனங்கள் முறைப்பாட்டை விலக்கி அவர்களை க்ஷேமத்தைத் தப்பாது காப்பதாகும் ஆட்சிக்கோள் மனுஷ சுபாவத்துக்கு விரோதமானதென்று இகழத்தக்கதென்றாகும். அதற்குப் பதில் இந்திய ராஜதந்திராபிப்பிராயத் தலைவர்களால் சென்ற 30 - வருஷகாலமாக சொல்லி வரப்படுகிறது. இது கவர்ன்மெண்டுகாதுக்கும் எட்டியிருக்கிறது. தற்காலம் பயனீர் முதலிய ஆங்கிலோ இந்திய பேப்பர்களால் தூண்டப்பட்டு, என் பேரில் அந்த பதிலை மிக்க சாந்தமான வார்த்தைகளாலும், மிக்க வியவகார வாதங்களாலும் கூறியதன்றி வேறில்லை. ஒருவன் குறைவுகளுக்காக அவனைத் தவிர மற்ற எவரும் உத்தரவாதியாகக் கொள்ளவேண்டியது மனுஷ சுபாவமாயிருக்கிறது. அவ்வாறே அதிகார நிர்வாக வகுப்பார் தங்கள் தப்பிதங்களைப் பார்க்கக்கூடாமல், கயிற்றைப் பாம்பென்று மருண்டு ராஜரீகக்கலக்கக்காரரை உதைத்துத் தள்ளுகிறார்கள். கலிலியோ எதிரிடையாய்க் கூவாதமட்டில் பூமியைச் சுற்றி சூரியன் பிரதக்ஷிணம் செய்து வந்ததாகவே உலகம் நம்பியிருந்தது. இவ்வாறே ஆங்கிலோ இந்தியரும் தாங்களல்ல, இந்தியக்கலக்கக்காரர்களே தவறிப்போயிருக்கிறார்களென்று கொண்டிருக்கிறார்கள். அடக்கமுடியாத, அதிக்கிரமமான, ஸ்வேச்சையான, யதேஷ்டமான என்னும் வார்த்தைகள் இதற்குமுன் 100 தரம் பிரயோகித்திருக்க, இப்போது அவற்றை உபயோகித்ததற்காகக் கேசரி இக்கதியடைந்தது. முழுவமாற்றத்தின் பலனாக 30-கோடியில் ஒருவனாவது அறிவுமாறி வெறிபிடிக்காதிருக்க எதிர்பார்ப்பது மடமையாகும். என் நோக்கமாவது நோயின் சரியான நிலைமையை அறிந்துகொள்வதோடு, சரியான மருந்தையும் குறிப்பதாகும். ஏதோ ஒரு நோயால் ஒருவனிறந்தானென்று தெரிந்துகொள்வதில் லாபமில்லை. அராஜரீகம் பிறந்தது அவதிப்படுவதினாலே யென்றதும் உண்மையே. இனியும் அக்கிரமங்களை நிறுத்தவேண்டுமானால், ராஜரீக சீர்திருத்தம் அவசியமென்பேன். எனக்கும் லார்ட்மார்

லிக்கும் வித்தியாசமாவது அவசியமா யிந்தியாவில் செய்யவேண்டும் சீர்திருத்த ஒழுங்கைப் பற்றியதேயாகும். சுபாஷா பத்திரிகையிருக்க வேண்டுமானால், தற்காலவிஷயங்களைப் பற்றிய பொது ஜனாபிப்பிராயத்தைத் தெரிவித்துக்கொண்டு வரவேண்டும். பயனீரும் தவறியதானால், தாவாவில் மாட்டிவிடவேண்டும்; ஆனால் அப்போர்ப்பட்ட பிராசிகூஷனுக்குஸாங்க்ஷென்வேண்டியதால், கவர்ன்மெண்டு ஆங்கிலோ இந்தியபேப்பர்மேல் ஸாங்க்ஷென்கொடுக்க இசையாதென்பதை கவனியுங்கள். ஆங்கிலோ இந்திய பேப்பர் இவ்வகையில் சுவாதீனம் பெற்றிருப்பது அநுபவத்திலுள்ளது. காசிக்கலாசாலை மிஸ்டர் அரண்டேல் சுதேசிகளிடம் அன்பு காட்டியதற்காக சவுக்கால் அடிக்கப்படவேண்டுமென்று பயனீர் கூறியதற்கும் தாவாவில் கொண்டுவரப்படவில்லை; ஆயினும் காப்டென் ஹியர்ஸே போன்ற ஒருவர் பயனீர் ஆபீசுக்கேபோய் அதன் ஆசிரியரை சவுக்கால் அடித்து விட்டதுபோலத் தானே லாவை யேற்றுக் கொண்டு தண்டித்துவிடலாம். ஆனால், ஒவ்வொருகேசிலும் இது சாத்தியமுமாகாது; சிபாரிசுசெய்யப்படுதலுமாகாது. இக்கேசில் சுதேசப் பொது ஜனாபிப்பிராயத்தலைவர்கள் அவதூறுகளுக்கு விவகாரமாய் பதில் கூறும் பெருந்தன்மையில் பழிதீர்த்துக்கொள்ளலாயிற்று. சுதேசப்பத்திரிகைகள் சமயோசிதமான பதில்களும் சாட்டுகளும் கூறும் கடமையைமட்டும்செலுத்தி வருவனவாகும்.

இந்தியப்பிரசரத்துக்கும் ஆங்கிலோ இந்தியப்பிரசரத்துக்கும் விதயாசமாவது நோயின் தன்மைமட்டிலுள்ளது. தற்காலக் கலக்கத்துக்கு உத்திரவாதமாயுள்ளது ஆளுகைத் தவறுகளேயாமென்பது இந்தியப்பத்திரிகைகள் சொல்வதாகும்; ஆங்கிலோ இந்தியப்பத்திரிகைகளோ இந்தியத் தலைவர்களின் எழுத்துகளும் பேச்சுகளுமே உண்மையான காரணமானவை யென்ற அபிப்பிராயமுள்ளவைகளா யிருக்கின்றன. இவ்வாறு

இந்தியத்தலைவர்கள் பேரில் பழிபோட்டு விடுவதினு
அதிகாரநிர்வாகமானது தடையின்றி செல்லலாமெ-
ன்று அவை நினைக்கின்றன. சாட்டப்பட்ட விஷயங்கள்
அவ்விவாதத்தி லொருபகுதியாய், இங்கிலாண்டிலுள்ள
வெவ்வேறு கக்ஷிகளுக்குள் நடந்தேறிவரும் விவாதங்
கள்போலுள்ளவை. அங்கே லார்டுகளின் சபையே
தாக்கப்படுகிறது. அந்த சபையோ இந்திய அதிகாரநிர்
வாகத்தைப் பார்க்கிலும் அதிகமாய் இங்கிலாண்டில்
செய்திருப்பதாய் சொல்லலாம். பாம்ப் கொடுமையைக்
கொண்டே அதிகாரநிர்வாகமானது தன்சக்தியைபலப்
படுத்திக்கொண்டாலும் கக்ஷிதந்திரமாக்க் கருதியதிலெ
லென்க. தாங்கள் தான் இந்தியாவுக்கு நல்ல அதிகாரிக
ளென்பது தகுதியாக (நிர்வாக அதிகாரிகள்) நினைத்
துக் கொண்டிருந்தாலும், இந்தியர்கருத்துகள் வேறாய்
அவற்றைவெளியிட வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.
அதிகார செருக்கின்கீழ் எப்போது மிருக்கவேண்டும்
இந்தியவகுப்பார் அவர்கள் கக்ஷியில் சேர்ந்து கொள்ள
லாம். பாம்ப்கொடுமைகள் இந்தியத் தலைவர்களின் எழு
த்துகளாலும் பேச்சுகளாலும் கிளம்பினவென்று சில
இந்தியர் ஒப்புக்கொள்ளுவது தற்காலக்கலக்கத்தில் ஒரு
விகாரமாயிருக்கிறது. அக்கொடுமைகளை வெறுக்கும்
கூற்று தழுவப்படாமல் இருக்கவில்லை. துன்மார்க்க
மென்னும் மொழிபெயர்ப்புக்கு சரியானவார்த்தை அநீ
தியென்பதாகும். நாட்டின் மதியானது ஆட்சிமுறைக்கு
மேற்பட்டுவிட்டதாக தாதாபாய் நவரோஜி சொல்லு
கிறார். ஸந்தாபம் என்பதற்கு ஆவேசம் என்று மொழி
பெயர்க்கப்பட் டிருக்கிறது. ஹுஸாவென்றால் கூப்
பாடென்னலாமே யன்றி, டிரான்ஸ்லேட்டர் கூறியது
போல் தப்பறிவிப்பென்றாகாது. பிறகு விஷயமோ
18 ஆவது நூற்றாண்டிலே யூரோப்பிய சரித்திரத்தைக்
குறிக்கிறது. இவ்விஷயசாரமே சிலவெறியர் அதிக
மாய்க் கூறிவிட்டதாகக் கொண்டு பிரசாரத்தை அடக்கி
விடுவது மடத்தனமென்று காண்பிக்கிறது. பாஷாணம்
விஷமா யிருந்தாலும் மருந்துமாகிறது. அவவாறே

யாரோ ஒருவர் அஜாக்கிரதையால் நெருப்பைக்கொண்டு வீடுகளைக்கொளுத்திவிட்டதினால், எதற்கும் நெருப்பை உபயோகிக்கக்கூடாதென்று தடுப்பதும் மடத்தனமாகும். மற்றொரு காரணமாக, முதலிலே கொண்டுவந்தபோது சில சம்பவங்கள் நேர்ந்ததைக்கொண்டு, பம்பாயில் மின்சார டிராம்வண்டிகளை நிறுத்திவிட வேண்டியதாய் சொல்வது இழிவாகுமே. முற்கூறிய விஷயங்களைப் பயனீர் அதிகாரநிர்வாகக் கக்ஷியின் நன்மைக்காக எழுதினதேயன்றி, உள்ள நிலைமைகளை அறியாமல் எழுதியதன்று. பேஷ்வாக்களின் சரித்திரவாசகர் அறிந்தபடி நாராயணராவ் வஞ்சக கொலையானது விரோதமான விவகாரமாகாது. அவ்வாறே சில வேளை தவறிப் போவதினாலே பிரசுரசுதந்திரத்தை ஒழித்துவிடுதல் மடத்தனமாகும். துராக்ரஹம் என்பதற்கு இணங்காமையென்று மொழிபெயர்க்க வேண்டியதைவிட்டு, கெட்டுப்போதலென்று தப்பாய் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. வெடிகுண் டெறிவித்தை இந்தியாவில் கொண்டுவரப்பட்டதே யன்றி, இந்திய முறையானதல்ல. சிறுவர்கள் ஜெர்மானிய ருஷிய சரித்திரங்களை வாசித்து பாம்ப் வித்தியாப்பியாசிகளானார்கள். அநாதாயி என்றால் குற்றவாளியென்றாகிறது. இந்தியாவிலே பாம்ப் கிளம்பியது கவர்ன்மெண்டுக்கும் ஜனங்களுக்கும் துர்ப்பாக்கியமா யுள்ளதென்றும், அப்பேர்ப்பட்ட அதிக்கிரமங்கள் எல்லாவிதத்திலும் நிறுத்தப்படவேண்டியதென்றும் வெளியிட்டிருப்பதுமன்றி, அவற்றை விலக்குவதற்கான பரிகாரமும் சொல்லப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டார் அவசரப்பட்டு மனங்குழம்பி மொத்தமாய் அழுத்திவிடும் முறையைக் கைக்கொள்வதே அபாயகரமாகும்; ஜனங்களோ வெடிகுண்டெறிவோரைத் தண்டிப்பதற்காக கவர்ன்மெண்டுக்கு வந்தனம் செய்தார்களென்றும், அப்பேர்ப்பட்ட கெட்டகாரியங்கள் இனிநடக்க சாத்தியமில்லாதிருக்கும்படிவிரும்புகிறார்கள். ஆங்கிலேய சரித்திரத்திலிருந்து இவ்விஷயத்தை யெடுத்துக் காட்டப்ப

டது விளக்கத்துக்காகவே யன்றி, எவ்விதமான ஜன உணர்ச்சியையும் தூண்டுவதற்காயல்ல. அக்கிரமமுறையைக் கையாடுவது இனியும் பாம்ப் கொடுமைகள் சம்பவிக்காமல்விலக்குவதற்கேற்றதல்லவென்று கவர்ன்மெண்டை யெச்சரித்திருக்கிறது. யாரும் செய்யக்கூடியது போல இவ்விஷயத்தில் பாம்ப்கொடுமைகள் பலமாய்க்கண்டிக்கப்பட்டிருக்கின்றன. வைஸ்ராயும் லார்ட் மார்லியுங் கூட வெகுஜனாபிப்பிராயப்படி இந்நாட்டாட்சியில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். இந்தியன் ஸிவில் ஸெர்விஸ்கிளப் விருந்தில் இதேகருத்தைத் தழுவிப்பேசியபோது "இல்லை இல்லை" யென்று கூவியதின் பேரில்தன்னைப்பொறுமையாய் கவனிக்கவேண்டுமென வேண்டி," இந்தியாவுக்கு மேலான முறையாவது சமாதானமேயென்றார். இவ்விஷயத்தில் லார்ட்மார்லிசொன்னதற்கு மிஞ்சி யேதும் சொல்லவில்லை; இதில அநியாயமாயேதுமில்லை. இது ஒத்துக்கொள்ளக் கூடாததாயிருக்கலாம்; ஆனால் ஒத்துக்கொள்ளக்கூடாதது தூஷணமாகாது. எழுதினோனின் குறிப்பு கருத்து எண்ணம் இவற்றை விஷயத்திலேயே கண்டுகொள்ளக் கூடும். உதாரணங்கள் வேறுபட்டவையானாலும், வெவ்வேறு விஷயங்களின் கருத்தும் ஒன்றேயாயினும் தெளிவாய் விவரித்திருக்கிறது. ஸெண்ட் ஆஸாப்பென்கேஸிலுள்ளது போல எழுதினோனின் போக்கு அவனெண்ணத்தைக் காட்டியிருக்கிறது. பிராசிகூஷன் பிரஸ்தாபித்த படி விஷயங்கள் ஒரேவிவகாரமா யில்லாமையால், அவை எண்ணத்தைக்காட்ட எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. ஒவ்வொரு வாரமும் புதிய சங்கதிபிரசுரிக்கப்படுகிறதுமன்றி, விஷயமும் அந்த சங்கதியை விவரிக்கவே யெழுதப்பட வேண்டியிருக்கிறது.

"பாம்ப் என்பதின் உண்மையான பொருள்" என்ற விஷயமொழிபெயர்ப்பை இதோ படிக்கிறேன். இதன் பக்கத்தில் பாம்ப் சம்பவத்தைப் பற்றிய இங்கி

லாண்டின் அபிப்பிராயம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதைப் பாருங்கள். பாம்ப் சம்பவத்தைப்பற்றி இந்தியாவிலுள்ளதுபோலவே யிங்கிலாண்டிலும் இரண்டபிப்பிராயங்களிருப்பதை யிக்குறிப்புகள் தெளிவாய்க் காண்பிக்கின்றன. நான் அபிப்பிராயப்பட்டதுபோலவே இங்கிலாண்டிலும் ஏற்பட்டிருந்தாலும், அதை தூஷணமாகக் கொண்டு ஒருவரும்விசாரணைக்குக்கொண்டுவரப்பட்டதில்லை யென்பதைப்பற்றி ஆச்சரியப் படுகிறேன்; லார்ட்மார்லியும் இந்தியாவில் சமரசமான நிர்வாக சீர்திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்றும், வைஸ்ராயே யோசித்திருக்கும் சிர்திருத்தங்களை பாம்ப் சம்பவத்தைப்பற்றித் தடைபடுத்தலாகாதென்றும் சொல்லியிருக்கிறார்கள். இவ்விவாதம் லார்டுகளின் அவுசிலே லார்ட்கர்ஸனுக்கும் லார்ட்மார்லிக்கும் நடந்த விவாதத்துக்கு சற்று ஒத்திருக்கிறது.

மொழிபெயர்ப்பின் அற்ப தப்புகளை யெல்லாம் எடுத்துக் காட்டிக்கொண்டிருப்பதனால் கோர்ட்டார் காலம் வீணாய்விடுமாகையால், பெருங்குற்றங்களை மட்டுங் காட்டுவேன். உட்பகையாளிகளால் சூழப்பட்ட அரசனென்ற உபமானமானது ஒரு கெடுதியைத் தவிர்க்க வேண்டியபோது அதன் முளையைக்கொத்தி விடவேண்டுமென்ற பொருளில் காட்டப்பட்டது. செலவாளித் தகப்பன் உதாரணமாவது பிதுரார்ஜித சொத்தைத் தகப்பன்செலவழித்துவிடுவதாகக் குமாரன்வழக்கிடலாமென்பதாகும். தூஷணைக் கூட்ட மசோதாவைப்பற்றிய வைஸ்ராய் பேச்சை யிதோ படிக்கிறேன். இதில் ஜப்பான் ஜயமே இந்தியாவில் புதிய ஊக்கத்தை விளைவித்ததென்றும், இவ்வூக்கத்தை நல்வழியில் மாற்றுவது கவர்ன்மெண்டின் கடமையென்றும் வைஸ்ராய் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்தியாவில் எழுதுவோர் கவர்ன்மெண்டார் கவனிக்காதபடி சுதேச பாஷையில் எதையோ எழுதிவிடுவதாயும் வற்புறுத்தலாம்; அப்படிக்கின்றி, இவ்விவகாரங்கள் சுப்ரீம் லெஜிஸ்லேட்

டிவ் கவுன்ஸிலிலேயே வைஸ்ராய் முன்னிலையில் பகிரங்கமாய் வற்புறுத்தப்பட்டபடி வைஸ்ராயே இவற்றின் நியாயத்தை யேற்றுக்கொண்டிருக்கிறார். இந்தியா கெஜட்டிலேயே விளம்பரமாயிருக்கிறது. இவ்விஷயங்கள் வாரவாரம் இங்கிலீஷில் மொழிபெயர்க்கப்படும்படி கவர்ன்மெண்டில் விசேஷ ஏற்பாடாயிருப்பதை நன்றாய்த்தெரிந்துகொண்டே யெழுதப்படுகின்றன.

இவ்விவாதத்தில் மற்றோர் அம்சமாவது "பாம்பின் மர்மம்" என்னும் விஷயமாகும். ஆங்கிலோ இந்திய பேப்பர்களி லெழுதுவோரும், அதிகார நிர்வாக மெம்பர்களும் கீழ்வருமாறு இந்தியத்தலைவர்களுக்குத் தலைநோய் வைக்கிறார்கள்—"பாம்ப் கொடுமையைக் கண்டிப்பதாய் சொல்லுவதானால், பாம்ப்பை ஒழிக்கும் கருத்தோடு அழுத்தும் நடவடியில் ஏன் கவர்ன்மெண்டாருக்கு உதவியாயிருக்கக்கூடாது? அப்படி செய்யாவிட்டால், நீங்களும் தூஷணக்காரர்களென்று சொல்வோம்". இந்தியத்தலைவர்கள் சொல்வதாவது—"பாம்பைக் கண்டிப்பதில் சந்தேகமில்லையானாலும், அநாவசியமானநிபந்தமாய்க்கொடுமையாய் அழுத்துமுறைதனையும் கண்டிக்கிறோம்". அப்பேர்ப்பட்ட விஷயமாய் பதில் கூறுவதில் இவ்விஷயம் குறிக்கிறது. இது விசாரமும் இயற்கைக்கு எதிர்மறையுமான நிலைமையிலுள்ளதென்றும், அப்படி சொல்லுகிறவர்கள் வஞ்சகர்களென்றும் காட்டி,இந்தியத்தலைவர்கள்பாம்பையன்றிகவர்ன்மெண்டின் அதிக்கிரமமான நடவடியையும் எனைப்படிக்கண்டிக்கிறார்களென்பதை விவரிப்பது அவசியமென்று ஆங்கிலோ இந்தியர்வற்புறுத்துகிறார்கள். 1893-ஆம் வெடி மருந்திடுவோன் ஒருவன் இங்கிலாண்டில் கண்டு பிடிக்கப்பட்டதன்பேரில் வெடிமருந்துச் சட்டமொன்று ஏற்படுத்தப்பட்டது. "கான்டெம்பொரரி ரிவியூ" பேப்பர் வெடிமருந்துச் சட்டசம்பந்தமாய் வெடிமருந்து வித்யா விஷயமொன்றைப் பிரசுரித்தது. அவ்விஷயத்தில் அடங்கிய யோசனைகளே இவ்விஷயத்திலும்

அடங்கியுள்ளன. டெலி ரிவ்யூ பேப்பர் ஸுப்ரீம் லெஜிஸ்லேட்டிவ் கவுன்ஸிலிலேயே பிரமாணமாயெடுத்துக்காட்டப்பட்டது. இப்போது தான் பாம்புகள் கிளம்பின; ஆகவே இத்தருணத்தில் இதை நிதானித்து யோசிக்க வேண்டுமேயன்றி காபராபடக்கூடாது. தீமையிலிருந்து நன்மை பிறக்கிறது. பாம்பைக்கண்டிக்கும் யோக்கியர்கள் கவர்ன்மெண்டின் நிபந்த நடவடிக்கு உதவியாயிருக்கவேண்டியதன்றி வேறொன்றுங்கூடாதென்று ஆங்கிலோ இந்தியர்கள் நினைக்கிறார்கள். இந்தியத் தலைவர்களின் இந்நிலைமை நியாயமாகலாமென்றாலும், எம்பையர் பேப்பர் கவர்ன்மெண்டுக்குப் போதிய இணக்கமாயில்லை. சாதாரண படுகொலைகளுக்கும், ராஜரீகப் படுகொலைகளுக்கும் இவ்விஷயத்திலேற்பட்டுள்ள வித்தியாசமானது புதுமையானதல்ல. ருஷிய சக்கிரவர்த்தியின் (ஏகாதிபத்திய) இயக்கத்தில் இதே வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. மனிதனுடைய பிராணப் பிரியத்தைத் மரணம் உறுதிப்படுத்துவதுபோல, பாம்புகள் கவர்ன்மெண்டின் கவனத்தைத் உறுதிப்படுத்தும் உண்மையையே இவ்விஷயம் வெளியிடுகிறது. முக்கியமான விஷயபகுதிகளை மட்டும் படித்துவிட எண்ணினும், பிராசிகூஷன் அப்படிக் குறிக்காமையினாலே முற்றிலும் படிக்கவேண்டியதாகிறது. இவ்விஷயத்தில் மரணயோசனையானது ஒருவனை பக்திமார்க்கத்தில் செலுத்துவதாகக் காட்டியிருப்பதென்பது கருத்து. இது யூரோப்பிய இந்திய தத்துவமாகும். பெல்குரிப் பின்படி பாம்பானது நோயின் குறிமட்டுமாகும். கவர்ன்மெண்டோ ஒரு நல்ல வைத்தியன் செய்வதுபோல அதன் தோற்றத்தினால் எச்சரிக்கையாக வேண்டும். 1897 ஆம் இம்மாதிரியான நிலைமையில் இந்திய வரைவாளிகள் பிளேகு ஏற்பாடுகளில் நிதானத்தைக் கோரியும், அவர்களின் யோசனைகள் அவமதிக்கப்பட்டன. மொழிபெயர்ப்பு முறையில் ஒழிந்ததானாலும், இவ்விஷயம் அரைவாசி கண்டிப்பாயும் எழுதப்பட்டிருக்கிறது.

## ஏழாநாள் (21—7—08) விசாரணை.

3-வது சார்ஜான சென்ற ஜூன்மீ 9உ விஷயமாய் இரண்டு சார்ஜுகள் 153-A ஸெக்ஷன் கீழ்க்காட்டிக் கொண்டுவரப்பட்டன. இதன் நியாயவகைகளைப்பற்றிப் பின்னால் பேசுவேன். ஸெக்ஷன் வார்த்தைகளின்படி யெண்ணமிருந்தாவது இல்லாமலாவது அதிகரிக்கும் வகையைக் கண்டேன்; ஆனால் எத்தனிக்கும் என்பது முதலியவார்த்தைகள் 124-A ஸெக்ஷனிலுள்ளது போலவே யிருக்கின்றன. இவ்வெத்தனம் எண்ணத்தை முன்னிட்டிருக்கிறது. எத்தனத்துக்குக் குறிப்பொன்றிருக்கவேண்டும். குறிப்பற்ற எத்தனம் இருக்கமாட்டாது. குற்றம் கருத்திலிருக்கவேண்டும். யசவந்தராய் அதாலே கேஸில் பஞ்சாப் சீவ் ஜஸ்டிஸ் எத்தனத்தோடு அதிகப்படுத்தல் என்ற ஸெக்ஷன் வார்த்தைக்குப் பொருள் கூறியதில் உணர்வான எண்ணம் இருக்கவேண்டுமென்றார். ஸெக்ஷனில் வகுப்புகள் என்றிருந்தாலும், அவை ராஜரிகக் கக்ஷிகளாயில்லை. கக்ஷிகள் வேறே; வகுப்புகள் வேறே. வகுப்புகளுக்கு வரையறையுள்ளது; கக்ஷிகளுக்கு அப்படியில்லை. ஸெக்ஷன்படி உணர்வோடு பகைமூண்ட எண்ணமும் அவசியமாகிறது. ஜாதியாருக்கும் சமயத்தாருக்கும் இடையே கலகங்களையும் தடுப்பதே ஸெக்ஷனின் கருத்தாகும். சமயத்தாரின் குறைகளைப்பற்றி விவேகமாய் விவாதிப்பதும் 153-A ஸெக்ஷன்படிக் குற்றமாகமாட்டாது. இன்னும் விவரமுள்ளபடி இவ்விஷயம் அதன் கீழ்வரவில்லையென்று பிராஸிகூஷனர் காட்டவேண்டும். 153-A ஸெக்ஷன் கீழ் சார்ஜான விஷயமோ வெடிமருந்துச் சட்டத்துக்கும் பிரசுரச்சட்டத்துக்கும் குறை கூறுவதாகிறது. அநாவசியமாய் வார்த்தைகளுக்கு அர்த்தத்தை வருவித்துக்கொள்ளாவிட்டால், இவ்விஷயத்தில் வகுப்புகள் குறிக்கப்படவில்லை. இவ்விஷயத்தில் (உள்ளபடி யில்லாததை) வருவித்துக்கொள்வது பொருத்தமாகமாட்டாது. சென்ற மேமீ 12உ விஷயம் சாட்

டப்பட்டால் ஒருகால் 153-A ஸெக்ஷனில் கண்டுள்ள அதிகார நிர்வாக வகுப்பைக்காட்டி அதற்கொரு சாக்காவது போக்காவது குறிக்கலாம். சார்ஜில் யூரோப்பிய வகுப்பாரென்றாவது, மற்றென்ன வகுப்பாரென்றாவது கண்டிருக்கவில்லை. இவ்வாறு சார்ஜை தடுமாறிப்போகும்படியான அளவில் குறைவுபட்டிருக்கிறது. ஆனால் யூரோப்பிய வகுப்பாரென்றே வைத்துக்கொண்டாலும் ஸெக்ஷன் சம்பந்தப்படவில்லை. இவ்விஷயம் பொதுவாய் எல்லா ஜனங்களுக்கும் கவர்ன்மெண்டுக்கும் சம்பந்தப்பட்டது. வகுப்புகளின் தகுதிகளுக்கு சேதமின்றிக் காப்பாற்றுவதாகவே ஸெக்ஷனில் அர்த்தமாகிறது. இரண்டு சட்டங்களைப்பற்றிய விவகாரங்களால் ஆதரிக்கப்பட்ட அபிப்பிராயத்தை மட்டுமே இவ்விஷயம் கூறுவதானால், நீங்களெப்படி உள்ளெண்ணம் வேறாகக்கொள்ளுவீர்கள்? உலகத்தில் எதுவும் இல்லாமலில்லை. இவ்விஷயத்தின் இயற்கையான போக்கு கூறுவதென்ன? இவ்விஷயக் குற்றப்போக்கு 124-A ஸெக்ஷன்படி எடுத்துக்கொள்ளப்பட்டதே யன்றி, 153-A ஸெக்ஷனுக்கு எதும் இடப்படவில்லை. கணித சாஸ்திரோக்தமாய் ஒரு கல்லால் இரண்டு குருவிகளைக்கொல்லக்கூடும்; ஆனால் இவ்விஷயத் தகுதி யொருபுறமிருக்க, ஒரே விஷயத்துக்காக இரண்டு ஸெக்ஷன்களின் கீழ் ஒருவனை தண்டிப்பது நியாயமாகாது. ஆங்கிலேய அநுபவத்தை யொட்டி இந்தியாவிலும் அசல்தைச் அநுபவப்படி என்ன விஷயம் முற்றிலும் ஜூரியாருக்கு விடப் பட்டுவருகிறது. கிரிமினல் புரொசிஜர் கோடின்படி ஜூரிகளின் கடமைகளையும், விவாதசுதந்திரம் விடப்படவேண்டுமென்று காண்பிக்கும் அநேக தூஷணக்கேசுகளில் ஜூரிக்கு சார்ஜைக்கூறும் மாதிரியையும் கவனியுங்கள். இது சற்று சந்தர்ப்பங்களை யெடுத்துக்கொள்ளும் ஏற்பாட்டைத் தழுவிய முதல் கேசாகையினல், ஜட்ஜியவர்கள் அவ்வாறே ஜூரிக்குரைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பீனல்கோடில் பெருமையெனும் பொருளுக்காகத் தற்காப்புக்கும் இடமுள்ளபடி

இந்தியப் பிரசாரத்துக்கும் ஆங்கிலோ இந்தியப் பிரசுரகத்திலிருந்து தன்னைக்காத்துக்கொள்ளும் உரிமையுள்ளது. ஸ்டீபன் கிரிமினல்லா சரித்திரத்தில் பிரசுரசுதந்திரசித்தாந்தப்படி ஒவ்வொருவனும் தன் நடவடிக்கைகளின்பயனைக்கருதியதாகக் கொள்ளப்படும் பிரமாணம் கடுமையாய் உபயோகிக்கப்படுமானால், பிரசுரசுதந்திரமானது பாத்திய விஷயமாயில்லாமல் தயாவிஷயமாய்ப் பொருளற்றதாகிவிடும். இக்கருத்தை ஜனங்க நியாய நூலாசிரியராகிய டைஸியும் தழுவியிருக்கிறார். பிரசுரசுதந்திரமென்பது எங்கும் வரையறுக்கப் பட்டிருக்கவில்லை; ஆனால் இதை யோசிப்பது ஜூரியுடையதாகும்.

இவ்விஷயத்தில் நிர்வாக அதிகாரத்தின் நன்மை தன்மைகளிரண்டையும் விளக்கியிருக்கவேண்டுமென்றும் சொல்லப்படலாம். ஒரு விஷயத்தைப்பற்றி யெழுதுவோன் தன் முழுகவனத்தையும் அதில் செலுத்திவிடவேண்டியதால் சந்து பொந்துகளெல்லாம் தேடிப் பலவாறான விஷயங்களைத் தொட்டுக்கொண்டுபோவது கூடாமையென்று மிஸ்டர் எர்ஸ்கின் வற்புறுத்தியதை கவனியுங்கள். இங்கிலீஷ்லாவும் இந்தியலாவும் ஒன்றே. இங்கிலீஷ்லாப்படி என்விஷயங்கள் சொல்லும். இது ஒரு விவாதமானாலும், நான் நியாயத்துக்காகமட்டும் பேசியதாக அர்த்தமாகாது. குற்றமான எண்ணமில்லையென்றும், குற்றம் செய்ததில்லையென்றும் சொல்லுகிறேன். பதில் விஷயமானது தப்பாயும், கடுமையாயும் இருக்கலாம்; ஆனால் அவை குற்றமானவையென்று அர்த்தமாகாது; வெடிமருந்துவைப்பில் திக்குச்சைக்கிழித்துப் போட்டதாயும் ஏற்படவில்லை. முற்றிலும் விவாதமாத்திரமேயன்றி, பம்பாயில் கலகங் கிடையாது. எண்ணத்தைப்பற்றிப் பேசுமிடத்து, சில திருத்தங்கள் செய்யாமற்போனால் லக்ஷக்கணக்கான ஜனங்கள் லண்டன் பேரில் கிளம்புவார்கள் என்று மிஸ்டர் சேம்பர்லேன் சொல்லியது கொடுமைக்குத் தூண்டியதாகுமென்று ஸாலிஸ்பரிக்கு பதிலாக மிஸ்டர் கிளாட்ஸ்டன் சொன்னதைப்

பாருங்கள். ஒரு லாயர் அல்லது ஒரு ஜட்ஜிபோல வார்த்தைகளை கவனிக்க ஓர் எடிட்டருக்குக் கூடாமையாகும். ஆகவே நீங்கள் எண்ணத்தை விட்டுவார்த்தைகளை கவனிக்கக்கூடாது. இங்கிலாண்டிலே ராஜ தூஷணக்கேசுகள் இப்போது கிடையா; ஏனெனில், அவர்களுக்குஜனங்க ஆதிபத்தியம் ஏற்பட்டிருப்பது மன்றி, ஒருவனுடைய எண்ணத்தையறிந்து தீர்மானிக்க ஜூரிகளு மிருக்கின்றனர். குற்ற விஷயத்தில் போதுமான எண்ண சாக்ஷியம் ஏற்படாவிட்டால், மற்ற விஷயங்களிலிருந்து உதவிதேடக்கூடிய நியாயமில்லை. எண்ணமிருந்ததா, இல்லையாவென்ற இரண்டிலொன்று யிருக்கவேண்டும். மெயின் லாபடி அளவுக்குமிஞ்சிய தில்லையானால், எண்ணத்தை இதரவிஷயங்களிலிருந்தெடுத்தாலொழிய (மூதல்) விஷயம் குற்றமாகமாட்டாது. ராஜரிகவார்த்தைகளின் துர்விநியோகமென்னும் லாயிபுஸ்தகத்தின்படித் தப்பு மொழிபெயர்ப்புகள் சில அநியாயமானவையாயும், என் தன்மைகளுக்கு விரோதமானவையாயும் இருக்கின்றன.

சென்ற ஜூன்மீ 9உ விஷயத்தில் பேசியுள்ள அம்சங்கள் இரண்டில் முதலாவதான வெடி மருந்துச் சட்டம் கடுமையாயிருந்தாலும் அதற்கு ஆக்ஷேபமில்லை; ஆனால் இரண்டாவதான பிரசுரச் சட்டம் அவசியமாக ஆக்ஷேபமுள்ளது. வெடி மருந்துச் சட்டம் இங்கிலீஷ் மாதிரியில் வந்த புதியசட்டம். அம்மசோதாவை மறுக்காத உத்யோகமெம்பர்களும் ஆக்ஷேபுமட்டுங் கூறினார்கள். அவர்களெல்லாம் பேசிமறுக்கலாமானாலும், மெஜாரிட்டி சேர்வது கூடாமையாகும். மசோதாக்கள் முன்னாடி வெளியிடப்படவில்லை. வரையறை விஸ்தாரமாதலின், அதிகஆக்ஷேபணைக்குட் பட்டதாயிருந்தது. வெடிமருந்து வைத்திருப்போரின் அறியாமையைக் காட்டும் கடமையை அவன்பேரிலேயே போட்டது தவறு. சட்டம் பயனற்றதென்றும் ஆக்ஷேபிக்கப்பட்டது. இந்தியசீர்திருத்தக் கக்ஷியாரும் இந்தமாதிரியி

விருந்தார். சமாதான ஏற்பாடுகளில்லாமல் போனால் சட்டமட்டும் பயனற்றதாகுமென்றதாய் "இப்பரிகாரங்கள் நிலையானவையல்ல" என்னும் விஷயத்தில் விளக்கியிருக்கிறது. இதில் "அவசியமான கவனிப்பு தவறியதினால் கெட்டபேய்க் கிடமாச்சுது" என்றதற்குப் பொருளாவது "அக்கிரமத் தலைவரை மார்லி அடக்கியாளாமல் இந்தியா கவர்ன்மெண்டை யேவிவிட்டார்" என்பதாகும்.

அக்கிரமமானது விருத்தியைப் பின்னுக்கிழுக்குமென்பது எர்ஸ்கின் கருத்து. இந்திய கவர்ன்மெண்டைப்பற்றி யெழுதிய மால்கோம் தன் காலத்தில் பொதுவாய்ப் பெருங்கருத்துடைய ஹைகோர்ட்டார் ஜட்ஜ்மெண்டுகளைப் பிரசுரிப்பதினால் தாங்கள் இழிவுபடுத்தப் படுவதாய் நிர்வாக அதிகாரிகள் நினைத்துக்கொள்வதாகக் கூறியிருக்கிறார். ஒருகால் லார்ட் மார்லியும் தாராளப்பிரசுரம் தனியாட்சிக்கு முற்றிலும் அடுக்காதென்றே குறித்திருக்கிறார். ருஷிய (ஜார்) ஏகாதிபத்தியத்தின் இறக்கத்தைப்பற்றி யெழுதிய ஜாபார்ட் புஸ்தகத்தில் கலகத் தலைவரை சூனியவாதிகளென்று கூறுவது கொள்கையானது எதிர்மறையின் ஏற்றமன்றி வேறில்லையாகத் தவறென்று கூறியிருக்கிறது. சென்ற 1906-௵ ஆகஸ்டு௴ 29௳ பயனீர் பேப்பரில் ருஷியாவிலே பாம்புகளைப்பற்றி லண்டன் டைம்ஸ் முதலிய பேப்பர்களில் கண்டகருத்தைக் காணுங்கள். டாரனின் எஷியாவில் இந்திய ஜனங்களின் உறுப்புகள் முதிர்ந்ததாகக்காட்டி யிருக்கிறதுபோல, கேசரியில் இந்தியாவின் இறகுகளை யிங்கிலாண்டு பிடுங்கியதாகக் கூறியுள்ளது. இந்தியத்தொழில் முயற்சிகள் மடிக்கப்படுவதைப் பற்றி மிஸ்டர் தார்பரனும் பேசியிருக்கிறார். அந்நிய துரைத்தனமானது ஓரினஜனத்தை அடிமையாக்கிக் கொள்வதாக ஸர் தாமஸ் மன்றோ பேசியதாய் தாதாபாய் நவ்ரோஜி யெடுத்துக்காட்டி யிருக்கிறார். மகமதிய அதிகாரிகள் பிரிட்டிஷ் அதிகாரிகளினும் சில வகையில்

அதிகநல்லவர்களாயிருந்தார்களென்பதற்கும் ஆதாரங்களுள்ளன. 4-வது காங்கிரஸில் ஆயுத சட்டத்தைப் பற்றி ஸர்மேட்டா பேசியதில் ஓர் ஜனத்தைப் பெட்டையாக்கிவிட்டதாகக்கூறியது குற்றமாகவில்லை. கேசரியில் ஓடுகாலிகள். என்றதுபோல மேஜர் பெல்லுங் கூறியிருக்கிறார். கவர்ன்மெண்டின் ராணுவ வல்லபம் பெரிதென்றாலும், அக்கிரமத்திலேயேகவனமுள்ளதாகில் பயனற்றதாகும். எம்பைர் பேப்பரைக் குறித்த இந்தியா டைம்ஸ்பேப்பரே பாம்புகள்செய்வது சுலபமாகவே, வெடிமருந்து சட்டம் போதியதல்லவென்று கூறியது. இந்தசங்கதியைமுதலில்சொல்லியதுநானல்ல; கொலைக்குத் தூண்டுதலுக்காக ஆங்கிலோ இந்திய பேப்பர்களே உண்மையில் உத்திரவாதமானவை. பாம்ப் செய்வதின் சுலபமான வகையைப்பற்றி மேற்கூறியதில் பிராசிக்யூஷனர் ஓர் உள்ளுறையைக் கண்டறியலாம். அப்படியானால், வைத்திய நியாய சாஸ்திரமெழுதும் ஒவ்வொருவரின் புஸ்தகத்திலும் பாஷாண வகைகளும், அவற்றின் உபயோகங்களும், பிரயோசனங்களும் சொல்லப்பட்டிருப்பதைப்பற்றிப் படுகொலை அல்லது தற்கொலைக்குத் தூண்டுதலுக்காக உத்திரவாதியாகவேண்டுமே. பாம்பின் தன்மையைக் குறித்தது வெடிமருந்து சட்டத்தால் ஆகாதென்று கவர்ன்மெண்டாரையெச்சரிக்கத்தான். ஓரியண்டல் ரிவியூவில்கண்ட மார்னிங்லீடரின் கல்கட்டா நிருபமொன்றில் பாம்ப் இருக்க வந்திருக்கிறதென்று கூறி இருந்ததுபோல, சில சுதந்திர ஆங்கிலேயரும் நினைத்திருந்ததாகத் தெரிகின்றது. சட்டசபையிலே பிரசுர மசோதாவைப்பற்றி ஆனரெபில் நவாப் ஸையதுமகமது பேசியபோது, வலுவுக்கு வலுவேற்படுமாகையினால் வெடிமருந்துச் சட்டத்தால்எதுவுமாகாதுஎன்றார். 1894-௵ காண்டெம்பரெரி ரிவியூவில் ஆனரெபில் ஹெர்பெர்ட்டால் வெடிமருந்து வித்யா விஷயமொன்று வெளியேறியது. பாம்பை மறுத்துப் பேசியதால் கவர்ன்மெண்டுக்கு எதிராய்ப் பகையுணர்ச்சியைக் கிளப்புவதற்கே யிடமான

தென்ற கருத்தை மறுக்கிறேன். இது பெருவிவாதமாய்க் கவுன்ஸிலில் ஆனரேபில் மெம்பர்கள் பேசியபடி விவகாரங்களையும் விஷயங்களையும் எழுதியிருக்கிறேன். ஜனங்கள் குற்றவாளிகளாவது பிரசுரங்களிலே குற்றங்கள் உள்ளதினாலேயல்ல; மனப்போக்கே காரணமாகும். முன் விஷயங்களிலே பாம்புகள் அநீதியானவையென்று கண்டித்திருக்கிறேன்; ஆகவே, நான் குற்ற எண்ணங்கொண்டு பாம்புகளை செய்ய ஜனங்களைக் கபடமாய்த் தூண்டவேயிருந்ததாக எண்ணுவது ஆபாசமானது. பேப்பர்களைப்போல சட்டசபையிலும் பிரஸ்தாபமான கண்டனமேயன்றி, நான் மாத்திரம் குற்ற எண்ணங்கொண்டு சொன்னதாய் சொல்வது அழகல்ல. இதுவே இந்தியாவெங்கும் சாதாரண அபிப்பிராயமாய்ப் பூர்த்தியாக விவகரிக்கப்படவேண்டியதானபடி பகிரங்க தாராள விவாதமாகக்கொண்டு நல்லெண்ணத்துடன் வெளியிட்டேன். இப்பேர்ப்பட்ட விவாத விவகாரம் ஜனங்களைக் குற்றத்துக்குத் தூண்டிவிடக்கூடாமை. லார்ட்கர்ஸன் இந்திய விவாதப்பேச்சிலே ஆங்கிலோ ருஷிய உடன்படிக்கைக்கு சம்மதிக்காமல் மறுக்க அமீரைத் தூண்டியதாக லார்ட்மார்லி சாட்டினார் என்றாலும், அதற்காக லார்ட்கர்ஸனைக் குற்ற விசாரணைக்குக்கொண்டுவர லார்ட்மார்லி உண்மையில் நினைக்கவில்லை. தாவா விஷயத்தில் சொல்லியிருப்பதெதுவும் 124-A ஸெக்ஷன் விவரணத்தினால் குற்றமற்றதாகும். என் விவகரிப்புகளை நீங்கள் அங்கீகரிக்காவிட்டாலும், யோசிக்கவேண்டிய விஷயமாவது நான் விவகரித்துள்ளவைகளை உபயோகிக்கும் உரிமையெனக்கில்லையாவென்பதே.

பாம்ப் விஷயக்குறிப்புக் கார்டொன்றைக் கண்டுபிடித்ததைப்பற்றிப் பிராசிகூஷனார் அநேகமாய்ப் பேசலாம். அதை லார்ட் மார்லியின் பார்வைக்கு அனுப்பியிருப்பார்களென்பதும் ஆச்சரியமாகாது. இதர பேப்பர்களோடு இதுவும் திறந்த டிராவிலிருந்து கண்

டெடுக்கப்பட்டது. அந்த பேப்பர்களை யெல்லாம் பிராசிகூஷனார் தாக்கல் செய்யாமற் போனாலும், அவற்றை நானே தாக்கல் செய்திருக்கிறேன். இது பத்திரப்படுத்தி வைக்கப்பட்டில்லை வெடிமருந்துச் சட்டத்தின் குறை கூறவும், அதில் உள்ள வரையறையைப் பார்வையிடவும் வேண்டியிருக்கது. அதன் விவரம்வேண்டி யென் புஸ்தகசாலைக் கேட்லாகைப் பார்வையிட்டேன். என் புஸ்தகசாலையில் அப்பேர்ப்பட்ட கேட்லாக் வைத்திருப்பது தூஷணமாகாதே. அதிலிருந்து குறிக்கப்பட்ட புஸ்தகங்களை வைத்திருப்பதும் தூஷணமாகாதே. கிடைக்காதானால், புஸ்தகங்களுக்கு எழுத வேண்டியிருந்தது. கேட்லாகுகளிருந்த புஸ்தகப்பெட்டிகளை சோதிககாமல், சோதனைப் பரிசாக தாவா நார்டையெடுத்துக்கொண்டு திரும்பிவிட்டார்கள். கார்டுடன் கண்டெடுத்த பேப்பர்களிலொன்று ஊக்கமுள்ள சிறுவரை உபயோகமான முயற்சியில் திருப்பும் விஷய முறையாகும். அம்முறை ஓர் யூரோப்பிய கனவானால் என்னபிப்பிராயத்துக்காக அனுப்பப்பட்டது. சில சிறு புத்தகங்களும், சில வெட்டு விஷயங்களும், இரண்டு பிரசங்கக் குறிப்புகளும் கூட உள்ளன. ஏதோ மறைக்கப்பட்டதென்றுமல் எல்லா பேப்பர்களும் வைத்துவிடப்பட்டன, ஆனால் உண்மையில் கார்டுக்கும் பேப்பர்களுக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாது.

## எட்டாம்நாள் (22-7-08) விசாரணை.

பிராசிகூஷன் மொழிபெயர்ப்பை ஆதாரவாகக் கொண்டிருக்கிறது. சார்ஜுகள் மொழி பெயர்ப்பை ஆதாரவாகக் கொண்டில்லையானால், விஷயங்களைப் பிராசிகூஷனார் எப்படி மாற்றுகிறார்களென்று மொழிபெயர்ப்பே காட்டும். இத்தனை நாளாகப் பொறுமையாயிருந்து நான் சொல்வதைக்கேட்டு வந்தன்மைக்காக ஜூரியாருக்கு வந்தனமளிக்க வேண்டியது என்முதற் கடமை. சார்ஜ் நிகரமா யில்லாமையினாலே எனக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே யிருக்கிறது. இவ்வளவுதூரம்

பேச எனக்கு இஷ்டமில்லையானாலும், என்னன்மைக்காகவே அப்படி நடந்துகொள்ள முடியாமற்போய்விட்டது. நீங்கள் அலுவலுள்ளவர்களானதினால், உங்களுக்கொரு சுமையாகப் பேசிவந்தேனென்பதில் சந்தேகமில்லை; ஆயினும், தற்காப்புக்கன்றிப் பிராசிகூஷன் போக்குக்காகவும் சாக்ஷியம் தரவும், எழுதியமாதிரியை விவகரிக்கவும் அவசியமாய்விட்டதென்பதை யோசியுங்கள். இவ்வகையில் மற்றகக்ஷிக்கு ரிப்ளைரைட் ஏற்பட்டதானாலும், கடைமொழி ஜட்ஜியவர்களுடையதாகும். நானே இக்கேசில் எதிர் வாதம் செய்து கொள்ளத் துணிந்தபோதே அட்வோகேட் ஜெனரலால் இடைவாதங்கள் அநேகமாய்க்கிளம்புமென்றெதிர்பார்த்தபடி நேரிடாமல்விட்டுக்கொடுத்த நன்மைக்காக அவருக்கும் வந்தனம் செய்யவேண்டும். எனக்குப்படிப்பாவது, திறமையாவது கிடையாதானாலும், ஜூரியாரிடம் எதிர்வாதம் பேசிக்கொள்வதில் தேவையான யாவற்றையும் விவகரித்து, இக்கேசை சாதாரண அறிவுக்கேற்க மிக்கதெளிவாயெடுத்துக் காட்டக்கூடுமென்று நினைத்தேன். பிறகு என்னை நீங்கள் அறிந்துகொள்வீர்களென்றும் நினைத்தேன். இடைவாதங்கள் நேரிட்டிருந்தால் சகஜமாய்ப் போய்க்கொண்டிருப்பதில் கஷ்டமாய் விட்டிருக்கலாமென்றும் தெரியும். கற்றறிந்த அட்வோகேட் ஜெனரல் என் விஷயமாய் நடந்துகொண்ட மாதிரி ஒரு புறமிருந்தாலும், பிராசிகூஷன் நடவடியைப்பற்றி சில சாட்டுகள் கூறவேண்டியிருந்தது. அட்வோகேட் ஜெனரல் இதில் முதல்தடவையாகத் தவறானபக்ஷத்தில் சேர்ந்திருக்கக்கண்டதாய் இக்கோர்ட்டிலிருப்போரும் வெளியிலிருப்போரும் அறியக்கூறுகிறேன். லா கோர்ட்டுகளின் நடவடிகளில் பழக்கப்பட்டிராமையால் ஒருவேளை எவ்வகையிலாவது பிசகிநடந்திருந்தாலும், நானதைவேணுமென்று செய்திருக்கவில்லை.

இக்கேஸ் சாதாரணமானதுதான். விஷயங்களோ உங்கள் முன்பாயிருக்கின்றன. இவ்விஷயங்கள் விவா

தத்திலே யெழுதப்பட் [illegible] வ்விவாதமோ நிர்வாக அதிகாரிகளுக்கும் இந்நாட்டுக குடிகளுக்கும் இடையே கிளம்பி 1860௵ முதலாக மேலோங்கி வருகின்றது. நான் குறித்த மேற்கோள்கள் என் விஷயங்களுக்கு உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பட்டவை. நிருவாக அதிகாரம் கவர்ன்மெண்டல்ல; நிர்வாக அதிகாரமென்பது அதிகார ஆட்சியாகும். நாங்கள் பாம்டகளுக்கு இடந்தரவில்லை. அது குற்ற நடக்கையல்லவென்றும், கண்டிக்கவேண்டியதல்லவென்றும் சொன்னதில்லை. பாம்பெறியைக் கண்டிக்கப் போகுமிடத்து, கவர்ன்மெண்டார் அக்கிரம நடவடிக்கைகளையும் கண்டிக்காமல் விடுவதற்கில்லையேயென்று விசனப்படுகிறோம். பாம்பின் கொடுமையைத் தொலைக்க, ஆளுகை முறையில் சில சீர்திருத்தங்கள் அவசியமாயிருப்பதாக நினைத்தார்கள்.

ஜூரி சேர்மானத்தைப் பற்றி முதலில் விசனப்பட்டாலும், ஒருவேளை யெனக்கு சாதகமாயு மிருக்கலாமென்று நினைத்தேன். நீங்கள் பரம்பரைப் பெருமை படைத்தவர்களானதால், ஒருவேளை மற்ற தன்னவரைப் பார்க்கிலும் பிரசுர சுதந்திரத்தில் அதிக மதிப்பை வைக்கலாம். இந்நாட்டுகுடிகளொருபுறமும் நிர்வாக அதிகாரிகள் மறுபுறமுமாயிருந்து போராடுவதினிடையே பிரவேசித் திருக்கிறீர்கள். உங்களாலான மட்டில் எல்லா ஆதரவையும் வேண்டியவர்களாகிய இந்திய ஜனங்களுக்கன்றி யெனக்காக ஒருதவியும் தேவையில்லை. இக்கேஸ் ஒருவனைப் பற்றியதென்று கவனிக்க வேண்டாம். அவ்வகையில் நானே கவனிக்கவில்லை. இந்தியதரத்தின்படி நான் தவறான பக்ஷத்திலிருக்கிறேன்; ஆனால் இனிவரும் சந்ததியாரும் உங்கள் தீர்ப்பை கவனித்து சரிதப்பென்று பேசுவார்கள். இந்நாட்டில் உரிமை பாராட்டச் சரித்திரத்தில் உங்கள் தீர்ப்பானது பெரும் பிரதானமானதாகும்; ஆகவே உங்களுக்கு நிறைவேற்றும் பெருங்கடமையும், பெரும் பொறுப்பும் இருக்கின்றன. நான் செய்தது சரியென்று உங்களி

லொருவராவது முற்பட்டுக் கூறுவரானால், அதுவே யெனக்குத் திருப்திகரமாய்விடும். இங்கிலாண்டில் ஒரு ஜூரி யேகோபிக்காவிட்டால், புனர் விசாரணைக்குப் போகும். இந்திய லா வேறுவிதமா யுள்ளதானாலும், உங்களில் ஒருவராவது முற்பட்டு என்னது சரியென்று சொல்லிவிடுவரானால், அதுவே ஓர் ஆதாரவாய்க்கொண்டு பெருந் திருப்திகர மடைந்துவிடுவேன் எத்தனமென்ற வார்த்தையின் அர்த்தத்தை விவரித்திருக்கிற விஷயங்கள் இழிவும் பகையும்கொண்ட உணர்ச்சிகளைத் தூண்டும் எண்ணத்தோ டெழுதப்பட்டவையாக நினைத்தீர்களானால், நீங்கள் என்னைக்குற்றவாளியாகத் தீருங்கள். அப்படி நீங்கள் ஏகோபிப்பீர்களானால் நல்லதுதான்; அப்படிக் கில்லாவிட்டால் ஏகோபிக்க வேண்டியதில்லை. தீரமாய் ஒருவர்மட்டும் என்னது சரியென்பாரானால், எனக்குப் பெருந் திருப்திகரமாய்விடும். இப்போர்ப்பட்ட ஆதரணை யெங்களுக்குத் தேவை. நீங்கள் நினைக்கிறபடி சொல்லவேண்டியது மன்றி, இந்தியாவில் ஒரு ராஜப் பிரஜையா யிருக்கும் வகையில் இங்கிலாண்டிலுள்ள ஒரு பிரிட்டிஷ் பிரஜைபோலாவது, இந்தியாவிலுள்ள ஓர் ஆங்கிலோ இந்தியனைப் போலாவது என் உரிமை யெல்லையில் நிற்கிறேனென்று சொல்லுங்கள்.

விவாதாம்சமாவது என் கருத்துகள் சரிதானாவென்பதல்ல; விஷயமாவது சுதந்திரத்தைப் பற்றியதேயன்றி, சரிதானென்பதல்ல. இனி அட்வோகேட் ஜெனரல் சொல்ல விருப்பதையும், ஜட்ஜியவர்கள் தெரிவிப்பதையும் சாவதானமாய்க் கேட்டுக்கொள்ளுங்கள்; ஆனால் முடிவில் உங்களுடைய பொறுப்புதான். நீங்கள்தான் குற்றம் உள்ளது அல்லது இல்லையென்று தீர்க்கவேண்டும். இவ்விஷயங்கள் எவ்வகையில் சேர்ந்ததென்று சொல்வது உங்கள்கடமையாகும். இக்கேசுக்குப் புறம்பான எந்த சந்தர்ப்பத்தையும் நீங்கள் கவனிக்கவேண்டியதில்லை. என்னைப்பற்றி சிலர் மாறுபாடாய் சொல்லும் சங்கதிகளை நீங்கள் தொலை

த்துவிட வேண்டுமென்று பொதுஜன நன்மைக்காகவே கேட்டுக் கொள்ளுகிறேன். அதுவோ திவ்வியமானது என்பதில் சந்தேகமில்லை. நாமெல்லாம் நம்முடைய உண்மையான நடவடிகளுக்கு உத்திரவு சொல்லப்பெ றும் கடவுளை மனத்துணிவில் விளங்கவும், இக்கே சின் சம்பந்தாம்சங்களை யறிய உங்களுக்கு சகாயம் செய்யவுமாகும்.

## அட்வோகேட் ஜெனரல்

## மிஸ்டர் பிரான்ஸனின் ஜூரி அட்ரெஸ்.

அடுத்த தலைமுறையார் அக்காலத்துக்கேற்க நடந்து கொள்ளட்டும். நான் காட்டிய தாக்ஷிண்யத்தைப் பற்றிப்பேசுகையில்நிர்த்தாக்ஷிண்யமாய் நடந்துகொள்ளலாமென்பதாய்க் குற்றவாளி யேன்நினைத்துக்கொள்ளவேண்டும்? அப்பேர்ப்பட்ட காரியத்தில் எனக்கானலாபமென்ன? கிரௌன் பிராசிக்யூட்டராகிய நான் கேசில் பிடிவாதமாயிராமலும், கேசைப்பன்னிப் பன்னிப்பேசாமலும் கூடுமானமட்டில் சரியான தீர்மானம் கொடுக்கும் நிலைமைக்கு உங்களைக்கொண்டுவரவேண்டியது கடமையென்று கொண்டேன், குற்றவாளிக்கு விரோதமாய் உங்களைத்தூண்டி நியாயம் அல்லது நீதிக்கு எதிரிடையாய்க் கொண்டுபோக நான் எண்ணியிருப்பதாய் உங்களுக்குப் படும்படி யெதையோ செய்வதையாவது சொல்வதையாவது எச்சரிக்கையாய் நிறுத்திவிட்டேன். ஐந்துநாளாய் மிஸ்டர் திலகர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்க நேர்ந்திருந்தபடியால், இன்னும் உங்களுக்கு சிரமமாகாதபடி சுருக்கியே எடுத்துரைக்கலாகும். விஸ்தார விவாதமாயும், தனக்கே வெறுத்துவிடும்படிப் பேசியும் வந்த மிஸ்டர் திலகர் குற்றங் கடந்து, என் கடமையாயுள்ள மட்டில் பேசுவேன். எல்லாவற்றிலும் மேலாக, ராஜரிகக்கக்ஷி விவாதத்தை நிறுத்திவிடவேண்டும். அப்பேர்ப்பட்ட விவாதத்தில்பிரவேசிக்கமுற்றிலும் மறுக்கிறேன். சென்ற 3 தினமாகக் குற்றவாளி ராஜரிக விவாதமன்றி வேறொன்றும் பேசவில்லை. அவ்விவகாரமுற்றிலும் ஜூரியார் மறந்துவிடவேண்டும். இது என்னிஷ்டம்போல் சொல்லவில்லை யென்று உங்களுக்குக்

காட்டும்பொருட்டு லார்ட் எர்ஸ்கின்முதல் இவான்ஸ் வரையிலுள்ள அளவற்ற அபிப்பிராயங்களைக் காட்டிலும் சமீபமான வங்காள சீவ் ஜஸ்டிஸ் சொன்னதை சொல்வேன். இக்கேசில் சாக்ஷியமட்டும் யோசிக்கப்படவேண்டியதே யன்றி, நீங்கள் கேட்டுக்கொண்டிருந்த ராஜரிகவிவகாரங்கள் யாவும் ஒருபுறம் வைத்துவிடவேண்டும். விவகரித்தபடி குற்றவாளி சரியா யிருக்கலாம்; கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் எழுதிய விஷயம் உண்மையாயுமிருக்கலாம்; சீர்திருத்தங்கள் அவசியமாயு மிருக்கலாம். அவைமுற்றிலும் இக்கேசுக்கு சம்பந்தப் படாதவையே. சீர்திருத்தம் அவசியமாவென்பதைப்பற்றி உங்களுக்கு அக்கரையில்லை. ஜஸ்டிஸ் மிஸ்டர் ஸ்ட்ரேச்சி ஜட்ஜ்மெண்டில் சம்பந்தப்பட்டுள்ளபடிக் குற்றவாளிக்கு லா தெரிந்திருப்பதால், இப்போது அதைப்பற்றி நான் அதிகமாய் சொல்ல வேண்டியதில்லை. குற்றவாளி 20 வருஷம் வக்கீலா யிருந்து அனுபவமடைந் திருக்கிறார். அவருக்கிருக்கவேண்டிய லா ஞானத்தைக்கொண்டு சரியல்லாத பிரேரணைகளை யெல்லாம் வற்புறுத்திக்கொண்டிருந்ததைவிட்டு வேறு விஷயமாய்ப் பேசியிருந்தால் அதிக நன்மையா யிருக்கலாம். மிஸ்டர் திலகர் ஸ்டேட்மெண்டில் அளவற்ற தவறுகளோடு உங்களிடம் பேசியிரா திருந்தாலும் அதிக நன்மையா யிருக்கலாம். சார்ஜ்மிஸலக்ஷன் வார்த்தைகளின் அர்த்தங்களைப்பற்றிப் பின்னால் பேசுவேன். குற்றவாளி மிக்க நன்றாய் விசாரிக்கப்பட வில்லையென்று சொல்வது கூடாமை. கூடிய மட்டில் சொல்லவேண்டியிருந்த ஒவ்வொரு சங்கதியும் சொல்லிக்கொள்ள லாச்சுது. மிஸ்டர் திலகரே மிம்முக்கியாம்சத்தை ஒப்புக்கொண்டார். பிராசிகூஷனாவது ஜட்ஜி ஸ்தானத்தாலாவது இடையூறு யிருந்தால் மிஸ்டர் திலகர் பேப்பரிலும், நேசமான இதர பேப்பர்களிலும் சரியான விசாரணை யில்லையென்று உடனே காபரா செய்திருப்பார்க ளென்று ஜூரியார் நன்று யறிந்திருக்கலாம்.

லாபாயின்டுக்கு வரும்போது இதற்கு பதில் விஸ்தாரமாய்க் கூறலாகும்: "தூஷணமேதோ எழுதியிருக்கலாம்; ஆனால் நானதற்கு வேறேதோ அர்த்தங் கொண்டிருக்கிறேன்" என்று ஒருவன் கோர்ட்டில் சொல்லக்கூடாது. தாவா விஷயங்களிலுள்ள வாக்கிய நடையைக்கொண்டே அதன் அர்த்தத்தை நீங்கள் தீர்மானிக்கவேண்டும். குற்றவாளி எழுதியபோது கொண்ட அர்த்தமே அட்ரெஸின் போது கோர்ட்டில் கூறியதாக நீங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது. மிஸ்டர் திலகருக்குப் பிரதிகூலமாய் அநேகஜட்ஜிகளும், முடிவாகப் பிரிவிக்கவுன்ஸிலும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். உங்களுடைய சொந்த முடிவுகளைக்கொண்டு குற்றவாளியெழுதியபோது கொண்ட பொருளைத் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. விஷயநடைக்கு எதிரிடை ஒத்திரா விட்டால் வேறேதோ அர்த்தமாவதாய் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அடுத்தவிஷயமாவது அவ் விஷயங்களின் பலனென்னவென்பதாகும். எழுதினோன் எண்ணம் 124 A ஸெக்ஷனின் கீழ்வருகிறதா; அல்லது அதன் விலக்கேதிலாவது கொண்டுவருகிறீர்களா? விஷயங்கள் எழுதினோனை ஷை ஸெக்ஷனின் கீழ் கொண்டுவருவதற்கு சாக்ஷியமுள்ளதாவென்று நீங்கள் பார்க்கவேண்டும்; சாக்ஷியமுள்ளதானால் குற்றங்கூறுவதே உங்கள் கடமையாகும். பிறகு அடுத்த அம்சமாகக் குற்றவாளிக்கு விலக்கின் நன்மை கிடைக்கக் கூடுமாவென்று பார்க்கவேண்டும். தான் விலக்கின் கீழ் வருவதாக மெய்ப்பிக்கும் கடமை தன்மேல் சுமத்தப்பட்டிருப்பதாகக் குற்றவாளி கூறியிருக்கும் குறையுமுள்ளது. அம்முறையில் குற்றவாளி முற்றிலும் லாவைக் கவிழ்த்துக்காட்டினார். எவன்பேரிலாவது சார்ஜேற்பட்டு விட்டால், அதை ஒழித்துக் கொள்ளும் உரிமை அவனுக்கேயாகும். இக்கேஸிலும் பிராஸிகூஷனார் இவ்வழியே போயிருக்கிறார்கள். மிஸ்டர் திலகர் அட்ரெஸினிடையே ஜூரிலாவையும், ஜட்ஜிலாவையும் விஸ்தாரமாய் விவரித்திருக்கிறார். அதின்

படி நடந்துகொள்ள எனக்கில்லை யானாலும், லார்ட் எர்ஸ்கின் வாழ்க்கையைப் படித்தறிந்த எவனும் அவ்விவகார முழுமையும் 10 நிமிஷத்தில் சொல்லிவிடக் கூடுமென்று மட்டும் குறிப்பேன். கல்கட்டா பம்பாய் ஜட்ஜிகளநேகரும், பிரிவிக்கவுன்ஸிலும் கொடுத்த தீர்ப்புகளின்படி ஒருவனை ராஜதுவேஷக் குற்றவாளியாக்கப்போதியசாக்ஷியம் இன்னதென்றேற்பட்டிருக்கிறது. அவற்றின் முக்கியாம்சமாவது எழுதும் விஷயங்களால் ஆவேசங்கிளம்பியிருக்கவேண்டிய தென்றில்லை; கவர்ன்மெண்டுக்கு விரோதமாக் கெட்ட எண்ணத்தை யாவது பகையுணர்ச்சியை யாவது உண்டுபண்ணியிருந்தாலே போதுமானது. கேசைத் தீர்மானிப்பதில் அங்கும் இங்குமாய் ஏதோ ஒருவார்த்தையை கவனியாமல் விஷயமுழுமையும் கவனித்து முக்கியமான இரண்டு தாவா விஷயங்களை மற்ற விஷய தாற்பரியத்தைக் கொண்டு எழுதினோனின் உத்தேசத்தை நீங்கள் உணரவேண்டும். மொழிபெயர்ப்புகளைப் பற்றிக் குற்றவாளி நாலுதடவை குறைகூறினார். அவ்வாறு பேசியதை எவரும் விசேஷமாய்க் கொள்ளவில்லை. அவர் கஷ்டஸ்திதியிலிருந்ததினால் கிடைத்த துரும்பும் எதிர்ப்பட்டது. மொழிபெயர்ப்பை தூறுவதே பெருங்காரியமாய் விட்டது. மொழி பெயர்ப்புகள் உண்மையான அர்த்தங்கொண்டிருக்க வில்லையென்னப்பட்டதினால் அவை தப்பாகாமல், குற்றவாளியைக் கெடுக்கத்துணிந்த எண்ணத்துடன் செய்யப்பட்டதாய் ஏற்பட்டது. இது தவறான விஷயமாய் ஒரு துபாஷியின்மேல் பெருஞ் சாட்டாகிறது. இது உண்மையானால், உத்தியோகத்தை இழந்து போவதற்கே யிடந்தருவதாகும்.

மிஸ்டர் திலகர் துபாஷி யாபீசில் தப்பர்த்தங்கள் செய்திருப்பதாய்க் கூறும் வார்த்தைகள் எல்லாங்கூடி எட்டு அவர் மறுப்புகள் சரியானவையென்று சாக்ஷியம் காட்டாவிட்டால் மொழி பெயர்ப்புகள் தப்பர்த்தமானவை யென்றும், இவரைக் கெடுத்துப் பிராசிகூஷ

னுக்கு உதவியாகும்படித் துணிகரமாய்க் கற்பித்த தாகுமென்றும் சாட்டுவது சரியாகாது. இவர்சொல்வது நியாய விரோதமானது. துபாஷியாபீசில் யாராவது தன் மேல் கெட்ட எண்ணமுடையவரென்றாவது, தாவா மொழிபெயர்ப்புகள் சரியானவையென்று வெட்டி ணை செய்திருக்கிற மிஸ்டர் ஜோஷிக்குத் தன்மேல் கெட்ட எண்ணமுள்ளதென்பதற்குக் காரணம் ஏதென்றாவது இவர் சொல்லவில்லையென்றாலும், முழு சந்தேகாஸ்பதத்துக்குரிய நன்மையும் தனக்கிருக்கட்டுமென்கிறார். இவர் பிரசுர சுதந்திரத்தை கவனிக்குமிடத்து சில முறைப்பாடுகளைப்பற்றியும், சீர்திருத்தங்களின் அவசியத்தைப்பற்றியும் எடுத்துக்கூறிய விவாதமுற்றிலும் அளவு கடந்துபோயிருக்கிறது. திலகர் அட்ரெஸின் ஒவ்வோரம்சமும் ஆரம்பமுதல் அந்தியம் வரைக்கும் கவர்ன்மெண்டை தூஷிப்பதாயும் தற்காப்பு சாக்கில் ராஷணைக்கருத்துக்களைப் பரப்புவதாயும் இருந்துவந்தது. தன்னையும், தன் பேப்பரையும் இவ்விவாதத்தில் கம்பீரமாய்த்தன்னைப் பிரதிநிதியாகக் கொண்டிருப்பதாகக் கூறப்பெற்ற மராத்திய மகாஜனங்களையும் வாதித்ததற்கு ப்திலாகத் தன் விஷயங்கள் கருதப்பட்டதாகவும், அவ்விஷயங்கள் ஆங்கிலோ இந்தியபேப்பர்களின் இழி, வான நடக்கையினால் கொண்டுவரப் பட்டதாகவும் வைத்துக்கொண்டாலும், அதில் தற்காப்புக்கான ஒரு வார்த்தையுங் கிடையாது. பக்தன், மூத்தன், காளன் என்பவர்கள் தன்னைத் திட்டியதற்காக கவர்ன்மெண்டைப் டகைக்கவும் இகழவும் இவருக்கு இடமுள்ளதென்பது விவகாரமாகாது. அது ஒரு பிரமாதமாக மெய்ப்பிக்க லாகாதென்பது அறியாமையாகும்; ஆனால் உண்மையில் கொடுங்கோபத்தை உண்டாக்கும்படியான விதமாய்த் தன்னையாவது, தன்னுட ஞளிகளையாவது, சுதேச மகாஜனங்களையாவது ஆங்கிலோ இந்தியப் பேப்பர்கள் வாதித்ததாகக் குற்றவாளிசாட்டுவதற்கு நியாயமில்லை. சுதேசத் தலைவர்களை பகிரங்கமாய் சவுக்காலடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது உண்மை

யானால், அந்தவிட அவமானம் வேறில்லை. ஆனால் கோரிய ரிகார்டுகளை கவனிக்குமிடத்து வஷியன், எம்பைர் என்னும் பேப்பர்களிரண்டும் கோர்ட்டில் தாக்கலாயில்லை யென்றாலும், அவற்றின் சங்கிரகங்கள் ஒரு குஜராத்தி பேப்பரிலிருந்து படித்துக் காட்டப்பட்டன. குற்றவாளி குறித்த மேமீ 7உ பயனீர் பேப்பரைப் பார்க்குமிடத்து, அதில் விலக்கானதா யொன்றுங்காணவில்லை. அது பொதுவாயிருக்கிறது. மிஸ்டர் திலகருக்காவது, சுதேசக் காங்கிரசுக்காவது, சுதேச பிரசாரத்துக்காவது விரோதமா யொன்றுங் காணேம். மிஸ்டர் திலகர் தனக்குசரிப்பட்ட குல்லாவானால் போட்டுக் கொள்ளட்டும். நன்மைக்காய் மிஸ்டர் திலகர் சட்ட நிருபண [illegible]பிகராயில்லை; காங்கிரஸ் மிதவாதியாயுமில்லை. இவர் அமிதவாதியாக விளங்கியிருக்கிறார். உண்மையில் கடைசிக் காங்கிரஸ் திலகரால் மறைந்துவிட்டது. அறிவுள்ள எவராவது ஆக்ஷேபிக்கக் கூடியதாய் அதில் ஒருவார்த்தையு மில்லை. தற்காப்புக்காக இவர் இவ்விஷயங்களை யெழுதத் தகுமென்று எவ்வளவிலேனும் லா தெரிந்த எவனாவது சொல்லக்கூடியதா யேற்படவில்லை. இந்திய பத்ர வுரிமை எந்த லாவாலும் ஆதரிக்கப்படமாட்டாதென்றும், எல்லாப்பொது அறிவுக்கும், பொதுநன்மைக்கும், பொது வைப்புக்கு[illegible]டையாதென்றும் பதிலளிக்கிறேன். தேசாபிமான தூஷணமென்பதா யொன்றுள்ள தென்பது பரிகசிக்கத்தக்க தவறாகும். அதற்கென்ன அர்த்தம்? “எனக்கு ஓர் திருத்தம் தேவை; அதை நீங்கள் செய்யாவிட்டால் உங்கள்பேரில் வெடிகுண்டையெறிவேன். என்போக்கு தேசாபிமான மானதினாலே அது குற்றமாகாது” என்று சொல்வது போலவேயாகும். போக்கும் எண்ணமும் வெவ்வேறானவை; குற்றவாளி அவற்றைக் கூட்டிக் குழப்புகிறார். என்னெண்ணமும் போக்கும் பரிசுத்தமானதானால், நீங்கள் அவரைக் குற்றங் கூறக்கூடாதென்கிறார். ஆனால் போக்கென்பது (Motive) பினல்கோடிலேயே கிடையாது. தேசாபிமான

தூஷணத்தை ஒருவன் செய்யலாம்; ஒருவன் சிக்ஷையைக் குறைத்துக்கொள்ள ஜட்ஜியைத் திருப்பும்படியான சந்தர்ப்பங்களைக் காண்பிக்கலாம். ஆனால், அது அபிப்பிராயமறுப்பாக நினைப்பது தவறாகும். ஒருவனுடைய எண்ணத்தை அவன் சொல்வதைக் கொண்டாவது, எழுதியதைக் கொண்டாவது, செய்ததைக் கொண்டாவது அறிந்துகொள்வதென்பது இப்போது கிளம்பிய பிரமாணமென்று குற்றவாளி எதிர்வாதங் கூறுகிறார். எங்கே கிளம்பியதென்று விளங்கவில்லை. இப்பிரமாணமானது மிஸ்டர் திலகர் தவிர மற்ற எல்லா பிராமாணியர்களும் நாளதுவரையில் ஆதரித்து வருவதாயிருக்கிறது.

மிஸ்டர் திலகர் எண்ணத்தைப்பற்றி வற்புறுத்தி வரும் அம்சமொன்றுள்ளது. கார்டு கண்டதைத் தவிர அது எண்ணத்தைக்காட்டும் சாக்ஷியும் வேறில்லையென்றார். அக்கார்டு சம்பந்தப்பட்ட மட்டில் இன்னுங் கொண்டுபோகவில்லை. பிராஸிகூஷன் தரப்பின் நம்பிக்கையிது—அக்கார்டு திலகரின் டிராவில் கண்டெடுக்கப்பட்டது. அதைப்பற்றி முற்றிலும் யோசிக்கவேண்டியது ஜூரியின் கடமை அவ்விஷயத்தைப்பற்றி அநாவசியமாய் வற்புறுத்த எனக்கிஷ்டமில்லை; ஆனால் சார்ஜுக்கு சம்பந்தப்பட்டதாயிருப்பதால், உங்களிஷ்டம் போல் நடந்துகொள்ளலாகும். மிஸ்டர் திலகரை மாட்டி வைக்கவேண்டியதற் கென்றின்றி சோதனை போடப்பட்டது. மிஸ்டர் திலகரின் யோசனையின் பேரில் கார்டு கொண்டுவரப்படவில்லை. அதிலுள்ள கையெழுத்து தன்னதேயென்று திலகர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆகவே, திலகரின்டிராவில் இருந்ததென்பதை மறுக்கவில்லை. இன்ஸ்பெக்டர் ஸலிவனைக் கிராஸ்செய்த மிஸ்டர் திலகரின் நடவடிக்கையை ஜூரியார் கவனிக்கவேண்டும். அக்கிராஸ் நடத்தியபோது இப்போதைய டிபன்ஸைக் கருதியிருந்ததாய் நினைக்கிறீர்களா? தாவா கார்டு தனக்குப் பின்னால் கண்டெடுக்கப்பட்டதென்றதை கவனித்தீர்களா? தனக்குப்பின்னால் யாரோ வைத்ததாய்

சொல்லவில்லையா? இக்கார்டைப்பற்றி இன்னவழியாய்ப் பேசலாமென்று ஏற்படாமலிருந்ததாய்க்கொள்ள இடமில்லையா? ஆனால் தன் டிராவில் கார்டு கண்டெடுக்கப் பட்டதெல்லாவற்றை மறுக்கப் பார்த்ததில் மூற்றிலும் இடமில்லாமையைக்கண்டுபுதியடிபன்ஸைக்கொண்டார். டிபன்ஸாவது சட்டசபையிலே வெடிமருந்துச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அச்சட்டத்தில் வெடிமருந்தின் வரையறையைப் பற்றி யோசிப்பதற்காக வெடிமருந்து புஸ்தகமொன்றைக் கண்டு பிடிப்பது அவசியமாய் நினைத்ததாகும். இக்கார்டு விஷயத்தில் இவர் முதல் பேசிய மாதிரியைக்கொண்டே டை டிபன்ஸ் ஸ்டேட்மெண்டை எவ்வாறு நம்பலாமென்று ஜூரியார் சொல்லவேண்டியிருக்கிறது. ஆனால் நான் குறிக்கப்போகும் இரண்டு பாராக்களை மிஸ்டர் திலகரைப் போல வேறொருவன் எழுதக்கூடிய போது, குற்றம் சாட்டப்பெற்ற பல விஷயங்களை யெழுதினேனின் என்னவிஷயமாய் ஒரு முடிவுக்கு வரும்படி பிராசிகூஷன் தரப்பில் ஜூரி முன்பு சாக்ஷியமாக போதுமான சந்தேகாஸ் பதத்தின்பேரில் கார்டுவைக்கப்பட்டதாயின் ஒருவருக்கும் அதிசயமாகாது. மிஸ்டர் திலகர் இவ்விஷயங்களை யெழுதியதின் கருத்தெல்லாம் சீர்திருத்தம் ... பாவிட்டால் சமாதான மார்க்கத்துக்கு ... தான் புறப்பட வேண்டுமென்று அதிகாரத்தையும் ஆட்சியையும் பயமுறுத்தியதேயாகும். அவசியமானால், நான்சொல்வதே சரியென்று மெய்ப்பிக்க முக்கிய விஷயத்தில் முக்கியாம்சங்களிலேயே காணலாம். சென்ற ஜூன்மீ 9உ விஷய சங்கதிகளொன்றில் பாம்ப் என்பது அறிவின் உருவமாயும், ஒருவகை மந்திர வாதமாயும் உள்ளது என்றிருக்கிறது. பாம்புகளைக் கண்டித்து விட்டதாயக் குற்றவாளி கூறுவதினுண்மை யெவ்வளவி லுள்ளது? அவ் விஷய முழுமையும் மறைவான மிரட்டில்லை; வெடிகுண்டு இருக்க வந்திருக்கிற தென்றே கவர்ன்மெண்டைத் தெளிவாய் மிரட்டி யிருப்பதைக் காணலாம்.

சென்ற ஜூன்மீ 2௨ விஷயப் பகுதிகளுளொன்றில் தாக்கில் துணிவும் சமர்த்துமான அம்சத்தைமெச்சிக்கு பிடித்து சபிகார சகோதரர்களே வங்காள பாம்புக் கூஷியாரிலும் மேலானவர்கள் என்றிருக்கிறது. மேலும் "முடிவையும் வழியையும் கவனித்து மிடத்து, வங்காளிகளே மிக்க புகழுக்குரியவ ராகவேண்டும்" என்றுமிருக்கிறது. மானுஷ உணர்ச்சிகளையுடையவனும், மனுஷனென்னத் தக்கவனும் உள்ள எவனும் இவ்வாறு எழுதியிருக்கக் கூடுமென்று எனக்கு ஏற்படவில்லை. அதாவதென்ன? இரண்டு கொடும் படுகொலைகளின் புகழ்ச்சியா? நள்ளிருளிலே வண்டியில் சவாரி போன ராண்டு, அயர்ஸ்ட் என்றவர்களை சுட்டுக்கொன்று தூக்கிடப்பட்டதில் துணிவும் சமத்துமென்ன? மிஸ்டர் திலகரின் சொந்த வாய்மொழியே கண்டித்து ரக்ஷிக்க வைத்திருப்பதாக எனக்குத் திருப்தியாய் விட்டதால், நான் கண்டிப்பதை நிறுத்திவிடக் கருதினேன். இவ் வோட்டங்களை நாளுக்குநாள் வாசித்தறியும் துர்ப்பாக்கியம் பெற்ற ஒருவன் இப்பேர்ப்பட்ட பிரமாணங்களைக் காணுமாறு ஈடுபடவேண்டியதிலிருந்து விலகியிருக்கக் கூடாமை. பாம்பை நயமாயும், செட்டாயும் செய்யக்கூடியமென்று சங்கீதாவித் தெழுதிய விஷயப்பகுதிக ளநேகம். [illegible]ம், வங்காளிகளை இவ்வாறு செய்வது ஒருவித [illegible]மென்றும் ஆதரித்திருக்கிறார். மிஸ்டர் திலகர் தருமக்கொலைக்காரரென்றாலும், அவர் இன ஜனங்கள் அப்படி அபிப்பிராயப்படவில்லை. அல்லாமலும், "ஆளுகை முறையோ கெட்டதோடு, அதிகாரிகளை வேறுபடுத்தி அச்சுறுத்தா விட்டால், இம்முறையை மாற்ற இணங்கார்கள்" என்றுங் கூறியிருக்கிறார். ஜூரி அட்ரெஸில் இப் பகுதியைக் குற்றவாளி மறைத்துக்கொண்டார். பிராசிகூஷன் தரப்பில் எடுத்துக் காட்டப்பட்ட பயங்கரமான பகுதிகளை யிப்போது கண்டுள்ளபடி தாவாகார்டின் தாற்பரியத்தை யெவ்வகையிலும் நீங்கள் சிந்தனையாய் கவனிக்கவேண்டும்.

குற்றவாளி கூறியபடி பண்டித (லார்ட்) மார்லியும் தானும் ஒரே அபிப்பிராயப்பட்டிருப்பதாகக் காட்டியிருப்பது பரிதபிக்கத் தக்கது. ஸிவில் ஸர்விஸ் விருந்தில் லார்டு மார்லி பேசியதை மிஸ்டர் திலகர் மிக கவனித்திருப்பதாய்த் தெரிகிறது. ஆனால் லார்ட் மார்லி இந்தியாவில் தாராள சீர்திருத்தங்களை விஸ்தரிக்க விரும்பியிருந்தாலும், எவ்வகையிலும் ஆக்கிரம நடவடிக்களும் அங்கீகரிக்கத் தக்கவையே. அவ்வாக்கிரம நடவடிக்கைகளை அந்த லார்டு மார்லியே அங்கீகரித்திருக்கிறார் என்பதை மிஸ்டர் திலகர் மறந்தே போனார். "பாம்புகள் எறியட்டும், கொலைகள் நடக்கட்டும், கலகங்களாகட்டும், ஜன சமாதான விரோதமான கலபைகள் சம்பவிக்கட்டும்—அவற்றையடக்க கவர்ன்மெண்டார் எதுவும் செய்யவேண்டியதில்லை" என்று மிஸ்டர் திலகர் விவகரிப்பது பரிகசிக்கத்தக்க ஆபாசமாகும். மற்றபடி கவர்ன்மெண்டேதுக்கு? அது ஒழுங்கை நிலை நிறுத்த எத்தனிப்பதே பத்து வருஷத்துக் கொரு முறை பிடித்துக்கொள்ளும் பேயாவேசத்தில் அக்கிரமமுறைக்கு ஆரம்பித்துக் கொள்ளுவதாக அர்த்தமா? அப்படியானால் திலக் கம்பெனியார் அக்கிரமங்களை நிறுத்தாவிட்டால் பாம்புகளையெறிவோமென்று சொல்லத்தகுமா? இத்தகுதியைக் கொண்டே இது தூஷணையாகாதென்று சொல்ல ஜூரியைக் கேட்டிருக்கிறார். அப்படிக் கில்லாவிட்டால், லாவை மாற்றிவிடுவது எல்லாக் கக்ஷிக்காரருக்கும் நல்லதாய்விடும். திலக் வகையாரின் எதிர் வாதங்கள் எந்தக் கோர்ட்டாராலாவது அங்கீகரிக்கப்படுமானல், இந்நாட்டில் நிச்சயமாய் அராஜிகம் மேற்கொண்டுவிடும்.

மிஸ்டர் திலகர் அட்ரெஸின் கடையில் குறிக்கப்பட்ட 153 A ஸெக்ஷனைப் பற்றி விஸ்தாரமாய்ப் பேசுவதற்கில்லை. அதைப்பற்றிய பிரமாணத் தீர்மானமேதும் கிடையாது. ராஜப் பிரஜைகளின் வெவ்வேறினங்களுக் கிடையே பகை புணர்ச்சிகளை உண்டு

பண்ணியதாக சாட்டி யிருக்கும்போது சார்ஜ் இன்னதென்று தெரியவில்லை யென்பது பாசாங்கே யாகும். நாலு நாளாய்ப்பேசியதில் அதிகாரநிர்வாகக்கக்ஷி, அதிகார நிர்வாக விரோதக்கக்ஷியென்ற இரண்டெதிர்க்கக்ஷிகள் உள்ளனவென்று குற்றவாளி விவரித் திருக்கையில், சார்ஜை தெரியவில்லையென்று பாசாங்குசெய்வது தகுமா? சார்ஜ் முற்றிலும் செவ்வையாய் செய்யப்பட்டிருக்கிறது. 153 A ஸெக்ஷன் சார்ஜைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. 124 A ஸெக்ஷன்படிக் குற்றங் கூறப்படுமானால், 153 A ஸெக்ஷனைப் பற்றி அவ்வளவாய் அவசியமில்லை. இதைப் பற்றிக் கேசுக்கு ஒரு குறைவுங் கிடையாது ஆகையால், அந்த ஸெக்ஷனைபற்றிக் கவலை கிடையாது.

ருஷியாவிலே பாம்புப் பிரவேசத்தைப் பற்றிக் குற்றவாளி கூறியிருப்பதை கவனிக்குமிடத்து, அமை ஜூரியாருக்கு சொல்லி வைத்தது நேர்விரோதமாய் விடும். ருஷியாவில் பாம்பு பிரயோகமானது சுதந்திரங்களைக் குறைத்து வந்ததின்பேரில் ஏற்பட்டதென்பது உண்மையான சரித்திரம். ருஷியாவில் பாம்புப் பிரவேசம் அந்நாட்டில் சீர்திருத்தங்களைக் கட்டாயப்படுத்தியதினால், இந்நாட்டிலும் அப்படியே செய்யவேண்டுமென்னப்பட்டது. கவர்ன்மெண்டையே முற்றிலும் மாற்றிவிடும் பிரமாண மேற்படவில்லை. முழுவதிலும் விஷயங்களின் கருத்தாவது முதலாவதாக இந்தியாவிலுள்ள வெள்ளை யதிகாரிகளின் நடவடி இத்தொந்திரவுகளுக்கெல்லாம் காரணமென்பதோடு, அவர்களின் அக்கிரமங்களினால் பாம்பெறியும் சிறுவர்கள் திருப்பிக்கொண்டதாய்க் காட்டுவதாகும். ராஜரீக சுதந்திரங்கள் கிடைக்க வேண்டுமானால், பாம்பெறியே கைக்கொள்ளத் தக்கதென்னப் பட்டது. இன்னும் பாம்பெறிசிறுவர் தப்பிதமாவது வேற்றாட்களின் மேல் விட்டெறிந்த தொன்றேயென்ற கொடிய கொள்கையுமுள்ளது. உதாரணமாக, குடிராமும் மிஸ்டர் கிங்ஸ்

போர்டொழிய வேறிரண்டு வேடிகள் கொல்லப்பட்டதைப்பற்றி விசனப்பட் டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. மிஸ்டர் கிங்ஸ் போர்டின்மேல் விட்டெறிந்திருந்தால் எல்லாம் சரிப்பட்டுப் போயிருக்கு மென்றும் சொல்லப்பட்டது. இவ்விஷயார்த்தமாவறு பாம்புகளை நேரா யெறியுங்கள்—தவறிவிடாதீர்கள். அப்போது தான் திலகர் வகையார் அங்கீகாரம் பெறுவீர்கள்—என்பதாகும். அந்நிய ஆளுகையே இந்தியாவின் ஆண்மைத்தனத்தை அழித்து விட்டதென்ற விடத்து [illegible]யம் நேர்ந்த போதெல்லாம் போர்க்களங்களிலே தங்கள் வீரத்தைக் காட்டி யெப்போதும் பேரெடுத்து வரும் இந்தியத் துருப்புகளை அவமானமாய் தூஷித்ததாகிறது.

# ஜட்ஜியின் தொகுப்புரை.

இவ் விசாரணையை எட்டு நாளாய் ஜூரியார் பொறுமையாகக் கேட்டுக்கொண் டிருந்ததைப் பற்றி அஞ்சுகிறேன். இருதரத்துக் கேசும் செவ்வையாய் சொல்லப்பட்டு வந்ததால் உங்கள்பொறுமையை இன்னும் இழுத்துவிட எனக்கு யோசனையில்லை. எதையும் சொல்வதற்கு முன்னே இக்கேசை நீங்கள் முன்னடிக் கேட்டதில்லையென்றாவது, இதற்கு முன்னே குற்றவாளியைப்பற்றிக் கேள்விப்பட்டதில்லையென்றாவது சொல்வது வீணிலும் வீணான பாசாங் கென்பதை ஒப்புக் கொள்கிறேன். உங்கள் வீடுகளில் அல்லது கோர்ட்டில் சிநேகிதர்களிடம் இக்கேஸ் விவாதிக்கப் பட்டதென்பதிலும் சந்தேகமில்லை. இக்கேஸ் கோர்ட்டுக்குள் நடந்தேறியபோது நீங்கள் கேட்டுக்கொண் டிருந்தமட்டில் யோசிப்பது உங்கள் கடமையாகுமென்று சொல்ல வேண்டியதில்லை. இக்கேசின் முடிவுக்கு வருவதில் எவ்வித கோபத்துக்காவது, முற்போக்குக்காவது, வெளி சங்கதிக்காவது நீங்களிடங் தரமாட்டீர்களென்பதிலும் சந்தேகமில்லை. குற்றவாளியே உங்களையும் உங்கள் தீர்மானத்தையும் நம்பி யிருப்பதாய் சொல்லக் கேட்டுத் திருப்தி யடைந்தேன். குற்றவாளி உங்கள் முன்பாக சாதாரணமாய் ஒரு சகா மனுஷனாக நிற்பதை நீங்கள் கவனிக்கும்படிக் கேட்கிறேன். இவர் வற்புறுத்திய யாவத்தையும் நீங்கள் தயவாய் கவனித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். ஒரு விஷயத்தில் நீங்கள் ஜாக்கிரதையா யிருக்க விரும்புகிறேன்; அதாவது இக்கேசில் சர்க்காரே பிராதியா யிருப்பதினால் தகுதியில்லாத தாக்ஷிணியம் வேண்டியதில்லை. அதனாலே குற்றவாளிக்கு விரோதமாயாவது, பிராசிகூஷனுக்கு விரோதமாயாவது உங்களுக்கு யாதொரு முற்போக்

ருக் வேண்டியதில்லை. செஷனுக்கு முன்பாக எல்லாக் கேசுகளிலும் சர்க்காரே சரியான பிரதி. லாவைக் கடந்ததா யேற்படும்போது விசாரணைக்குக் கொண்டு வருவது சர்க்காரின் கடமையாகும். லாவுக்குத் தவறு தலாயிற் றென்றாவது இல்லையென்றாவது தீர்மானிப் பதை சர்க்கார் ஜட்ஜிக்கும் ஜூரிக்கும் விட்டிருக்கிறது. விருதாவல்லது கக்ஷியான பிரதுகளை இந்த செக் ஷன்களின்கீழ் கவர்ன்மெண்டு ஸாங்க்ஷ னில்லாமல் கொண்டுவராதபடி லாவானது பத்திரிகாசிரியர்களையும், பிரசுரிப்போரையும், பிரசங்கிகளையும் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. ஸாங்க்ஷன் தேவை யென்பதற்கு அதுவே காரணம். லா உத்யோகஸ்தர்கள் இந்த ஸாங் க்ஷனை அதிகாரபத்திரம்போல மதிக்கிறார்களென்று குற்ற வாளி சொல்லக்கேட்டீர்கள். இம்மாதிரியாகவே குற்ற வாளி கருதியதாக நான் நினைக்கவில்லை. எங்காவது யாருக்காகவாவது ஓர் அதிகார பத்திரத்தைக் கோர்ட்டுக் கனுப்புவது மிக்க அக்கிரமமாகும். நான் இணங்கவும், நீங்கள் இணங்கக்கடமைப் பட்டதுமாகிய அதிகார பத்திரமோ மனசாக்ஷியென்னும் கட்டளையே. குற்ற வாளியை முற்றிலும் தாராளமும் ஒழுங்குமான விசா ரணையில் வைக்கவேண்டுமென்பதே யெனதுவிருப்பம். ஒவ்வொரு தாத்பரியாம்சத்தைப் பற்றி ஒவ்வொரு விதவாதத்திலும் நுழைந்திருக்கிறேன். இக்கேசுக்கு சம்பந்தப்படாத சில விஷயங்களு முள்ளதுதான்; ஆனால் உங்களுக்கு முன்பாகக் குற்றவாளி தன் மனசி லிருந்ததை யெல்லாம் கொட்டி யொழிக்கவும், தன் தாத்பரியாம்சத்தையும், தன் நடவடிவிவரத்தையும் சொல்லிக்கொள்ளவும், தாமெழுதியவற்றையும் தன் பாவங்களையும் விளக்கிக்காட்டவும் சாவகாசம் தந்ததில் உங்களுக்கு நஷ்ட மேதுமில்லை. இன்னும் போகாத தற்குமுன் நீங்கள் இவருடைய கடமைகள் இன்ன வென்றும், உங்கள் கடமை யின்னவென்றும் தெளி வாய்த் தெரிந்துகொண்டால் நல்லதாகும். ஜட்ஜின் கடமைகள் கிரிமினல் புரொசிஜர் கோடில்வரை

யறுக்கப் பட்டிருக்கின்றன. அக் கடமைகளையெல்லாம் உங்களுக்குக் காட்டிக்கொண்டு போகவில்லை; ஆனால் நான் செய்யவேண்டிய தோன்றுவது லா விஷயங்களை யெல்லாம் தீர்மானித்து, லாவும் சங்கதியும் கலந்த விஷயங்களையெல்லாம் திட்டப்படுத்தி, சாக்ஷியாகக்கொண்டு வரப்பட்டதை யெல்லாம் சேர்மானம் செய்து என் சொந்த தீர்மானத்துக்கு இன்னவென்றும், ஜூரிக்கு இன்னவென்றும் பகுத்தறிவதேயாகும். தொகுப்புரையில் ஜட்ஜி சங்கதி விஷயமாயாவது, லாவும் சங்கதியும் கலந்த விஷயமாயாவது தன் அபிப்பிராயத்தைக் காட்டலாம். இப்பால் அடுத்த ஸெக்ஷனில் ஜூரியின் கடமை வரையறுக்கப் பட்டிருக்கிறது.

பிராதின் கருத்துகளையும், எதிரியின் கருத்துகளையும் கேட்டிருக்கிறீர்கள். இருதரத்தவரும் உங்களிடம் பூர்த்தியாய்ப் பேசியிருக்கிறார்கள். என் சொந்த அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதோடு, உங்களுக்கு வழிகளைக்காட்டவும் எனக்கு நியாயமுள்ளது. ஆனால் குற்றவாளியும் உங்களை நம்பியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இக்கேஸ் முற்றிலும் உங்களிட யோசனைக்கு விடும்பொறுப்பையும் சேர்க்கப்போகிறேன். என் தாற்பரியாம்சப்படி இக்கேசில் யாதொரு கஷ்டமுமில்லை. இதோ லா விருக்கிறது. இப்போது லாமுடிவுபெற்றிருக்கிறது. சென்ற 10 வருஷகாலமாய்க் கேசுகள் கோர்ட்டுக்குவந்து செவ்வையாய் யோசிக்கப்பட்டிருக்கின்றன. முன்னமே முடிவுக்கு வராதலாவை உங்களிடம் வைக்கக்கருதியில்லை. என் சொந்த லாக்கருத்தையும் உங்களிடம் வைக்க யோசித்தில்லை. ஆனால் இக்கேசுகளை விசாரித்திருக்கிற பிரபல ஜட்ஜிகளின் கருத்தை உங்களிடம் வைப்பதினால், அக்கருத்துகளையே நீங்கள் பின்பற்றவேண்டும். கற்றறிந்த அட்வோக்கேட் ஜெனரல் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்ட்ரேசியின் தொகுப்புரை (Summingup) யிலிருந்து உங்களுக்கு விஸ்தாரமாய்க்காட்டியிருக்கிறார். மிக்க சொற்ப

மான தவறொன்று தவிர அத் தொகுப்புரை புல் பெஞ்சிலன்றி, பிரிவிக் கவுன்ஸிலிலும் அங்கீகாரம் பெற்றது. இந்த ஹைகோர்ட்டில் மற்றக்கேசுகளிலும் அத்தீர்மானமே அங்கீகாரமா யெடுத்துக் கொள்ளப் பட்டது. அதிலிருந்து கூறும் பிரமாணங்களைக் கேளுங்கள்; ஆகவே அதேநியாயத்தைத் திருப்பவும் நான் சொல்லவேண்டியதில்லை. ஆனால் நீங்கள் மூன்றுக் குற்றவாளியின்பேரில் சார்ஜுகளின்னவென்று தெளிவாயறியவேண்டும். சென்ற மே௴ 12௳ வெளியான விஷயத்தைப் பற்றி இ. பி. கோ 124 A ஸெக்ஷன்படி முதல்சார்ஜாகும். அதுதான் ராஜதூஷணக்குற்றம். அவ்விஷயமாய்ச் சார்ஜ் அதுவே. அடுத்த சார்ஜாவது அந்த ராஜதூஷணக் குற்றமே. அது சென்ற ஜூன்௴ 9௳ வெளியான விஷயமாய், அதே ஸெக்ஷன் கீழ் கொண்டுவரப் பட்டிருக்கிறது. கடைசி சார்ஜாவது ராஜப்பிரஜைகளின் வெவ்வேறு வகுப்புகளுக்கிடையே பகையுணர்ச்சியைத் தூண்டுவதாகிய 153 A ஸெக்ஷன் கீழ்கொண்டுவரப் பட்டிருக்கிறது. உங்களுக்கு முன்பாயுள்ள ஸெக்ஷன்களின் வார்த்தைகளை வாசித்தீர்களானால் அவசியமென்று அநேகமாய் உத்தேசித்த கஷ்டங்களும் யோசனைகளும் மறைந்துவிடக் காணலாம். நீங்கள் பார்க்கவேண்டியதெல்லாம் ஷை ஸெக்ஷன்கள் பேச்சாலாவது எழுத்தாலாவது காட்சியாலாவது சில காரியங்களை செய்கிற அல்லது செய்ய எத்தனிக்கிற எவனுக்கும் எதிர்மறைக் காப்பா யேற்படும். அதாவது லாப்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ள கவர்ன்மென்டைப் பகைப்படுத்த அல்லது அதை இழிவுபடுத்த அல்லது எத்தனிக்க வேண்டியதில்லையாகும். இங்கே லாப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டு என்பது இந்நாட்டை யாளும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு என்பதில் சந்தேக மில்லையாகவே, கவர்ன்மெண்டுக்கு விரோதமான உணர்ச்சிகளை ஒருவன் தூண்டவாவது, தூண்டும்படி யெத்தனிக்கவாவது வேண்டியதில்லையாகும். ஆகவே அவமானம் என்பதற்கும், நிஷ்டூரம்

என்பதற்கும்வரையறைதேவை. உங்களுக்கும் உணர்ச்சிகளும், ஆவேசங்களும் உள்ளன. உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒருபோதாவது வேறொருவரைப்பற்றியாவது பகை அல்லது இழிவைப் பாராட்டியிருக்கலாமென்று சொல்லத்துணிகிறேன். வெறுப்பென்னும் வார்த்தை விசேஷத்தைப் பற்றி மெத்த வாதமாயிருக்கிறது. இவ்வார்த்தை சாதாரணமாயிருவருக்கிடையே வழங்குவதாகாமல், ஆள்வோனுக்கும் குடியானவனுக்கும் இடையிலேயே அதிகமாய் வழங்குகிறது. இவ்வார்த்தைகளுக்கு யாதொரு கஷ்டமுமில்லை. செக்ஷன்களின் விவரணங்களை நீங்களெப்போதும் கவனித்துக் கொண்டிருக்கவேண்டும். அவை கவர்ன்மெண்டு ஏற்பாடுகளையும், ஆட்சி நடவடிக்கைகளையும் காப்பாற்றக் கருதப்பட்டிருக்கின்றன. கவர்ன்மெண்டு ஏற்பாடுகளை விவாதிக்கவும், அவற்றைக் கண்டிக்கவும், அவசியமானபோது வற்புறுத்தி யெழுதவும்; கவர்ன்மெண்டின் நடவடி ஒரு ஜனப்பகுதியாலாவது, ஒரு பேச்சுக்காரரா லாவது, ஒரு பிரசுரக்காரராலாவது கண்டிக்கப்படத்தக்க விதமாய் எதையாவதுசெய்யவும் பிரசுரக்காரர்களுக்கு தாராளமான சுதந்திரம் உள்ளது. வேகமான நடையிலும் நியாயத்தை வற்புறுத்த உரிமையுள்ளது; ஆனால் பிரசுரக்காரராவது பேச்சுக்காரராவது கவர்ன்மெண்டின் அயோக்கியமான அல்லது அநீதியான முறைகளை யெடுத்துக் காட்ட நியாயமேது மில்லை. என்னைப்போலவே நீங்களும் பிரசுரசுதந்தரத்தைக் காப்பாற்ற ஆவலுள்ளவர்களென்பதில் சந்தேகமில்லை. பிரசுரசுதந்திரத்தைப் பற்றிக் குற்றவாளி வற்புறுத்தியதை யெல்லாம் நீங்கள் கவனிக்கவேண்டும்; ஆயினும் அந்த சுதந்திரத்தைக்கொண்டு லாப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டைப் பகை அல்லது இழிவுக்குக் கொண்டு வரப்பிரயோகிக்கக் கூடாதென்று லா சொல்லுகிறது. 153 A செக்ஷனே சாதாரணமானது. ராஜப்பிரஜைகளின் வேறுபட்ட வகுப்பாரிடையே யாராவது பகைபுணர்ச்சியை மூட்டினால் அல்லது

மூட்டப்பார்த்தால் இந்த ஸெக்ஷன்கீழ் வருவதை நீங்கள் கண்டறிந்திருக்கிறீர்கள். இதனால் எந்த மூடிக்குடியும் ஒரு வகுப்பின் உணர்ச்சியை வேறொரு வகுப்பின்மீது தூண்டிவிடும்படியாய் எழுதவாவது, பேசவாவது, வேறெதையும் செய்யவாவது கூடாதென்றேற்படுகிறது. இந்நாட்டில் வேறுபட்ட வகுப்பாருக்குள்ளே சமாதானத்தை நிலைப்படுத்தி வைப்பதற்கு இது தகுதியான லா அமைப்பு என்று அங்கீகரிக்கிறேன். பம்பாய் அலகாபாத் ஹைகோர்ட்டுகளில் ஸர் பெதிராம், ஸர் எட்ஜ், ஸர் ஜெங்கின்ஸ். ஜஸ்டிஸ் ஸ்ட்ரேச்சி இவர்கள் ஜட்ஜ்மெண்டுகளின் பகுதிகளைப் படிப்பதைக் கேளுங்கள்.

தாவா விஷயங்களை அவற்றைக்கொண்டே தீர்மானிப்பதில் இவை எழுதப்பட்ட சந்தர்ப்பங்களையும் நீங்கள் பூர்த்தியாய் யோசிக்கவேண்டும். குற்றவாளி எற்படுத்திய சுற்று சந்தர்ப்பங்களையும் விவரணங்களையும் முற்றிலும் நீங்கள் பாராட்டிய பிறகு லாவுக்கு எட்டியமட்டில் விஷயங்கள் ராஜதூஷணமானதாவென்றும் —குற்றவாளி ஏற்படுத்திய சந்தர்ப்பங்களினால் தான் லாவுக்கெட்டியமட்டில் அகப்படவில்லையென்று சொல்வது நியாயமாவென்றும் சொல்லுங்கள். குற்றவாளியால் குறிக்கப்பட்ட பஞ்சாப் லாரிப்போர்ட் கேஸில் ஒருவன் கோடாளியைத் தூக்கிகொண்டு மற்றொருவனைத் தொடர்ந்தோடினான். அவனை நாலடிக்கு நெருங்கின போது, சிலர் கோடாளிக்காரனைத் தடுத்துவிட்டார்கள். அவன் பேரில் எத்தனக்கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. குற்றவாளி கேட்டதுபோல் அவன் குற்றவாளி அல்லவென்னப்பட்டதும் உண்மைதான; ஆயினும், இக்கேஸைப் பார்த்தவிடத்து மேற்கூறிய குற்றமில்லையென்றாலும், கொடுந் துன்பம் செய்ய எத்தனித்ததாய்த் தீர்மானிக்கப்பட்டதாகக் கண்டேன். ஒருவன் ஒரு கோடாளியோடு மற்றவனைத் தொடர்ந்தோடினால், அது விளையாட்டாகாமல் ஏதோ ஒரு குற்றம் சாட்டியே தீரவேண்டும்.

ஏராளமான இங்கிலீஷ் கேசுகள் நூற்றாண்டுக் கணக்காயும், அந்நியநாடுகளில் நடந்தேறியதாயும், வெவ்வேறு சந்தர்ப்பங்களைப் பெற்றனவாயும், மற்ற காலங்களைக் கண்டதாயும் கொண்டுவரப்பட்டன. 1700-க்கும் 1800-க்கும் இடையே காட்டிய கேசுகள் அநேகமாகக் கேட்டீர்கள். நல்லது, அவற்றையும் எடுத்துக்கொள்ளுங்கள். பிரசுர சுதந்திரத்தைப்பற்றி அவை சொல்லப்பட்டதாய் வைத்துக்கொள்ளுங்கள். குற்றவாளி கூறியதுபோல் அவருக்கும் சுதேசப் பிரசுரத்துக்கும் இடையே நின்று கொள்ளுங்கள். இங்கிலீஷ் பிரசுரத்திலும் சுதேசப் பிரசுரத்தை அதிகமாய்ப் பாராட்டித் தீர்மானியுங்கள். சுதேசப் பிரசுரம் இளமை பற்றி அதிக ஊக்கமாய் நிற்கட்டும். விஷயங்களைப் படித்த பிறகு உங்கள் மனதில் விளைந்த பயன் யாதென்பதைச் சொல்லுங்கள். மராத்தி பாஷைக்கு சில வார்த்தைகள் தேவையென்றும், விஷயங்கள் உயர்ந்த நடையில் எழுதப்பட்டனவென்றும் குற்றவாளி சொல்லிக் கேட்டுக்கொண்டதை நீங்கள் செவ்வையாய் கவனிக்கவேண்டும். அப்பாலும் இவ்விஷயங்கள் கவர்ன்மெண்டின் மேல் பகை அல்லது இழிவைத் தூண்டுவதற்கு கருதினதாய் ஏற்பட்டதாக முடிவுக்கு வருவீர்களானால், குற்றவாளியின் எண்ணத்தை மெய்ப்பிக்க வைத்திருக்கும் இதர விஷயங்களையும் படித்துப் பாருங்கள்.

குற்றவாளி மொழி பெயர்ப்புகளைப்பற்றிக் குறை கூறியிருக்கிறார். மிஸ்டர் ஜோஷியை நிறுத்தி வெகுநேரம் குறுக்கு வாக்குமூலம் வாங்கப்பட்டது. உங்கள் மனதில் விளைந்ததைப்பற்றித் தீர்மானித்துக் கொள்ளுங்கள். குற்றவாளிபேரில் யாதொரு விரோதமும் பாராட்டாமல் மிஸ்டர் ஜோஷி சாக்ஷியம் கூறியிருக்கிறார். அவர் மராத்தி மாணவராக விளங்கியே மராத்தியில் கேட்டதற்கெல்லாம் பதில் சொல்லிவந்தார். மொழி பெயர்ப்புகளைப்பற்றி பதில் சொல்ல அகராதியோடு தயாராயிருந்தார். தாவா விஷயங்களுக்காக அதிக

காலத்தை செலவிட் டிருப்பதாகக் காணப்பட்டார்.
அவை மிஸ்டர் ஜோஷியால் மொழிபெயர்க்கப் பட்ட
வையல்ல வென்பதை நீங்கள் கவனிக்க வேண்டி யிரு
க்கிறது. அம் மொழிபெயர்ப்புகள் உத்திரவாதமான
கோர்ட்டு துபாஷியுடையவை. திருத்தமாய் மொழிபெ
யர்க்கத் தகுதியா யில்லாவிட்டால் கோர்ட்டு துபாஷி
யாகக் கூடாமை. ஒரு ரிகார்டு ஹைகோர்ட்டு துபாஷி
யால் செய்யப் பட்டதானால், அது சரியான மொழி
பெயர்ப்பாக ஒப்புக்கொள்ள வேண்டிய தென்பது
சாதாரணமான கோர்ட்டு ரூலா யிருக்கிறது. ஹைகோ
ர்ட்டுதுபாஷிக்குத்தன்போரில் எவ்விரோதமாவது உள்ள
தென்று குற்றவாளி குறிக்காதபோது, இம்மொழி
பெயர்ப்புகள் தப்பர்த்த மானவை யென்று என் கூற
வேண்டும்? விஷய சாராம்சம் மொழி பெயர்ப்புகளில்
போய்விட் டிருந்தாலும், குற்றவாளி மிஸ்டர் ஜோஷி
யை நெடுநேரம் கிராஸ் கேட்டிருப்பதைக் கேட்டிருக்
கிறீர்கள். பிரஸ்தாபத் தப்பு மொழி பெயர்ப்புகளைப்
பற்றி அவர் உங்களுக்கு விவரித்திருக்கிறார். ஒவ்வொரு
வகையிலும் குற்றவாளியின் மொழி பெயர்ப்புகளை
பெற்றுக்கொண்டு விஷயங்களை வாசித்து, அவ்விஷயார்
த்தங்களைக் கொள்வதே சரியான காரியமென்று நினைக்
கிறேன்.

இன்னமும் இவ் விஷயங்களைத் தீர்மானிப்பதில்
குற்றவாளி குறித்தபடி, சுற்று சந்தர்ப்பங்களை யெல்
லாம் நீங்கள் கவனிக்கவேண்டும். இதர இந்திய ஆங்கி
லோ இந்திய பேப்பர்களிலும் மிக்க அதிகமாய்த் தன்
பேப்பருக்கு கிராக்கி யுள்ளதென்று குற்றவாளி உங்க
ளுக்கு சொல்லியிருக்கிறார். இவரெழுதியவற்றை யெல்
லாம் பல்லாயிரக் கணக்கான சந்தாதார்களும், மராத்திய
மாணவர்களும், கல்வியறி வில்லாமையால் விஷயமதி
ப்பு காணாத ஜனங்களும் படித்திருப்பார்கள். ராஜரிகக்
கக்ஷிகளின் கருத்தறியாத ஜனங்களும் படித்திருக்க
லாம். அப்பேர்ப் பட்டவர்களுக்கு இவ்விஷயங்களால்

என்ன விளைந்திருக்கு மென்பதையும் பெருந்திரளான ஜனங்கள் இவ்விஷயங்களைப் படித்திருப்பதின் பலனாக என்ன விளைந்திருக்கு மென்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டி யிருக்கிறது. இவ் விஷயங்களைப்பற்றிக் குற்றவாளி 21-மணி 10 நிமிஷ நேரம் விவரித் திருப்பதை அவ்வாசகர்கள் அறியவில்லை யென்பதையும் கவனிக்க வேண்டுமாயினும், குற்றவாளி விவரித்தபடி இவ்விஷயங்கள் எழுதப்பட்டதின் பிரயோசனத்தை ஜனங்கள் அறிந்ததாகவே யிஷ்டமானால் வைத்துக்கொள்ளுங்கள்.

வண்ணத்தைப்பற்றியும் போக்கைப்பற்றியும் இரு தரப்பிலும் ஏராளமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் வெறுப்பையும், அவமதிப்பையும், அராஜவிசுவாசத்தையும் நிஷ்டூரத்தையும்கொண்ட உணர்ச்சிகளைக் குற்றவாளி தூண்டிவிட்டதாயாவது, தூண்டப்பார்த்ததாயாவது தீர்மானிக்க நான் ஜட்ஜாகவும், நீங்கள் ஜூரியாகவும் இங்கேயிருக்கிறோம். சாக்ஷியத்தால் அதை ருஜூப்படுத்தக்கூடாமையாவதெப்படி? உதாரணமாக ஒரு தரப்பில் நீங்கள் 100 பேரை வரவழைத்தால், குற்றவாளிதரப்பில் தாவாவிஷயம் கவர்ன்மெண்டுக்கு விரோதமான எவ்வுணர்ச்சிகளையும் உண்டுபண்ணவில்லையென்றே சொல்லுவார்கள். உண்மையில் அவை கவர்ன்மெண்டின்பேரில் அன்பை வளர்க்குமென்பார்கள்; மற்ற தரப்பிலுள்ள 100 பேரும் எதிரிடையாய் சொல்லுவார்கள். இவ்வம்சத்தில் எந்த சாக்ஷியத்தையாவது கொண்டுவரப் பிராசிகூஷனால் முடியாது. நீங்கள் கைக்கொள்ளவேண்டிய முறையாவது வெவ்வேறாய் விஷயத்தைப் பார்வையிட்டு மொத்தத்தில் உங்கள் மனதிலேயே அவை யென்ன விளைவித்தனவென்றும், கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் அவை அராஜவிசுவாசத்தையும், நிஷ்டூரத்தையும் கொண்டவுணர்ச்சிகளை உண்டு பண்ணக்கூடியதாவென்றும், இதைப்போன்ற நடையானது ஆங்கிலேயருக்கு விரோதமாய் ஹிந்துக்களையாவது, ஹிந்துக்களுக்கு விரோதமாய் ஆங்கி

லேயாவனையாவது இளப்பக்கூடியதா யில்லையாவென்றும் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. உங்களுடைய சாதாரண புத்தியினலே அதைத்தீர்மானிக்கவேண்டும். உங்கள் மனதில் ஒரு விஷயம் வைத்திருக்கவேண்டும். பலாத்கார கலகம் படுகொலைகள் நாட்டின் நல்லாளுகைக்கு உத்திரவாதயா யிருப்போருக்கு விரோதமாய்ப் பகைமையும் இழிவையும் கொண்ட வுணர்ச்சிகளின் நடக்கக்கூடாமை. பொல்லாங்கும் படுகொலையும் உள்ளதானல், அதிகார வகுப்பார்மேல் பகைகொண்டவர்களின் செய்கைகளாகும். அது அப்படி யிருக்கவேண்டும். அவர்கள் கவர்ன்மெண்டின்பேரிலும், சொத்துக்ஷேமத்துக்கும் பிராணக்ஷேமத்துக்கும் மிக்க உத்திரவாதமாயுள்ளவர்கள் பேரிலும் நல்லுணர்ச்சியைக் கொண்டவர்களானல், பாம்பெறி முதலிய தொந்தரவேதும் இருக்காது.

இவ்வெத்தனமானது நிறைவேறவேண்டியதென்பது லாவுக்குத் தேவையில்லையென்று உங்களுக்கு சொல்லியிருக்கிறேன். எத்தனமானது ஜனக்கலகம் அல்லது படைக்கலகத்தால் பலாத்காரத்தைத் தூண்டவேண்டுமென்பது லாவுக்குத்தேவையில்லை. லாவானது கடுமையும் கொடுமையுமாயிருப்பதால், தனக்கும் லாவுக்கும் இடையே நீங்கள் நின்று பிரசுர சுதந்திரத்தைக் காப்பாற்றவேண்டியதென்று குற்றவாளி சொன்னர்; ஆனல் லாவுள்ளபடியே நீங்கள் குற்றவாளியைத்தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. லாகொடுமையாயுள்ளதாவென்று தீர்மானிக்க உங்களாலாவதுஎன்னலாவது இல்லை. அதைநிறைவேற்றவே நானிங்கிருக்கிறேன். லாவானது கடுமையானதா அல்லவாவென்று தீர்மானிக்க ஜட்ஜிகளல்ல. இது இந்நாட்டு லாவாயிருக்கிறது. இந்த லாவை ஒவ்வோரம்சத்திலும் கீழ்ப்படிவதே ஒவ்வொரு குடியின் கட்டுக்கடமையாயுள்ளது. எந்த போக்கும், எந்த யோக்கியமான எண்ணமும் இந்த லாவைமீறி நடக்க நியாயங்கிடையாது. ஒருமனித ஜன்மம் படைத்தவன்

சரியானாலும் சரியில்லாவிட்டாலும் எப்போதும் ஒரு
காரியம் செய்வதில் ஏதோ போக்குக்கு வசப்பட்டிருக்
கிறான். இப்போக்குகள் சந்தேகத்திலிருப்பதும், யோக்
கியமான போக்குகளுக்கான மறுப்புகளுள்ளதுமாய்
சில கேசுகளுமிருக்கலாம். அவசியமாய் விஷயங்களைப்
படித்து, பிறகு அவ்விஷயங்கள் குற்றவாளியின் மறுப்பு
களுக்குப் பொருத்தமானவையாவென்று சொல்லலாம்;
ஆனால் அவை போக்குகளுக்கு சம்பந்தப்பட்டவையா
காமல் எழுதப்பட்ட மட்டிலிருக்கின்றன. அவை எழு
தப்பட்டதின் மெய்பொய்க்கு சம்பந்தப்பட்டதாயில்லை.
சில சமயம் உண்மையே புரட்டப்பட்டிருக்கலாம்.
உண்மையா அல்லவாவென்றும் நீங்கள் தீர்மானிக்கவே
ண்டியதில்லை. நீங்களே பார்வையிட்டு, அவை யெல்லை
யில் உண்மையானதென்று சொல்லலாம்; ஆனால் இக்
கேசுக்காக நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் விஷயங்
களை வாசித்து கவர்ன்மெண்டின்மேலில் பகை அல்லது
இழிவைத் தூண்டப்பார்த்ததாகுமாவென்றும், அவ்
வெத்தனங்கள் வெறுப்பைத்தூண்டியதா வென்றும்
சொல்வேண்டியிருக்கிறது. இவ்விஷயங்கள் கவர்ன்
மெண்டுக்கு விரோதமாய்ப் பகை அல்லது இழிவைக்
கொண்ட வுணர்ச்சிகளை வாசிப்போரின் மனதுகளில்
கிளப்பலாகுமென்றும், இவ்விஷயங்கள் கவர்ன்மெண்
டுக்கு விரோதமாய் நிஷ்டூரத்தையும் அராஜ விசுவாசத்
தையும் கொண்ட உணர்ச்சிகளை உண்டுபண்ணலாகுமெ
ன்றும் நீங்கள் நினைத்தாலும், இவ்விஷயங்கள் கலகை
அல்லது பலாத்காரத்தைக் கிளப்புவதாய் நீங்கள் உண
ர்ந்தாலும் அதுலாவை மீறியதாயில்லையாவென்று
யோசிப்பது உங்கள் கடமையாகும். விஷயங்களை வாசிப்
பதில் கீழுலக பாவனை மாதிரிகளுக்கும், கீழுலக நடை
நயங்களுக்கும் ஆனவை யெல்லாவற்றுக்கும் நீங்களிடந்
தரவேண்டும். குற்றவாளிக் கநுகூலமாக இவ் விஷயங்
களுக்கு அறியாமையான அர்த்தங்கொள்வது உங்
கள் முதற்கடமையாகும். குற்றவாளிக்கு மிக்க அநு
கூலமான அர்த்தங் கொள்வதற்குத் தகுதியுள்ளது;

ஆயினும் அங்கீகாரமும், துஷ்டத்தனமும், பலாத்கார
முமான வார்த்தைகள் விஷயங்களின் உண்மையான
கருத்தை வற்புறுத்துவதற்காக உபயோகிக்கப் படலா
மென்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். ஆகவே, பலாத்
காரத்துக்குத் தூண்டுதலாயுள்ள ஒருவாறான வாக்கியத்
தினாலாவது, விவாதப்படும் குற்றங்களை இழிவான
மதிப்பில் எடுத்துக் கொள்ளலாகுமெ எவ் வாக்கியத்தா
லாவது நீங்கள் ஏமாற வேண்டியதில்லை.

சர்க்கார் பிரியாதில் ஒரு நபர்போல நிஷ்டூரமும்
அராஜ விசுவாசமும் கொண்ட உணர்ச்சிகளை ஜனங்களு
க்கு உண்டுபண்ணி யெழுப்புவதாயுள்ள சண்டைகளிலிரு
ந்தும் அல்லது தூஷணங்களிலிருந்து கவர்ன்மெண்டைக்
காப்பாற்ற வேண்டுமென்று சொல்ல அதிகவுரிமை பெற்
றிருக்கிறது. கவர்ன்மெண்டை நல்ல வேட்டைப் பொ
ருளாகக் கொண்டு எல்லா வகையிலும் அதன் சட்ட
நிரூபண காரிய நிர்வாக ஏற்பாடுகளை உங்களிஷ்டப்
போல் கொடுமையாயும் விரோதமாயும் குறை கூறுங்
கள். அதுமட்டில் பிரசுர சுதந்திரம் காப்பாற்றப் பட
வேண்டும். அவர்கள் குறை கூறட்டும்—நாம் அதுகளை
கவனிக்க வேண்டியதில்லை; ஆனால் அக்குறை கூறப்
அயோக்கியமான போக்கைக்கொண்ட சாட்டுகளிலிரு
ந்தும், துன்மார்க்க யோசனைகளி லிருந்தும் விலகியிருக்க
வேண்டியது மன்றி கவர்ன்மெண்டுக்கு விரோதமாய்
அராஜ விசுவாசத்தையும், நிஷ்டூரத்தையும் கொண்ட
உணர்ச்சிகளை உண்டு பண்ணுவதாயுள்ள நடைக்குற்ற
மற்றிருக்கவும் வேண்டும். மேலும் "எங்களை நேசியுங்
கள்; அன்போடு எங்களை மதியுங்கள்" என்று கவர்ன்
மெண்டார் சொல்லவும் நியாயமில்லை யென்பதையும்
குற்றவாளிபக்ஷமாய் நீங்கள் மனதில்வைத்துக்கொள்ள
வேண்டும். கவர்ன்மெண்டிடம் அன்பைக்காட்ட எவ
னும் கட்டுப்பட்டில்லை; அவர்கள் அப்படிக் கேட்கவும்
நியாயமில்லை. கவர்ன்மெண்டுக்கு விரோதமாய்ப் பெரு
நிஷ்டூரத்தையும் பூர்த்தியான அராஜவிசுவாசத்தையு

ஒருவன் கொண்டிருக்கலாமானாலும், அம்மாதிரி உண
ர்ச்சியை மற்றவர்கள் மனதில் கிளப்பி விடும்படியாய்
வெளியிடவாவது எழுதிவிடவாவது பேசிவிடவாவது
கூடாது. இஷ்டமானால் ஒருவன் எதையோ எழுதி
ஜேபியில் போட்டுக்கொண்டாவது போகலாம், வீட்
டில் வைத்துக்கொண்டாவது இருக்கலாம்; ஆனால் அவ
னதைப் பிரசுரிக்கக்கூடாது. எழுத்தினலாவது, பேச
சினலாவது நிஷ்டூரத்தையும், அராஜ விசுவாசத்தையும்
கொண்ட உணர்ச்சிகளை அவன் வெளியிட வேண்டிய
தில்லை. குற்றவாளி தன்னைத் தவிர வேறெவருக்கும்
கடமைப்பட்டில்லையென்பதையும் நீங்கள் கவனிக்க
வேண்டும். அவரிஷ்டம் போல்எவ்வகையிலாவது தன்
னைத்தான்காத்துக்கொள்வதற்குஉரிமையுள்ளது. எதை
யாவதுமெய்ப்பிக்கவும் அவர்கடமைப்பட்டில்லை. பிராசி
கூஷனை கேசை ருஜுப்படுத்த வேண்டியிருக்கிறது.
பிராசிகூஷனர் சில விஷயங்களை உங்கள் முன்பாகவை
த்து தாவா கூறியிருக்கிறார்கள். குற்றவாளி பத்திரி
கைக் காரரென்று சொல்லியிருக்கிறார். பிரதிவாரமும்
அவர் மேஜைமேல் 200 பேப்பர்கள் கிடக்குமென்
றார். அவர் வாசித்துணர்ந்து தக்ஷணவேகத்தில் எழுத
வேண்டி யிருந்ததென்றதையும் நீங்கள் கவனத்தில்
வைக்க வேண்டியதுதான். இவ்விஷயங்களைத் தக்ஷண
வேகத்தில் எழுதி யிருப்பதாக நீங்கள் நினைத்தால்,
அதையும் நீங்கள் கவனிக்கவேண்டியதே. அத்தக்ஷண
வேககாலம் மேமீ 12உயாக, பாம்ப் வெடிகள் எப்ரல்
கடையில் கிளம்பின. அந்த சம்பவத்தின் பிறகு சுமார்
இரண்டுவாரங்கடந்துஎழுதப்பட்டவிஷயங்கள் தக்ஷண
வேகத்தி லெழுதப்பட்டவை யென்னக் கூடுமான
தாக நினைத்தால், நீங்கள் அதையும் கவனிக்க வேண்டி
யது நியாயந்தான். அன்றியும், தற்காப்புக்காகக் குற்ற
வாளி யிந்த யெழுதியதாகவும் உங்களுக்கு சொல்லப்
பட்டிருக்கிறது. ஒருவன் மற்றவனுடைய மூக்கைப்
பிடித்திழுக்க மற்றவன் அவனுடைய காதுகளை நசுக்கி
விடுவானானால், தற்காப்பு விளங்கக் கூடியதாக நான்

இடந்தரக் கூடும்; ஆனால் பாரோ ஒருவன் மற்றவனுடைய மூக்கைப் பிடித்திருக்க, மற்றவன் வேறொருவனுடைய காதை நசுக்கிவிட்டால் தற்காப் பெப்படியாகும்? பயனீர் பேப்பர் சுதேசக் கலகக்காரர்களைத் தாக்கி முற்றிலும் அக்கிரமமாய் எதையோ சொல்லியிருந்தால், அது கவர்ன்மெண்டு பேப்பரென்பதற்கு இடமுள்ளதா? ஆயினும், இக்கேசின் தோற்றங்களாய்த் தென்பட்ட கருத்துகளை வெளியிடுகிறேன். ஜூரியை தாராளமாய் விட்டிருக்கிறேன். உங்கள் புகழ்ச்சிக்குற்றதாகாதபடி நான் சொல்வதில் எதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை. இக்கேஸில் எனக்குத் தென்பட்ட தோற்றங்களைமட்டும் நான் சொல்லிவருகிறேன். நீங்கள் சங்கதிகளைத் தீர்மானிப்போராகவே, உங்கள் முடிவையே நம்பி யிருக்கிறேன். குற்றவாளிமேரில் குற்றமுள்ளதா இல்லையா வென்று நீங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது. நீங்கள் கலங்கிப் போகாமலிருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். நான் சொல்லி வருவதில் உங்கள் கருத்துகள் கலக்குமானால் நல்லதுதான்; இல்லாவிட்டால் இவ் விஷயத்தில் உங்கள் சொந்தக் கருத்துகளே மேலா யெடுத்துக் கொள்ளுங்கள். இக் கேஸ் இவ்வளவு பெரிதா யிருப்பதாலும், இவ்வளவு அபிப்பிராயாம்சங்கள் உங்களுக்கு சொல்லப்பட் டிருப்பதாலும் அவற்றில் சிலவற்றை விவாதிக்க வேண்டியதும் நல்லதென்று நினைக்கிறேன்.

வேறுரோ சிலகாலமாய் ராஜதூஷண விஷயங்களை யெழுதிக்கொண்டு வருவதினாலே ராஜதூஷண விஷயங்களை நானும் எழுதி யிருக்கிறேன்—என்று குற்றவாளி சொல்வதற்கு மன்னிப்பேதுங் கிடைக்காது. அது மன்னிப்பாகாது. இதைக் குற்றவாளி சொன்னதாக நான் சொல்லவில்லை. இதரமான ஆசாமிகளுக்கு அதே கடுமையில் தானெழுதியதாக மாத்திரம் அவர் சொன்னார். இவ் விதரநபர்களை யேன் விசாரணைக்குக்கொண்டு வரவில்லை யென்பதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்

டியதில்லை. உங்கள் கடமையாவது இவ் விஷயங்களைப் படித்து உங்களபிப்பிராயப்படி உள்ள லாவைக் குற்றவாளி மீறிப்போனதுண்டா வென்று ஜட்ஜிக்கு சொல்ல வேண்டியதாகும். தான் பகிரங்க ஜனங்கப் போர் புரிந்து வருவதாகக் குற்றவாளி உங்களுக்குக் கூறியிருக்கிறார். தனக்கு பகவந்நியதியான போதமுள்ளதென்பதோடு, தன் காரியம் சன்மார்க்கத்துக் கடுத்ததென்றுங் கூறி யிருக்கிறார். இவ் விஷயங்கள் பகிரங்க ஜனங்கப் போருக் கெடுத்தவையாகவும், சன்மார்க்கப் பெருங் காரியத்துக்குரிய ஒரு பகவந் நியதிகொண்ட போதத்துக் கெடுத்தவையாகவும் நினைத்தீர்களானால், அதன் முழு பலனையும் குற்றவாளிக் களிப்பது உங்களுக்கேற்றதாகும். கனவான்களே—விவாத விஷயமெது, இவ் விஷயார்த்தம் யாது—பாம்ப் விஜயமே! பாம்ப் விஷயமாய்க் குற்றத்தின் கொடுமை அதன் கோழைத்தனத்துக்கே ஈடுபட்டதாகக் கூடுமென்று ஒருவரும் சொல்லவேண்டியதில்லை. இது விவாதிக்கப்பட்டுவரும் விஷயமாயிருககிறது. கொலையாளி ஒருவனைக் கொல்கிறான்; பாம்போ பலரைக்கொல்லலாம். இது சரியான மனுஷனெவனும் பயமாயெண்ணவேண்டிய விஷயம். உங்களுக்கு முன்பாயுள்ள 5, 6 விஷயங்களிலே விவாத விஷயம் இதுவே. இவ்விஷயம் சரியானவிதமாய் விவகரிக்கப்பட்டிருப்பதாக நீங்கள் மதிக்கும் பக்ஷத்தில் எல்லாவகையிலும் குற்றவாளியை விடுவித்து விடுங்கள். ராஜரிகக் கலக்கத்துககு சரியான வழியிலுள்ளது பாம்பென்று விவகரிக்கக் குற்றவாளி தயார்தானா? இவ்விஷயங்கள் அவ்வர்த்தத்தை உங்களுக்குக் காட்டுகிறதா? அவ்வகையில் வாசிப்போர் மனதில் விளைந்ததின்னதென்று நீங்கள் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. கலகக்காரர்களே பாம்பெறிக்கு உத்திரவாதிகளென்று தவறாய்ச் சார்ஜு செய்யப்பட்டிருப்பதினாலே தனக்குக் கோபமூண்டதென்று குற்றவாளி கூறியிருக்கிறார். கலக்கக்காரர்கள் அதற்கு உத்திரவாதிகளா இல்லையாவென்று நீங்கள் தீர்மானிக்க வேண்டியதில்லை;

ஆனால் ஒரு விஷயம் நிச்சயம். கவர்ன்மெண்டுக்கு விரோதமாய் வெறுப்பும் அவமதிப்பும், அவிசுவாசமும் நிஷ்டூரமும் கொண்ட உணர்ச்சிகள் மனிதர் மனசுகளிலே உண்டுபண்ணப்படும் போதும், மிக்க கடுமையான நிலைமைக்கு இவ்வுணர்ச்சிகள் எட்டும் போதுமே அக் கொடுஞ் செயல்களில் ஓட்டையைக் காண்பர்கள். இவ்விஷயம் உங்கள் முன்பாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. பாம்பின் பயிற்சி, பாம்பின் மர்மம், இரட்டைக் குறிப்பு என்னும் விஷயங்கள் உங்களுக்கு முன்பாய் உள்ளன. இவ்விஷயங்களில் பாம்ப் விஜயத்தை அங்கீகரித்த வார்த்தைகள் உள்ளனவா வென்று நீங்கள் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது.

லிபரல் கக்ஷிக்காரரென்றும், கான்ஸர் வேட்டிவ் கக்ஷிக்காரரென்றும், நேஷனல் கக்ஷிக்காரரென்றும் உங்களுக்கிருப்பதுபோலவே பாம்புக் கக்ஷிக்காரர் இருக்கிறார்கள். சிலகக்ஷிக்காரர்கள் இருப்பதாக மிஸ்டர் ஜோஷி நமக்கு சொன்னாலும் அவர் பாம்புக் கக்ஷியைக் குறிக்கவில்லை. இவ்விஷயங்களுக்கு வரும்போது தான் இக்கக்ஷி கேட்கப்படுகிறது. பாம்பைப்பற்றி யெழுதியிருக்கும் மாதிரி கவர்ன்மெண்டை வெறுப்புக்கும் அவமதிப்புக்கும் கொண்டுவருகிறதா வென்றும், உங்களுக்கு முன்பாயுள்ள இவ்விஷயங்கள் ராஜநீதிக் கேள்விகளின்ணாய் விவாதித்துத்தாக்கினால் சிறிக்கிளம்பும் ஒருவனுக்குப் பொருத்தமானவையா வென்றும் நீங்கள் சொல்லவேண்டி யிருக்கிறது. கனவான்களே—"உள்ளுறைகளைப்பற்றியும் மர்மத்தாக்குகளைப் பற்றியும் என்மேரில் சார்ஜாகு" மென்று உங்களுக்கு ஏராளமாய் சொல்லப்பட்டிருக்கிறது. விஷயங்களைப் பார்க்குமிடத்து உள்ளுறைகள் அல்லது மர்மத்துக்கு மெத்த அவசியமுள்ளது: விஷயங்களைப்பற்றி நீங்கள் சொல்லக்கூடிய ஒரு விஷயமாவது ஏராளமான வெளிப்பேச்சாயுள்ள தென்பதாகும். அவ்வெளிப்பேச்சு நியாயமானதா வென்று நீங்கள் தீர்மானிக்க வேண்டி

யிருக்கிறது. இவ்விஷயங்களின் விளைவானது அதிகமான த[illegible]திகளையும் விடுதிகளையும் அடைவதற்கு பரம் பெறியே சரியான வழி யென்பதை நீங்கள் நம்பும்படி செய்யவில்லையாவென்றும் நீங்கள் சொல்லவேண்டியிருக்கிறது.

விஷயங்கள் கெட்ட நடையா யிருக்கிறதென்று மட்டும் நீங்கள் தீர்மானிக்க வேண்டியதில்லை யென்ன விரும்புகிறேன். ஒவ்வொரு பத்திரிகாசிரியரும் தன்னிஷ்டம்போ லெழுதலாம். நல்ல நடையிலெழுத அவர் கடமைப்பட்டில்லை. அவர் கவனிக்கவேண்டியதெல்லாங் கூடி லாவுக்கடங்கி யிருக்கவேண்டுமென்பது தான். அட்வோகேட் ஜெனரல் குறிப்பிட்ட பகுதிகளையும் நீங்கள் யோசிக்கவேண்டும். போஸ்ட் கார்டின் விளைவின்னதென்றும் நீங்கள் தீர்மானிக்கவேண்டும். உங்கள் மனதில் பட்டிருக்கவேண்டியபடி அதை சாக்ஷி யாம்சமா யெடுத்துக்கொள்ள எனக்குப்படவில்லை. அதில் வெடிமருந்துகளைப் பற்றிய இரண்டு புஸ்தகங்களின் பெயர்கள் உள்ளன. அதைப் பற்றிக் கொண்டுவந்து காண்பிக்கப்பட்ட கேட்லாகும் அநாவசியமானது. வெடிமருந்துச் சட்டத்தைக் குறைகூறுங் கருத்தோடு அப்புஸ்தகங்களை வாசிக்கக் கருதியதாய்க் குற்றவாளி விவரித்திருப்பது உண்மையா யிருக்கலாம். அப்புஸ்தகங்கள் வெடிமருந்தை செய்வதற்கானவை யென்றும் தெரியாது; உங்கள் மனதில் குற்றவாளிக்கு விரோதமாய் நிற்கக்கூடியதாயினும், அது சாக்ஷியாம்சமாகாது. குற்றவாளி தன் பக்ஷமாய் மெஜாரிட்டியிலிருந்து பிரிய உங்களில் சிலரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்; அப்படிப் பிரிந்தால் தனக்கு மிக்க ஆறுதலாயிருக்கலா மென்றும் சொன்னார். அப்படி சொன்னதின் தாற்பரியமாவது இன்னதென்று எனக்கேற்படவில்லை. நீங்கள் ஒருமைப்பாடாயிருந்துவிட மிக்க முயற்சியாயிருக்கும்படி உங்களை நானே கேட்கிறேன்; கூடுமானால் சந்தேக நன்மையைக் குற்றவாளிக்குத் தரவும் உங்களைக் கேட்கிறேன்.

## ஜூரியின் முடிவுரை.

போர்மன் மிஸ்டர் ஆண்டர்ஸன்—ஜூரியார் ஒரு முடிவுக்கு வந்துவிட்டாலும் ஒருமைப்பாடில்லை. 7-பேர் மெஜாரிட்டியும், 2-பேர் மைனாரிட்டியுமாய்ப் பிரிந்திருக்கின்றனர்.

ஜட்ஜி—இன்னும் யோசித்து ஏகோபித்திருக்க ஸாத்தியப்படாதா?

போர்மன்—சந்தர்ப்பமேயில்லை. 3 சார்ஜுகளுக்கும் வெவ்வேறு தீர்ப்புகளாயிருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் குற்றமுள்ளதென்றும் ஒவ்வொன்றிலும் ஜூரிப்பிரிவினை அப்படியே.

ஜட்ஜி—கிரிமினல் ப்ரோஸிஜர் கோடின்படி 6-ம் 3 மாகப்பிரிந்திருந்தால் மெஜாரிட்டியோடு சேர்ந்ததாகவாவது சேரவில்லையென்றாவது தெரிவிக்க ஜட்ஜிகட்டுப்பட்டிருக்கிறார். ஜட்ஜி சேர்ந்துவிட்டால் ஜூரி தீர்ப்பின்படி ஜட்ஜ்மெண்டு கொடுக்கவேண்டியதென்று சொல்லுகிறது. ஆகவே நான் மெஜாரிட்டி தீர்ப்பில் கலக்கிறதாக சொல்லவேண்டியதாய் விட்டதற்காக அருசுகிறேன். இனி தீர்மானம் கூறுவதைவிட்டு வேறேதும் செய்வதற்கில்லை.

அட்வோக்கேட் ஜெனரல்—தீர்மானம் கொடுப்பதற்கு முன்னே மற்றொரு சார்ஜைக் குறிக்கவைத்திருக்கிறேன்.

மிஸ்டர் திலகர்—கோடின்படி சில நியாயாம்சங்களை கவனிக்கக் கேட்கிறேன். நான் குறித்துள்ள 14 அம்சங்களில் கூடிய விஷயமாவது 124-A ஸெக்ஷன் படிக்கான சார்ஜுகளில் ஆக்ஷேபகரமாகக் காட்டிய பகுதிகள் குறிக்கப்படாமல் சார்ஜ் ஏற்படாமையால் ஒப்புக்கொள்ளத்தக்க தல்லவென்பதும், 153-A ஸெக்ஷன்படிக்கான சார்ஜில் எவ்விரண்டு வகுப்புகளில் எவ்வகுப்பிலிருந்து நான் பகைமூட்ட எத்தனித்ததாகக்

சார்ஜ் செய்யப்பட்டிருக்கிறேன் என்று குறிக்கப்படாமையினுமேல் அதுவும் ஒப்புக்கொள்ளத்தக்க தல்லவென்பதுமாம்: டிபன்சுக்கு சில நியூஸ் பேப்பர்களை தாக்கல் செய்ததாய் ஜூரிக்கு முடிவான ரிப்ளை ரைட்டில்லையென்று ஜட்ஜி மறுத்துவிட்ட காரணத்தைப்பற்றி உங்கள் விசாரணை முழுமையும் அடிபட்டுப்போய்ப் புனர்விசாரணைக்கு இடமாகவில்லையா வென்றுங் கேட்கிறேன்.

ஜட்ஜி—இவ்விஷயமாய் விசாரணை காலத்திலே ஓராம்சம் வெளிப்பட்டிருந்தாலும் பக்க ஆவலாய் யோசித்திருக்கலாம். இவ்வம்சங்களை புல்பெஞ்சு யோசனைக்காக நிறுத்திவைப்பது மிக்க விருப்பமானது தான் என்றாலும், இவற்றிலநேகம் கோர்ட்டுத் தீர்ப்பு விஷயமாய் விட்டிருக்கின்றன; மற்றவை விவகாரத்துக்கு வரக்கூடாத அற்பவிஷயமா யிருக்கின்றன. ஆகவே இவற்றை யேற்றுக்கொள்ள மறுக்கிறேன்.

அட்வோக்கேட் ஜெனரல்—முன் ராஜத்துவேஷ தண்டனைக்காகவும் குற்றவாளி பேரில் மற்றொரு சார்ஜ் செய்யக் கேட்கிறேன். இதற்கு ஆம், அல்லவென்று சொல்லட்டும். அவர் மறுப்பாரானால், அதை மெய்ப்பிக்க பேப்பர்களிருக்கின்றன. ஜூரியார் தீர்க்கட்டும்.

மிஸ்டர் திலகர்—இந்த சார்ஜின் குறிப்பேதும் விளங்கவில்லை. இது முதல் சார்ஜில் குறிக்கப்படாமையினுமேல் தண்டனையை அதிகப்படுத்துவதற்காக ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல.

அட்வோக்கேட் ஜெனரல்—கோடுபடிக்கே இந்த சார்ஜ்கொண்டு வரப்பட்டது.

மிஸ்டர் திலகர்—அது சரிதான்.

ஜட்ஜி—ஏதாவது சொல்லிக்கொள்ள விருப்பமா?

மிஸ்டர் திலகர்—ஜன இனங்களின் விதிகளை ஒழுங்கு படுத்திவர மேலான வல்லமைகள் இருக்கின்றன.

என்விடுதலிலும் என் நிபந்தத்தினலே என் பிரதிநிதித்துவ எதிர் வாதமானது அதிக பிரயோசனத்தை யடையுமென்பது ஆண்டவனருளா யிருக்கலாம்.

## ஜட்ஜின் தீர்மானம்.

பாலகங்காதர திலக—இப்போது உன்மீது தீர்மானம் சொல்வது எனக்கு வருத்தமான கடமையாயிருக்கிறது. உன்னை யிந்த நிலைமையில் நான் பார்ப்பது எவ்வளவு வருத்தமா யிருக்கிறதென்பதை சொல்லக்கூடாமை. நீ நிஸ்ஸந்தேகமான சாமர்த்தியங்களையும் பெரும் வல்லமையையும் செல்வாக்கையும் படைத்த மனுஷன் தான். அந்த சாமர்த்தியங்களையும் அந்த செல்வாக்கையும் உன்னுட்டுக்கான நன்மையில் உபயோகப்படுத்தி வந்தால், யாருக்காக நீ எதிர்வாதம் பண்ணுகிறாயோ அந்த ஜனங்களே ஏராளமான சந்துஷ்டி யடைய வழியாய் விடும். பத்துவருஷத்துக்கு முன்னே நீ சிக்ஷிக்கப்பட்டிருக்கிறாய். அப்போதே கோர்ட்டார் மிக்க ஸாதுபமாய் தண்டித்திருக்கிறார்கள். அதிலும் சர்க்காரும் உன்னை யெளிதாய் விட்டிருக்கிறது. 10-வருஷ காலம் வெறுஞ்சிறையில் நீயிருந்தபிறகு, இனி யெழுதுவதில் ஏற்பாடு செய்தபடி நீ ஒப்புக்கொண்டதன் பேரில் சிக்ஷை குறைக்கப்பட்டது. நீ யெழுதி யிருக்கும் விஷயங்கள் ராஜரிகக் கலக்கத்துக்குத் தகுதியான கருவிகளென்று சொல்லக்கூடியபடி மிக்க நொந்ததும் கெட்டுப்போனதுமானதென்று எனக்குத் தோன்றுகிறது. அவை ராஜதூஷணக்கொதிப்பு கொண்டிருக்கின்றன; அவை பலாத்காரத்தைப் பிரசங்கிக்கின்றன; அவை படுகொலைகளை அங்கீகரித்துக் கூறுகின்றன. பாம்புகளினலே படுகொலை செய்யும்கோழைத்தனமும் கொடுமையுமானநடவடிக்கையை நீ அங்கீகரிப்பதாகத்தெரிவதோடு, இந்தியாவுக் கேதோ நன்மை வந்ததுபோல பாம்ப் விஜயத்தைக் கொண்டாடுகிறாய். நான் சொன்னபடி ராஜரிகக் கலக்கத்துக்குத் தகுதியான கருவிகள் பாம்புகளே யென்று நினைக்கக்கூடியது நொந்ததும்

கெட்டுப்போனதுமான மனமாகவே யிருக்கக்கூடியது. நீ யெழுதிய விஷயங்கள் தகுதியாயெழுதி யிருக்கக் கூடியவை யென்று நினைத்திருக்கக்கூடியது கொந்தம்ளா வதயாகும். ஆளும் வகுப்பாரைப்பற்றிய உன் வெறுப்பானது சென்ற 10-வருஷகாலமாய் மறைந்து போக வில்லை; அன்றியும் இவ்விஷயங்கள் நீ சொல்வதுபோல் தக்ஷண வேகத்திலன்றி, வாரத்துக்குவாரம் துணிவாயும் எதிரிடையாயும் எழுதப்பட்டன; ஆனால் அறியாத இரண்டு ஸ்திரீகள் பேரில் குரூரமாயும் கோழைத்தனமாயும் கொடுமை காட்டப்பட்டு, இரண்டு வாரத்தின் பிறகு ராஜரீகக் கலக்கத்துக்குத் தகுதியான கருவிகள் பாம்பகளே யென்றதுபோல் எழுதியிருக்கிறாய். இப்பேர்ப்பட்ட பத்திராதிபத்தியம் நாட்டுக்குநாசமானது. உனக்கு சிக்ஷைசொல்ல எனக்குப் பெரியதுக்கமாயிருக்கிறது. உன்பேரில் குற்றமுடி வேற்படும் பக்ஷத்தில் உனக்குஎன்ன சிக்ஷை விதிக்கவேண்டு மென்பதைப் பற்றி மிக்க விசாரமாய் யோசித்திருக்கிறேன். மேலும் தவருன பரிதாபமெனக் கூடியதாய் நான் யோசிக்கிற படி இழிவுபடுத்தப் பெறலாகும் ஒரு சிக்ஷை சொல்லத் தீர்மானித்திருக்கிறேன். என் கடமைக்குத் தகுதியாகவும் நீ குற்றவாளியாகக் கண்டிருப்பதற் கேற்றபடிக்கும் நான் கொடுக்கப்போவதிலும் குறைந்த சிக்ஷையை விதிக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை. உன் அந்தஸ்திலும் சந்தர்ப்பத்திலுமுள்ள ஒரு மனுஷனுக்கு அந்த சிக்ஷை லாவை நிலைநிறுத்தி நீதியின் முடிவைக் கண்டதாகுமென்றும் நினைக்கிறேன். முதல் சார்ஜுக்கே ஜீவபரியந்த தீபாந்திர சிக்ஷைக் குட்பட்டிருக்கிறாய். உனக்கு விதிப்பது தீபாந்திர சிக்ஷையா, ஜெயில் சிக்ஷையாவென்றும்யோசித்திருக்கிறேன்.உன்னுடைய வயதையும் சந்தர்ப்பங்களையும் கவனித்ததின்பேரில் அமைதிக்கும் ஒழுங்குக்குமான வகையிலும்,நீநேசிப்பதாகக் கூறும் நாட்டுக்கான வகையிலும் இதை விட்டுக் கொஞ்சகாலம் நீ வெளிப்பட்டிருக்கவேண்டியதே மிக்க விருப்பமானதாகுமென்று நினைக்கிறேன்.124-A ஸெக்

ஷன்படி ஜீவபரியந்தமாவது இன்னும் குறைந்த காலத்துக்காவது தீபாந்திர சிக்ஷை சொல்ல எனக்கு நியாயமிருக்கிறது; ஆகவே, முதலிரண்டு சார்ஜுகள் ஒவ்வொன்றுக்கும் 3-வருஷ தீபாந்திர சிக்ஷையை ஒன்றின் பின் மேலொன்றாக அடைய விதிக்கிற வகையில் உனக்கு 6-வருஷ தீபாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கிறது; மூன்றாவது சார்ஜுக்கு தீபாந்திர சிக்ஷையின்றி அபராதம் அல்லது ஜெயில் சிக்ஷையுள்ளபடி உனக்கு அதிக தொந்திரவாக, இன்னும் ஜெயில் சிக்ஷையை விதிக்க நினைக்காமல் 1000 ரூபா அபராதம் விதித்து நாலாவது சார்ஜிலிருந்து உன்னை விடுவித்துவிட்டேன்.

# விசாரணைக் குறிப்பு.

மேற்கூறியவாறு திலகர் ராஜதூஷணைக்கேஸ் விசாரணை பம்பாய் ஹைகோர்ட்டு கிரிமினல் செஷனில் நிகழும் 1908௵ ஜூலை மீ 13௳ முதல் 22௳ வரையில் நடந்து முடிவுபெற்றது. மிஸ்டர் திலகரே இந்தியாவில் இன்றையவரையில் யாவரினும் மேலான செல்வாக்குள்ள மராட்டியர்; இந்தியாவிலுள்ள இந்திய பேப்பர்கள் இங்கிலீஷ் பேப்பர்கள் எல்லாவற்றிலும் மிக்க விஸ்தாரமாய் செலவாகும். "கேசரி" பத்திரிகையின் கேசில் ஸ்பெஷல்ஜூரி நியமிக்கப்பட்டும், இந்தியஜூரியார் இருவர் மட்டும் குற்றமில்லையென்றே கூறிவிட்டார்கள். திலகர் புதுக்கக்ஷித் தலைவராய் விளங்கியதே இவ்விபத்துக் காரணமாகவிட்டது. சென்ற டிஸம்பர் சூரத்காங்கிரஸிலே இவர்கக்ஷியின் சீக்கிரகமானது பின்னும் இவருக்குக் கெடுதியைத் தூண்டிவிட்டது. அப்போது டக்கா கலெக்டர் மிஸ்டர் ஆலனுக்குப் பிராணபாய சமாச்சாரம் கொதித்துக் கொண்டிருந்தது. இதனால் புதிய கக்ஷிபேரில் கவர்ன்மெண்டுக்குக் கண்ணோக்கமிருந்து வந்தது. இப்புதிய கக்ஷியின் உக்கிரமானது வரவர வளர்ந்தோங்கி சென்ற ஏப்ரலில் முஜபர்பூர் பாம்ப் வெடிகள் கிளம்பியதைப் பொறுக்க முடியாமல் கவர்ன்மெண்டார் வாரண்டில்பிடிப்பதும், சோதனை போடுவதும், கேசுகளை நடத்துவதும், அடிபிடி நண்டம செய்வதுமாய் விட்டார்கள். இந்நிலைமை பிரிட்டிஷ் ஆளுகை தொடங்கியதுவரையில் கண்டு கேட்டதில்லை. இவ்வகையில் பம்பாய் பிரதேசத்தில் புதிய கக்ஷித்தலைவராய் விளங்கியதினால், இவருக்கும் இப்படி நேர்ந்துவிட்டது.

சூரத் காங்கிரஸிலிருந்து திரும்பிவந்தும் இவர் சும்மாயிருந்து விடாமல் ஜில்லா [...]க்கூட்டங்களைக் [...]

களைக் கட்டியும், சுவதேசிய (சம்பளமில்லா) சேவக சிறுவர்களின் படையணிகளை வகுத்தும், அங்காங்கே போய் உபந்நியசித்தும் மதுவிலக்குக்கலகத்தை உண்டு பண்ணி விட்டதன்மேலும் கவர்ன்மெண்டார் சும்மா யிருந்துவிடக் கூடவில்லை. சென்ற ஜுன்மீ 20௳ பூனா வில்கூடிய சட்டநிரூபண சபையில் கவர்னர்ஸார்ஜியார்ஜ் கிளார்க் ஜனங்களிடம் செல்வாக்குள்ள சிலர் கவர்ன் மெண்டுக்கு விரோதமாய் வெறுப்பையும் அவமதிப் பையுங்கொண்ட உணர்ச்சிகளைத் தூண்டிவருவதும், ராஜப் பிரஜைகளின் வகுப்புகளுக்குள்ளே பகையுணர்ச் சியை உண்டுபண்ணுவதும் விளக்குக்கு முத்தங்கொ டுப்பது போலாகுமென்றும், அப்பேர்ப்பட்டவர்களை லாக்குறட்டைக் கொண்டிழுத்தழுத்த கவர்ன்மெண் டார் எதனாலும் தடைபடமாட்டார்களென்றும் பிரஸ் தாபித்தபோதே யாவருக்கும்சங்கதியிதுதானென்பதும், ஆசாமியின்னாரென்றும் விளங்கிவிட்டது. அப்போது, நாலு இந்திய பேப்பர்கள் பேரில் தூஷணைக் கேசுகள் நடத்தப்பட்டிருந்தன. ஒருவாரத்துக்கு முன்னேயே திலகரின்சிநேகரும், "கால்" எடிட்டருமாகிய புரொபசர் பரஞ்சபே ஹைகோர்ட் செஷனுக்குக் கமிட்டுசெய்யப் பட்டார். அவர் டிபன்சுக்காகத் திலகர் பூனாவைவிட்டு பம்பாய்க்குப் புறப்பட்டுப் போயிருந்த போதேதான பூனாவுக்குத் திரும்ப வெகுகாலம் செல்லுமென்றுந் தெரிந்துகொண்டிருந்தார். கவர்னரவர்கள் பூனாவிலிரு ந்து திரும்பிய மறுதினமாகிய சென்ற ஜுன்மீ 24௳ திலக்பிராசிக்கூஷனுக்கு உத்திரவாய், அன்றுமாலை 6-மணிக்கு ஸர்தார் கிருகத்திலிருந்த இவரைப் பிடித்துக் கொண்டு போய் விடலாயிற்று. அதே காலத்தில் இவ ருடைய பூனாவீடும் அச்சுக்கூடமும் போலீசாரால் பூட்டப்பட்டிருந்து மறுநாள் சோதிக்கப்பட்டன. அன் றியும் அன்றே போலீசார் சிங்கார்குருகவாசத்திலும் பிரவேசித்து மாமூலுக்கு விரோதமாய் ஜன்னல்களை உடைத்து சோதனை போட்டதிலே ஒரு போஸ்ட் கார் டைக் கண்டெடுத்துக் களித்தார்கள். இக்காடில்தான

வெடிமருந்துப் புத்தகங்களிரண்டின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

சென்ற ஜூன்மீ 25௳ திலகர் சீவ் மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஆஸ்டன் முன்பாகக் கொண்டுபோய் விட்டபோது, ஜாமீன்பேரிலும் விடாமல் சிறைக்கூடத்துக் கனுப்பப்பட்டார். அப்போதுதான் சென்ற மேமீ 12௳ விஷயத்தைக் கொண்டே திலகரை சரிப்படுத்திவிடத் தகுதியாயில்லாமையை அறிந்து கவர்ன்மெண்டார் மறுநாள் 16௳ சென்ற ஜூன்மீ 9௳ விஷயத்தையும் கூட்டிக் கொள்ளும்படி உத்திரவு கொடுத்ததின் பேரில் மிஸ்டர் ஆஸ்டனைக் கொண்டு புதிய வாரண்டெழுதி ஜெயிலிலிருந்த திலகருக்குக் கொடுத்து விட்டார்கள். 29௳ எதோ சாக்ஷியத்தை சரிப்படுத்திக் கொண்டு மிஸ்டர் ஆஸ்டன் திலகரையும் 124A, 153A ஸெக்ஷன்களின்படி வெவ்வேறே இரண்டு சார்ஜ் செய்துபம்பாய் ஹைகோர்ட்டுகிரிமினல் செஷனுக்குக் கமிட்டு செய்து விட்டார். வாரண்டில் பிடித்த மறுதினம் திலகர் டோங்கிரி ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தார். விசாரணையிலிருக்கும் குற்றவாளியான வகையில் அந்தே இவருக்கு வீட்டு சாப்பாடும் துணியும் படுக்கையும் கொடுக்கப்பட்டனவென்றாலும், இவர் தன் டிபன்சுக்குத் தயாராக்கிக் கொள்வதற் கில்லாதபடியாய் விட்டது. ஜூலைமீ 2௳ பாரிஸ்டர் மிஸ்டர் ஜின்னு ஸெஷன் ஜட்ஜியாயிருந்த ஜஸ்டிஸ் தேவாரிடம் திலகருக்காக ஜாமீன் மனுப்போட்டும் தள்ளிவிடப்பட்டதால் நியாயப்போக்கும் எற்பட்டுவிட்டது. மேலும் திலகரை விசாரிக்க ஸ்பெஷல் ஜூரியை நியமிக்க சர்க்கார் மனுவு கொடுக்கப்பட் டிருப்பதாய்த் திலகரின் ஸொலிஸிட்டருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. பாரிஸ்டர் மிஸ்டர் பாப்டிஸ்டா விவகரித்திருப்பது போல, அம்மனுவு மிக்க அக்கிரமமானதாகும். ஆரம்பமுதல் எல்லாம் கவர்ன்மெண் டிஷ்டம்போலவே காரியங்கள் நடந்தேறி வந்தபடி ஸ்பெஷல் ஜூரி நியமனத்

தைப்பற்றி ஜூலை மீ 3உ விசாரணை யாச்சுது. ஜாமீன் மனுவு மறுக்கப்பட்டது முதல் இவ்விசாரணை தினம் வரையிலான ஒரு வாரத்தில் திலகர் டிபன்சுக்குத் தயாராக வேண்டியதாய் விட்டது. ஆனால் ஜெயிலதிகாரிகள் மட்டும் இவ்வகையில் சில சகாயங்கள் செய்து வந்தார்கள் என்றாலும், சில சிநேகிதர் மட்டுமே குறித்த சில மணிநேரத்திலேயே போய்ப் பார்க்க விடப்பட்டார்கள். சகாயங்களினாலேயல்ல, கிடந்தநிலைமையிலிருந்தே திலகர் கூடிய மட்டில் டிபன்ஸைத் தயார் செய்து கொண்டார். இதிலடங்கிய திலகர் டிபன்ஸ் பேச்சு மூன்றிலொன்றாக மிக்க கருக்கமானது. இன்னும் விஸ்தரிக்க இடங்காணாமல் விட்டிருந்தாலும், இவ்வளவிலேயே திலகரின் பெரு ஞாபக சக்தியும் ஒருவாறு விளங்கலாம்.

விசாரணை சென்ற ஜூலை மீ 13உ தொடங்கிய போதே ஜட்ஜி இரண்டு கேஸை ஒரு கேஸாக்கியதும், ஜூரி நியமனமும் கவனிக்கப்பட்டன. திலகர் ஆ[illegible]டில் ஆக்ஷேபித்துப்பார்த்தும்பயனில்லை. இதனால் விளைந்த தீங்குகள் ஒரே விஷயத்தைக் கொண்டு மூன்று சார்ஜுகளுக்கு ஆதரவு கூறப்பட்டதில் விளங்கின. பல இந்திய வகுப்பினர் ஸ்பெஷல் ஜூரியில் சேரவிருப்பதாக ஜட்ஜி பிரஸ்தாபித்ததிற்கு எதிரிடையாய் 7 யூரோப்பியரும் 2 இந்தியரும் சேர்ந்தார்கள். நாமகார்த்தமான பிராசிகூஷன் சாக்ஷியமட்டுக்கும் 20-நாள் சென்றதென்றாலும் கிராசுக்கு நின்ற மிஸ்டர் ஜோஷி மட்டும் தாவா விஷயங்களை தாக்கல்செய்து வைக்கவும், வேறுரோ செய்த மொழிபெயர்ப்புகளுக்கு சரியென்று தலையாட்டவும் ஆயிற்று. திலகர் அவரைக் கிராஸ் செய்ததில் மொழிபெயர்ப்புத் தவறுகள் அநேகமாய் வெளியாயின. பிராசிகூஷன் சாக்ஷிய ரிகார்டுகள் 15-ல் 7 கேசரியின் பிரசுர விஷயங்கள்; கவர்ன்மெண்டு ஸாங்ஷன்கள் 2; திலகரின் பிரஸ் உறுதிமொழிகள் 2; ஸெர்ச் வாரண்டுகள் 2; ஸெர்ச்பஞ்சநாமா 1; போலீஸ் ஸெர்ச்

இல் 63 ரிகார்டுகளோடு வந்த போஸ்டு கார்டு 1. ஷெடி அர விஷயங்கள் தவிரப் போஸ்டு கார்டுள்பட மற்றவை சாக்ஷியமா யெடுத்துக்கொள்ளக்கூடாமை யென்று திலகர் ஆக்ஷேபித்தும் மறுத்துவிடப்பட்டது. பஞ்சநாமாவில் கண்ட பேப்பர்களில் போஸ்டுகார்டு தவிர மற்ற பேப்பர்களில் ஒரு பகுதி திலகருக்குத் திருப்பிக்கொடுக்கப்பட்டது. திலகர் ஸ்டேட்மெண்டோடு மற்ற பகுதி பேப்பர்கள் போஸ்ட் கார்டின் புலம் வெளியாக வேண்டித் திருப்பிக் கொடுக்கப்பட்டன வென்றாலும், அவை டிபன்ஸ் சாக்ஷியமாகக்கொண்டு அதியாவசியமான திலகரின் ரிப்ளை ரைட்டு போக்கடிக்கப்பட்டதினால், திலகர் ஆங்கிலோ இந்திய பேப்பர்களுக்கும் இந்திய பேப்பர்களுக்குமுள்ள விவாதத்தை மெய்ப்பிக்கவேண்டி வேறு சில பேப்பர்களை தாக்கல் செய்யவும் நிச்சயித்தார். திலகர் ஸ்டேட்மெண்டு சாதாரணமானதாயும் சுருக்கமானதாயும் இருப்பினும், அதில்தான் குற்றவாளியல்லவென்றதாக ஆவா விஷயங்களின் உண்மையான தன்மையை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

விசாரணையின் மூன்றாநாள் மாலை 4 மணிக்குத் திலகர் டிபன்ஸைத் தொடங்கி, இடையே சனி ஞாயிறு தவிர எட்டாநாள் வரையில் மற்ற நாள்கள் முழுமையும் பேசிவந்தார். இம் மஹோபந்நியாசமானது அநேக அம்சங்களில் எந்நாளும் மறக்கக்கூடாத தென்பதைவிட வேறுவிதமாய் சொல்லத் தேவையில்லை. இதில் பேச்சின் திறமையைக் காட்டிக்கொள்ளாமல், தன்னைத்தான் காத்துக்கொள்ளத் துணிந்ததின் பயனைப் பெறுவதற்கேற்க எளிய நடையில் பேசினார். ஜூரியாரென்ன தீர்ப்பு கொடுத்திருந்தாலும், தம்மைப்பார்த்துப்பேசிய தினங்களில் திலகரின் பண்டிதத் தன்மையை செவ்வையாய் உணர்ந்திருக்கவேண்டும். இவ்வாறு பேசிய கால அளவையை ஜட்ஜே கவனித்து 21 மணி 10 நிமிஷ நேரமெனக் குறித்தார். திலகர் பேச்சில் தவறிருந்தாலும், அதிகமானதென்பதற்கில்லை யெ[illegible]

ஜூரியும் தவறமாட்டாது. இப்படிப்பேசியதைப்பற்றி தினந்தோறும் கோர்ட்டில் வந்துகூடிய நூற்றுக்கணக்கான வித்யாவந்தர்களும், வெளியே ரிப்போர்ட்டைப் படித்திருந்த ஆயிரக்கணக்கானவர்களும் மிக்கமேலான மதிப்பைக் கொண்டிருந்தார்களென்பதில் சந்தேகமில்லை.

எட்டாநாள் பகல் 12½-மணிக்குத் திலகர் தமப் பேச்சுமுடிந்ததன்மேல், அட்வோகேட் ஜெனரல் மிஸ்டர் பிரான்ஸன் ஆக்ஷேபமான கடுமையுடன் 4-மணி நேரம்பேசி முடித்தார். மாலை 5-மணிக்கு கவர்ன்மெண்டு கக்ஷியார் சந்தேகாஸ்பதமான யோசனைகளும் நடவடிகளும் காட்டிவந்தார்கள். ஜட்ஜியோ வெகுநேரமானாலும் அன்றே தீர்த்துவிடத் துணிந்திருந்தார். திலகரோ இனிநடக்கவேண்டியதற்கான ஆலோசனைகளைத் தமது சிநேகிதர்களோடும் பந்துக்களோடும் பேசுவதற்கு சாவகாசங் காணோமேயென்று திகைத்தார். அட்வோகேட் ஜெனரல்பேச்சு முடிந்ததும், ஜட்ஜி வெகுத எதிரிடையான சார்ஜைப் படித்துவிட்டார். அப்பால ஜூரியார் ஒருமணிநேரம் உள்ளேபோயிருந்து திரும்பி வந்து 7 யூரோபியர் மெஜாரிட்டியாய்க் குற்றமுள்ளதென்று கூறிவிட்டபடி ஜட்ஜி அங்கிகரித்துத் திலகர் மனம் புண்படக் கடும் பதங்க ளடங்கிய வாக்கியங்களோடு தீர்மான சிக்ஷையை சொல்லிவிட்டார். என்றாலும், திலகர் "என்குற்றமற்ற தன்மையைக் கடவுள் காண்பார்" என்று காட்டிவிட்டார்.

ஜூரியார் கோர்ட்டு ரூமில் போயிருந்தபோது, அங்குள்ள ஒவ்வொருவர் முகத்திலும் விசாரத்தோற்றம் தென்பட்டது. ஹாலிலிருந்த விளக்கும்மங்கியிருந்தது. ஒருவரோடொருவர் பேசுவதைவிட்டு மூச்சுவிட்டுக்கொண்டே ஜட்ஜிமுகத்தையும், திலகர்முகத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லாம்முடிந்தது. ஜஸ்டிஸ் தேவார் இரவு 10-மணிக்கு எழுந்தபோது, யாவரும் எழுந்துவிட்டார்கள். திலகரோ கண்ணீர் ததும்ப

மனங் கலங்கிவிட்டார்! இரவு 7-மணி வரையில் கேஸ்
முடிவாய்விடுமென்ற சங்கதி வெளிப்படவில்லை யென்
றாலும், இரவு 9-மணிக்குள்ளாக ஆயிரக்கணக்கான
ஜனங்கள் விசாரணையின் முடிவை யறிந்துகொண்டு
போக ஹைகோர்ட் கேட்டுகளில் ஆவலுடன் காத்
துக்கொண்டிருந்தார்கள். இதோடு கனத்த மழைபெய்
வதும் நிற்பதுமாயிருந்தது. மேகக்கவிப்பினால் இருள்
சூழ்ந்து தெருவிளக்குகளும் மங்கலாயிருந்தபடியாலும்,
கோட்டில் ஒருவரையும் சேர்க்காமையாலும் என்ன
முடிவாகுமோவென்ற ஏக்கம் எங்கும்பரவியிருந்தது.
இரவு 10-மணிக்கு சங்கதி வெளியாய்விட்டதும், ஹை
கோர்ட்டை சுற்றிலும் கலவையாய்விட்டது. சவாரிப்
போலீசாரோ கும்புகளைக் கலைத்துத் துரத்தியடிக்கத்
தொடங்கிவிட்டார்கள். சிக்ஷையாய்விட்ட துக்கசெய்தி
யானது மனத்தத்துவப் போக்கின் வழியாய்ப் பிரதி
ஆத்மாவிலும் பாய்ந்துகொண்டிருந்தது. ஜட்ஜி உத்திர
வின்படி போலீசார் பெருங்கலகவிளைவைத் தடுத்து
விட்டார்கள்; ஆனால்மறுநாள் காலை நகர்முற்றும்காட்டுத்
தீபோல்படர்ந்த இரவின் கடுமையான சமாச்சாரம் எட்
டிப்போய் ஜனங்கள் துயரிலாழ்ந்து, அதிகாரிகளின்
அவசரத்தைப்பொறுமல் பழிக்கத் தொடங்கிவிட்டார்
கள். திலகருக்கு சிக்ஷை விதிக்கப்பட்ட துயரமானது
சாதாரண ஜனங்களுக்குள்ளே வலுத்துவிட்டது. திலக
ருடைய கௌரவத்தைக் கொண்டாடத் துணிந்த யந்
திரசாலை ஜனகும்பல்கூடி வேலை நிறுத்தம் செய்யத்தீர்
மானித்துக்கொண்டார்கள். அநேகவிடங்களில் கடை
கள் மூடிவிடப்பட்டன வென்றாலும், நியூஸ் பேப்பர்
பையன்கள் திலகர் படங்களையும், திலகர்சிக்ஷைசெய்தி
யுள்ள பேப்பர்களையும், திலகர்பேரில் பாடிய கீதங்களை
யும் விலைகூறும் ஓசையானது கடைசந்தடியிலும் மே
விட்டுவிட்டது. 3, 4 தினங்களில் மேற்கூறியவை 10
ஆயிரக்கணக்காய் விலைபாய்விட்டன. திலகரைப்பற்றிய
ஜன உணர்ச்சியானது அப்பெருநகரிலே எங்குபார்த்தா
லும் நாறுவகையாய்ப் பெருகிவிட்டது. போலீசாரும்

உடன் தாளந்தட்டிகளும் அங்கங்கே கலைகளை யடக்கி வரத் தொடங்கினார்கள். சில வேலைக்காரர்கள் தங்களுக்குள்ளெ திரிடையாயிருப்பவர்களை யிடிக்கப்பார்த்தார்கள். முடிவில் ஜனங்கள் மனங்கொதித்து வெறியேறிப் போய், அங்கங்கே கலகத்துக்கு ஆரம்பித்துக்கொண்டார்கள். இதன்மேல்ராணுவத்தார் வரவழைக்கப்பட்டு சுடத் தொடங்கியதில் 15 பேருக்கு மரணங்களும், 38 பேருக்கு சாயங்களும் நேர்ந்தன. ஆறுநாள் வேலைகளெல்லாம் நின்றுபோயின. இவ் வெழுச்சிகளினால் திலகரின் ஜனவிசுவாசம் எவ்வளவு விஸ்தாரமென்பதும் விளங்கியதோடு, ஒற்றுமைக் கூட்டுறவுக்கும் ராஜரீகத்திருத்த இசைவுக்கும் அதமமான தென்னப்படும் இந்திய ஜனத்தின் எற்றமும் வெளிப்பட்டதென்னலாம். பம்பாய் கவர்னரவர்கள் சாந்தத்தன்மையில் ஜெ கலைகளையெல்லாம் அடக்கிவிட்டதோடு, திலகர்மீது கிருபைகூர்ந்து அவருக்கு விதித்திருந்த தீவாந்திர சிக்ஷையை வெறுங்காவலாக மாற்றிவிட்டதைப் பற்றிப் புகழாத இந்தியனில்லை!

---

திலகருக்காக

# ஹைகோர்ட் புல் பெஞ்சுக்குப் பிட்டிஷன் சுருக்கம்.

1. விண்ணப்ப தாரனுக்கு விரோதமாய் ஜட்ஜியவர்கள் ஜாமீனை மறுத்தது தப்பு.

2. விண்ணப்ப தாரனுக்கு விரோதமாய் ஜட்ஜியவர்கள் ஸ்பெஷல் ஜூரியை வைத்துக்கொண்டது, அல்லது மராத்தியர் அதிலிருக்கவேண்டிய தென்று உத்திரவுசெய்யாமை தப்பு.

3. விண்ணப்பதாரனுக்கு விரோதமாய் வெவ்வேறாய்க் கமிட்டுசெய்த இரண்டுகேசுகளையும் ஜட்ஜியவர்கள் ஒன்றாயெடுத்துக்கொண்டது தப்பு.

4. சாக்ஷியத்தில் லோக்கல் கவர்ன்மென்டுத்திரவின்படிக்கான பிரியாதேதுமில்லாமலும், பிரியாதினை விசாரிக்காமலும் கோர்ட்டார் 124A, 153 A ஸெக்ஷன்களின் கீழெடுத்துக்கொள்ள அதிகாரமில்லை.

5. லோக்கல் கவர்ன்மென்டுத்திரவின் விவரங்கள் 153 A ஸெக்ஷன் கீழ் கோர்ட்டார் எடுத்துக்கொள்ளத் தக்க ஒரு பிரியாதை ஆதரிக்கலாப்படிப் போதுமானவையல்ல.

6. குறிக்கப்பட்ட சார்ஜுகள் விண்ணப்பதாரனுடைய வார்த்தைகளின் பேரிலேற்படாமல், விண்ணப்ப தாரனுக்கு விரோதமாய் சரியில்லாததும் வித்தியாசப்பட்டதுமான இங்கிலீஷ் மொழி பெயர்ப்புகளின் பேரில் ஏற்பட்டவைகளான படியால் தப்பானவை.

7. குறிக்கப்பட்ட சார்ஜுகள் சாட்டப்பட்ட குற்றங்கள் நடந்தேறிய விவரங்களில்லாமலும், விண்ணப்பதாரன் சாட்டப்பெற்ற விஷயமாய்ப் போதுமான விவரநோட்டீஸ் கொடுக்காமலும், 153 A ஸெக்ஷன்படி இன்னவகுப்பாருக்கு விரோதமாய்க் குற்றம் செய்யப்பட்டதென்று (டிபன்சுக்கு விரோதமாய்) குறிப்பிடாமலும் இருப்பதால் தப்பானவை; அன்றியும் குறித்த சார்ஜ்ஒவ்வொன்றும் கிரிமினல் ப்ரோசீஜர் கோடுக்கு விரோதமாயிருப்பதால் அக்கிரமமானது.

8. கிரிமினல் புரோசிஜர்கோடுக்கு விரோதமாகவும், அதனால் முழுவிசாரணையும் அக்கிரமமாய் ரத்தாய்விட்டதாக விண்ணப்பதாரன் ஆக்ஷேபித்ததற்கு விரோதமாகவும் ஒரேமாதிரியானதும், ஒரேகாரிய சம்பந்தமாயும் இல்லாத மூன்று குற்றங்களுக்காக விண்ணப்பதாரனை ஒரே விசாரணையில் வைத்த ஜட்ஜியவர்களின் தவறான செய்கை அக்கிரமமானது.

9. விசாரணைதொடங்குவதற்கு முன்னமே கிரிமினல் புரோசீஜர் கோடுக்கு விரோதமாய் நாலு சார்ஜுகளில் ஒன்றைமட்டும் நிறுத்திக்கொள்ளும்படி உத்திரவுகொடுக்க ஜட்ஜியவர்களுக்கு அதிகாரமில்லை.

10. விண்ணப்பதாரனால் உபயோகிக்கப் படாததும், மெய்ப்பிக்கப் படாததுமானதுமான சார்ஜான இங்லீஷ் வார்த்தைகளைக்கொண்டே விசாரித்துத் தீர்த்ததினால் விசாரணை ரத்தாகவேண்டியதென்றும், தீர்ப்பு அக்கிரமமானதென்றும் ஏற்படுகிறது.

11. சாட்டப்பட்ட வார்த்தைகள் ருஜுவாகவில்லை; விண்ணப்பதாரன் சாட்டப்பட்ட இங்கிலீஷ் வார்த்தைகளை உபயோகிக்கவில்லையாகையால் விடுவிக்கப்படவேண்டியவனாகிறான்.

12. விண்ணப்பதாரனுக்கு விரோதமாய் தாவா பிரசுர விஷயங்களன்றி இதர விஷயங்களையும் சாக்ஷியமாய் ஜட்ஜியவர்கள் எடுத்துக்கொண்டது தப்பு.

13. விண்ணப்பதாரன் வேண்டியும் திரான்ஸ்லேட்டரை சாக்ஷியாக வரவழைத்து ருஜுபண்ணிக் கொள்ளாத தாவா விஷயங்களின் சர்க்கார்மொழி பெயர்ப்புகளை சாக்ஷியமாய் ஜட்ஜியவர்கள் எடுத்துக்கொண்டது தப்பு.

14. போலீஸ் ஸெர்ச்சில் கொண்டுவந்த பேப்பர்களையே தாக்கல் செய்ததற்காக விண்ணப்பதாரனுக்கு ரிப்ளை ரைட் போய்விட்டதென்று ஜட்ஜியவர்கள் தீர்த்தது தப்பு.

15. பிராசிகூஷன் கேஸ் முடிந்ததும் ஸ்டேட்மெண்டுடன் தாக்கல் செய்த பேப்பர்களை ஆதாரவாகக் கொண்டிருக்க விண்ணப்பதாரனுக்கு நியாயமுள்ளது.

16. சிக்ஷையை அதிகப்படுத்தவேண்டி 124 A ஸெக்ஷன்படிக்கான முன் சிக்ஷையை யெடுத்துக்காட்ட சர்க்காருக்கு ஜட்ஜியவர்கள் இடந்தந்தது அக்கிரமநடவடி.

17. ஜட்ஜியவர்கள் தீர்மானம் சொல்லும்போது குறித்தபடி சிக்ஷையை அதிகப்படுத்துவதற்காக முன் சிக்ஷையை யெடுத்துக்கொண்டது பிசகு.

18. விவகாரம் ஒன்றேயென்று கோர்ட்டார் கொண்டிருந்தால் 124 A ஸெக்ஷனில் இரண்டுசார்ஜும், 153 A ஸெக்ஷன்படி ஒரு சார்ஜுமாய் ஜட்ஜியவர்கள் தீர்மானித்தது அக்கிரமநடவடி; ஆனால் ஜட்ஜியவர்கள் தீர்மானித்ததுபோல விவகாரம் ஒன்றல்லவென்று விண்ணப்பதாரன் தெரிவிக்கிறான்.

19. ஒரேவிஷயத்திலும் ஒரே நடவடியிலும் 124 A ஸெக்ஷன்படி ஒன்றும், 153 A ஸெக்ஷன்படி

ஒன்றுமாக ஜட்ஜியவர்கள் இரண்டு தீர்மானம் கூறியது அக்கிரமநடவடி.

20. 124 A ஸெக்ஷன் விவரணங்களை விலக்காக அர்த்தம் பண்ணிக்கொண்டு பேச்சு சுதந்திரத்தையும், பிரசுர சுதந்திரத்தையும் மிகவாய் நிபந்தனைக்கு விரோதமாய் விண்ணப்பதாரன் பேரில் ருஜுப்பொறுப்பை யேற்றியதும் ஜட்ஜியவர்களின் பிசகு.

21. ஸெக்ஷன் 124 A யில் எத்தனம் என்ற வார்த்தைக்கு லாப்படி அர்த்தம்பண்ணாமல், சாதாரண அர்த்தத்தை யெடுத்துக்கொண்டு ஜட்ஜியவர்கள் தப்பர்த்தம் பண்ணியதும் பிசகு.

22. ஜூரிதீர்ப்பானது 124 A ஸெக்ஷன்படி சார்ஜின் இன்ன பகுதியென்பதைக் குறிக்காமலிருக்க, ஜட்ஜியவர்கள் ஒப்புக்கொண்டதும் பிசகு.

23. முக்கியமாய் எத்தனமென்பதையும், பிரிட்டிஷ் இந்தியாவில் லாப்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ள கவர்ன்மெண்டு என்பதையும் பற்றிக் கிரமமும் திருத்தமுமான லாவை ஜட்ஜியவர்கள் விவரிக்காமற் போனதும் பிசகு.

24. தீர்மானங்கள் மிக்ககடுமையானவை.

பம்பாய் ஹைகோர்ட் விசாரணை.
1908 ஆகஸ்டுமீ 25உ.

(ஆனரெபில் சீவ்ஜஸ்டிஸ் மிஸ்டர் ஸ்காட், பியூனி ஜஸ்டிஸ் மிஸ்டர் பாச்சிலர் இவ்விருவர் முன்பாக)

சீவ்ஜஸ்டிஸ்—உமக்கென்ன வேண்டும்?

பாரிஸ்டர் மிஸ்டர் பாப்டிஸ்டா — லெட்டர்ஸ் பேட்டெண்டின்படி பிரிவிக் கவுன்ஸிலுக்கு இக்கேஸ் தகுதியானதென்று உத்திரவாகவேண்டும்.

சிவ்—இதற்கு நியாயம் யாது?

பாட்—முதலாவது தவருய் ஜூரிக்கெடுத்துக்காட்டியது; இரண்டாவது விண்ணப்பத்தில், குறித்த லா பாயிண்டுகள்.

சிவ்—முக்கியாம்சங்களென்ன?

பாட்—வெவ்வேருன இரண்டு கமிட்டல்களை ஒன்ருயெடுத்துக்கொண்டது அக்கிரமம்; ஒருவிசாரணையில் வெவ்வேருன நாலுசார்ஜுகளை ஒன்ருக்கிக்கொண்டு நாலுகுற்றங்களை யெடுத்துக்கொண்டதிலும் ஒரு குற்றத்தை நீக்கிவிட்டதும் அக்கிரமமே.

சிவ்—அப்பாலென்ன?

பாட்—முன் ஆக்ஷேபனையைப்பற்றிப் புதிய சார்ஜொன்று கூட்டிக்கொண்டது அக்கிரமம்.

சிவ்—அதெப்படி?

பாட்—ஜூரி தீர்ப்பானபிறகு அட்வோக்கேட் ஜெனரலவர்கள் சிக்ஷையை அதிகப்படுத்துவதற்காகக் குற்றவாளிமேபேரில் ஒரு புதிய சார்ஜைக்கொண்டுவந்தார்.

சிவ்—ஜட்ஜி நோட்டில்லாமல் ரிப்போர்ட்டிலிருந்தால் ஒப்புக்கொள்ளக்கூடாமை.

பாட—ஜூலைமீ 13உ செஷன் விசாரணை தொடங்கியது; நாலாவது சார்ஜை அட்வோக்கேட் ஜெனரல் 22உ கொண்டுவந்து படித்துக் காட்டியபோதே குற்றவாளி ஆக்ஷேபித்தும் ஜட்ஜி குற்றவாளி யென்றதை ஒப்புக்கொண்டார்.

சிவ்—அது அக்கிரமந்தானு?

பாட்—அக்கிரமந்தான்.

சிவ்—இன்னுமென்ன?

பாப்—சார்ஜுகளின் சேர்க்கை: (1) ஒரே விசாரணையில் ஒரேவிதமல்லாத 3 குற்றங்களுக்கு மேற்பட எடுத்துக்கொண்டது; (2) ஒரேவிதமான இரண்டு சார்ஜுகள்வேறான இரண்டுகுற்றங்களாயெடுத்துக்கொண்டது; (3) குற்றஞ்செய்ததையும் குற்றம் செய்ய எத்தனித்ததையும் சேர்த்துக்கொண்டது. இது அக்கிரமமானதோடு நியாயக்கேடானது.

சீவ்—வேறென்ன?

பாப்—கவர்ன்மெண்டுஸாங்ஷன் லாட்படிசரியானதல்ல.

சீவ்—உம்முடைய பாயின்டென்ன?

பாப்—கவர்ன்மெண்டார் போலீஸ் கமிஷனருக்கு 124 A ஸெக்ஷன்படி பிராசிகூஷனுக்கு உத்திரவு கொடுத்ததில் 153 A ஸெக்ஷனை சேர்த்துகொள்வது அல்லது விட்டுவிடுவது கமிஷனரிஷ்ட மென்னப்பட்டது. 153 A ஸெக்ஷன்படி பிராசிகூஷன் செய்ய ஸாங்ஷனாகவில்லை.

சீவ்—அதெப்படி?

பாப்—கவர்ன்மெண்டுஆர்டரில் 153 A ஸெக்ஷன்படி பிராதுசெய்ய யாருக்கும் அதிகாரம் கொடுத்தில்லாமையால், ஒருவரும் அப்படி செய்வதற்கிடமில்லை.

சீவ்—உம்முடைய பாயின்டு விளங்கவில்லை.

பாப்—பிராசிகூஷன் ஸாங்ஷனில் கவர்ன்மெண்டார் ஸெக்ஷனைக் குறித்திருக்கவேண்டும்.

சீவ்—சட்டத்தில் அப்படிக்கில்லையே?

பாப்—வகுப்புகளின்னவை யென்றும் கமிஷனருக்குக் காட்டியிருக்கவேண்டும்; அவருக்கு பதிலாகப் பிரியாது கொடுத்தவர் மற்றொரு மிஸ்டர் லோனாயிருக்கிறார்.

சிவ்—கவர்ன்மெண்டு கம்பிளெயிண்டு தானே?

பாப்—சாக்ஷியத்தில் அது ருஜுவாகவில்லை.

சிவ்—அப்படிக்கில்லை யென்பதை நீர் காட்ட வேண்டியது.

பாப்—செஷன் கோர்ட்டிலும் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலும் பிரியாதே யில்லையென்கிறேன்.

சிவ்—பிரியாதின்றி மாஜிஸ்ட்ரேட் எப்படியெடுத்துக்கொண்டார்?

பாப்—பிரியாதுக்கு முன்னே ஸாங்க்ஷனிருக்க வேண்டுமே.

சிவ்—அப்பாலது?

பாப்—பிரிட்டிஷ் இந்தியாவில் ஸட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டென்பதற்கு அர்த்தம்.

சிவ்—இப்போது எதைப்பற்றிப் பேசிவருகிறீர்?

பாப்—இவையெல்லாம் லா பாயிண்டுகளே.

சிவ்—அவ்வார்த்தையைப் பற்றிய பாயின்டென்ன?

பாப்—அளவிட்ட இங்கிலீஷ் ராஜ்யமென்பதினால் இந்தியா கவர்ன்மெண்டென்று மாகாமல் மஹாராஜா, லார்ட்ஸ் அவுஸ், காமன்ஸ் அவுஸ் என்றதும்.

சிவ்—இதைப்பற்றி ஜூரிக்கு என்ன தப்பர்த்தம் சொல்லியிருக்கிறது?

பாப்—அவ்வார்த்தையை ஜூரிக்கு விவகரிக்கவேயில்லை; பிரிட்டிஷ் கவர்ன்மெண் டென்னலாமென்று மாத்திரம் சொன்னார்.

சிவ்—அதற்கு ஆக்ஷேபமுண்டோ?

பாப்—அது தப்புதான்.

சிவ்—மற்றது?

பார்—124 A ஸெக்ஷன் விவரணங்கள் மூன்றிலும் எவனுக்கும் மறைந்துகொள்ள இடமில்லையென்று ஜட்ஜி சொன்னார்.

சிவ்—அதெப்படி?

பாப்—ருஜுப்பொறுப்பு எதிரிகளுக்கானதென்று அட்வோகேட் ஜெனரல் சொன்னார்.

சிவ்—ஜட்ஜி விவரணங்களை விலக்குகளாகக் கூறியதெங்கே?

பாப்—ஆக்ஷேப ஸ்டேட்மெண்டிலுள்ளது. நற்போக்கிலானால் விவரணத்தைமீறி கவர்ன்மெண்டின் நிர்மாணத்தையும் கண்டிக்கலாம்; ஆனால் ஸெக்ஷனை மீறக்கூடாது.

சிவ்—இன்னுமென்ன?

பாப்—ஜட்ஜி விலக்குக் குட்பட்டேதான் பிரசுர சுதந்திரம் உள்ளதென்றார்; இதற்கெதிரிடையாய் அட்வோகேட் ஜெனரல் சாக்ஷிய சட்டப்பிரகாரம் ருஜுப் பொறுப்பு டிபன்சுக்கே யென்றது சரியல்ல; இதை ஜட்ஜி திருத்தவேயில்லை.

சிவ்—அப்பாலென்ன?

பாப்—எந்தசார்ஜுக்கும் சம்பந்தப்படாமல் வெடிமருந்து சட்டத்தைப்பற்றி யெழுதுவதற்காக வேண்டிய புஸ்தகங்களின் பெயர்களைக் குறித்திருக்கிற போஸ்ட்கார்டை தாக்கல்செய்து கொள்ளக்கூடாமை யென்பது.

சிவ்—அதைப்பற்றி ஜட்ஜி யென்ன சொன்னார்.

பார்—ஜூரிகளே தீர்மானித்துக் கொள்ளட்டுமென்றார்.

சிவ்—விசாரணையிலெடுத்துக்கொள்ளப்பட்டதா?

பாப்—ஆம்பிரபோ; வேண்டிய விசாரணை நடந்தது. குற்றமான எண்ணத்தைக் காட்டுவதற்காகச் சேரியின் இதரவிஷயங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

சிவ்—அவற்றையெடுத்துக் கொள்ளக்கூடாதோ?

பாப்—அவற்றை அசல் சார்ஜுகளாயெடுத்துக் கொண்டு, ஜட்ஜி ஜூரியைப்பார்த்து அவற்றை வாசிப்போர் மனதில் என்ன விளையுமென்பதை சொல்லும்படிக்கேட்டார்.

சிவ்—அது கிரமமென்றேற்பட்டிருக்கவில்லையா?

பாப்—அதைப்பற்றி அவசியமில்லை; அதை கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

சிவ்—அவை சார்ஜ் செய்யப்படாதவையா?

பாப்—ஆம்பிரபோ.

சிவ்—இனியெது?

பாப்—ஜூரி தீர்ப்பில் எத்தனமும் குற்றமும் வெவ்வேறாக அது குற்றத்துக்காகவா, எத்தனத்துக்காகவாவென்று விளங்கவில்லை.

சிவ்—ஒவ்வொரு சார்ஜுக்கும் தீர்ப்பு வெவ்வேறோ?

பாப்—ஆம் பிரபோ.

சிவ்—ஆறுவென்னகெடுதி?

பாப்—பிராசிகூஷன் விஷயப் போக்குகள் அசல் சாட்டும், எத்தனமும் ஆக இரண்டு.

சிவ்—இதனால் குற்றவாளிக்கென்ன விரோதம்?

பாப்—அசல் சாட்டு தவறிப்போய் எத்தனத்துக்காகத் தீர்மானிக்கப்பட்டால், குற்றவாளிக்கு தண்டனை சொற்பமாயிருக்கும்.

சிவ்—ஆனால் 124 A ஸெக்ஷன்படி அசல்சாட்டும் எத்தனமும் கூடியிருப்பதால் தண்டனையும் சரியே; ஏனெனில் குற்றமும் எத்தனமும் ஸெக்ஷன்படி ஒன்றேயாகிறது.

பாப்—தண்டனைசெல்வதில் அசல்சாட்டு எத்தனத்திலும் அதிககடுமையான தாகவேண்டும்.

சிவ்—124 A ஸெக்ஷன்படி ஒரே குற்றந்தான்.

பாப்—தண்டிப்பதில் வித்தியாசமுள்ளதே.

சிவ்—இரண்டும் ஒரேகுற்றமானால் தண்டனையும் அதுவே.

பாப்—124 A ஸெக்ஷன்படிக் குற்றமொன்றே யென்பதில் ஆக்ஷேபமில்லை யென்றாலும், கல்கட்டா ஜட்ஜ்மெண்டை கவனிக்கவேண்டும்.

சிவ்—அதில் சார்ஜ் 124 A ஸெக்ஷனைப் பற்றியதா?

பாப்—இல்லைபிரபோ; பொய்சாக்ஷியச் சார்ஜ்மாத்திரமாய், லா சார்ஜை சந்தேகாஸ்பதமானால் எப்போக்கு சரியானதென்று ஜூரியார் தீர்க்கவேண்டி லாசொல்லுகிறது.

சிவ்—தண்டனை ஒன்றாயுள்ள இரண்டு குற்றங்களிங்கே உள்ளன—பிறகென்ன?

பாப்—சர்க்காருத்திரவுபெற்ற பிரியாது இல்லாமலும், பிரியாதினை விசாரிக்காமலும் 124-A, 153-A ஸெக்ஷன்களின்படி தண்டிக்கவேண்டிய குற்றங்களைக் கோர்ட்டார் பிடித்துக் கொண்டிருப்பது.

சிவ்—எச்சு சர்க்கார் உத்தியோகஸ்தரும் விசாரிக்கப்படவில்லையா?

பாப—ஓரியண்டல் டிரான்ஸ் லேட்டர் மிஸ்டர் ஜோஷி மாத்திரம் கவர்ன்மெண்டு ஸெக்ரிட்டெரி மிஸ்டர் குவின் கையெழுத்தைப்பற்றி விசாரிக்கப்பட்டார்.

சிவ்—அவ்வகையில் கிராஸ் கேள்வியாயிருக்கிறதா?

பாப்—இல்லை பிரபோ; தண்டனை அதிகத்தைப் பற்றி யினி பேசலாம்.

சிவ்—எப்படி தண்டனை அதிகரிக்கப்பட்டது?

பாப்—124-A, 154-A ஸெக்ஷன்கள் ஒன்றுவிட்டொன்று யெடுத்துக்கொள்ளவேண்டிய சாட்டுகளாக, வேறான இரண்டு ஸெக்ஷன்களாயில்லை. அவை வெவ்வேறன்பது அக்கிரமம். ஒன்று 16 நெ. கேசுக்கும், மற்றது 17 நெ. கேசுக்கும் சம்பந்தப்பட்டவை. 17 நெ. கேசின் சார்ஜுகள் இரண்டில் ஒன்று 124-A ஸெக்ஷன்படிக்கும், மற்றது 153-A ஸெக்ஷன்படிக்கும் உள்ளன. 16 நெ. கேசில் 124-A ஸெக்ஷன்படிக்குச் சார்ஜு ஒன்றுள்ளது.

சிவ்—விவகாரம் வேறு?

பாப்—ஆம் பிரபோ; விவகாரங்களும் குற்றங்களும் வேறுபட்டவையே.

சிவ்—ஒரே விஷயத்தில் 124 A, 153 A ஸெக்ஷன்களின்படி இரண்டு தீர்மானங்கள் செய்வது அக்கிரமமென்பதெப்படி?

பாப்—ஏனெனில் கிரிமினல் புரோஸிஜர் கோடின்படித் தீர்ப்பு எக்குற்றத்தின் மேலென்பது சந்தேகமாயிருக்கிறது.

சிவ்—எனப்படி?

பாப்—அப்படி சொல்வதற்கு அளவற்ற தீர்மானங்கள் உள்ளன.

சிவ்—இந்தியன் பினல் கோடுக்கெப்படி?

பாப்—பிராசிகூஷனை 124A, 153A ஸெக்ஷன்களிரண்டில் ஒன்று சர்க்காருக்கெதிரிடையாகவும், மற்றது ஜனங்களுக்கெதிரிடையாகவும் உள்ளது.

சிவ்—அடுத்த அம்சமோ?

பாப்—போஸ்ட்கார்டை யெடுத்துக்கொண்டால் மேல் அதற்கெதிரிடையாக சிலகார்டுகளை தாக்கல் செய்ய நேர்ந்துவிட்டதால்ரிப்ளைரைட்டையிழக்கிறோம்; இல்லாவிட்டால் ரிப்ளைரைட் போயிருக்காது.

சிவ்—தப்புவழி காட்டியதைப் பற்றி சொல்லப் போகிறீரோ?

பாம்—ஆம்பிரபோ; 153 A ஸெக்ஷனை சரியாய் ஆராயுமிடத்து, விரோத எண்ணம் அத்தியாவசியமானதாகும்.

சிவ்—விரோத எண்ணம் யாது?

பாப்—153 A ஸெக்ஷன் சார்ஜை இரண்டாவது விஷயத்தைமட்டும் குறிக்கிறது. எண்ணத்தைக் குறிக்காமலே ஜட்ஜி விஷயங்களையெல்லாங் குறித்து அவற்றின் விளைவென்னவென்று விசாரித்துக் கொள்வதே வேலையாயிருந்தார். 153 A ஸெக்ஷன்படி மிஸ்டர் திலகர் விடுவிக்கப்பட்டார்.

சிவ்—இன்னுமென்ன?

பாப்—124 A ஸெக்ஷன்படி எண்ணத்தைவிட்டுத் தப்புவழி காட்டல்; உதாரணமாக, குற்றவாளி விஷயமெழுதியது வெறுப்பைத் தூண்டுவதற்காகவே எடுத்துக்கொள்ளலாமென்றும், நல்லெண்ணமிருந்து எழுதியிருந்தாலும் அதன் விளைவைக் கண்டு சிக்ஷிக்கவேண்டுமென்றும், குற்றமான எண்ணத்தை யெடுத்துக் காட்டவேண்டியிருக்க, பயனைப்பற்றி அவசியமின்றி

விஷயம் வெறுப்புணர்ச்சியைக்கிளப்புவதாயின்கெட்ட எண்ணமில்லாவிட்டாலும் சிக்ஷிக்கவேண்டுமென்றும் ஜட்ஜி சொன்னார். ஆனால் 124 A ஸெக்ஷன்படி ராஜதூஷணத்துக்குப் பயனும் எண்ணமும் ஆதார அம்சங்களாகும். ஸெக்ஷன்படிக் குறித்த எண்ணமிருக்க வேண்டியதென்று காட்ட வேண்டிய பிரமாணங்களிருக்கின்றன. விஷயத்தின் விளைவைப்பற்றி யோசிக்கும்போதே பின்னுள்ள குறித்த எண்ணமும் அவசியமானது. குற்றவாளிக்கு அவ்வெண்ணமிருந்ததாக மெய்ப்பிக்கவேண்டியதுமிருக்கிறது. வங்கவாசிக்கேஸில் ஆனரெபில் சிவ்ஜஸ்டிஸ் ஸார்பித்திராம் தீர்மானப்படிச் சார ஜ[illegible] எண்ணம் அவசியமான தென்னப்பட்டது. இதைப் பம்பாய் ஹைகோர்ட்டு சிவ் ஜஸ்டிஸ் ஸர்ஜெங்கின்[illegible] ஒப்புக்கொண்டிருக்கிறார்.

சிவ்—அப்பால்?

பாப்—இவ்வாசகர்கள் 21-மணி 10-நிமிட்டுநேரம் திலகர் பேசியதைக் கேட்கவில்லையென்று சொன்னார். குற்றவாளி விஷயங்களையெழுதிய பயனாவது நாட்டினாட்சியில் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கென்றதைக் கோர்ட்டார் ஒப்புக்கொண்ட பக்ஷத்தில், தக்ஷணமே குற்றவாளி விடுவிக்கப்படவேண்டியவராயிருக்கிறார்.

சிவ்—பிரமாணங்களென்ன?

பாப்—இதைப்பற்றி விவகரிக்கப்புகுந்தால் பழைய லாக்களைக் கொண்டுவந்து புதிய லாக்களில் சேர்க்கலாகும். பழைய பாக்ஸ் சட்டப்படிக் குறித்த எண்ணம் அவசியமாய்விட்டது. இங்கிலீஷ் தீர்மானங்களும் இருக்கின்றன.

சிவ்—ஜஸ்டிஸ் தேவார் எண்ணத்தையும் கவனிக்க வேண்டுமென்றதினால் ஜூரிக்குத் தப்புவழிகாட்டியதாகுமா?

பாப்—ஆனால் அவர்லாவில் தவறுதலில் யோக்கியமான எண்ணம் சரிப்படா தென்றதினால் கெட்டுப் போய்விட்டது.

சிவ்—ஜட்ஜி தப்பு வழிகாட்டலெங்கே?

பாப்—அவர் எண்ணம் குற்றமற்றதானாலும், எல்லை மீறக்கூடா தென்னப்படுகிறது. இது தப்பு எத்தினமென்பதை ஸர் ஜெங்கின்ஸ் விவரித்திருக்கிறபடி ஸாதாரண அர்த்தத்திலே யெடுத்துக் கொள்ளவேண்டுமேயன்றி வேறில்லை.

சிவ்—ஒன்றைச் செய்யக்கருதினால், அதைச்செய்ய யத்தனித்ததாகவில்லையா?

பாப்—அவ்வித்தனத்துக்கு எண்ணம் அவசிய மன்று.

சிவ்—அதெப்படி?

பாப்—அசல் குற்றமும், அதற்கெத்தனமுமாக எண்ணமுந்தேவை; அன்றியும் ஜட்ஜி குற்றவாளியின் மனப்போக்கை ஜூரியார் கவனிக்கவேண்டியதில்லையென்றார். போக்கைகவனிக்காவிட்டால் எண்ணமேற்படாதென்று லார்ட்காக்பரன் சொல்லியதை ஜட்ஜி யெடுத்துக் கொள்ளவில்லை. பின்னும் ஜட்ஜி ஹைகோர்ட்டு திரான்ஸ்லேட்டர் மொழிபெயர்ப்புக்குக் குற்றஞ்சொல்லக்கூடாதென்று ஜூரிக்குச்சொல்லியதும் தவறே. குற்றவாளி "ஆட்சி உருளைக்குக் கட்டை" யென்றதில் கட்டையென்பதற்கு பாம்பென்றும் ஜட்ஜி சொல்லியிருக்கிறதினால் ஜூரிக்கு அபாயகரமாகவும் பட்டிருக்கலாம். 153 A ஸெக்ஷன்பிரகாரம் வகுப்புகளின்னவென்று சார்ஜிலும்கிடையாது. சார்ஜ்விஷயமோ மொழிபெயர்ப்பை ஆதரவாகக் கொண்டதேயன்றி, அசல் விஷயத்தை யெடுத்துக்கொண் டேற்பட்டதல்ல. ஜூரியாருக்கு அசல் விஷயத்தைக்கூறல், அவர்கள் ஒத்திட்டுக்கொள்ள மொழி பெயர்ப்பைச் காட்டியிருக்க

வேண்டும். பிராசிக்யூஷனார் மொழிபெயர்ப்புசரியென்று ருபிப்பித்திருக்கவேண்டும்.

சிவ்—இங்கிலீஷ் கோர்ட்டில் அசல் விஷயங்களோடு மொழிபெயர்ப்புகள் வைக்கப்பட்டாலென்ன?

பாப்—ஆனால் ஜட்ஜே விஷய சாராம்சம் மொழிபெயர்ப்பிலே சற்றுவிலகிப் போயிருக்கலாம் என்றாரே.

சிவ்—அந்த சாராம்சம் தவறியிருந்தால், டிபன்ஸில் காட்டியிருக்கலாமே?

பாப்—ஆம் பிரபோ; அப்படி விசாரித்ததை ஜூரி யார் யோசனைக்கு விட்டுவிட்டார்.

சிவ்—அது சரிதானே?

பாப்—மிஸ்டர் ஜோஷி கிராஸில் சரிப்படுத்தப்பட்டபடி மொழிபெயர்ப்பிருந்தால் பாதகமில்லை.

சிவ்—சாராம்சம் போய்விட்டிருக்கிறதென்று ஜட்ஜி சொன்னார்?

பாப்—இல்லை பிரபோ; இருக்கலாமென்றார்.

சிவ்—எல்லா பாயின்டுகளும் ஆய்விட்டதோ?

பாப்—ஆம் பிரபோ.

சிவ்—நோட்டீசுக்கு உத்திரவாகுமென்றாவது, இல்லையென்றாவது இனி முடிவு செய்துவிடுவோம்.

பாப்—இதுவரையில் பாயின்டுகளைமட்டுமே காட்டினேன்; இவற்றை விவகரிக்கவேண்டுமே.

சிவ்—நோட்டீசின்மேல் விவகரித்துக் கொள்ளக் கூடாதா?

பாப்—பாயின்டுகளைப்பற்றி விவகரித்து ஆரம்பிக்க வேண்டுமே?

சீவ்—ஆர்க்குமெண்டுகளை ஆரம்பிக்கப்போகிறீரா?

பாப்—அதற்காரம்பிக்கு முற்பட்டுக் கூறவேண்டிய ஒருபாக்கி யம்சமாவது கேசுகளைக் கூட்டிக்கொண்டது அக்கிரமமென்பதே.

சீவ்—ஒவ்வோரம்சமா யெடுத்துக்கொள்ளுவதில் முதலம்சமாக இரண்டு கமிட்டல்களை ஒரு கேசாக்கிக் கொண்டதாகட்டும்.

பாப்—ஒவ்வொன்றுக்குச் சார்ஜுகளிரண்டாக நாலு சார்ஜுகள் கொண்ட இரண்டு கேசுகளையும், ஒன்றைத்தள்ளி மூன்று சார்ஜுகள் கொண்ட ஒரு கேசாக்கிக்கொள்ளுகிறதானது நியாயங்கிடையாது; அது நல்லதுக்குமல்ல.

சீவ்—என்னசெய்வது? எத்தனை சார்ஜுகள்?

பாப்—அட்வொகேட் ஜெனரல் நாலே மூன்றாக்கி ஒருகேசா யெடுத்துக்கொள்ள வேண்டுமென்கிற போதே ஆக்ஷேபமும் கூறப்பட்டது. பிறகு ஜூரியார் முன்பாக வைக்கப்பட்ட சார்ஜுகள் மூன்றே. குற்றவாளிக்கு முதல்தடவை நாலு சார்ஜுகள் படிக்கப்பட்டுத் திரும்பி மூன்று சார்ஜுகளாக மாற்றிப்படிக்கலாயிற்று.

சீவ்—கிரௌனர் மாஜிஸ்ட்ரேட் சார்ஜுகள் பலவற்றில் மூன்றை யெடுத்துக் கொள்ளலாமே?

பாப்—கமிட்டல் ஒன்றாயிருந்தாலல்லவோ? இரண்டாயிற்றே.

சீவ்—எத்தனைசார்ஜுகளை விசாரிக்கவேண்டியது?

பாப்—குற்றவாளிக்குச் சார்ஜ் படிக்கப்பட்டபோதே விசாரணை தொடங்கிவிடவில்லையா?

சீவ்—குற்றவாளி விசாரிக்கக் கேட்குமட்டும் விசாரணை தொடங்குவதில்லை.

பாப்—குற்றவாளி குற்றமில்லையென்ற தகவலையே விசாரணை தொடங்கிவிடுகிறது. ஜூரி வரவழைக்கப்படுவதற்கு முன்னம் நாலு சார்ஜு படிக்கப்பட்ட போதே தொடக்கந்தான். அதிலொன்றைத் தள்ளிவிடுவதற்குக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. சார்ஜைத் தள்ளுவதற்கு ஹைகோர்ட்டாருக்கும் அதிகாரமில்லை. ஆகவே மெயின்லாப்படிக்கும் நாலில் மூன்றையெடுத்துக்கொண்டது அக்கிரமமாகும். விசாரணை முடிவில் முன் சிக்ஷையைப் பற்றிய வேறொரு சார்ஜு கொண்டுவரப்பட்டதும் சட்டவிரோதமாயிருக்கிறது.

சிவ்—முன் சிக்ஷை விஷயத்திலே வித்தியாசமேதுங் கிடையாது.

பாப்—சிக்ஷையை அதிகரிப்பதாகும் ஆக்ஷேபமாயிருக்கிறது.

சிவ்—முன் சிக்ஷையிருக்கிறதென்றுமட்டும் கிரௌனார் காட்டத்தக்கதே.

பாப்—ஜூலை மீ 13உ விசாரணை தொடக்கிவிட்டிருக்க, சார்ஜு 22உ ஏற்பட்டிருக்கிறது.

சிவ்—விசாரணையினிடையேயை சார்ஜை சேர்த்தது கூடாமையென்கிறீரோ?

பாப்—ஜூரி தீர்ப்பின் பிறகுதான் சார்ஜு கொண்டுவரப்பட்டது. பம்பாய் லா ரிப்போர்ட்டின்படி ஒரு சிவ் ஜஸ்டிஸ் விசாரணை தொடங்கிய பிறகு கொண்டுவந்த சார்ஜைத் தள்ளிவிட்டார்.

சிவ்—சார்ஜைப் படிக்கவேண்டியதில்லையே?

பாப்—ஜூரி தீர்ப்பின் பிறகு சார்ஜு படிக்கப்பட்டது. முன் சிக்ஷையால் பின் சிக்ஷையை அதிகரிப்பதற்கு முன்னே ஒரு வழியாயிருந்ததை அலஹாபாது லா ரிப்போர்ட்டு மாற்றிவிட்டிருக்கிறதில் அதிக் சிக்ஷையாக்கக் கூடியதின் முன்னே சார்ஜ்செய்யவேண்டு

மென்று குறிப்பிட்டிருக்கிறது. சார்ஜைக் கோர்ட்டில் படித்துக் குற்றவாளிக்குத் தெரிவிக்கவேண்டும்.

சிவ்—இதன் கருத்தென்ன?

பாப்—ஜட்ஜியால்சிக்ஷை அதிகப்படுத்தப்பட்டது தான்.

சிவ்—எனப்படி?

பாப்—அதைத்தவிர வேறில்லை.

சிவ்—இதென்ன?

பாப்—அதை யெடுத்துக் காட்டாதிருந்தால், பாதி யளவுக்கு சிக்ஷையா யிருக்கலாம்.

சிவ்—அதற்கென்று தண்டனையில்லையானால் ஒன்று மில்லையே?

பாப்—தனியாய் தண்டனை கிடையாதே?

சிவ்—முன் சிக்ஷையைப்பற்றி தண்டனை அதிகப் பட்டிருக்க வேண்டுமென்றல்லவா சொல்லுகிறீர்?

பாப்—முன் சிக்ஷையைத் தீர்மானிக்கும்போது ஜட்ஜி குறித்திருப்பதிலே அப்படிதான்.

சிவ்—அப்படிக் கெங்கும் காணவில்லையே.

பால்—அப்படிக் கில்லாவிட்டால் சார்ஜுக்கு அர்த்தமில்லை.

சிவ்—முன் சிக்ஷையைப்பற்றி ஜாமீன் மனுவில் குறிக்கப்பட்டதிலிருந்து ஜட்ஜி கவனித்திருக்கலாமே?

பாப்—ஒருதலையில் மனுவெடுத்துக்கொண்டு எதிரியை விசாரிக்காமலே ஜட்ஜி மறுத்துவிட்டார்.

சிவ்—பிரமாண பத்திரங்களை ஜட்ஜி பார்த்திருக்க வேண்டும்; அவ்வகையில் கவனித்திருக்கலாமே. அன்றியும் ஜட்ஜி லாவை மீறி தண்டித்ததில்லை.

பாப்—அப்படி அவர் சொல்லியிரா விட்டாலும், நாலாவது சார்ஜைஎடுத்துக்கொண்டிருக்கிறார். ஜாமீன் மனுவை மறுத்ததோடு, அதற்கு நியாயம் சொல்லாமையால் குற்றவாளிககு விரோதமாய்விட்டது.

சிவ்—ஜட்ஜி சிக்ஷை சொல்லும்போது முன் சிக்ஷையை கவனிக்கலாமே.

பாப்—அது சாக்ஷியாம்சமானால், ஜட்ஜி அதையெடுத்துக்கொண் டிருக்கலாம்.

சிவ்—இவை ஜட்ஜியின் இஷ்டத்திற்கிசைந்தவை.

பாப—ஆகவே யிந்தசார்ஜ் ஜட்ஜியின் சிக்ஷை விதிப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாகி வேண்டுமென்கிறேன். இனி சார்ஜுகளின் சேர்க்கை விஷயமாய்ப் பேசலாம்.

சிவ்—அதைப்பற்றி கோர்ட்டில் தெரிவிப்பதாக நிச்சயித்திருக்கிறோம்.

பாப்—அப்பால் அசல் சார்ஜோடு எத்தனத்தையும் ஒன்றாய்க் கூட்டிக் கொண்டிருக்கும் விஷயம்.

சிவ்—இதில் எதிரிடையா யிருக்கிறோம்; வேண்டுமானால் விவரிக்கலாம்.

பாப்—ஒரு சார்ஜில் குற்றங்களைக் காட்டி, அசல் சார்ஜோடு எத்தனத்தை விவரித்திருக்கிறது.

சிவ்—கோட் ஸெக்ஷனில் அசல் சார்ஜோடு எத்தனமும் அடங்கி யிருக்கின்றன. சார்ஜுக்கு இரண்டு தலைப்புகள் உள்ளனவென்றால் சரியாகும்.

பாப்—ஜஸ்டிஸ் டார்லிங் குறித்தபடி அப்போது ஜூரியார் இரண்டு தலைப்புகளுக்கும் வெவ்வேறாகத் தீர்ப்புகொண்டு வந்திருக்க வேண்டுமே.

சிவ்—ஜஸ்டிஸ் ஸ்டார்லிங்இங்கிலீஷ்லாவில் தேர்ந்தவர்; அதில் இரட்டை வாதம் நல்லதல்ல வாதவின் ஒன்றையெடுத்துக்கொள்ளவில்லை. இம்மாதிரிவாதமேன்?

பாப்—இங்கே வெவ்வேறாய் இரண்டு குற்றங்களிருக்கின்றனவே; அது சாக்ஷியத்தைப் பற்றியதாய்க் கொஞ்சம் பேதிக்கும்.

சிவ்—இனிப்ராசிகூஷனுக்கு ஸாங்ஷென் விஷயத்தைப் பேசலாம்.

பாப்—பிரியாதுக்கு கவர்ன்மெண்டு நேத்திரவாக வேண்டும்; இல்லாவிட்டால் மாஜிஸ்ட்ரேட்டுக்குப் பிரியாது கொடுக்கக்கூடாது.

சிவ்—போலீஸ் கமிஷனர் பிரியாது கொடுத்ததில்லையா?

பாப்—ஆனால் ஸாங்ஷென் சாக்ஷியத்தில் வரவில்லை.

சிவ்—ஸாங்ஷனைப்பற்றி மாஜிஸ்ட்ரேட் சரிப்படுத்திக்கொள்ளாமல் பிரியாதை யெடுத்துக்கொண்டு வாரண்டு கொடுத்திருக்கமாட்டார்.

பாப்—அந்த சாக்ஷியந்தான் போலீஸ் கோர்ட்டிலாவது ஹைகோர்ட்டிலாவது இல்லை.

சிவ்—ஸாங்ஷனில்லாமல் மாஜிஸ்ட்ரேட் எடுத்துக்கொண்டதாக இல்லையே?

பாப்—153 A ஸெக்ஷென்படி சார்ஜ்செய்யவாவது விட்டுவிடவாவது போலீஸ் கமிஷனருக்கு அதிகாரங்கொடுக்க கவர்ன்மெண்டுக்கு நியாயமுள்ளதா?

சிவ்—கவர்ன்மெண்டார் கமிஷனருக்கு ஸாங்ஷென் கொடுத்து நடவடிக்கைசங்கதியையும் தெரிவித்தார்கள்.

பாப்—124 A ஸெக்ஷென்படி ஸாங்ஷேனும், 153A ஸெக்ஷென்படி (இஷ்டம்போல் நடந்துகொள்ள) உத்திரவும் உள்ளன. இதனால் 153 A ஸெக்ஷென் மற்ற குற்றங்களுக்கு சமமாய் வந்துவிட்டது.

சிவ்—பிராசிகூஷன் கவர்ன்மெண்டால் நடத்தப்பட்டது.

பாப்—153 A ஸெக்ஷன் கமிஷனரிஷ்டம் போல விடப்பட்டது.

சிவ்—ஸாங்க்ஷனில் மிஸ்டர் குவினின் அபிப்பிராய முள்ளது.

பாப்—கவர்ன்மெண்டார் இதரானுக்கு அவ்வதிகாரத்தைத் தரக்கூடாது. ஸாங்க்ஷனோடு ஸெக்ஷன்களையும் கவர்ன்மெண்டாரே குறிக்கவேண்டும். அவர்கள உத்திரவிலே இன்னவகுப்பாருக்குள்ளே பகையுண்டாயிருக்கிறதென்று குறிக்கவில்லை; சார்ஜிலேயும் அவை காணப்படவில்லை.

சிவ்—சார்ஜில் என்னசொல்லி யிருக்கிறது?

பாப்—மாஜிஸ்ட்ரேட் சார்ஜ்செய்ததின் பேரில் கிரௌன் கிளர்க்கு மாற்றியிருக்கிறார். இனி கவர்ன்மெண்டு என்னும் பதார்த்தத்தைப்பற்றிப் பேசலாம். அரசன், பிரபுக்கள், மகாஜனங்கள் இம்மூவகையாரும் அடங்கி [illegible]க்குட்பட்ட அரசங்கம் என்று எனக் கர்த்தமாகிறது. அதற்கு அவ்வரசங்கமன்றித் தற்கால ஆட்சியென்றும் அர்த்தமாகிறது. இந்தியாவானது லாப்படி ஸ்தாபிக்கப்பட்ட பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் ஒரு பகுதியாய் மட்டுமுள்ளது.

சிவ்—இங்கிலண்டில் லாப்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ள கவர்ன்மெண்டும், இந்தியாவில் லாப்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ள கவர்ன்மெண்டும் ஒன்றுதானா?

பாப்—எர்ஸ்கின் சொல்கிறபடி ஆங்கிலேய அரசங்கமே கவர்ன்மெண்டென் றேற்படுகிறது. அதிகார நிர்வாகம் சர்க்காரிலேயுள்ளது. இந்தியாவிலே அதிகாரநிர்வாகமுற்றிலும் 1858 ஆம் வருஷமுதல் சர்க்காரிலே கொடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டானது ராஜகாரிய நிர்வாகத்தையும் சட்டநிருபணத்தையும் கொண்ட அதிகாரத்தோடு கூடிய சர்க்

கார் கருவியாயிருக்கிறது; ஆகவே இந்தியாவில் லாப்படி ஸ்தாபிக்கப்பட்ட கவர்ன்மெண்டானது காரிய நிர்வாக கவர்ன்மெண்டாயிருக்கிறது.

சிவ்—இந்தியா கவர்ன்மெண்டு இந்தியாவில் லாப்படி ஸ்தாபிக்கப் பட்டுள்ளதா?

பாப்—1858-ஆம் வருஷமட்டும் இதற்கு ஓரதிகாரமும் கொடுக்கப்பட்டதாயெனக் கேட்படவில்லை. இல்பர்ட்மசோதாவின்படிக் காரியநிர்வாக கவர்ன்மெண்டாகிறது. 124 A ஸெக்ஷன்படியான கவர்ன்மெண்டுக்கு ஜட்ஜியவர்களே தாத்பரியம் சொல்லவேண்டியது.

விவரணத்தை விலக்காயெடுத்துக் கொண்டிருக்கும் விஷயத்தைப்பற்றி இனிப்பேசலாம். அப்படியானால் விலக்குக்கு வந்ததாய்க் காண்பிக்காவிட்டால் குற்றம் செய்திருப்பதேயாகும். விவரணமோ விவரமாயில்லாவிட்டாலும், அநுமதிக்கக்கூடிய அம்சத்தைக்காட்டுகிறது.

இருந்துவரும் ஆட்சிப்பழுதுகளைக் காட்டிக்குறை கூற எமக்கிடமுள்ளது. விவரணமோ கவர்ன்மென்டைப்பற்றிக் குறைகூறாமல், கவர்ன்மெண்டு ஏற்பாட்டைப்பற்றிக் குறைகூறக் கூடுமென்கிறது. குற்றவாளி விவரணமல்லது விலக்கின்கீழ் வருவதானால், ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பு முற்றிலும் அவனதேயென்று அட்வோகேட் ஜெனரல் சொன்னார்.

சிவ்—கேஸ்உருவாய் விட்டிருக்கும் பக்ஷத்தில் அதுவாகும். ஸெக்ஷன்கீழ் வரவில்லையென்று ருஜுப்படுத்துவது குற்றவாளியின் பொறுப்புதான். இதில் பிராசிகூஷனர் ஸெக்ஷன்பேரிலும் நிற்கலாகும்.

பாப்—விவரணமோ கவர்ன்மென்ட் ஏற்பாட்டைக் கண்டிக்கமட்டும் இடந்தருகிறது; அதைத்தாண்டினால் ஸெக்ஷனில் விழவேண்டியதுதான்.

சிவ்—உண்மையில் விவரணம் விலக்கென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாப்—அதுதான் பாயிண்டு பிரபோ; கவர்ன்மென்டை அவமதிப்புக்குக் கொண்டுபோகாதிருக்குமட்டும் கவர்ன்மென்டின் ஆட்சிமுறைகளைப்பற்றிக் குறைகூற இடமுள்ளது. ஸெக்ஷன்படி இதைசெய்ய இடமுள்ளதேயன்றி, விவரணப்படி கவர்ன்மென்டேற்பாடுகளைக் கண்டிப்பதை தாண்டக்கூடாமை; அப்படி மீறினால் ஸெக்ஷனுக்குட்படலாகும். கவர்ன்மென்டின் அமைப்பைத் தாக்கலாகாதென்றாலும், அதை மாற்றும்படிக் கேட்கக் கூடும். இந்த சாதகத்தைக் குற்றவாளி ஜாக்கிரதையாகவே யெடுத்துக்கொண்டிருக்கிறார்.

சிவ்—இதனால் கவர்ன்மென்டை அவமதிப்புக்குக்கொண்டு போகலாமா?

பாப்—அப்படிக்கில்லை; விவரணமும் விலக்கும் ஒன்றேயானால், கவர்ன்மென்டின் ஏற்பாடுகளை மட்டுமே கண்டிக்கக்கூடுவதாகும்.

சிவ்—எனக்கு சரிப்படவில்லை.

பாப்—விவரணமும் விலக்கும் சமமானால், கவர்ன்மென்டின் சட்ட ஏற்பாடுகளையன்றி கவர்ன்மென்டையாவது, அதனங்கத்தையாவது கண்டிக்கக்கூடாது; ஆட்சிப்பழுதுகளையும் எடுத்துகாட்டக்கூடாது. கவர்ன்மென்டை அவமதிப்புக்குக் கொண்டுபோகாதமட்டில் ஸெக்ஷன்படிக்கே இதை செய்யலாமானாலும், செய்தாலோ ஸெக்ஷனுக்குட்படுவோமென்பதில் தடையில்லை. அட்வோகேட் ஜெனரல் கூறியபடி விவரணமானது விலக்கினளவையாயிருக்கிறது.

சிவ்—ஜட்ஜி யென்ன சொல்லி யிருக்கிறார்?

பாப்—ஜூரியை வசப்படுத்திக்கொண் டிருக்க வேண்டியபடி அட்வோகேட் ஜெனரல் சொன்னதேயாம்.

சீவ்—குற்றவாளி கவர்ன்மெண்டை அவமதிப்புக்குக் கொண்டுபோகவும், இன வகுப்புகளுக்குள்ளே பகைமூட்டவும் எத்தனித்ததாகவே ஜூரியார் கண்டிருக்கிறார்கள்.

பாப்—அவர்கள் கவர்ன்மெண்டு கண்டனமென்றார்கள்; ஆனால் அப்படிக் கெடுத்துக் காட்டவில்லையெனக்கூடும். மிஸ்டர் அஸ்குவித் (இங்கிலீஷ்லாயர்) விவரணத்தையும் விலக்கையும் விவரித்திருப்பதைப் பார்க்கலாம்.

சீவ்—அவ்விவரணம் இந்த ஸெக்ஷன்படிக்கா?

பாப்—இல்லை பிரபோ, வேறே; எடுத்துக் கொள்ளப்படாத போஸ்ட் கார்டு எண்ணத்தைக் காட்டுவதற்கென்று வைக்கப்பட்டதானாலும் அதற்குச்சார்ஜில்லை.

சீவ்—சாக்ஷியத்துக்கு வலுவல்லவா?

பாப்—எடுத்துக் கொள்ளப்படாததானாலும், டிபன்சுக்கு மிக்க ஆதாரவாய்விட்டது. அதோடு விஷயங்களையும் வைக்கவேண்டியதாய் விட்டால் ரிப்ளை ரைட்டையும் இழந்தோம்.

சீவ்—நீங்கள் அப்படி செய்திருக்க வேண்டியதில்லையே.

பாப்—அப்படிசெய்ய வேண்டியதாகவே நேர்ந்தது; இல்லாவிட்டால் ஜூரியாருக்கு பெருஞ் சந்தேகமாய்விட் டிருக்கும்.

சீவ்—வலுவா யில்லாதிருந்தால், நீங்களப்படி செய்திருக்க வேண்டியதில்லையே.

பாப்—அதை யெடுத்துக் கொள்ளா திருந்தால், நாங்களப்படி செய்திருக்க மாட்டோம், அது எடுத்துக் கொள்ளப் படாததானால், அதை யெடுத்துக் கொண்டதில் ரிப்ளை ரைட்டை யிழந்ததைப் பற்றிக் குறை கூறுகிறோம்.

சீவ்—தாவா விஷயங்களை நான் படிக்காவிட்டா லும், 2-வது விஷயத்தில் பாம்பு சங்கதியேதோ உள ளதற்கும், வெடி மருந்துகளைப் பற்றிப் போஸ்ட் கார் டில் குறிப்பிட் டிருந்ததற்கும் சரிப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது; அவ்வகையில் பாம்புப் பிரயோகத்தை ஒப்புக் கொண்டதா யேற்படுகிறது.

பாப்—போஸ்டு கார்டுக்கு சம்பந்தப் பட்டதென் னக்கூடுமா?

சீவ்—சாக்ஷியமாவது கைப்பற்றிய விஷயமாகிறது.

பாப்—லாப்படிப் போஸ்டு காரடை யெடுத்துக் கொண்டிருக்கக் கூடாது.

சீவ்—எடுத்துக் கொள்ளலாம்.

பாப்—ஏராளமான இதர பேப்பர்களோடு கார்டு கண்டெடுக்கப்பட்டது.

சீப்—ஏனதை யெடுத்துக் கொள்ளக் கூடாதென் பது தெரியவில்லை. ஜட்ஜியும் கார்டு குற்றவாளிக்கு மிக அநுகூல மானதென்று சொல்லியிருக்கிறதுமன்றி, ஜூரியும் அதை கவனிக்க வேண்டியதில்லை யென்றார்.

பாப்—எடுத்துக் கொள்வதானால் அதைப்பற்றி ரிப்ளை ரைட்டை யிழந்தாலும் குறை கூறமாட்டேன்; ஆயினும் பிரபோ, அக்கார்டின் விளைவை கவனிக்க வேண்டுமென்று ஜூரிக்கு ஜட்ஜி குறிப்பிட்டிருக்கிறார்.

சீவ்—கேசரியில் வெளியா யிருக்கும் இதர விஷ யங்களையும் எடுத்துக் கொள்ளக் கூடாதென்றீரே; அவ்வம்சத்தில் ஜஸ்டிஸ் ஸ்ட்ரேச்சி ஜட்ஜ்மெண்டில் தீர்ப்பா யிருக்கிறதே.

பாப்—ரிகார்டுகளை எடுத்துக் கொள்ளும் விஷயம் மிக்க முக்கியமான தர்கையால், யாவத்திலும் மேலான நியாயஸ்தானமாகிய பிரிவிக் கவுன்ஸிலிலே யேற்பட

வேண்டியதாகும்; ஆகவே பிரபோ, அதை அங்கிகரிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஜட்ஜியவர்கள் குற்றவாளியின் எண்ணத்தைத் தெரிந்துகொள்ள தாவா விஷயத்தில் கூடாதானால் இதர விஷயங்களையும் கவனித்து வினவை சொல்லலாமென்று ஜூரிக்கு சொல்லியிருக்கிறார்.

சிப்—இதனால் எடுத்துக் கொள்ளும் விஷயத்துக் கேதுமில்லையே.

பாப்—சார்ஜ் செய்யப்பட்டதும் அக்கிரமமென்கிற விஷயத்தை யெடுத்துக் கொள்ளலாம். ஒரு குற்றத்துக்கு அநேக அபிப்பிராயங்களை ஜூரிக்குக்காட்டியிருக்கிறதைப் பாருங்கள். அசல் சார்ஜுடன் எத்தினதும் கூடியிருப்பது லாப்படி சரிப்படவில்லை. இதை ஜஸ்டிஸ் ஜாக்ஸன் அபிப்பிராயத்தில் காணலாம். இனி மூன் சிக்ஷையைப்பற்றிப் பேசலாம்.

சிவ்—முன்னமே பேசியாச்சுது.

பாப—அதைப்புற்றி விவரமாய்ப் பேசவில்லையானாலும், ஒரு விவகாரத்தில் இரண்டு தீர்மானங்களைப் பற்றிப் பேசலாம்.

சிவ்—நோட்டிசின்பேரில் பேசலாம்; உங்கள்பிட்டிஷன் 8, 19, 20 அம்சங்களைப் பற்றி நோட்டீஸ் கொடுக்கத்தயார்.

நோட்டீஸ் விசாரணை. (செப்டம்பர்மீ 2௳)

பாரிஸ்டர் மிஸ்டர் பாப் டிஸ்டா—பிரபுக்களே: குற்றவாளியின் ஆக்ஷேபத்தை கவனிக்காமலே அக்கிரமமாய் விசாரணை நடத்தப்பட்டது லாவுக்குப் பெருத்த விரோதமானது. (1) வேறுபட்ட குற்றம் யாது, (2) எத்தனை வேறுபட்ட குற்றங்கள் சார்ஜ் செய்யப்பட்டிருக்கின்றன, (3) விசாரணை அக்கிரமமானதா—என்ற இம்மூன்று வகுப்பால் இந்நோட்டீஸ் விவகாரத்தை யெடுத்துப் பேசுவேன். 124A, 153A

ஸெக்ஷன்களிரண்டுக்கும் முற்றிலும் சம்பந்தம் கிடையாது. இக்குற்றங்களிரண்டும் முற்றிலும் வேறுபட்ட விஷயங்களானபடியால் வெவ்வேறுப் சாக்ஷிய விசாரணையாக வேண்டும். 153A ஸெக்ஷன்படி ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் பகை மூட்டுவதற்கும், 124A ஸெக்ஷன்படி கவர்ன்மெண்டின் பேரில் கெட்ட உணர்ச்சியை யுண்டாக்குவதற்கும் சம்பந்தம் கிடையாது. யூரோப்பியருக்கு விரோதமாய் அப்படி செய்வதும் அவ்வாறே யென்றாலும், அவர்கள் அதிகார வகுப்பாரானதுபற்றி கவர்ன்மெண்டாராகக் கருதப்படுவது லாயாயின்டுக்கு சரிப்படமாட்டாது. இக்குற்றங்களிரண்டும் வேறுபட்டவை யல்லவென்று ஒருவரும் சொன்னதில்லை. ஜஸ்டிஸ் சந்தாவர்க்கார் 124A, 153A ஸெக்ஷன் குற்றங்கள் ஒரே விதமானவையல்லவென்றார். கிரிமினல் புரோஸீஜர்கோடு 235 ஆவது ஸெக்ஷன்படி இவை வெவ்வேறாக்ச் சார்ஜ் செய்யப்பட வேண்டும். இக்கேஸில் 153A ஸெக்ஷன் சார்ஜு பிறகு தள்ளிவிடப் பட்டதினாலே, 124 A ஸெக்ஷன் வேறுபட்டதேயென்பது தெளிவாய் விளங்கியது. 236, 237 ஸெக்ஷன்களின்படி வெவ்வேறான தீர்ப்புகளும் சிக்ஷைகளும் விசாரணைகளும் நடந்தேறின; ஆகவே, அநியாயத்தை மறைப்பதற்காக இப்போது சந்தேகாஸ்பதமாய்ப் புதிய கேஸைதும் கொண்டுவரக்கூடாது. முடிவான சார்ஜுகள் மூன்றனுளும், முன் சிக்ஷையைப் பற்றிய மற்றொருசார்ஜும் நீக்கப்பட்டது. 3 கெட்டவுணர்ச்சிகளை ஒன்றாயெடுத்துக் கொண்டது போகவும் 124 A ஸெக்ஷன்படி 4 சார்ஜுகளும், 153 A ஸெக்ஷன்படி 2 சார்ஜுகளும் உள்ளன.

ஆதாரவிதியாவது ஒவ்வொரு குற்றத்துக்கும் வெவ்வேறு விசாரணையாக வேண்டு மென்பதாகும். இவ்விதிக்கு விரோதமானால் அநியாயந்தான். சுப்பிரமணிய அய்யர் கேஸில் பல குற்றங்கள் சேர்க்கப்பட்டதின்பேரில் பிரிவிக்கவுன்ஸில் லார்ட் சான்ஸலர் 234

ஆவது ஸெக்ஷன்படி ஒருவருஷத்துக்குட்பட்ட ஓரே விதமான 3 குற்றங்களைப்பற்றி மட்டுமே ஒருவன் விசாரிக்கப்பட வேண்டுமென்றபடி யெல்லா இந்தியக் கோர்ட்டுகளிலும் ஏற்றுக்கொள்ளலாயிற்று. இவ்வாறாக இக்கேஸில் 153 A ஸெக்ஷன் 4-வது சார்ஜூம், முன் சிறைதண்டனையைப் பற்றிய 5-வது சார்ஜூம் தவிர 10 குற்றங்கள் உள்ளன. இவற்றில் மும்மூன்று குற்றங்களாய்ப் பிரித்துக் கொண்டாலும், எத்தனத்துக்கு மட்டுமாவது அசல் குற்றத்திலிருந்து வேறுபட்டதேயாகும். அப்படியானாலும், ஆகமொத்தம் ஆறு குற்றங்களாவதும் 234-வது ஸெக்ஷனுக்கு விரோதமே. எத்தனத்தையும் அசலையும் ஒன்றாகச்சேர்த்துக்கொண்ட வகையில் மூன்றாயிற் றென்னலா மாயினும், எத்தனத்தையும் அசலையும் ஒன்று யெடுத்துக்கொள்வது கூடாமையே. ஆகவே, இம்மூக் குற்றமுங்கூட ஓரே விதமானதா யில்லாமையால் விசாரணையை 234-வது ஸெக்ஷன்படிக்கே ரத்து செய்து விடுகிறது. 234, 235, 236 ஸெக்ஷன்களின் விலக்குகள் பிரகாரம் இவ் விசாரணையின் வித்தியாசம் அங்கீகரிக்கப்பட வில்லையாகப் பிரிவிக் கவுன்ஸில் தீர்மானமுமா யிருக்கிறது. ஆகவே, இவ்வாறு சேர்த்து நடத்தாமல் வெவ்வேறாய் விசாரிக்கும்படிக் குற்றவாளி ஆக்ஷேபித்தும், பல குற்றங்களைக் கூட்டிக்கொண்டே விசாரணை நடந்தேறியது.

இவற்றி லேற்பட்ட அம்சங்களின்படி மேமீ 12௳, ஜூன்மீ 9௳ பிரசுரங்கள் ஓரே விவகாரமாகா. அவ்விஷயங்கள் ஓரே விதமானவை யல்ல; எழுதினவரும் ஒருவரேயல்ல. ஜஸ்டிஸ் தேவார் உத்திரவில்லாவிட்டால் ருஜுவாயிருக்கும் இரண்டுக்கும் இடையே ஒருமாதகால முள்ளது. அவை வேறுபட்ட நடவடிக்கைகளாயின; கவர்ன்மெண்டு ஸாங்க்ஷனும் ஒன்றாயில்லை. பிரியாதுகளும் இரண்டேயாக, வாரண்டுகளும் இரண்டாயின. விசாரணைகளும் இரண்டாய், கமிட்டல்களும் இரண்டாயின. ஹைகோர்ட்டில் ஸ்பெஷல் ஜூரிக்கும்

இரண்டு மனுக்களுக்கு உத்திரவாயிற்று. ஒரே விவகாரமென்று ஜட்ஜும் கொள்ளவில்லை; ஜூரியாரும் 24 A ஸெக்ஷன் குற்றங்களை வெவ்வேறாய்த் தீர்த்தார்கள்; ஜட்ஜியும் 124A ஸெக்ஷனில் இரண்டு தீர்மானம் செய்தார். இவ்வாறு ஸாங்க்ஷனிலும், பிரியாதிலும், வாரண்டிலும், விசாரணையிலும், கமிட்டலிலும், ஜூரிக்குத் தரவிலும், குற்றத் தீர்ப்பிலும், தண்டனை தீர்மானத்திலும் விவகாரம் இரண்டு பட்டிருக்க ஒன்றேயென்று இப்போது பிராசிகூஷனர் வாதிப்பது எவ்வளவிலும் கூடாமையாகும்.

ஆக்டிங் அட்வோக்கேட் ஜெனரல்மிஸ்டர்ராபர்ட்ஸன் — ஒழுங்கீனமுள்ள தென்றதினாலேயே பிரிவிக் கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளக் கருதியெண்ணலாகாது. குற்றமென்பது அக்கிரமமான நடவடியாகும். அந் நடவடிக்கே தண்டனை விதிக்கப்பட்டது. சார்ஜாயிருப்பது குற்றத்தைப்பற்றியல்ல; குற்றவாளி செய்த அல்லது செய்யத் தவறிய நடவடியைப் பற்றியதாகும்.

பியூனி ஜஸ்டிஸ் பாச்சிலர்—ஆனால் நீர் ஒரு ஸெக்ஷனைக் குறித்து நடவடிக்குக் குற்றம் சொல்லும் போது, நடவடிக்கென்ன சொல்வீர்?

ராபர்ட்—எப்போதும் சார்ஜு நடவடியைப் பற்றியதாக, குற்றமோ யாதொரு [illegible]ப்பிரகாரம் தண்டிக்கப்பட வேண்டியதாய் செய்த அல்லது செய்ய றிய நடவடியாகும். 124A ஸெக்ஷன்படி இரண் முள்ளதானால், உண்மையில் ஒன்றாய் சேர்த்துக் ளக்கூடும்; ஆனால் வேறொரு குற்றத்தைக் கூட கொள்வதற்கும் ஆக்ஷேபமில்லை. ஒரு விசாரணைய வேறு சாக்ஷிகளைக் கூட்டிக்கொள்ளும் பட்சத்தில், ஒவ்வொரு சார்ஜுக்கும் வெவ்வேறு விசாரணைதான்; ஆகவே 124A, 153A இரண்டும் சேர்த்துக்கொள்ளக் கூடும்.

பியூனி—தன்பத்தையும் களவையும் சேர்க்கக் கூடாமை. மூன்றுவது சார்ஜை யெப்படி சேர்த்துக் கொள்ளக்கூடும்?

ராபார்ட்—124 A ஸெக்ஷன் சார்ஜுகளை சேர்த்துக்கொள்ளக் கூடுமென்றேற்பட்டு விட்டது. 153A ஸெக்ஷன் சார்ஜை சேர்த்தது அநியாயமாகாது. ஜட்ஜி சொல்லியபடி முன்னிரண்டு விஷயங்கள் ஒரு தொகுதியின் கூறாய் விட்டன. 124A, 153A விஷயக் குற்றங்களும் ஒரே விவகாரத்தைப் பற்றியவை. இதில் அக்கிரமமெங்கே? ஆகவே, ஒழுங்கீன மானுலும், அநியாய மென்பதற்கில்லை யென்கிறேன். கௌரளுர் முதல் விஷயத்தில் சேர்ந்த 153A ஸெக்ஷன் சார்ஜைத் தள்ளிவிட்டதற்கானுல், இக்கேஸைப் பிரிவிக்கவுன்வி இங்கு அனுப்பி யிருக்கலாம். ஒரே விதமானி குற்றங்களென்றால் பல ஸெக்ஷன்களின்படிக்காகும் நடவடிக்களாகு மென்பதிலும் சந்தேகமில்லை. வேறுபட்ட மூன்றுநடவடிகளுக்காகச் சார்ஜ்செய்யப்படலாம். அவ் வேறுபட்ட நடவடிகள் ஒரேவிதமான குற்றங்களுக்கு இடமாயிருக்குமட்டும் என்னென்ன குற்றங்களுக் கிடமானவை யென்பதைப்பற்றி அவசியமில்லை. ஒரு ஸெக்ஷன் கீழ் இரண்டு நடவடிகள் வருமானுல் சேர்த்துக் கொள்ளக்கூடும். அவற்றிலொன்று வேறொரு ஸெக்ஷன்படிக் கானுலும் அக்கரையில்லை. ஒரே நடவடியா பல குற்றங்களுக் கிடமாகக்கூடு மென்றும் ஏற்படுக்கிறது. ஆகவே கிரிமினல் புரோசிஜர் கோடின் சார்ஜுகள் சேர்க்கப்பட்டது சரியாக, ஜூரியார் வேறாய்ச்சார்ஜுகளுக்குத் தீர்ப்புசொல்லவேண்டியிருக்கிறது. விஷயப்பகுதிகள் 124 A அல்லது 153A ஸெக்ஷன் கீழ்வருவதினுலே இஷ்டமானபடி சார்ஜ் செய்துகொள்ள இடமாகியது.

பியூனி—235-ஆவது ஸெக்ஷனில் ஒரு நடவடியிலேற்பட்ட பல குற்றங்களைப் பற்றியும், 236-ஆவது ஸெக்ஷனில் சந்தேகாஸ்பதமான இரண்டு குற்றங்களி

லொன்றைப் பற்றியும் சொல்லி யிருப்பதால் முன் ஸெக்ஷனை மாத்திரமே யெடுத்துக் கொள்வேன்.

ராபர்ட்—ஒழுங் கீனங்களை சாமர்த்தியமா யெடுத்துக்காட்டி யிருந்தாலும் அப்பீலுக்கிடமில்லை. குற்றவாளிக்கு நஷ்டமாவது, அநியாயமாவது செய்யப்படவில்லை. 153A, 124A ஸெக்ஷன்களை சேர்த்துச் சொன்னது ஜஸ்டிஸ் சந்தாவர்க்கர் அபிப்பிராயப்படி சரிதான். 124A ஸெக்ஷன்படிக் குற்றங் கண்டபோது 153A ஸெக்ஷன்படிக் குற்றங் கண்டது அனாவசியமே யானாலும் அநியாயமாகாது. திலகர் கேஸில் ஒழுங்கீனமட்டும் உள்ளதுதான் என்றாலும் இதற்காகப் பிரிவி கவுன்ஸில் அப்பீல் செல்வதில்லை. புனர்விசாரணைக்கிடமானாலொழிய தண்டனைகளைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. ஜட்ஜி தீர்மானித்த தண்டனைக்குத் தக்ககாரணத்தை சொல்லி யிருப்பதால், பிரிவிக் கவுன்ஸிலார் தண்டனையைக் குறைப்பதற்காகமட்டும் தலையிடமாட்டார்கள்.

இதற்கு மிஸ்டர் பாப்டிஸ்டா பதில் சொல்லியதின்பேரில் சீப் ஜஸ்டிஸ் அடுத்த 8உ ஜட்ஜ்மெண்டு படித்துவிட்டார்.

## ஜட்ஜ்மெண்டின்சாரம்.

திலகர் விண்ணப்பத்தைத் தள்ளிவிடு முன்னே நாம் எடுத்துக்காட்ட வேண்டியதாவது—சாக்ஷிய ருஜுவையநுசரித்து 124A, 153A ஸெக்ஷன்களை ஒன்றுவிட்டொன்று எடுத்துக்கொள்ளும்படி சார்ஜ் செய்யப்பட்டதாக அட்வோகேட் ஜெனரல் சொல்லி யிருக்கிறார். இதனால் 2, 3 சார்ஜுகள் 235 அல்லது 236 ஆவது ஸெக்ஷன்கீழ் வருமென்றாகிறது. சார்ஜுகள் ஒன்றுவிட்டொன்று யெடுத்துக் கொள்வதென்று ஏற்படவில்லையாக, குற்றத் தீர்ப்பு வெவ்வேறாய்க் கொடுக்கப்பட்டதில் அநியாய மேதுமில்லை. ஆனால் 2, 3 சார்ஜுகள் ஒன்றைவிட் டொன்று யெடுத்துக் கொளவதற்கே கிரௌனார் எண்ணமா யிருந்தது. கேஷின்

படி 153 A ஸெக்ஷன் சார்ஜில் விதித்த தண்டனையை கவர்ன்மெண்டார் கவனிக்கக்கூடும்.

எம். ஆர். ஜார்டைன்,
கிரௌன் கிளார்க்கு.

---

## பம்பாய் கவர்ன்மெண்டின் பரிகாரம்.

ஹைகோர்ட் புல்பெஞ்ச் பிட்டிஷன் தள்ளுண்ட தன்பேரில் பம்பாய் கவர்ன்மெண்டார் 153A ஸெக்ஷன் குற்றத்துக்காக விதிக்கப்பட்டிருந்த 1000 ரூபா அபராதத்தை மன்னித்து விட்டதுமன்றி, ஆறுவருஷ தீவாந்திர சிக்ஷையை வெறுங்காவல் தண்டனையாக மாற்றிவிட்டார்கள். தமது தேசாபிமான கைங்கரியத்தில் சதாபிவர்த்தகரான ஸ்ரீ திலகமகான் இப்போது மேற்கூறியபடி மாண்டலே ஜெயில் சிறையில் இருந்து வருகிறார். இவருக்கு சமையலுக்காக ஒரு பிராமணக் கைதியையும் ஸர் ஜியார்ஜ் கிளார்க்கவர்கள் தயவு கூர்ந்து அனுப்பிவைத்திருப்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

—:0:—

# திலகரின் எதிர்வாத ஆதாரங்கள்.

## இந்தியா கெஜட்டு.

புதிய வெடி மருந்துச் சட்டம்—இதன்படி வெடி மருந்தென்பதிலே அதன் சம்பந்தமாயுள்ள எல்லாப் பொருள்களும் அடங்கும். உயிருக்காவது, பொருளுக்காவது அக்கிரமமாயும், கொடுமையாயும் அபாயகரமாக வெடிபோடுமொருவனுக்கு ஜீவபரியந்தமாவது, அதற்குக் குறைவாயாவது தீபாந்திர சிக்ஷை அல்லது 10 வருஷமட்டில் கடின சிக்ஷை அபராதத்தோடும் விதிக்கப்படும். ஒருவன் உயிருக்காவது, பொருளுக்காவது அபாயகரமாக சந்தேகாஸ்பதமாய் வெடிபோட எத்தனித்தாலாவது, வெடிவேலை செய்தாலாவது, வெடி மருந்தை வைத்திருந்தாலாவது அதற்கு நியாயமான உத்திரவாதம் செய்யாத பக்ஷத்தில் அவனுக்கு 14-வருஷ மட்டில் தீபாந்திர சிக்ஷையாவது, 5-வருஷ மட்டில் கடின சிக்ஷையாவது அபராதத்தோடும் விதிக்கப்படும். இவ்வகை அபாய வெடிக்குற்றவாளிக்கு எவ்வகையிலாவது சகாயமாயிருக்கும் எவனுக்கும் குற்றவாளிபோலவே தண்டனை விதிக்கப்படும். இக்குற்ற விசாரணையை லோக்கல் கவர்னர், கவர்னர்ஜெனரல் அநுமதியின்றி எந்தக்கோர்ட்டாரும் நடத்தக்கூடாது.

புதிய பிரசுரச்சட்டம்—கவர்ன்மெண்டு ஆர்டரை யனுசரித்த மனுவர்ஜியின் பேரில் ஒரு மாஜிஸ்ட்ரேட் தன்னெல்லைக்குள்ளே பிரசுரமாகும் ஒரு நியூஸ் பேப்பர் புதிய வெடிமருந்துச் சட்டத்தின்படிக்காவது, கொலை முதலிய கொடுமைக்குத் தூண்டுதலாகவாவது பிரசுரித்திருப்பதாயேற்பட்டால், அம்மாஜிஸ்டிரேட்

காணப்படுமட்டிலும் அப்பேப்பர் காப்பிகளையும், அதற்கு எவ்வகையிலாவது சம்பந்தப்பட்ட பிரிண்டிங் பிரஸ்ஸையும் கவர்ன்மெண்டுக்குப் பறிமுதல் செய்யலாகுமென்று ஒரு கண்டிஷனல் நோட்டீஸ் கொடுக்கலாம். அதில் முக்கியமான சங்கதிகளைக்காட்டி, இன்ன நேரத்தில் இன்னவிடத்தில் அப்பிரசுக்கும் பேப்பருக்கும்சம்பந்தப்பட்டயாவரும் ஹாஜராய்அந்நோட்டீஸில் கண்டபடியேன் செய்துகொள்ளக்கூடா தென்பதற்குக் காரணந் தெரிவிக்க வரவழைக்க வேண்டும். அந்நோட்டீஸின் நகல் ஒன்றை அதில் விவரித்திருக்கிற தாவாஸ்தானத்தில் பகிரங்கமான பாகத்தில் ஒட்டிவிடுவதே அதற்கு சம்பந்தப்பட்டுள்ள யாவருக்கும் ஸெர்விஸ்செய்து விட்டதாகும். மனுவர்ஜியின் பிரயோசனத்தை மாற்றும்படியான காமதும் காணப்பட்ட அவசரத்தில் கண்டிஷனல் நோட்டீசான பிறகு, மாஜிஸ்ட்ரேட் அதில் கண்ட சொத்துகளைப்பற்றி யெக்ஸ் பார்ட்டியாய் ஜப்தி ஆர்டரும் செய்துவிடலாம். அதற்கு சம்பந்தப்பட்ட யாராவது ஆஜராய் அக்கண்டிஷனல் நோட்டீசக்கு எதிரிடையாக்க காரணங் காட்டினால், மாஜிஸ்ட்ரேட் இருவகையிலும் சட்டப்படி சாக்ஷியமேற்றுக் கொள்ளலாம். தாவா நியூஸ் பேப்பர் மேற்கூறிய குற்றமுள்ள விஷயத்தைப் பிரசுரித் திருப்பதாய்த் திருப்திகரமானால், மேற்கண்டபடி தாவா சொத்துக்களைப் பற்றிய கண்டிஷனல் நோட்டீஸின்படிப் பறிமுதல் செய்து கொள்ளவேண்டும். அப்படிக்குத் திருப்தி யாகாதபக்ஷத்தில், மாஜிஸ்ட்ரேட் அக்கண்டிஷனல் நோட்டீஸோடு ஜப்திஆர்டராயிருந்தால்அதையும் ரத்து செய்து விடவேண்டியது.

மாஜிஸ்ட்ரேட் டார் இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக்குறையாத ஆபீசரிடம் ஸெர்ச்சு வாரண்டுகொடுத்து இச் சட்டப்படி சொத்துகளை ஜப்தி செய்யவாவது, பறிமுதல் செய்யவாவது அனுப்பலாம். அவ்வகையில் அவ்வாபீசர் தாவர் நியூஸ்பேப்பர் சம்பந்தமாயுள்ள

எவ்விடத்திலும் நுழைந்து ப[illegible]த்துக் கொண்டுபோகலாம். இக்கேசில் சம்பந்தப்பட்ட யாராவது கண்டிஷனல் ரோட்டைக்கு ஜவாப்பு சொல்லியிருந்தால் பற்றி உத்திரவாய்விட்டதிலிருந்து 15 - தினத்துக்குள்ளாக ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாமேயன்றி வேறெந்தக் கோர்ட்டிலும் அதை உத்திரவைப்பற்றிப் பேசக்கூடாது. பிரசுரச் சட்டப்படிக்கான உறுதிமொழியையும், அபாயகரமான எந்த நியூஸ் பேப்பரையும் லோக்கல் கவர்ன்மெண்டார் கெஜட்டில் வெளியிட்டு ரத்து செய்யலாம். இதை மீறி வெளிவருவது [illegible]ரப் பிரசுரிப்பானாகில் பிரஸ் ஆக்ட்டின்படி தண்டிக்கப்படுவான்.

## ஆனரேபில் ஸையத் மகமது.

காண்டெம்பெரரி ரிவியூவில் ஆனரேபில் மிஸ்டர் ஹெர்பர்ட் வெடி வித்தையைப்பற்றி 1894-ல் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:— வெடிகோல்காரனைக் கண்டதின் [illegible] தண்டனைகளை அதிகப்படுத்துவதும், நிபந்தனைகளைக் கண்டறிவதும், உளவாளிகளின் தொகையை அதிகப்படுத்துவதும், பொதுக் கூட்டங்களைத் தடுப்பதும், பிரசங்கங்களுக்கு இடைஞ்சலுண்டுபண்ணுவதும், கோபமூட்டுவதுமேயானால் நமக்கு முன்பாகப் பொல்லாக்காலம் எதிர்கொண்டு நிற்கிறதென்றே குறிசொல்லத் துணிகிறேன். தாக்குகிறவர்கள் தாக்கப்படுவார்களென்பது உண்மையாகும். ஜனவசங்கள் மேன்மேலும் மோங்கி மெஜாரிட்டியில் அங்கீகார கவர்ன்மெண்டும், மைனாரிட்டியில் அநங்கீகார கவர்ன்மெண்டுமாய்ப் போர்க் கோலங்கொண்டால், அதன் முடிவை உள்ளவன் காணுவன். வெடிகோற்காரன் நிராதரவாய் ஒழிந்துபோகும் ஒரு வழியாவது நமது யந்திர வல்லபத்தை யெல்லாவற்றையிலும் கைவிட்டு நியாயம், வசியம், சேவகம் இவற்றில் ஜனங்களைத் திருப்பிவிடுவதேயாகும்.

## மராட்டா.

நியூயார்க் வெல்ப்லெட்டர்படி ஜெஞ்சர் கேசு:- 1734-௵ நியூயார்க்கில் காஸ்பி என்பவர் பிரிட்டிஷ் கவர்னராயிருந்தார். சுதந்திர நியாய விரோதமாய் அவர் கொடுங்கோல் செலுத்தி வந்ததை சகியாத ஜனங்கள் வெகுகாலம் எதிர்வாதஞ்செய்து வந்தபடி ஒருவாராந்த பத்திரிகை அவர் நடவடிக்கைகளைக் கண்டித்து வந்தது. அப்பத்திராதிபராகிய பீட்டர் ஜெஞ்சர் தூஷணைக் குற்றஞ்சாட்டிப்பிடித் தடைத்துப் பேப்பரும் நிறுத்தி விடப்பட்டது. அவருடைய சிநேகிதர்கள் விடுவிக்க முயன்றும், 7000 ரூபா ஜாமீன் கேட்கப்பட்டதினாலே கைவிடும்படி நேர்ந்துவிட்டது. ஆயினும் அவர் சிறையறைத்துளை வழியாய்த் தம்மவருக்கு சங்கதிகளையனுப்பித் தெரிவித்துப் பத்திரிகையை நடத்திவந்தார். இராண்டு ஜூரியும் குற்றங் காணாமையால் அட்டார்னி ஜெனரல்பிராட்லி ஜூரியைத்தள்ளிச் சேம்பர் புரோசிஜரைக் கொண்டுவந்ததில் பேர்பெற்ற லாயர்களாகிய ஸ்மித் அலெக்ஸாண்டர் என்னும் இருவரும் குற்றவாளிக்காக ஹாஜராய் சீப்ஜஸ்டிஸ் டிலான்ஸி, பியூனி ஜட்ஜி பிலிப்ஸ் இவ்விருவருக்கும் கவர்ன்மெண்டார் கொடுத்த கமிஷன்கள் கவுன்ஸில் சம்மதியின்றிக் கொடுப்பட்டமையால் செல்லமாட்டாவென்று எதிர்வாதம் போட்டுக் கொண்டதைக் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளாமற்போனதோடும், அப்படி யெதிர்வாதங்கொண்டு வந்ததற்காக அவர்களின் பெயர்களை பாரிஸ்டர்களின் லிஸ்டிலிருந்து எடுத்துவிடும்படியாகவும் உத்திரவு செய்து விட்டார்கள். அப்போது நியூயார்க்கிலே யிருந்த தக்க லாயர்கள் மூவரில் இருவர் கதியிப்படியாய் விடவே, மற்றொரு லாயரும் கவர்ன்மெண்டு தரப்பில் நிறுத்திக் கொள்ளப்பட்டதினால் குற்றவாளிக்காகப் பேச நல்ல லாயருக்கு வழியற்றுப் போய்விட்டது. இப்படியாக வேண்டு மென்பதுதான் கோர்ட்டார் கோரிக்கையு மென்றுகிறது. இக்கட்டா னடக்குஸ்திரத்தை அறுத்துக்

தள்ளாத்தனித்த அவ்வர் சேவகர்களும் பெரும் பேரெடுத்த பிலெ...ல்பிபா லாயசேய் சுமார் 80 வயதான வெலின ரெ... அண்டு நேஹாமில்டனை அயார் பண்ணிக்கொண்டார்கள். அப்பெரியவரோ அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் இங்கிலாண்டு செலுத்தத் தொடங்கிய கொடுமையைக் கண்டிப்பதில் கண்ணாம் பூண்டவர். அவரைப் பார்க்கிலும் எதுக்கானி வேறெவருங் கிடையார். ஜெஞ்சரின் விரோதிகள் முனைந்த கூண்டே அவருக்கு அநுகூலமாய்விட்டது. குமாம் கோர்ட்டார் குற்றவிசாரணை தொடங்கியபோது, கூடிவிட்ட பெரும் ஜனத்திரளிடையே அவ்விசன வாதாடி ஹாமில்டன் தலைகாட்டவும் எதிரிகளெல்லாரும் இடிந்துபோனார்கள். தாவா பிரசுர விஷயங்கள் வாசிக்கப்பட்டதும் கிழவர் சரிதானென்றார். பிராட்லி சர்க்கார் பக்கமே தீர்ப்பாக வேண்டுமென்று கூவினார். ஹாமில்டன் பதிப்பித்தலும் காவித்தலும் ஒன்றாகாதென்றும், தாவா விஷய சாட்சி ருஜுவிசெய்யப்படவேண்டுமென்றுங் கூற, பிராட்லிஜ ...த்திலுண்மைப் பொன்கிவை சாக்ஷியமாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாதென்று மறுத்தார். கோர்ட்டார் தூஷணை உண்மையானால் இன்னும் அபாயகரமேயானதால், அவை எடுத்துக் கொள்ளப்படமாட்டா வென்றனர். ஆகவே ஜூரிவகோர் அகளிட்டு ஜூரிக்குவிளக்கமான அட்ரெஸ் கொடுத்ததில் கோர்ட்டார் தீர்மானத்தை உரப்பாய்க்கண்டித்து, ஜெஞ்சருக்கு நியாயங்கூற வேண்டிய ஜட்ஜிகள் ஜூரியாரே யென்று முடித்தார். இதற்கு பதிலாக அட்டர்னி ஜெனரல் தூஷிக்கப்பட்டவன் மாஜிஸ்ட்ரேட்டானாலும் மற்றெவனானாலும், இருப்பவனானாலும் இறந்தவனானாலும், மெய்யனானாலும் பொய்யனானாலும், நல்லவனானாலும் பொல்லவனானாலும் தூஷணையாகத் தக்கதண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தியதோடு ஜெஞ்சர் மொழிகளாலும் பொருள்களாலும் கவர்னரைக் குறித்துக் கடவுளும் மனிதனுமான அரசனை தூஷித்த பெருங் குற்றவாளியாய் விட்டதாகவும் முழங்கினார். ஹாமில்ட

னும் திருப்பி யடித்தபோது பொருளிலும் தூஷணங் கண்டறிய வேண்டியதானால் ஒருவன் எத[illegible]றைய எதையும் எழுதலாமே யென்றும், உத்தியோகஸ்தரைப் பற்றியாவது மற்றெவனைப் பற்றியாவது, இருப்பவனைப் பற்றியாவது, இறந்தவனைப்பற்றியாவது, நல்லவனைப் பற்றியாவது பொல்லவனை பற்றியாவது, மெய்யனைப் பற்றியாவது பொய்யனைப் பற்றியாவது கூறும் வார்த்தைகளெல்லாம் அவதூறுமாமென்றும், இப்படிக்கானால் எழுதுவதே தூஷணமற்றதாகாதென்றும், பிராசை தூஷியாத[illegible]னில்லையென்றும், நியூயார்க்கு தெருவழியே படித்துக்கொண்டுபோகும் பைபிளையும் லைபெலாகக் கொள்ளலாகுமென்றுங் கூறியதற்கு உதாரணமாக (இயோபாவின் அதிகாரத்தில்) "ஜனத்தலைவர்கள் (பொருள்—நியூயார்க் கவர்னரும் கவுன்ஸிலும்) அவர்களை (பொருள்—இந்நாட்டு ஜனங்களை) அழிக்கிறார்கள் (பொருள்—சுதந்திரங்களைப் பறித்துக்கொண்டு விடுகிறார்கள்)" (இன்னும் வேறிடத்தில்) "அவனுடைய காவற்காரர் குருடர்கள்; மூடர்கள்; எப்போதும் போதுமான படிக்கில்லாமல் ஆத்திரமான நாய்கள்." இதை தூஷணமென்பதற்கு "அவனுடைய காவற்காரர் (பொருள்—கவர்னரின் கவுன்ஸிலர்கள்) குருடர்கள்; மூடர்கள் (பொருள்—கவர்னரின் அபாயசூழ்ச்சிகளை அறியாதவர்கள்); எப்போதும் போதுமான படிக்கில்லாத (பொருள்—பணமும் வல்லமையும்) ஆத்திரமானநாய்கள்." என்று சொல்வதிலும் வேறொன்று வேண்டியதில்லையாக ஜெஞ்சர் எழுதிய விஷயத்தின் மெய்யல்லது பொய்யைக் கண்டுதெளிந்து தீர்ப்புசொல்லும்படி பிலடெல்பியாலாயர் ஜூரியாரைக் கேட்டார். அவர் முடிவான எதிர்வாதமாவது—நான் வலுவற்ற கிழவனானாலும் அதிகாரிகளின் அஹங்கார சேஷ்டைகளுக்கு விரோதமாய் ஜனங்கள் எதிர்வாதங்கூறுவதை ஒழித்து கவர்ன்மெண்டார் பிராஸிகூஷன்களால் மூட்டும்தீயை அணைக்க இந்நாட்டின் எம்மூலையிலானாலும் என்னுதவி தேவையென்றால் ஓடு

வதேமயென்க்கு வேலையென்றிருக்கிறேன். தங்களதிகார எல்லையிலே ஜனங்களைத் துன்பப்படுத்திவருவோர் அவர்களைக் கூவி முறையிடும்படி விட்டு, அம்முறைப்பாட்டையே ஆதாரமாகக்கொண்டு புதிய கேசுகளை உண்டுபண்ணிவருகிறார்கள். ஆகவே ஜூரிகனவான்களே! உங்களுக்கு முன்பாய் வந்திருக்கும் விஷயம் அமெரிக்காவிலுள்ள ஒவ்வொரு சுதந்திரமனுஷனுக்கும் சம்பந்தப்பட்டது. ஒவ்வொருவனுக்கும் பொருந்தாத அடிமைத்தனத்தையும் களைந்துவைக்கக்கூடியதாலும் பக்ஷபாதமற்றதும் அக்கிரமமற்றதுமான உங்கள் தீர்ப்பினால் உலகமேவாழ்த்தப் பெறுவீர்கள்—என்றிவ்வாறு பேசக்கேட்ட யாவரும் கொண்டாடினார்கள். பிராட்லீயோ அயர்ந்துபோய்க் கொஞ்சம் பேசியுட்கார்ந்துவிட்டார். சீவ் ஜஸ்டிஸ் லாவுக்கு ஜட்ஜிகள் தாங்களேயாக, விஷயத்துக்குமட்டும் ஜூரியார் ஜட்ஜுகளென்றும், தாமே உண்மை விசாரிக்க வேண்டியதில்லையென்றும் சொல்லிவிட்டார். ஜூரியாரோ பொது அறிவுக்கேற்ற நியாயத்தைக் கொண்டு ஏகோபாவமாய்க் குற்றமில்லையென்று கூறிவிட்டார்கள். கோர்ட்டில் கூடியிருந்த ஜனத்திரளெல்லாம் கொல்லென்று [illegible] ஜெங்கரைக் கூட்டிக்கொண்டு [illegible] உபசாரம் கூறி மகிழ்ந்தார்கள்.

## பாம்பேகே[illegible].

பார்லிமெண்டில் லார்ட் கர்ஸன் வினாவுக்கு லார்ட் மார்லிவிடை—லார்ட் கர்ஸன் இந்தியாவைப் பற்றிப் பேசத் தகுதியானவர் என்றாலும், அமைதியைக் காப்பாற்ற கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்து கொள்வதற்கான முடிவுக்குக் காரணங்கூறத் தவறினார். சென்ற $2\frac{1}{2}$ வருஷகாலமாக ஒழுங்[illegible]மென்னத்தக்கதாய் நடவடியிலே ஒருகாரியத்திலும் மயிரிழையும் பிசகவில்லை. காமன்ஸ் அவுசில் போடும் கேள்விகள் நாசகரமாயும், தப்புவழிப்பட்டனவாயும் இருப்பதாக லார்ட் கர்ஸன் பெருங்குற்றங்கூறினார். பார்லிமெண்டு முறையானது

இந்தியாவில் கம்பதிகாரம் நிலைத்திருப்பதற்குப் பொருத்தமற்றதென்றும் ஒரு பயங்கரமான பிரேரணையைக் கொண்டுவந்துவிட்டார். லார்ட்கர்ஸனே காமன்ஸ் அவுஸில் கேள்விகள் போடுவதைப்பற்றி ஆரவாரிப்பதாயிருந்தாலும் அதில்சொல்லும் பொறுப்பானது இந்திய ஆபிசர்களுக்குப் பெருஞ்சுமையாய் விடுகிறதென்றார். கர்ஸனுக்குப் பார்லிமெண்டு நடவடி பிடிபடவில்லையானால், பார்லிமெண்டு முறையைப்பற்றாக்காகவேண்டியதென்ன? பெரும்பிரயாசமான தகைவில் சிக்கிக்கொண்டிருக்கிறோமென்பதை லார்ட்கர்ஸன் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளவில்லை. வித்யாவிஷயமாய்க் குறித்த லார்ட்கர்ஸன் சாட்டுரைகளைப் பற்றியோ, தற்கால நிலைமை வேரோடியிருக்குமட்டும் கண்டறியும் எந்த கவர்ன்மெண்டாவது, வைஸ்ராயாவது சக்தியுள்ளமட்டில் கல்விமுறையைச் சீர்திருத்தப்பார்ப்பது நிச்சயமென்றேன். வங்காளப் பிரிவினை சம்பந்தமான சாட்டுகளைத் தாக்குவம்? லார்ட்கர்ஸன் முக்கிய நோக்கமாயிருப்பதில் மிகப்பயனற்ற விவாதத்தைக் கிளப்புவதாயெனக்குத் தோன்றுகிறது. அப்பிரிவினைமாதிரி தவறென்றாலும் நடந்துபோய்விட்டதாகும். எனக்குள்ளமட்டில் அது ஒரு தேசப்பிரமாணமாக மதிக்கப்படவேண்டுமென்பதுதான். ஆனால் அது உரைகல்லாய்விட்டபடியால் இணங்கியிருக்கிறேன்.

இந்தியாவில் கலக்கமுண்டாயிருப்பதற்கு லார்ட்கர்ஸன் கூறிய காரணங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கவையானாலும், கவர்ன்மெண்டார் நடந்துகொள்ளவேண்டிய மார்க்கத்தைக் காட்டவில்லை. மிஸ்டர் டெரிலார் திபூரண பிரேரணையையும் லார்ட்கர்ஸன் ஒப்புக்கொள்ளவில்லை; ஆனால் அவர் சொல்வதெல்லாம் இந்தியர் கேள்விகளை கவனிக்காமலே நாம் தீர்மானித்துக் கொள்ளவேண்டுமென்பதாகும். ஒருபக்கம் (ஆங்கிலோ இந்தியரின்) நடிக்கத்துக்கும், மற்றபக்கம் ஷார்க்காமேவசமான கொடுமைகளைக் காணும் சோதனைத்துக்கும் சகிக்காமல் நா

குறித்துவரும் வழியேபோய்க்கொண்டிருக்கும் வைஸ்ராய் (லார்ட்மிண்டோ) ஆண்டகைமைக்கு நாம் திசைபிப்பதுபோதாது. எனக்கும் அவருக்கும் ஒன்றான உணர்ச்சி அல்லது முழுநம்பிக்கையானது வேறெவ்விரண்டு சர்க்கார் சேவகர்களுக்குமிராது. லார்ட்மிண்டோ வெடிமருந்து வர்த்தமான சட்டங்களை யேற்படுத்திவிடும்போது பேசியதில் யோக்யமான சீர்திருத்தக்காரர்களை சேர்த்துக்கொள்வதிலிருந்து ஒரு குற்றமும் என்னைத் தடுக்கமாட்டா தென்றது மிக்கநேர்த்தியான வசனமாகும். எங்களிஷ்டமோ சீர்திருத்தத்திலேயே தங்கியிருக்கிறது. நம் சொந்த சரித்திரத்தை விட்டும் நழுவமாட்டோம். அந்நிய ஜாதியார் விவகாரத்தில் பிரிட்டன் மகாதேசியால் குறிக்கப்பட்ட வழியை விட்டு செல்ல எங்களால்கூடாது. சீர்திருத்தங்களை எவ்வளவு அனுமதிக்கிறோமோ, அவ்வளவுக்கும் மேன்மேலும் கஷ்டங்களும் அதிகமாகும். இப்போ[illegible]டும் வரைக்கை விட்டால் அமிதவாதிகளுடைய குருட்டுத்தனமான தீர்மானத்துக்கும் மிதவாதிகளின் கோஷ்டத்துக்கும் நாங்கள் அவஸ்தைப்படவேண்டியதுமன்றி, ஆங்கிலோ இந்தியருக்கான பொ[illegible]யஜனங்களையும் ஏமாற்றிவிட்டவர்களாவோம். ஹாப்ஹவுஸ்கமிஷன் (பிரதிகாரப்பெருக்க விசாரணை சபை) ரிப்போர்ட்டினால் ஏற்படும் ஆகாரவு[illegible]கொண்டு இந்திய ஆட்சியை விருத்திசெய்யவும், இந்தியர் சுயவீரிய பரிபாலனம் செய்து வருவதில் நிர்வாக அதிகாரத்தை வகித்தவரவும், தற்குடியாட்சிகளில் அதிகமாய் சர்க்கார் அதிகாரிகளின் இடைஞ்சல்களின்றி சுயேச்சைக்குத் தாண்டுதலாயிருந்து வரவும் ஏற்பாடுகள் செய்யப்படும். இதற்குச் சட்ட நிருபணம் அநாவசியமென்றாலும், கவர்ன்மெண்டார் பார்லிமெண்டின் அங்கீகாரத்தை மட்டும் பெற்றுக்கொள்வார்கள்.

## ஓரியண்டல் ரிவியூ.

மார்லி லீ பிரபுக்குக் கல்கட்டா நிருபரெழுதுவதாவது—[illegible]மக்கேளேக்காண ஒரு சிறுவனும் இசையான் என்[illegible]லும், சரித்திரஞானி ஒவ்வொருவனுக்கும் இது தெரிந்த சங்கதிதான். அராஜகவாதியாவது ஒன்றின்பின் ஒன்றாய் அக்கிரமங்களுக்கு ஆங்கிலப் பத்திரிக்கைகளால் தூண்டப்படும் கவர்ன்மெண்டின் நடவடிக்கையாகும். கவர்ன்மெண்டோ தீரமாய் பந்தோபஸ்திலுட்கார்ந்து கொண்டபோதிலும், இப்போது கிளம்பியுள்ள வெடிவேகத்தில் விழுந்தெழுந்து இன்னும் பந்தோபஸ்தாயிருக்கப்பார்க்கிறது. இதனால் தேசஸ்திதியானது இன்னும் கெடுதிக்குப் போகுமென்கிறேன். இந்தியத்தன்மையின் இயற்கையில் ஒரு நம்பிக்கையுள்ளது. இப்போது எல்லா இந்திய ஜாதியாரிலும் இனியவர்களாகிய வங்காளிகளே வெடிபந்தெறிந்தார்களெனில், இனி இனத்தவர் தன்மையிற் குறைந்தவராகமாட்டாரென்றே சொல்லலாம். இக்கொடுமைக் குறித்து கவர்ன்மெண்டார் துரிதமாய்த் துணிந்திருக்கவேண்டும். உலகெங்கும் தீவிரங்களுக்கு கனுப்பவதினாலும், பிரசுரதாளங்களைக் கொண்டுவருவதிலும்கூட வெடிகாரன் ஒழிந்துபோகமாட்டான்; அவன் துன்மார்க்கம் விருத்தியடையும். மற்றபடி கவர்ன்மெண்டார் பகையாளிக் குடியை உறவாடிக் கெடுக்கும் உபாயத்தைக் கைக்கொண்டு மிதவாதிகளுக்கு கொஞ்சம் நயம் காட்டிவிட்டால், இப்போதே வெடிகோற்காரனை ஒழித்துவிடலாம்.

## ஹிந்து.

ஹான்ஸார்டின் பார்லிமெண்டு விவாதரிப்போர்ட்டிலிருந்து எடுக்கப்பட்ட கிளாட்ஸ்டன் பேச்சாவது—எலெக்ஷன் சீர்திருத்தத்தைப்பற்றி 1884 ஞூ லார்ட்ஸ் ஹவுஸ் எதிர்க்கக்ஷியால் கிளம்பிய கலகத்தில், டிரேட் போர்டு பிரெசிடெண்டு மிஸ்டர் சேம்பர்லேன்

பர்மிங்காமிலிருந்து லக்ஷம் பேர் புறப்பட்டு லண்டனுக்கு தாராளமாய் ரெலாம் என்றதை லார்ட் [illegible]டரி கொடுமைக்குத் தூண்டுதலாகக் கொண்டார். பிரைம் மினிஸ்டர் மிஸ்டர் கிளாட்ஸ்டன் "அமைதியைப் பாராட்டுங்கள்; கொடுமையைக் கைவிடுங்கள்" என்று ஜனங்களுக்கு சொல்வது நல்லதானாலும் அதோடுவிடக் கூடாதென்றும், ஆனால் கொடுமை கூடாதென்றாலும் முற்காலப் போராட்ட ஞாபகங்களையும், முற்பிதாக்களின் பெருமையான ஞாபகங்களையும் இன்னும் மற்றைப் பொருந்திக்கொண்டிருக்கும் ஊக்கத்தையும் ஜனங்களுக்குக் காட்டி உற்சாகப்படுத்தாமல் மறைக்கும் பேடியாதிரியான பேச்சைப் பெரித்துக் கொள்ளக் கூடாமையென்றும் கூறியதோடு ராஜரீகக்கலக்கத்தில் ஜனங்களுக்குக் கொடுமையை வெறுக்கவும், அமைதியை ஆதரிக்கவும், பொறுமைபாராட்டவும் போதிப்பதில்லையானால் இந்நாட்டு சுதந்திரங்கள் இம்மட்டிலெட்டிபிராதென்பதாகும்.

## இந்தியா அட்வொக்கேட்.

மிஷனரிஸ் போர்டு வருஷாந்திரக் கூட்டத்தில் லாஹோர் பிஷப்பு கூறியதாவது—தற்காலம் இந்தியாவில் நமக்குப் பெரு விபத்தாயிட்டிருக்கிறது. 3 மாதத்துக்கு முன்னே கல்கட்டாவிலிருந்தபோது இவ்வளவு பயங்கரமான ஸ்திதிக்கு வருமென்று கனவிலும் நினைக்கக்கூடாமை. அமைதியை நிலை நிறுத்துவது மட்டுந்தான் முதற் கடமையென்னலாகாது; ஆனால் கலபையை அடக்குவதில் பெருந்தலைகளின்மேல் அடி போட்டுவிட்டு சுகமாயிருந்துவிடலாமென்றெண்ணிவிடலாகாது. நாம் செய்ய வேண்டியதாவது இந்தியாவில் புதிய அறிவுபிறந்திருப்பதை உணர வேண்டுவதாகும். விசேஷ அக்கறையும் அதிசய விருத்தியும் உள்ளன. புதிய எண்ணங்களையும், புதிய தாகங்களையும், புதிய மாதிரிகளையும், புதிய பதங்களையும், புதிய இனங்களையும் நாம்கொண்டுவர முயன்றுவந்ததில்லையா? இன்னும்

பெருகியதும், நிறைவானதும், வலுவானதுமாகிய வாழ்க்கைகளை வேண்டாமல் உள்ளபடியே யந்திரமட்டும் எல்லாம் நடந்து வருமென்று எதிர் பார்க்கலாமா?

## இந்தியன் ஸ்பெக்டேட்டர்.

முஜாபர்பூர் கொலைக்கொடுமையைப்பற்றி— இதற்காக இந்தியா முழுமையும் கறைபடுத்தப் படுமானல் ஓர் யூரோப்பிய சோல்ஜர் ஒரிந்தியக் கூலியி னுயிரை எளிதாய் வாங்கி விடுவதற்கும், ஒரு வெள்ளைப் போக்கிரி ஒரிந்திய ஸ்திரீயைப் பிடித்திழுப்பதற்கும் என்ன செய்வது? போலீஸ் ரிப்போர்ட்டுகளையும், ஆங்கிலோ இந்தியா பேப்பர்களின் அட்டவணைகளையும் அதிகாரிகளும், கோர்ட்டார்களும் ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். தற்கால நிலைமையானது கவர்ன்மென்டாருக்குக் கலக்கமானல், பிரஜைகளுக்கும் சங்கடமாகத் தானிருக்கிறது. வங்காளிகள் பழையபடி சமாதான வாழ்க்கைக்கும் அதிகாரமரியாதைக்கும் திரும்பவேண்டும். அராஜ விசுவாசத்தைக் கற்பிப்பவன் வங்காளத்துக்கு மட்டுமல்ல, இந்தியா ஒட்டுக்குமே சத்துருவாவான்.

## அமிர்தபஜார் பத்திரிகை.

முஜாபர்பூர் கொலைக் கொடுமையைப்பற்றி— முஜாபர்பூர் கொலைமுதலிய கொடுமை யதிகரிப்புக்கு இந்திய ஸ்வராஜ்ய வாதிகளே பொறுப்பாளிகளென்னலாமென்றும், லார்ட் கர்ஸனின் பெரிய முட்டாள்தனமான வங்காளப்பிரிவினையினாலேயே இம்மாறுபாடான மார்க்கத்துக்கிடமாயிப்போது பாம்புகள் கிளம்பின என்றும் ஸ்டேட்ஸ்மன் பேப்பர்கூறிவிட்டது. இதன் நோக்கமாவது இந்தியாவில்கிளம்பியிருக்கும் ஸ்வராஜ்ய உணர்ச்சிக்கு விரோதமாய் கவர்ன்மென்டைத் தூண்டிவிட்டுப் பார்ப்பதாகும். வங்காளப் பிரிவினைக் கெதிர்வாதிகள் லக்ஷக்கணக்காய்க் கூடி ஆயிரக்கணக்கான மீட்டிங்குகளில் பேசிக் கேட்டும் அலக்ஷியம் செய்து

விட்டது அனைவருக்கும் தெரிந்ததாகும். அதன்மேல் அவர்கள் நிராதரவாய் ராஜரீகத்தைக் கைவிட்டுத் தங்களாலானமட்டும் பார்த்துக் கொள்வதுதான் தகுதியென்ற தீர்மானங் கொண்டவர்களாயிருந்துவிட்டார்கள். மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் கிங்ஸ்போர்டின் அக்கிரமங்களைப் பொறுக்காமல் சிலர் கிளம்பி பாம்புகளை யெடுத்துக் கொண்டதினால், வங்காளப்பிரிவினை வழிக்கு வரவில்லையென்று பாம்பெறியைக் கைக்கொண்டார்களென்பது பெரும்பிசகு.

### ஹிந்து.

பாம்பெறியைப்பற்றி—அநேக ஆங்கிலோ இந்தியப் பேப்பர்கள் யூரோப்பியருக்கு அபாயகரமாக அராஜரிக வாதிகளின் கூட்டமொன்று ஏற்பட்டிருப்பதற்காக மற்றெல்லாருங்கூடப் பொறுப்பாளிகளாகவேண்டுமென்று பேசத் தொடங்கிவிட்டன. யூரோப்பியருக்குள்ளதுபோலவே மற்ற இந்தியருக்கும் அவர்களால அபாயகரமே யாகும். முக்கியமான ஆங்கிலோ இந்திய பேப்பர்கள் இதன் உண்மையான காரணங்களைக் கண்டு பிடிக்காமல், இதையே சாக்கு ஆதாரவாகக் கொண்டு இந்தியர் ஒட்டுக்குமே காட்டி ராஜரீக சீர்திருத்த ஏற்பாட்டுக்கு வழியற்றுப்போகும்படி காட்டிவிடுகின்றன.

### இந்தியன் வோரல்ட்.

பாம் பெறியைப் பற்றி—பாம்பு வந்துவிட்டது; நாளுக்கு நாள் கொடுமைகள் அதிகரிக்கின்றன. பெரியோர்களின் முயற்சிகளெல்லாம் முடிசோர்ந்து விழக் கண்ட சிறுவர்கள் பின்னும் கவர்ன்மெண்டின் அக்கிரம முறைகளால் கோபாவேசங் கொண்டுவிட்டார்கள். *டாக்டர்கோஷும், ஸ்ரீகோக்கலேயும் கவுன்ஸிலிலேயே

* குறிப்பு—ஸ்ரீ திலகரின் எதிர்வாதத்துக்கு முக்கிய ஆதாரமாயெடுத்துக் காட்டப்பட்ட டாக்டர் கோஷ், ஸ்ரீகோக்கலே இவர்களின் கவுன்ஸில் பேச்சுகளும், டாக்டர் ருதர்

வெளியிட்டும் கவர்ன்மெண்டார் கவனிக்கவில்லை. அக்கிரம நடவடிக்கையாலே தூஷணத்தை அடக்கிவிடலாமென்றதை மிஸ்டர் பேக்கரும் ஒப்புக்கொள்ளவில்லை. தூஷணக்காரர் முன்னேறும் வழியெதுவோ அதைத் தட்டிவிட்டால் அடங்கிவிடலாகும் என்று அவர் சொன்னபடி கவர்ன்மெண்டார் வல்லபத்தைக்காட்டி இருக்கிறார்களேயொழிய வேறில்லை. மேற்கூறிய இந்தியப் பிரதிநிதிகளிலிருவர் கூறியதே சரியென்று கவர்ன்மெண்டார் கருதுவது தல்லென்றும் பாம்பே யெடுத்துக்காட்டுகிறது.

## மாடர்ன் ரீவியூ.

பாம்பெதியைப்பற்றி—பொர்ஷியாவின் ஷேக்ஸாதி "எவ்வளவு தூரத்தில் லட்சியம் வைத்திருந்தாலும் சன்மார்க்கத்திலேயே செல்வாயாக" என்கிறபடிக் கொடுமைகளினாலே கோரும் காரியம் நிறைவேறியதில்லையானாலும், வங்காளப் பிரிவினையை மாற்றுவதற்கு மானாது என்கிற மார்லே பிரதிக்கினையே கல்கட்டாவிலே பாம்பெதிகளுக்கு பிரியாக்கியதுமன்றி கவர்ன்மெண்டார் அக்கிரம முறைகளும், ஆங்கிலோ இந்தியரின் துவேஷ நடவடிக்கைகளுமே பாம்பு மீறுவதற்கு இடந்தருவதாகிறது. அபுத்தபாணியானவன் நிராயுதபாணிமேல் பிரயோகம் செய்வது அக்கிரமம். பகிரங்கப்படாமல் ரகசியமாய் ஆயுதப் பிரயோகம் செய்வதே பலஹீனத்தைக் காட்டுகிறது. பலஹீனர்கள் பலாட்டியாகளை ஜெயிப்பது கூடாமை. விவகாரம் வெற்றிபெறுவதற்கு சன்மார்க்கமேசரியானதாகும். பலகோடி பாம்பெதியும் சன்மார்க்க சார்புக்கு சமமாகாது. அஹிம்ஸா பரமோதர்மஃ என்னும் பிரமாணத்துக்கு பாம்

---

போர்டின் பார்லிமெண்டுப் பேச்சும், மற்றும் பல விஷயங்களுமடங்கிய "லாய்ப்பூட்டுச் சட்டமறுப்பு" என்னும் புத்தகம் சுதேசமித்திரன் ஸப் எடிட்டர் பண்டித விஸ்வபதி செட்டியாரால் இயற்றப்பட்டு மதராஸ் ரிப்பன் பிரஸ் டிப்போவில் ஆறு அணாவுக்கு விற்கப்படுகிறது.

பெறி யெதிர்மறை யாவதோடும் பலனில்லாமையானால் பாழ்தானே?

### பயனீர்.

பாம் பெறியைப் பற்றி—ஒரு பட்டணம் அல்லது ஜில்லாவில் பாம்புக்காரப் படுபாவிகளை ஒருமிக்கப் பிடித்தடைத்து விட்டு, மறுபடியும் பாம்பு கிளம்பினால் ஒருயிருக்குப் பத்துயிரொழியும்படி [illegible]படியென்று விளம்பரம் செய்துவிட்டால் பாம்பெறி பறந்துபோகும்.

### ஸ்டேட்ஸ்மன்.

பாம் பெறியைப் பற்றி—வங்காளப் பிரிவினையினாலே பாம்பு கிளம்பியது. பாபு விபின சந்திரபால் முதலிய ஸ்வராஜ்ய வாதிகளின் தூர்ப்போதனையாலே சிறுவர்கள் பாம்பைத் தாங்கிப் பழிவாங்கத் துணிந்து விட்டார்கள்.

### குஜராத்தி.

இங்கிலிஷ்மேன்நிருபரொருவரெழுதியதாவது—இக் கலகக்காரர்களை சுலபமாய் அடக்கிவிட அதிகாரிகளுக்குப் பவர்களைக் கொடு[illegible]வேண்டும். முக்கிய கலகக்காரர் சிலரை ஜாடு மாலி[illegible]க் கொண்டு பகிரங்கமாய் அடிப்பித்து அவர்களுடைய அச்சாபீசுகளைப் பறிமுதல் செய்துகொள்ளும் பக்ஷத்தில், அவர்களுடைய நியாயங்களெல்லாம் ஆகாசத்தில் பறந்தொழிந்துபோம். அப்போதுதான் ஜனங்கள் வழிப்படுவார்கள்.

### வங்காளத்தின் நிலைமை.

ஸர் வில்லியம் வெடர்பர்ன்—இந்திய அதிகாரிகள் உண்மையான நேயர்களைக் கைவிட்டு, அயோக்கியமான போலீஸைச் [illegible] நடத்தும் அக்கிரமமே அபாய நிலைமைக்கா[illegible]வாகிறது.

ஸர் ஹென்றிக்காட்டன்—காங்கிரசுக்கு விரோதமாய் பாம்பு கிளம்பி யிருக்கிறது.

ஸர் ஜியார்ஜ் பர்ட்வுட்—நம்மாளுகை நியாயமும் வலுவுமுள்ள தானாலும் தயாளமாயில்லை. அவர்களுடைய மதத்தையும், கல்வியையும், கலைகளையும், நாகரிகாபிவிர்த்தியையும், ஜாதிய சக்தையும் நாம் அழித்து வருகிறோம். இதைக் கண்டும் கேட்டும் வருகிற ஆங்கிலக் கல்விமான்கள் ஆயாசப் படலாகிறது.

காப்டென் அர்தர் ஜான்—இந்திய ஜனங்களின் ஸ்வராஜ்ய உணர்ச்சியை நாம் ஆய்ந்தறிந்து வழிகாட்டி வரும் தீரம் நமக்குள்ளதா?

ஓரிந்தியா ஆபீஸ் உத்தியோகஸ்தர்—ராஜ நிந்தனைக்காரர் சிலரே. வித்தியாபிவிருத்தியளவிலே கலக்கத்தையுங் காணலாம். இம்மாதிரி யிங்குமில்லையா?

மிஸ்டர் ரோர்டி—இந்தியாவை நடத்திவரும் முறையின் பலனே கலக்கமாகிறது.

மிஸ்டர் நெவின்ஸன்—கோகலே, லஜபதிராய் போன்ற மிதவாதிகள் கேட்கிறபடித் தக்கசீர்திருத்தங்களை நாம்செய்து தராமற்போனால், இந்தியாவில் அமிதவாதிகளின் பவர் மேலுக் கெட்டிவிடும்.

டெம்ப்ஸ்—லிபரல் இங்கிலீஷ் கவர்ன்மெண்டு ஆங்கிலேய அரசாட்சி பெற்றவர்களின் ஆக்கிரமடங்கப் புதிய உணர்ச்சியைத் தழுவிக்கொள்வது நிச்சயம்.

ரேஷைன்—அயர்லாண்டில் பிரகாசமாய் எடுத்துக் காட்டிய தவறான முறையை இந்தியாவில் இசைக்க லார்ட் மார்லி மறுப்பாரென்றே யெண்ணுகிறோம்.

---

# திலக்கேசின் அபிப்பிராயங்கள்.

---

நியூஏஜ் பேப்பரில் எச். இ. ஏ. காட்டன் எஸ்கோயர்.

1897-ல் நடந்த முன் திலக்கேசில் லாயராயிருந்த பார்ஸி ஜட்ஜை யிப்போது விதிவசத்தினலே அந்தமான் ஸிவில் ஜீவதிபாத்திர சிக்ஷையாகத் தம் பழைய கக்ஷிக்காரனுக்குத் தீர்மானம் சொன்னது போகட்டும். பம்பாய் ஹைகோர்ட்டில் ஓர் ஹிந்து ஜட்ஜியுமிருக்கிறார்; ஆனல் நம்பில் சிலருக்கு சரிப்படாத பயங்கர பர[illegible]ணம் செய்தபோதிலும், ஜஸ்டிஸ் தேவார் பக்ஷபாதமற்றவராக இசைந்திருக்கலாம்; ஆனலும் ஜூரியார் முன்பாக தாவா விஷயங்கள் இங்கிலீஷிலுமில்லை; பார்ஸியிலுமில்லை; மராத்தியிலுள்ளவை. ஹைகோர்ட்டு ஜூரி லிஸ்டில் மராத்திய ஹிந்துக்கள் டஜன் கணக்காயிருக்கிறார்கள். அவர்களேன் ஜூரியில் சேர்க்கப்படவில்லை? அதில் 7-ஆங்கிலேயருக்கும் 2-பார்ஸிகளான ஏனவோ? திலகரோ [illegible] அட்ரெஸில் தாவா விஷயங்களின தப்பு மொழிபெயர்ப்புகளைப்பற்றி பலமாய் ஆக்ஷேபித்திருக்கிறார்; அவை கலக்கக் கண்ணாடி போல எதையும் தூஷணமாகக் காட்டுமென்றார்; புதிய மொழிபெயர்ப்பாகட்டும், இல்லாவிட்டால் விட்டொழிக்கட்டும் என்றுங் கேட்டார். எதுவுமில்லாமலே 9-ல் 7-பேர் ஒரு மராத்தி வார்த்தையு மறியாதவராயுள்ள ஜூரியால் குற்றத்தீர்ப்பு கூறப்பட்டது.

லண்டன் டைம்ஸில்

எச். எம். ஹைண்ட்மான் எஸ்கொயர்.

திலகரை சிக்ஷசெய்ததினால், இந்தியாவில் ஆட்சி புரிபவர்களைப்பற்றி தாராளமாய் எதுவும் சொல்லக்கூடாதென்பதே [illegible]யம். தாவா விஷயங்களில் [illegible]யைத் தூண்டும் வாக்கியமொன்றை யாராவது காட்டட்

டும். சுதந்திரவாதிகளாகிய ஆங்கிலேயர் நாமகார்த்த லிபரல் லார்டுகளாகிய மார்லி மின்டோக்கள் இந்தியாவில் நடத்துவதுபோல அக்கிரமங்களுக் கிசைவதேனோ? மராத்திய பிராமண சிரோமணியாகிய திலகரையிரண்டு பார்சி ஜூரியார் குற்றவாளியென்று கூறவில்லையானாலும், ஜட்ஜி ஓரிந்தியத் தலைவருக்கு தீபாந்தர சிக்ஷை விதித்துவிடலாமா? ஆகவே, இப்போர்ப்பட்ட வெட்ககரமான செய்கைகளை மறைத்துப்பேசி இங்குள்ள எல்லாப் பெருநகர்களிலேயும் இத்தீர்மானம் ஆங்கிலேய நீதி நிலைக்கு முற்றிலும் விரோதமானதென்று தீர்மானிக்கும்படி செய்யக் கருதியிருக்கிறேன்.

## லேபர் லீடரில் கீரார்டி எஸ்கொயர்.

ஸ்ரீ திலகரைப்போல வேலைக்காரர் அபிமானம் படைத்துள்ள இந்தியன் வேறெவனுமிரான். இக்கேசிலேற்பட்ட கலகைப்போல வேறெதிலுங்கிடையாதென்னலாம். ஒரு வருஷத்துக்கு முன்னே பூனாவில் நானவரிடம் 3 நாளிருந்தேன். எல்லா ஜாதியாரும் கொண்டாடத்தக்க பெருமனுஷனென்பது அவருடைய சரித்திர சாரமாகும். கல்வியுடைமையிலே அவர் உலகறிந்தபடி பெர்குஸன் காலேஜை ஸ்தாபித்து, அதில் பல்லாண்டு புரொபசரா யிருந்ததையும் சில வருஷங்களுக்கு முன்கைவிட்டு தேசாபிமான கைங்கரியத்தில் காலங்கழிக்கத் தொடங்கியது முதலாக இந்திய சீர்திருத்தக் கக்ஷித்தலைவராய் விளங்கியபடி சென்ற வருஷக் காங்கிரஸ் உடைப்புக்குக் காரணமானார். நவீன சாஸ்திரத் தேர்ச்சியில் அவர் ருஷியாவில் விசாரணையின்றி சிறைப்பட்டிருக்கும் சேக்கோவ்ஸ்கிக்காவது, நமது வாலஸுக்காவது சமமாவார். இப்போர்ப்பட்டவரே யாதொரு சீர்திருத்தத்துக்கும் வழியாகாமல் செய்வித்துவிட்டார். இவர் மிஞ்சிய கலக்க வழிகளைக்காட்டியிருந்தும், இந்தியாவின் நிலைமை விருத்திக்கேறும்படி உண்மையான விருப்பத்துக்கேற்ற மிதமான சீர்திருத்தங்களாலும் திருப்தியடையக் கூடியவரே. எளிய ஜனங்களுக்

கிராங்குவதே இவருக்கு மிகுதியாயுள்ளது. இவருடைய சுபாஷா பத்திரிகைகளின் விஸ்தாரப் பிரசாரமே இவருக்கு எமனாகியது.

டெய்லிகிரானிகிளில் ஓராங்கிலோ இந்திய நிருபர்.

இந்நாட்டில் மிக்க சக்தி படைத்தவரும், சத்திய சந்தனரும், சாமர்த்திய ஜனத் தலைவருமாகிய ஸ்ரீ திலகரைப் பிடித்ததினும் இந்தியா கவர்ன்மெண்டு ராஷ ஜக்கேஸ் மேலில், 11-வருஷத் தீர்க்கப்பட்ட சிக்ஷையடைந்தது முதலாவதாயுள்ள திலகர் ஸுதேசியக் கொடு வாதத்துக்கு ஜகத்குருவாய் வந்தார். ஜட்டர் தீர்ப்புப் படிக்கும் தாவா விஷயங்களில் கொடுமைக்கு நான் [illegible] இடையாது. பாம்பெறிகைக் கண்டித்த திலகரைப் பிடித்துப் பெருங் கலகத்தை கொடுமைப் பண்ணியது பம்பாய் கவர்ன்மெண்டின் பெரும் பிழையல்லவா?

மான்செஸ்டர் கார்டியன்.

ராஜதூஷணைப் பகை யெழுச்சி வகையில் இந்தியா கவர்ன்மெண்டார் புனா சுதேசிய ஜனத் தலைவராகிய ஸ்ரீ பால கங்காதர திலகரைப் பிடித்தது மிக்க அபாயமான நடவடிக்கையாகும். இவர் மிக்க மதிக்கத்தக்க சாமர்த்தியமும், தன்னுடைய வருணச் சிறந்த அந்தஸ்தும் வகித்துள்ள ஒரு மராத்திய பிராமணன். இந்தியாவிலேயுள்ள சிறந்த ஜனத் தலைவர்களிலெல்லாம் மேலான ஸ்தானத்தைப் படைத்தவர். இவர் மிக்க வலுத்த சக்தியுள்ளவராய் சுதந்திரமான மார்க்கத்தில் மராத்தியென்னும் ஆங்கிலப் பத்திரிகையையும், கேசரி யென்னும் மராத்திய பத்திரிகையையும் நடத்திவருகிறார். மராத்தா வவிடக் கேசரியானது கவர்ன்மெண்டை அலைத்து வருவதை [illegible] பம்பாய் கவர்னரவர்கள் விபினசந்திரபால், லஜபதிராய் போன்றவர்களினும் மேற்பட்ட பராக்கிரம சாலியாயுள்ள இவரைத் தொலைக்காமல் வழியாகாதென்று கருதிப் பிடித்தடைக்கத் துணிந்தார்.

## மார்னிங்லீடர்.

பூனா சுதேசிய ஜனத் தலைவராகிய ஸ்ரீ திலகரைப் பிடித்ததைப்பற்றி இந்தியர்களுக்காமைமையை இங்கிலண்டிலறிவோர் மிகவும் சிலரேயாவர். இவருடைய சுப வல்லபத்தைக் அக்நாட்டிலுள்ள மற்றெந்த ராஜரீகவாதியும் வகித்ததில்லை. தட்சணப் பிரதேசமே பம்பாய் முதல் வங்காளக் கடல்மட்டும் ஒவ்வொரு பிதாவாதியும் பக்தி செலுத்தும்படியான மகாஜநிருப்பவர், ஆங்கிலேய சிவிலியன் நிர்வாக அதிகாரமானது தனக்குள்ள கருவிகளையெல்லாந் தட்டியெடுத்து ஒருகை பார்த்துவிட நின்றதற்குக் காரணமாவது இவருடைய யோசனையும், பிரசாரமும், வல்லமையுமே. இவர் விவகாரவிசாரம், விவாத விவேகம் இவ்விரண்டுமுடையவர்.

## இந்துப்பிரகாசம்.

124 A செக்ஷன்படி ஒரு பெருங்கேஸ் முடிவாய்விட்டது. பழக்கமான வழக்கத்துக் கெதிரிடையாய் அநீதியான குற்றமொன்று பின்னேறும் ஸாவால் உண்டு பண்ணப்பட்ட ராஜரீகக் குற்றவிசாரணை ஒப்பற்ற திலகர்மீது கொண்டுவரப் பட்டதன்மேல் ஏற்பட்ட குற்றத் தீர்ப்பும் தண்டனையும் அசாதாரணச சம்பவமேயாகும். இவருக்கு உள்ள திறமையும், பெருமையும், வெறுமையும், இணையா ஊக்கமும், தையமுயற்சியும், குற்றமற்ற வாழ்க்கையும், தன்னுடைமையாவும் சர்வஜனாப்பணமென்றும் திடச் சித்தமும் அடுக்கடுக்காயெழும் கடலலைபோல சூழ்ந்து நெருங்கிய ஜனத்திரளின் கலைபயால் விளங்கின. 53 வயதான இம்மகான் பொதுஜன நன்மைக்காய் கவர்ன்மென்டையெதிர்த்து மரணதண்டனையென்னக்கூடிய ஸ்திதியை அடைந்தார்.

## பம்பாய் குஜராத்தி.

திலக்கேசினுல் ராஜதூஷண விசாரணையில் சுதேச பாஷை யறியாத யூரோப்பியர்களை ஸ்பெஷல் ஜூரா

ளாக உட்காரவைக்கும் உள வேற்பட்டது. இதனாலே பக்ஷபாத மற்ற ஆங்கிலேயர்கள் ஸ்பெஷல் ஜூரி முறையே திருப்திகரமானதென்றாவது, சர்வஜன சம்மதமானதென்றாவது ஆதரிப்பார்களென்பதை நாம் நம்பவில்லை. ராஜரீக சம்பாஷணைங்கள் [illegible] பாஷைகளில்இப்போதுதான் விருத்தியாய்வருகின்றன. இங்கிலீஷைசுதேசபாஷையில் மொழிபெயர்ப்பதும், சுதேசபாஷையை இங்கிலீஷில் மொழிபெயர்ப்பதும் கஷ்டமான காரியமாயிருக்கிறது; ஆகவே, பலத்த ஆக்ஷேபகரமான ஆங்கிலேய மொழிபெயர்ப்பின் பேரில் குற்றமுள்ளது, குற்றமில்லையென்று தீர்ப்பது எவ்வளவுக்கடுத்ததா? ஓராங்கிலேயன் இங்கிலீஷ்தெரியாத கிரீக்கர் அல்லது ருஷியரை ஸ்பெஷல்ஜூரர்களாகவைத்துக்கொள்ள விரும்புவாரா? இவையெல்லாம்நியாயபேதந்தானே?

## கராச்சி பீனிக்ஸ்.

தேர்ந்தமாணவரும், திறமை மிக்க பத்திரிகாசிரியரும், சுத்த சுவாதீனப் பிரியருமாகிய திலகருக்கு ஆங்கிலோ இந்திய அதிகாரிகள் நடுங்கிப் போனார்கள். அவர்கள் மிதவாதிகளுக்கும் இணங்காமல், வங்காளப் பிரிவினையையும் சரிப்படுத்திவைக்க மனம்வராமல்போகவே, இவர் சுதேசிக்கட்சி போட்டுக்கொண்டு எதிர்க்காதெதிர்க்க வரைந்துவந்தார். இவர் வெளியேற்றப்பட்டதினாலே இவருடைய கட்சிக்காரர்கள் ஏமாந்து நின்றார்கள். ஆங்கிலோ இந்திய அதிகாரிகள் [illegible] டாடலான தன்றியும், நாடெங்கும் இவர் [illegible]ரை வைக்காமல் தானே செய்த எதிர் வாதத்தைக் கொண்டு அதிசயிக்கலாயிற்று. இதனாலே, இவர் பேரிலிருந்த பக்தியின்னும்பெருகிவிட்டது. அமித வாதத்துக்கு அவர் எட்டியதுமட்டும் எமக்கிஷ்டமில்லையென்றாலும், இப்படி ராஜதூஷணைக் குற்றம்பாராட்டி இந்தியத் தலைவர்களை ஈடழிப்பதினால் ஜனக் கலக்கத்தை அடக்கிவிடலாகுமா அல்லது கிளப்பிவிடலாகுமா வென்று ஆங்கிலேய நேயர்களைக் கேட்கிறோம்.

## லாஹோர் பஞ்சாபி.

இக்கேஸ் விசாரணை முடிவில் சிக்ஷை விதிக்கு முன்
பாக ஜட்ஜ் தேவார் ஏதாவது சொல்லிக் கொள்ள
வாமென்று கேட்டதற்குத்தானாக ஸ்ரீயுத திலகர் பூலோக
துரைத்தனமென்பதைப் பார்க்கிலும் மேலான சக்தியொ
ன்றே மனுஷத்தன்மையை நியதிவல்லதாகவே, தன்
கக்ஷிக்கு சுதந்திரத்திலும் சங்கடமே சாதகமாகலா
மென்றார். இக்கொள்கை யொன்றே இவர் மகத்துவத்
தை நமக்குத் தெரிவிக்கின்றது. இதனால் தன் தேசாபி
மான கைங்கரியத்துக்கு பகவான் சகாயமுண்டென்ற
உறுதியும் விளங்குகிறது. திலகர் சரித்திரம் சில தவறு
கள் காணப்பட்டாலும் சென்ற 20 வருஷகாலமாக
இவர்க்குள்ள மேலான சக்திகளினாலும், அற்புதமான
பிரபந்தங்களினாலும் தம்மாலானமட்டும் தேசாபி
மான கைங்கரியத்தில் ஈடுபட்டு காங்கிரஸ்வாதிகளு
ளே பிராபல்யமடைந்ததுமன்றி, தன்னை மறந்
துழைப்பதில் சமானமற்றவராகவும் கண்டறியப்பட்
டார்.

## ரங்கூன் யூனைடெட் பர்மா.

தேச முழுமையும் திலகமஹாராஜ் தேசாந்திர மேற்
றப்பட்டாரென்று கேட்ட ஜனமே பெருமூச்
செறிந்து பிரமை கொண்டுவிட்டாகியது. ஜஸ்டிஸ்
தேவார் சாந்தமாய்த் தீர்மானித்தாரென்றாலும், பின்
[illegible]னதாக்ஷிணைத் தீர்மானத்தால் கொப்பியப்பட்
[illegible] இவர் கக்ஷினை இந்தியாவுக்கு முடியில்லா அரசா
[illegible]க்கினார். இம்மகான் திருவடியில் வீழுவோமாக.

## கல்கட்டா வந்தேமாதரம்.

ஏ திலக, உனதுடலே பழிக்கப் பெற்றாலும்போ!
உன்னுடைய கரணமானது சிறையில்வைக்கப் படாதவர்க
ளும், வெளியேற்றப் படாதவர்களுமான யாவரையும்
சூழ்ந்து கொண்டிருக்கும் உன் சங்கிலிக் காய்ப்பானது
உன்னங்கத்தைத் துளைப்பதோடு நிற்காமல், உன்னை

டைக் கடமைக்குத் தூண்ட ஒவ்வோருள்ளத்தையும் அழைக்கும். தெய்வபக்தியே சிறந்த நெருப்பாகும். அக்கடவுள் தன்னை யண்டிய பக்திமான்களைப் பெரும் போர்க்களத்தில் விடுகிறார். நீ உனது காரியத்தை நிறைவேற்றிவிட்டாய்; நங்கள் தேசத்தை மறப்பதைக் காட்டிலும் ஹிம்சையைப் பெற்றுக் கொள்ளும்படி உனது ஜனங்களுக்குக் கற்பித்திருக்கிறாய்; தப்பபிப்பிராயத் தாக்கத்தைக் களைந்துவிட்டாய்; திடச் சித்தத்தைக்காட்டி கௌரவ பங்க நடுக்கத்தை அசைத்தாட்டினாய்; உன் காலத்தில் இல்லாவிட்டாலும் மறுதலைமுறைக் கெட்டவாவது கம்பிர வெடி போட்டாய். தேசாபிமானிகளும், நிராபிமானிகளும், மதாபிமானிகளும் வேறென்ன செய்துவிட்டார்கள்?

## பார்லிமெண்டில்

# ஸ்ரீ திலகர் பிரஸ்தாபம்.

டாக்டர் ரூதர்போர்ட்—தற்கால இந்தியக்கலக்கம் சற்று தணியும்படியாக இந்திய ஜாதிவிர்த்தியில் ஸ்ரீ திலகர் நிற்கும் நிலைமையை அநுசரித்து அவருக்கு விதித்த தண்டனையைக் குறைக்க கயபிரமான (எட்வர்ட்) மஹாராஜாவுக்கு பிரிட்டிஷ் இந்திய மந்திரி [illegible]சிபார்சு செய்யக்கூடாதா?

மிஸ்டர் ரீஸ்—அக்கைதிக்கு இரக்[illegible]காட்டுவது [illegible]றும் கலக்கமும் தொலைய[illegible]

மிஸ்டர் [illegible]கௌனன்—இவ்விரண்டு கேள்விக்கும் ஒன்றாக பதில் கூறுவேன். கே[illegible]றபடி நடந்துகொள்வது இந்தியா மந்திரிக்கு முடியாது. கனமேயர் ஸ்ரீ திலகர் மேல் நிகழ்த்திய சாட்சி[illegible] தன்மையையும், விசாரணை சந்தர்ப்பத்தையும் தெரிந்துகொள்ளவில்லை. அவ்விசாரணை ஒரு பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜியின் முன்பாக 10 நாள் நடந்தது. இ. பி. கோடு 124, 153 செக்ஷன்களின்படி ஸ்பெஷல் ஜூரியார் 9 பேரில் 7 பேரால் திலகர்மீது குற்றங்காணப்பட்டது. விசாரணை தொடக்கத்தில் 6 யூரோப்பியர்களையும், ஓர் யூதனையும், ஓர் ஹிந்துவையும் அவர் மறுத்துவிட்டார்; அன்றியும் டிபன்ஸில் தானே பலநாள் பேசினார். ஜட்ஜியின் [illegible]மானமாவது—(தாவா) விஷயங்கள் ராஜத்துரோகத்தை [illegible]பாவித்துள்ளன; அவை கொலையையும் அங்கீகரித்[illegible] பக்கின்றன; பாம்புகளால் ப[illegible]கொலை புரியும் பாதக செய்கைகளையும் அவை அங்கீகரிக்கின்றன; அன்றியும் இந்தியாவிலே பாம்பு கிளம்பியது ஒரே நன்மைக்கிடமாக அவர் கொண்டாடுகிறார். மன்னிக்கக் கேட்டவரோ அப்போர்ப்பட்ட கோடிவிலக்கின்படி நியாயவழியிலே

கவர்ன்மெண்டின் நடவடிக்கையைக் குறை கூறல் அல்லது மறுத்துரைத்தலாகக் கூடாதென்று ஒப்புக்கொள்வார்.

மிஸ்டர் கிராட்டி—இவ்வவசாரத்தில் ஒருவரும் ஜட்ஜின் ரிமார்க்கே சரியானதென்று அறிந்துகொள்ளும் படியாக (தாவா) விஷயத்தை யிப்போது பிரசுரிக்கலாகுமா?

மிஸ்டர் புக்கானன்—அப்படி ஒப்பக்கூடாமை.

மிஸ்டர் லப்டென்—7 யூரோப்பியருக்கு 2 இந்தியர் ஸ்பெஷல் ஜூரியிலிருப்பதுதான் பம்பாயில் பழக்க விதமோ?

மிஸ்டர் புக்கானன்—(இதற்கு சரிசொல்லக்கூடாமல்) 7 யூரோப்பியரும் 2 பார்சியரும் ஜூரியாராக, ஜட்ஜியும் ஒரு பார்சி கனவான்.

மிஸ்டர் மக்கார்னஸ்—ஸ்ரீ திலகருக்கு விதிக்கப்பட்ட 6 வருஷ தீபாந்திர சிக்ஷைக்கு அப்பீலுண்டோ? இதன்படிப் பினல் செட்டில்மெண்டுக்குக்கொண்டுபோகப்பட்டால், அவருக்கென்ன தண்டனை?

மிஸ்டர் புக்கானன்—ஹைகோர்ட்டுக்கு அப்பீலில்லையானாலும், பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீலுண்டு; ஆனால், பெரிய அநீதி ஏற்படவேண்டும். தீபாந்திர சிக்ஷையானாலும், ஒரு ஜெயிலில் வைத்திருக்கலாம். தீபாந்திரக் கைதி கொஞ்சகாலம் தனிக்காவலில் வைத்திருந்து பிறகு மற்ற கைதிகளோடு வேலைக்கு விடப்படலாலும், நன்னடக்கையினால் சில சௌகரியமும் பெறலாம்.

ஸர்ஹென் திக்காட்டன்—இந்தியாவில் ராஜதூஷணக் குற்றவாளிகளின்மீது விதிக்கப்படும் தண்டனைத் தன்மை கவனிக்கப்படுகிறதா? [illegible] திகளோடு

ராஜரீகக் கைதிகளை சேர்க்கவொட்டாமல் உத்திரவு செய்யவேண்டிய கிரமத்தை கவர்ன்மெண்டார் யோசிப்பார்களா?

மிஸ்டர் புக்கானன்—இவர் சொல்வதுபோல நடந்துகொள்ளவேண்டியது அவசியமென்று பிரிட்டிஷ் இந்தியா மந்திரி நினைக்கவில்லை. 124 ஆவது ஸெக்ஷன் குற்றத்திற்கான தண்டனை அபராதம், வெறுங்காவல், கடுங்காவல், தீபாந்திரம் வரையில் உள்ளன. வெறுங்காவலானால், இன்ஸ்பெக்டர் ஜெனரல் சில கேசுகளில் கைதிகளைத் தனியிடத்தில் வைத்திருக்க அதிகாரம் பெற்றிருக்கிறார்.

மிஸ்டர் லட்டன்—பம்பாயில் ஸ்ரீ திலகர் விசாரணையில் 7 யூரோப்பிய ஜூரிகள் குற்றமுள்ளவரென்றும் 2 பார்சி ஜூரிகள் குற்றமில்லையென்றதைப்பற்றியும், பம்பாய் நகரில் அவருக்கு விதித்த தண்டனையால் விளைந்த திவிரத்தைப்பற்றியும் பிரிட்டிஷ் இந்தியா மந்திரி அந்த தண்டனையை நிவர்த்திக்கலாகாதா?

மிஸ்டர் புக்கானன்—இதைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறேன்.

மிஸ்டர் லட்டன்—ஸ்ரீ திலகரை தண்டிக்கலான விஷயங்கள் வேறு பாஷையாகையால், அவற்றை இங்கிலீஷ் ஜூரியார் நன்மைக்காக சரியானபடி மொழிபெயர்த்து வைக்கப்பட்டதா?

மிஸ்டர் புக்கானன்—மொழிபெயர்ப்பு சரியானதல்லவென்று நான் நம்பவில்லை.

மிஸ்டர் ஓகிரேடி—அப்பன்சின் முக்கியாம்சமாவது தப்புமொழி பெயர்ப்பென்பதல்லவா?

மிஸ்டர் புக்கானன்—அது எனக்குத் தெரியாது; அப்படியானாலும், ஜட்ஜியும் ஜூரியும் நன்றாய் கவனித்திருக்கவேண்டும்.

மிஸ்டர் லப்டன்—அப்பேர்ப்பட்டவரை அவர் நாட்டு ஜூரியார் விசாரிப்பது சரியான நீதியல்லவா?

ஸ்பீக்கர்—அது அபிப்பிராய விஷயம்.

ஸர் ஹென்றிக்ராட்டன்—ஸ்ரீ திலகர் யூரோப்பிய மெஜாரிட்டியுள்ள ஸ்பெஷல் ஜூரியை ஆக்ஷேபித்தது, இந்திய ஜூரிவிசாரணையைக் கோரிக் கேட்டிருக்கும் சங்கதி தெரியுமா?

மிஸ்டர் புக்கானன்—ஸ்ரீதிலகர் அநேக ஜூரிகளை ஆக்ஷேபித்துவிட்டதாக முன்னேசொன்னேன்; பிராசிகூஷன் லாயர் 2 பேரைமட்டும் விலக்கினர்.

மிஸ்டர் லப்டன்—கோரப்பட்டவர்களெல்லாம் ஆ[illegible]ரா?

ஸ்பீக்கர்—இக்கேள்விகளை யெழுதிவைக்கலாம்.

மிஸ்டர் மக்கார்னஸ்—இப்போது ஜெயிலிலும் தீவாந்திரத்திலுமிருந்து வரும் இந்தியபத்திரிகாசிரியர்களெத்தனைபேர்? நிறுத்திவைத்திருக்கும் அல்லது ஒழித்துவிடப் பட்டிருக்கும் இந்தியப் பேப்பர்களெத்தனை?

மிஸ்டர் புக்கானன்—வரும் ஸெஷனில் அவற்றின் ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்யப்படும். புதிய ஆக்டின்படி ஒருகேஸ்நடத்திருக்கிறது; மற்றொருகேஸ் நடந்துவருகிறது.

மிஸ்டர் ரீஸ்—ஸ்டேட்மெண்டில் குற்றவாளிகளின் ஜாதிவகை குறித்திருக்கக்கூடுமா?

மிஸ்டர் புக்கானன்—அப்படிக்கிராது.

மிஸ்டர் ரீஸ்—அப்படிக்கிருந்தால் தான் சங்கதி விளங்கும். (கோபசிரிப்பு.)

மிஸ்டர் ஹார்வுட்—பம்பாய் மில் வேலைக்காரர்களுக்குள்ளே கலகங்கள் நேர்ந்தது வேலையின் கஷ்டத்தக்கானால், கவர்ன்மெண்டார் என்னசெய்ய யோசித்திருக்கின்றனர்?

மிஸ்டர் புக்கானன்—அவர்கள் வேலையின் கஷ்டத்தைப்பற்றி விசாரணையாயிருக்கிறது. ராஜரீகக் கலக்கமாய் யூரோப்பியர்பேரில் ஹிம்சைக்குள்ள திரும்பியதாகும்; ஆனால் அதில் மகாமதியாய்ச் செய்யவில்லை.

# பாம்பென்னும் வெடிகுண்டின் விவரவு.

ஸர்ஷா வங்காளத்தில் வெடிகுண்டுக் கலக்கத்தால் அலறும்படி மிஞ்சிவிட்டிருப்பதால் ஹைகோர்ட்டில் மூருஸ்பெஷல்ஜட்ஜ்களை நியமித்து அக்குற்றவாளிகளை சுருக்கமாய் விசாரிக்கவும், அவர்களேலேயே இணங்கி வருவோரின் சாக்ஷியத்தைக் கிராசில்லாமலும் அங்கீகரித்துக்கொள்ளவும், இந்தியக் க[illegible]ஜபாலனை இங்கிலீஷ் லாப்படித் திருத்திக்கொள்ளவும் சிபாரிசுசெய்த வங்காளி வியாபார சபையாரும், கல்கட்டாவர்த்தக சங்கத்தாரும், யூரோப்பிய ஆங்கிலோ இந்தியத்தற்காப்பு சமாஜத்தாரும் கோரியபடி பிரிட்டிஷ் இந்தியா வைஸ்ராய் அபிப்பிராயங் கேட்டிருக்குமளவு ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அதன்படி ஜல்தியில் "கொடுங்கொலைகளுக்க விசாரணைச்சட்டம்" புறப்படுமா?

மிஸ்டர் புக்கானன்—அப்படிக்கில்லை; இந்தியா கவர்ன்மெண்டார் இப்புதிய சட்டத்தைத் தயார்செய்து வருவதும் தெரிந்திருக்கிறதே.

மிஸ்டர் ஜின்னல்—இப்படிப் பத்திரிகாசிரியர்கள் தண்டிக்கப் பட்டிருந்தால், அக்கேஸ்களின் ஸ்டேட்மெண்டுடன் அப்புதிய சட்டத்தைக் காண்பிக்கலாகுமா?

மிஸ்டர் புக்கானன்—அச்சட்டம் கையிலிருக்கிறதே; கொடுங்கொலை வகையைப் பற்றியதேயன்றி, தூஷணை எழுத்தையாவது பேச்சையாவது குறித்ததல்ல.

மிஸ்டர் மக்னீல்—இந்தியா கவர்ன்மெண்டின் புதிய தூஷணைச்சட்ட விஷயத்தில் பிரிட்டிஷ் பிரஜை

களின் சமூகசுதந்திரங்கள் பெருங் கெடுதலடைந்து விட்டதாக வலுத்த உணர்ச்சி உண்டாயிருப்பதைப் பற்றி இந்த சபையார் அச்சட்டம் அமுலுக்கு வருமுன்னே அபிப்பிராயங்கூற இடந்தரலாகாதா?

மிஸ்டர் அஸ்குவித்—அது து[illegible]ணச்சட்டமல்ல, கொடுங்கொலைவகைக் குற்றங்களைப் பற்றியதாகும்; ஆகவே, அது பாஸாய் அமுலிலிருந்து வருகிறது.

மிஸ்டர் மக்னீல்—சீர்திருத்தமொன்றும் செய்யாமலே இப்பேர்ப்பட்ட அக்கிரமச்சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதினால் இன்னும் கொடுமைக்குத் தூண்டுதலாகாதா?

மிஸ்டர் அஸ்குவித்—இது அபிப்பிராயம்சமாகும்.

மிஸ்டர் பு[illegible]னன்—அந்தச் சட்டம் கவர்னர் ஜெனரல் கவுன்ஸில் மீட்டிங்கில் பாஸாய்விட்டது. பிரிட்டிஷ் இந்தியா மந்திரியும் அதை அங்கீகரித்துக் கொண்டார். கவுன்ஸில் சட்டங்களெல்லாம் உடனே அமுலுக்கு வந்துவிடவேண்டியதென்றாலும், பிரிட்டிஷ் இந்தியா மந்திரி சிபாரிசினால் [illegible] ரத்து செய்துவிடலாம்.

மிஸ்டர் மக்கார்னஸ்—இந்தியாவிலிருந்து கொடுமையான ச[illegible]ரங்கள் வந்துகொண்டிருந்தாலும், அங்குள்ள [illegible]ஜைகளுக்குத் தேறுதலையாக அந்நாட்டில் கவர்ன்மெண்டு சீர்திருத்தங்களைத் தாமதமின்றித் தெரி[illegible]க்கக்கூடுமா?

மிஸ்டர் அஸ்குவித்—கூடிய சீக்கிரத்தில் தெரிவிக்கலாகும்.

மிஸ்டர் மக்கார்னஸ்—இந்திய ஸெஷன் முடிவடையுமுன்னேயா?

மிஸ்டர் அஸ்குவித்—ஆமாம்.

மிஸ்டர் கிரார்டி — அசுவனி குமாரதத்தரையும் கிருஷ்ண குமாரமித்தரையும் சிறை பிடித்தது புதிய சட்டப்படிக்கா, வேருகவா?

மிஸ்டர் புக்கானன் — அவர்களைப்பிடித்து வைத்திருப்பது 1818 ஆம் வருஷத்து 3 ஆவது ரெகுலேஷன் படிக்கு.

மிஸ்டர் மக்கார்னஸ் — 9 பேரைப் பிடித்திருக்கிறார்களாமே.

மிஸ்டர் புக்கானன் — ஆம்.

மிஸ்டர் கிரார்டி — வேறு கவர்ன்மென் [illegible]ற்றை அங்கீகரித்திருக்கிறார்களோ?

மிஸ்டர் புக்கானன் — இல்லை. [illegible]திருத்த ஸ்டேட்மெண்டுக்கு முடிவாயிருக்கும் இத்தருணத்தில் அந்த ரெகுலேஷனைக்கொண்டு அமுல் நடத்துவதைப்பற்றி பிரிட்டிஷ் இந்தியா மந்திரி மிக விசனப்பட்டதும் நிச்சயமே.

மிஸ்டர் கிரார்டி — இதற்கேதாவது விசேஷமுகாந்திரமுள்ளதோ?

மிஸ்டர் புக்கானன் — வங்காளத்து லெப்[illegible] கவர்னர்களிருவரும் தக்க முகாந்திரங்களைக் கொண்டு வற்புறுத்தியபடி இந்தியா கவர்ன்மெண்டார் தக்க சாக்ஷியத்தையும் விசாரித்தறிந்தே யிப்படி செய்யலாகியது. (கேளுங்கள்.)

ஸர் ஹென்றிக் காட்டன் — இவர்களைப் பிடித்து வைத்த விசேஷ [illegible] (ஜாக்கிரதை) கிரிமினல் கோர்ட்டில் சாக்ஷிய ரூ[illegible] பண்ணிவைக்க சாத்தியமில்லாமையினால் தானே?

மிஸ்டர் ரஸ்—இந்த ரெகுலேஷன்போல இந்திய ஸ்வராஜ்யங்களிலே நிறைவேறி வருகிறதல்லவா?

ஸ்பீக்கர் — ஆனரெபிள் மெம்பர்கள் யோசிக்க வேண்டிய கேள்விகளைத் தெரிவிக்கவேண்டும். (சிரிப்பு)

டாக்டர் ரூதர்போர்ட்—இந்த கனவான்கள் விசாரணையின்றி, வெளியேற்றப்பட வேண்டியதா?

மிஸ்டர் புக்கானன்—ரெகுலேஷன்படி நடந்தேறும்.

டாக்டர் ரூதர்போர்ட்—இப்பேர்ப்பட்ட நடவடிக்கை இந்தியக் கலகத்தை அடக்கிவிடுமா?

ஸர் ஹென்றிக் காட்டன்—இவர்களில் சிலர் கிரிமினல் கோர்ட்டுக்குக் கொண்டுபோகப்பட்டதில் குற்றமற்றவர்களாக விடுவிக்கப் பட்டில்லையா?

மிஸ்டர் புக்கானன்—(பதிலில்லை).

மிஸ்டர் கிராட்—இதற்கிடந்தரும் ரெகுலேஷன் ஸெக்ஷன் எது?

மிஸ்டர் புக்கானன்—ரெகுலேஷன் கூறியிருக்கிறது; அதன்படி அவசியமானபோது கவர்ன்மெண்டார் கலகம் கிளம்பாதபடி யெவரையும் பிடித்து வைக்கக்கூடும்.

ஸ்பீக்கர்—இனியிதைப்பற்றி நோட்டீஸில்லாமல் ஏதும் கேட்கக்கூடாமை.

டாக்டர் ரூதர்போர்ட்—இந்தியக்கலக்க விவாதத் தடைகளால் அவசரமான ஜாதிய ராஜீய விஷயங்களை யெல்லாம் தாராளமாய் விவாதிக்கும் சமூக சுதந்திர

மானது கெட்டுப்போகாமல் தக்க ஏற்பாடுகள் செய்து வைக்கக் கூடுமா ?

மிஸ்டர் ரீஸ்—சில மெம்பர்களன்றி யாவருமே யிதைப்பற்றி விசாரிக்க விரும்பியதாகக் கொண்டதா குமா ? (கோபசிரிப்பு)

மிஸ்டர் அஸ்குவித்—இது சர்வசம்மதமானதென் பதா யேற்படவில்லையே.

டாக்டர் ரூதர்போர்டு—சீர்திருத்த ஏற்பாடுவெளி யாய் வாவாகப் பாலாகுமட்டும் புதிய சுருக்கவிசாரணை சட்டத்தை நிறுத்திவைக்கலாகாதா ?

மிஸ்டர் புக்கானன்—இந்தச்சட்டம் முன்னமே அமுலுக்கு வந்துவிட்டிருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியா மந்திரி இப்போது நேரியபடி நடந்துகொள்ள இஷ் டப்படவில்லை. .

மிஸ்டர் ரீஸ்—கேளுங்கள். (சிரிப்பு.)

# கீழதிகார விருத்திக் கமிஷன் முன்பாக ஸ்ரீ திலகரின் ஸ்டேட்மெண்டு.

---

மேலதிகார விருத்தியினாலே ஆட்சித் திறமை [illegible]னது [illegible]வதிப[illegible] நிறைந்ததைப் விளங்க[illegible]யாகக் கீழதிகார விருத்தியினால் திறமை [illegible] குறைந்தாலும் வெகுஜனப் பிரிய விசேஷத்தை [illegible]டி செய்விக்கலா மென்னப்படுகிறது. மேலதிகார விருத்தியினாலே கீழதிகாரர் திறமையானது உபயோகமற்றதாய் விடுகிறதில்லை. அதிகாரிகளுக்கும் ஜனங்களுக்கும் ஒட்டுறவின்றிப் போகிறதாய் நடக்கிறதென்று இவ்விசாரணையை நடத்துவதாக[illegible]. இவ்விஷயமாய் ஜனசமூகத் [illegible] நக்கு வித்தியாச மேற்படவில்லையானாலும் மேலதிகாரிகளுக்கும் கீழதிகாரிகளுக்கும், ஸெக்ரிடேரி யட்டுக்கும் லோக்கல் ஆபீசர்களுக்கும், சுப்ரீம் கவர்ன்மெண்டுக்கும் லோக்கல் கவர்ன்மெண்டுக்குமே இவ்வித்தியாசம் விளங்கக்கூடியது. ஜனங்களின் சாதாரண நம்பிக்கையாவது, மேலதிகாரப் பெருமையே அதிகாரன்மை யளிக்கவல்ல தென்பதும், கீழதிகார விருத்தியினால் பலவித சங்கடங்கள் உண்டாமாகையால் தடுக்கவேண்டு மென்பதுமே. ஆகவே மேலதிகாரமோ, கீழதிகாரமோ எவ்வாறாலும் உள்ளபடி (1) நிர்வாக அதிகாரமும் நீதி யதிகாரமும் சேர்ந்திருத்தலும், (2) மாகாண ஒப்பந்த முறையில் இந்திய கவர்ன்மெண்டின் பொக்கிஷ மேலதிகாரமும், (3) வெகுஜன சுதந்திரங்களைக் குறைத்துவரும் அதிகார விருத்தியும், (4) வங்காளப் பிரிவினையுமே வெகுஜன விரோத பாவனைகளா யிருக்கும் மேலதிகார விருத்தியைப் பற்றிய அதிகாரிகளின் குறைமுறை விஷயங்களாகவில்லை; ஆனால் மாகாண ஒப்பந்தமட்டும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திட்டமற்ற அதிகாரவிருத்தி முற்காலத்திற்கேற்றதாயிருந்தாலும், தற்காலம் தோன்றியுள்ள புதிய உணர்ச்சிகளுக்கேற்காது. அக்காலத்தில் அதிகாரிகள் தங்

கள் விருத்திக்கு ஜனத்தலைவர்களிடம் விசுவாசமாயிருக்கவேண்டிய அவசியமாய் இருந்ததென்றாலும் இப்போது அநாவசியமாகியது. பற்பல டிபார்ட்டுமெண்டு ஏற்பாடுகளும், அவற்றிற்கான சட்டதிட்டங்களும், ... பைசல்களும், ... ஜனங்களின் நிராயுதஸ்திதியும், ... ங்களிலும் ... நிவாரணத்துக்கான ரிகார்டு புஸ்தகங்களும், பழைய ஜமீன்தாரர்களின் வமிசபரம்பரை ... வருவதும், கவர்ன்மெண்டின் உத்தரவுகளும் ... காரர்களுக்குத் தக்க சாதனங்களாய் விட்டதுமன்றி அவர்கள் ஜனங்களை லக்ஷியம் பண்ணுவதில்லை. ஆகவே, மேலதிகார விருத்தியைக் குறைத்துக் கீழதிகார விருத்தியை உயர்த்துவதினாலேயே அதிகாரிகளுக்கு நேசம்பொருந்திவிடுவதாகாது. பழைய அதிகாரிகளைப்போலப் புதிய அதிகாரிகள் தாக்ஷிணியமுடையவர்களாயிருந்தாலும் புதிய உணர்ச்சிகளுக் கிசையமாட்டார்கள். மேற்கூறியகாரணங்களினாலே கீழதிகார விருத்தியினால் அடிமையதிகரித்து இன்னும் ஜனவிரோதத்துக் கிடமாகுவதேயன்றி வேறாகாது; அதிகாரிகளும் ஜனங்களும் நேசம்பொருந்தி யிருக்க வேண்டுமானால், ஜனங்களாலோசனைபோல அதிகாரிகள் நடந்து கொள்ளும்படி யேற்பாடு செய்தால் மட்டும் சாப்பட்டுவிடலாம். ஆகவே, இக்கீழதிகார விருத்தியென்பதை அதிகாரிகளிடத்திலிருந்து ஜனத்தலைவர்களின் கையிலே நழுவ வேண்டும். இதற்காகவே இப்போது தன்னாட்சியாமை ஜனங்களுக்குத் தருவது அவசியமாகும். இதை ஒருமிக்கக் கொடுத்துவிட வேண்டுமென்பதுமில்லை; முதலாவதாக டிபார்ட்டுமெண்டாரால் சீரழிந்துபோயிருக்கும் ஊராட்சியை ஒழுங்கு படுத்திவிடலாம். இவ்வூராட்சியைப் பஞ்சாயத்துக்குட்பட திட்டப்படுத்திக் கல்வி, நீதி, காடு, அப்காரி, பஞ்சநிவிர்த்தி, போலீஸ், வைத்தியம், சௌகரியம் இவை சம்பந்தப் பட்டமட்டில் வில்லேஜ் கவுன்ஸிலில் விசாரித்து நடத்திவரலாக வேண்டும். இதன்மேல் தாலுகாபோர்டும், அதன்மேல் டிஸ்ட்ரிக்டு

[illegible]ம் மேற்பார்வையா யிருந்து வரவேண்டும். இனி [illegible]யெல்லாம் ஜனப்பிரதி நிதித்துவமும், சுவாதீ[illegible] முங்கொண்டு விளங்கவேண்டும். இந்த போர்டா [illegible]ள பொக்கிஷாதிகாரத்தில் செல்வாக் குடையவ [illegible] வேண்டியதுமொன்றாக, லோக்கல் கவர்ன்மெண்டாருக்[illegible] பொறுப்பாகவிடக் கூடாது. அதிகாரமில்லாத ஆலோசனைசபையால் அவ்வளவு தான் பயி[illegible] [illegible] அதிகாரிகளின் செல்வாக்[illegible] [illegible]மையும் அற்றுப்போகுமெனில், பிரிடிஷ் [illegible]த்தின் க்ஷேமத்தை நாடியாவது ஜனங்களைத் தன் [illegible]க்குத் தயார் செய்ய வேண்டியதாக மற்று [illegible] கவனிப்பது அவசியமானதாகும், தக்க [illegible]யாய் திட்டப்படுத்திக்கொண்டால் அதிகாரி [illegible] குறைவில்லாதபடி [illegible] வைக்கலாம். [illegible]த்திலும் முக்கியமாய் [illegible]க அதிகாரத்தை [illegible] நிர்வாகத்தையும் [illegible]ம் வேறாக்கிவிட வேண்டும். [illegible]னில் நீதி[illegible]க்குமேலா நிர்ப்பயில் [illegible] வேண்டும். [illegible]யமாகுமெனபது மறக்கப்படாது. [illegible] வங்காளப் பிரிவினை கோபத்தைக் கவனிக்குமிடத்து இந்தியாவிலே மற்ற மாகாணங்களும் பாஷைகளையும் அனுசரித்து வகுத்து ஒவ்வொன்றுக்கும் கவர்ன்மெண்டு ஏற்படுத்திவிட வேண்டியதாகும். இப்படிக்கெல்லாம் புதிய உணர்ச்சி கிளம்பி யிருப்பதற்கு ஆங்கிலக் கல்வி பயிற்சியேயன்றி வேறில்லை. இவற்றைக்கருதி அதிகாரிகளை ஒழுங்குபடுத்தி வைக்காவிட்டால் இதைப்போன்ற எவ்வேற்பாட்டாலும் எக்காலும் இணக்கமாயிருக்கவாராது. ஆகவே, அதிகாரிகள் பெருந்தன்மை விசிறது அறிவேற்றமடைந்து வருமாறு ஜனங்களுக்குத் தன்னாட்சியுரிமைகளை அளித்து அவர்களுடைய மேம்பாட்டை வளர்த்துவருவதே பெருங்கடமையாகுமென்பதை அறிந்து நடத்துகொள்வது உசிதமாகும்.

---

[illegible]!

ஸ்ரீதிலகர் எதிர்வாதத்துக்கு முக்கிய ஆதாரவாகக்கொண்ட

# வாய்ப் பூட்டுச் சட்ட மறுப்பு.

இதிலடங்கிய விஷயங்களாவன:—

(1) இந்தியாவில் ஆக்ஷேபகரமான பொதுக் கூட்டத்தைத் தடுப்பதற்கான வாய்ப்பூட்டுச் சட்ட விவரமும், (2) இவ்வாய்ப்பூட்டுச்சட்டம் சரியென்று இந்தியா சட்ட சபையில் ஆனரபில் மிஸ்டர் கோபாலகிருஷ்ண கோக்கலே C.I.E. பேசிய விஸ்தாரப் பேச்சும், (3) அதன்மேல் ஆனரபில் டாக்டர் ராசவிஹாரிகோஷ் M.A.,D.L., C.I.E. பேசிய சிறந்த பேச்சும், (4) இவ்விருவருக்கும் எதிரிடையாய் ஆனரபில் ஸர் ஆடம்ஸன் பேசிய சாமர்த்தியப் பிடிவாதப் பேச்சும், (5) இதற்கு மறுமறுப்பாக ஸ்ரீ கோக்கலே பேசிய பிடிவாதப் பேச்சும், (6) டாக்டர் கோஷின் சூரத் காங்கிரஸ் அக்கிராசனாதிபத்திய ஆக்கினைக் குறிப்புடன் எல்லா இந்தியா கான்பரன்ஸில் கவர்ன்மெண்டின் அக்கிரம முறைகளைப்பற்றிய முதல் தீர்மானமும், (7) இதைப்பற்றிப் பார்லிமெண்டில் டாக்டர் ருதர்போர்டின் கவர்ன்மெண்டு கண்டனமும், (8) இதற்கு மறுபேச்சு பேச வழியின்றி பிரிட்டிஷ் இந்தியா மந்திரி மிஸ்டர் (லார்ட்) மார்லி கூறிய சமாதானக் குறிப்பும், (9) அடுத்த பட்ஜெட் மீட்டிங்கில் ஸ்ரீ கோக்கலே மிஸ்டர் மார்லியைப்பற்றி முறையிட்டுக்கொண்டதும், (10) இதற்கு வைஸ்ராய் லார்ட் மிண்டோ தணிவு கூறியதும், (11) முடிவில் திவான் பகதூர் ரகுநாதராயரவர்களின் நுட்பக் குறிப்பும், (12) மிக்க முக்கியமான விஷய விளக்கக் குறிப்புகளுமானபடி இவ்விஷயங்கள் யாவும் அரைத்தனைப் போசகையும், குடித்தனத் தாக்கையும் நன்குணர்ந்து நல்லறிவு பெறுமாறு வகைத்துள்ளதால் இந்நூலை ஆங்கில மறியாத் தமிழர் எவரும் எக்காலும் கவனித்துவரத் தக்கதென்பதை இதனால் வணக்கமாய்த் தெரிவிக்கலாயிற்று.

விலை அணா-7. வேண்டுவோர் சென்னைத் தம்புசெட்டி வீதி மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

☞ தி. சி. வில்வபதி செட்டி,

நூலாசிரியன்.